www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JuDE

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

ஜன.11–17,1998

11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 239

## சுதந்திர தினமும்

## சூளும் நெருக்கடியும்




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அரச விளம்பர முகவர்கள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வன்னியில்
பட்டினிச் சாவுகள்
பற்றிய செய்தியோடுதான்
புத்தாண்டு பிறந்திருக்கிறது!

"வன்னி நிலவரம் பற்றி
ஜனாதிபதியுடனும்
அமைச்சர்களுடனும்
ஆழமான பேச்சுவார்த்தை!"

"ஜனாதிபதி
கரிசனையுடன் கேட்டார்!
அமைச்சர்
ஆவன செய்வதாக உறுதி!"

"வன்னியில் மக்கள்
அவலம்.
பாராளுமன்ற உறுப்பினர்
ஆவேசம்!
புள்ளி விபரங்களை
புட்டுப்புட்டு வைத்தார்!"

இவையெல்லாம்
பத்திரிகைகளில் வெளியான
பரபரப்புச் செய்திகள்!

அல்ல! அல்ல!
பத்திரிகைகளுக்கு
தமிழ்க் கட்சி வட்டாரங்கள்
கொடுத்த செய்திகள்!

சேவல் கூவினால்
பொழுது விடிகிறது
என்று அர்த்தம்!

கிணற்றுத் தவளைகள்
கத்தினால்
எந்தப் பொழுதும் புலராது!
தாங்கள் கத்தியதால்தான்
பொழுது விடிவதாக
கிணற்றுத் தவளைகள்
கருதிக் கொள்ளக்கூடும்!

தமிழ்க் கட்சிகள் நிலை
கிணற்றுத் தவளைகள்
போன்றதுதான்!

இவர்களின் குரலை
அரசுகேட்பதே இல்லை!

தமிழ்க் கட்சிகள்
தம்மோடு நிற்பதாக
காட்டிக்கொள்ளும் தேவைக்காக
இக் கட்சிகளை
அரசு சகித்து வருகிறது!

தேவை முடிந்ததும்
கைகழுவப்படப் போகிற
கட்சிகள்தான்
தாங்கள், என்பதை
தமிழ்க் கட்சிகள் உணரவில்லை!

தங்கள் கையில்தான்
அரசாங்கம்
தங்கி நிற்பதாக
இக் கட்சிகள்
கனவு காண்கின்றன!

கனவு காண்பதற்கு
அவர்களுக்கு
உரிமை உண்டு!

தூங்குவது போல் நடிக்க
சுகமான கனவுகள்
நல்ல பொழுதுபோக்கு!

தமிழ்க்கட்சிகள்
சமீபகாலமாக ஏற்றுள்ள
பொறுப்புத்தான்
புல்லரிக்க வைக்கிறது!

முன்பெல்லாம்
ஆளும் தரப்பினர்தான்
தமிழ் மக்களிடம்
தங்கள் வாக்குறுதிகளை
விநியோகிக்க
படாத பாடு படுவர்!

இப்போதெல்லாம்
ஆளும் தரப்பினர் சார்பாக
தமிழ்க் கட்சிகளே
வெற்று வாக்குறுதிகளின்
விநியோகிப்பாளர்களாகிவிட்டன!

அரசிடம் இருந்து
வாக்குறுதிகளைப் பெற்று
அழகாக- அலாதியாக
மக்களிடம்
விளம்பரப்படுத்துகின்றன!

தாங்கள் கூறியதால்
வன்னிக்கு
உணவு லொறிகள்
உடன் அனுப்பப்படவுள்ளதாக
இக் கட்சிகள் கூறின!

அக் கூற்றுக்கள்
பத்திரிகைகளில் பிரசுரமாகின!

பஞ்சம் தீர்ந்தது போன்றும்,
அரசாங்கம்
நெஞ்சம் இரங்கியது என்றும்,
போலியான தோற்றத்தை
ஏற்படுத்தினார்கள்!

பட்டினிச் சாவுகள்
நிகழ்ந்தபின்னர்கூட
ஒரு கட்சியாகினும்
அரசைக் கண்டிக்க
முன்வரவே இல்லை!

அரசின்
வெற்று வாக்குறுதிகளை
விநியோகிப்பதில் உள்ள
ஆர்வமும், அவசரமும்
மக்களின் அவலங்களை
வெளிப்படுத்துவதில்
துளியளவும் காணவில்லை!

எனவே- வன்னியின்
பட்டினிச் சாவுகளுக்கும்,
அக் கொடுமைகள்
உலகின் கண்களுக்கு
உறுத்தாது இருப்பதற்குமான
பொறுப்பு
தமிழ்க் கட்சிகளையும் சாரும்!

■■

மீண்டும் மறுமடலில் என்றென்றும் அன்புடன்,
வந்து கலக்கும்வரை
— ஆசிரியர்

## ஆன்மீகம்

### புதிய கட்டளை

"நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிய கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்."

(யோவான் 13:34)

அன்பானவர்களே! அன்று இவ்வுலகத்திலே தமது ஜனங்கள் நிரந்தரமாக ஜீவிக்க கொடுக்கப்பட்ட கானான் தேசத்தை சென்றடைய தேவன் கட்டளை கொடுத்தாராயின், இன்று பரம கானானைச் சென்றடைய எமக்கு கட்டளை கொடுக்கப்படவில்லையா? கொடுக்கப்பட்டன. அன்று மோசேக்கூடாக தேவன் கட்டளைகளைக் கொடுத்தார். இன்று நமக்கு ஒரே பேறான குமாரனுக்கூடாக கட்டளைகளைக் கொடுத்துள்ளார். அந்த ஒரே பேறான இயேசு கிறிஸ்து கொடுத்த புதிய கட்டளையை நாம் நிறைவேற்றுவோமானால், நிச்சயமாக பரம கானானைச் சென்றடையும் சிலாக்கியத்தைப் பெறுவோம்.

இயேசு கிறிஸ்துவின் அன்பிலே நாம் நிலைத்திருக்க நம்மை முழுமையாக ஒப்புக் கொடுப்போமானால், அவர் எம்மை தம்மைப் போல் மாற்றுவார். பாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் எம்மை முற்றும் முழுவதுமாக பாவத்திலிருந்து மீட்டுக் கொள்வார். இந்த மீட்பை நாம் பெற்றுக் கொள்ளும்போது, இயேசு கிறிஸ்துவின் சுபாவத்தை தரித்தவர்களாகும்போது, நாமும், அவர் நம்மில் அன்பாயிருப்பது போல ஒருவரிலொருவர் அன்பாயிருப்போம்.

தி.தேவபாலன், மட்டக்களப்பு.



### ரமழானின் மகத்துவம்

"மனிதர்களே! உங்களுக்கு ஒரு மகத்தான மாதம் தான் ரமழான் மாதம். அது பரக்கத்துச் செய்யப்பட்ட மாதமாகும். அதில் 'லைலத்துல் கத்ர்' என்ற ஓர் இரவு இருக்கிறது. அது ஆயிரம் மாதங்களை விடச்சிறந்த இரவாகும். அதில் நோன்பு நோற்பதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான்.

அதனுடைய இரவுகளில் நின்று (தராவீஹ்) தொழுவதை நன்மைக்குரிய செயலாக ஆக்கியுள்ளான். எந்த மனிதர் இம்மாதத்தில் ஒரு நற்செயலைச் செய்து அல்லாஹ்விடம் நெருக்கத்தைத் தேடிக் கொள்கிறாரோ அவர் ரமழான் அல்லாத மற்ற மாதங்களில் ஒரு பர்ளை நிறைவேற்றியவர் போலாவார். இம்மாதத்தில் ஏதேனும் ஒரு பர்ளை நிறைவேற்றுபவர் ரமழான் அல்லாத மாதங்களில் எழுபது பர்ளுகளை நிறைவேற்றியவர் போன்றவராவார்.

இம்மாதத்தின் முதற் பகுதி (பத்தும்) அல்லாஹ்வுடைய ரஹ்மத்தாகவும் நடுப்பகுதி (பத்தும்) பாவமன்னிப்பாகவும் இறுதிப் பகுதி (கடைசிப்பத்தும்) நரக நெருப்பை விட்டும் விடுதலை பெறுவதாகவும் இருக்கின்றன. நாமும் ரமழான் நோன்பை நோற்று இறையருளைப் பெறுவோமாக.

(ஆதாரம்: ரமழானின் சிறப்பு)
தொகுப்பு: மடவள இப்திமா.

## கவிதைப் போட்டி இல. 236

### பரிசுக்குரிய கவிதை

**நகல் செய்தாள்**

எட்டாத் தீர்வுக்காக
எம்மவர் விடுவதனை
நன்றாய் இத் தமிழ்க் குழந்தை
நகல் செய்து காட்டுகிறாள்!

திருமதி. நிரஞ்சனி சச்சிதானந்தன்-
ஜோஸ்லீன், செங்கலடி.

**அழாதே!**

அழாதே கண்ணா,
அம்மா வருவாள்
தீர்வுப் பொதியோடு!
அப்பா வருவார்
தேர்தல் பொறியோடு,
எல்லாம் உனக்கே!

இதயநிலா-
ஆரையம்பதி-03.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**



**உரிமை**

யார் சொன்னது
எமக்கிங்கு
வாய்திறக்க உரிமை
இல்லையென்று?
சாப்பிடவும்
கொட்டாவி விடவும்
உரிமையுள்ள போது...!

ப.ச. போஸ்- கோவில் குளம், வவுனியா.

**தொடர் கதை?**

அமைதி எட்டாமல்
அழுது மடிவதும்
கொட்டாவி விட்டபடி
கொடுமைகளைச்
சுமப்பதும்
தொண்ணூற்றி
எட்டிலும் -
தொடர் கதை
தானோ?

ரேணுகா நிபாய்தீன்-
ஏறாவூர்-02.

**அன்றும்- இன்றும்!**

எண்பத்தி மூன்றில்
'வெலிக் கடை'யில் அப்பா!
தொண்ணூற்றி ஏழில்
'களுத்துறை'யில் மாமா!
விண்ணுலகில் இருவரும்
நிரந்தரமாய் துயில;
கண்மணி நீ கண்ணுறங்கு!
கொட்டாவி போதுமடா!"

அ. கௌரிதாசன்-ஆலங்கேணி (கிழக்கு)

**கொட்டாவி!**

நித்திரைக்கு அழைப்பு
விடுக்கும் முத்திரை
இல்லாத தபால்!

அக்பர் நகரம் பெ. ஜெயராஜ்.

**வீழ்ச்சி**

வயல் உண்டு நெல் இல்லை;
பணம் உண்டு அரிசி இல்லை;
பசி உண்டு சோறு இல்லை!

எம். தாலிப்- ஏறாவூர்.

## கவிதைப் போட்டி இல.239



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 17.01.1998

**முகவரி:** கவிதைப் போட்டி இல.239, தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

**காணாமற்போன மகன்**

கைது செய்யப்பட்டு
காணாமற்போன
இருபது வயது
இளைய மகனின்
இரண்டு வயது படம்!

திருமதி ஜெ. இஸ்மயில்-
மடவள பஸார்.

**எட்டாப் பழம்...?**

கொட்டாவி விட்டால்
உறக்கம் வரும்!
எட்டாச் சமாதானம்
எப்ப வரும்?

சோழியூர் சிவடீஸ்வரன்-
யாழ்ப்பாணம்.

**சுதந்திரம்...!**

தூக்கம் வருகிறதா...
தூங்கிவிடு-உன்
சொப்பனத்திலாவது,
சுதந்திரத்தைக் காண்பாய்!

வி. ஞானகுமார்- 'குமார
பவனம்', சாமிமலை.

## வாசக(ர்)சாலை



பிரபாகரின் 'மேக்கப் புன்னகை' சினிமா உலகின் நிகழ்வுகளை இணைத்து விறுவிறுப்பாய் நகர்கிறது. பாலகுமாரனின் 'இனி என் முறை'யும் அசத்தலாகவே தொடர்கிறது. 'அனுபவம் புதுமை'- புதிய பகுதி நெஞ்சில் நிறைகிறது. காதில பூ கந்தசாமியாரின் 'தேர்தல் வாக்குறுதி வங்கி', 'கடனுதவி கோரல்' உறைக்க வேண்டியவர்களுக்கு உறைத்தால் சரி.

செல்வன் எஸ். ஸ்ரீரவி, மெல்புர, சிலாபம்.

☆✪

நீ சுமக்கும் செய்திச் சுமைகள் அனைத்தும் அமிர்தம். அதிலும் 'தேர்தல் திருவிழா' என்ற தலைப்பில் வந்த கற்பனைச் சித்திரம் அமிர்தத்திலும் அமிர்தம்- வாழ்த்துக்கள்!

க. புண்ணியமூர்த்தி, கொம்மாதுறை.

☆✪

வெற்றி முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. அத்தோடு நீ தொகுத்துத் தரும் 'அனுபவம் புதுமை' என்ற கவியரசு கண்ணதாசனின் பகுதியும், சேகுவேராவின் கடிதமூலம் அவரை ஞாபகப்படுத்தியதற்கும் என் மனமார்ந்த நன்றிகள் பல....!

செல்வி பரிமளாகாந்தி கந்தையா, கிளாஸோ எஸ்டேட், நானுஓயா.

☆✪

அன்பின் முரசே!

நீ வாரம் தோறும் சுமந்து வரும் அனைத்து அம்சங்களுள் 'டயானாவின் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' 'பூலான் தேவி', 'சிந்தியாவின் பதில்கள்' என்னை மிகவும் கவர்ந்துள்ளன. இன்னும் புதுப் புது அம்சங்களை தினமுரசில் வெளிப்படுத்த வேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

எனது இனிய நல்வாழ்த்துக்கள்!

என்.எஸ். காந்தன், பாலமீன்மடு, மட்டக்களப்பு.

☆✪

### வேலியே பயிரை மேய்வதா?

களுத்துறைச் சிறையில் நடைபெற்ற படுகொலைகளை தெளிவாக தந்ததற்கு முரசுக்கு நன்றி. இதே அரசாங்கத்தில் ஒரு வருடத்திற்கு முன்பாக களுத்துறையில் சிறுபான்மை முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன வெறியாட்டத்தின் விளைவாக நான்கு வாலிபர்களை நாம் இழந்தோம். அப்படுகொலைகளை நேரடியாக மேற்கொண்ட பொலிஸார் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வேலியே பயிரை மேயும் நிலை இனித் தொடருமானால் தொடரும் யுத்தத்தைத் தடுக்க எந்த சக்தியாலும் முடியாது போய்விடும்.

எம்.இஸட்.எம். பைஸீன், களுத்துறை (தெற்கு).

☆✪

இன்று கூட்டணியாக இருக்கும் இலங்கையின் தமிழரசுக் கட்சிக்கு 50 வயதாகப் போகிறது. அமைச்சரவையிலிருந்த ஜி.ஜி.க்கும் (தமிழ்க் காங்கிரஸ்) திருச்செல்வத்திற்கும் உருவச்சிலைகள் அமைத்து பெருமை பாராட்டி வருகின்றோம். பின்னர் எதற்கு நான் இன்று அகதி முகாமில் இருக்கின்றேன்? இனிமேல் நான் எந்த அரசியல் கட்சிக்கும் வாக்களிப்பதில்லை என்றும், எனது வாக்கை செல்லுபடியற்றதாக்கிவிடுவது என்றும், நான் யாழ்ப்பாணம் வருவதற்காக வவுனியா அகதிகள் முகாமில் இருந்தபோது தீர்மானித்துக் கொண்டேன். எனது உள்ளத்தில் பொருமிக் கொண்டிருந்த உணர்வுகளை இராஜதந்திரியும் வெளியிட்டிருந்தார்.

சி. ரஞ்சன், நல்லூர், யாழ்ப்பாணம்.

☆✪

இனிய முரசே!

வாரந் தோறும் நீ சுமந்து வரும் 'பூலான் தேவி', 'மேக்கப் புன்னகை', 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' அனைத்து அம்சங்களும் சலிக்காதவை, மற்றும் கண்ணதாசனின் 'அனுபவம் புதுமை' புதிய பகுதி அருமையாக இருந்தது.

வி.கே. சுந்தரி, தெமோதர.

☆✪

தூற்றுவார் தூற்றட்டும்; போற்றுவார் போற்றட்டும்; நாம் செல்லும் வழி நேர்வழியாகட்டும் என்ற உன் சிறந்த பணி மென்மேலும் வளர வாழ்த்துகிறேன்.

தெ. மகிழ், செட்டிக்குளம்.

☆✪

முரசில் வடக்கு-கிழக்கு தமிழ்க் கட்சிகள், அவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாட்டை பாரபட்சமின்றி வெளிப்படுத்துகிறாய். அதேவேளை மலையகத்தில் வியர்வை சிந்தி நாள் சம்பளமாகப் பெற்று அதில் மாதம் 15/-ரூபாவை தொழிற்சங்க சந்தாவாக செலுத்துகின்றனர். இந்த தொழிற்சங்கங்கள் மக்களுக்காக செய்த சேவை என்ன? இன்றைய மலையக தமிழ்க் கட்சிகள் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடு என்ன? என்பது பற்றியும் சற்று அலசி ஆராய வேண்டுமென மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சின்னக்கண்ணன், கந்தப்பளை.

☆✪

**அறிவித்தல்**

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

### சுருக்கமான அலுவல்

முரசே!

கடந்தகால தமிழ் அரசியல்வாதிகள் வாக்குத் திரட்ட என்ன பாடுபட்டார்கள் தெரியுமா? ஐந்து வருடமாக எத்தனையோ கஷ்டப்பட்டு, ஓடியாடித் திரிந்துதான் உள்ளூராட்சி சபைக்குக்கூட உறுப்பினராக வேண்டும். தேர்தல் என்றால் லேசா என்பர். இப்போது வடக்கு-கிழக்கில் தேர்தலில் போட்டியிட டம்மிகளே போதும் என்ற நிலை வந்துவிட்டது. அக்கால அரசியல்வாதிகளும் மக்களை ஏமாற்றினார்கள்தான். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் ஏமாற்றுவதுகூட இத்தனை சுலபமாக இருக்கவில்லை. சில வாக்குறுதிகள், சில சுவரொட்டிகளுடன் டம்மிகளைப் போட்டு சுருக்கமாக அலுவல் பார்த்துவிடுகிறார்களே தமிழ்க் கட்சிகள்! யாழ் மக்கள் ஏமாறுவார்களா?

தி. ஆருர்தாஸ், மட்டக்குளி.

### பெரிய பூ

இனிய முரசுக்கு:

உள்ளூராட்சித் தேர்தல் மூலம் யாழ் குடாநாட்டு மக்களின் காதில் பெரிய அளவில் செய்யப்பட்ட பூ ஒன்று வைக்கப்பட உள்ளது. வாக்களிப்பது மூலம் யாழ் மக்கள் தங்கள் காதுகளை காட்டுவர் என நம் அரசியல்வாதிகளும் நினைக்கின்றனர். பலவந்தமாக வாக்களிக்கச் சொன்னால், அதற்கும் உச்சத் தெரியும். காலம் மாறிவிட்டது.

ஜி. ரங்கநாதன், யாழ்ப்பாணம்.

### ஜயசிக்குறுய்

தமிழ்க் கட்சிகளிடையே யாழில் 'ஜயசிக்குறுய்' என நாரதர் கூறினாலும் கூறினார், உண்மையாகவே யாழில் மோதிக் கொண்டார்கள் போங்கள்! நாரதரே எக்ஸ்ரே எக்ஸ்ரேதான்!

மா. ஜேசுதாசன், நீர்கொழும்பு.

### மக்கள் தீர்ப்பு

அன்புள்ள முரசுக்கு, வாழ்த்துக்கள்!

யாழ் குடாநாட்டில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள், நாளை இங்கும் வாக்குக்கேட்டு வரத்தானே போகின்றன? யாழ் மக்கள் மட்டுமல்ல, நாமும் இக்கட்சிகளை புறக்கணிக்கத்தான் போகிறோம். கிழக்கிலும் உள்ளூராட்சித் தேர்தல் என்று கதைகள் அடிபட்டன. வரட்டும், யாழ்ப்பாணத்தில் மோசமான சூழ்நிலையில் போட்டியிட்டதற்கான மக்கள் தீர்ப்பை வழங்கக் காத்திருக்கிறோம்.

என். ரங்கநாயகி, திருமலை.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

www.padippakam.com

# வேட்பாளர் மனுக்கள் புலிகளின் கையில்?

## நிதானமான நடவடிக்கைக்குத் திட்டம்!

யாழ் குடாநாட்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக புலிகள் பகிரங்க நிலைப்பாடு எதனையும் தெரிவிக்கப்போவதில்லை என்று தெரியவருகிறது.

மக்களை கட்டாயப்படுத்தி வாக்களிக்கும் சூழ்நிலை இருப்பதால், தேர்தலை பகிஷ்கரிக்குமாறு பகிரங்க அறிக்கை விடாமல் தவிர்ப்பதே நல்லது, என்று புலிகள் கருதுகிறார்களாம்.

தேர்தல் சமயத்திலோ, தேர்தலின் முன்னர்- பின்னரோ நடைபெறக்கூடிய சம்பவங்களுடன் தம்மை ஆதாரபூர்வமாக தொடர்புபடுத்தவும் பகிஷ்கரிப்பு அறிக்கையை அரசு பயன்படுத்தலாம், என்றும் புலிகள் கவனமாக உள்ளனராம்.

யாழ் குடாநாட்டில் கடந்தகால மனித உரிமை மீறல்களை மூடிமறைக்கக் கூடிய பாரிய அசம்பாவிதங்களுக்கு புலிகளை பொறுப்பாக்குவதே சில சக்திகளின் திட்டம் என்று நம்பப்படுகிறது. அதனால்தான் விவேகமான முறையில் தங்கள் செயற்பாடுகளை மேற்கொள்ள புலிகள் திட்டமிட்டுள்ளனராம்.

யாழ் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக தமது நிலைப்பாட்டை புலிகள் மறைமுகமாக தெரிவித்துவிட்டனர்.

தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு புலிகளிடம் இருந்து கடிதங்கள் சென்றுள்ளன. வேட்பாளர்கள் சிலருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

"தேர்தல் கடமைகளுக்கு ஒத்துழைக்க வேண்டாம்!" என்று அதிகாரிகளுக்கும், போட்டியில் இருந்து விலகிக்கொள்ளுமாறு வேட்பாளர்களுக்கும் கடிதங்கள் சென்றுள்ளன.

இதேவேளை தேர்தலில் போட்டியிட சமர்ப்பிக்கப்பட்ட சகல கட்சிகளினதும் வேட்பு மனுக்களின் பிரதிகள் புலிகளின் கைக்கு போயிருப்பதாக தகவல் ஒன்று கூறுகிறது.

குறிப்பிட்ட வேட்பு மனுவில் உள்ள சில முகவரிகளுக்கு புலிகள் இயக்கத்தினர் சென்றுள்ளனராம். அந்த முகவரியில் குறிப்பிட்ட வேட்பாளர்கள் இல்லாமையால் திரும்பிச் சென்றுள்ளனர்.

வேட்பு மனுவில் உள்ள பல முகவரிகள் போலியானவை என்பதுடன், வேட்பாளர்களும் 'டம்மி' என்பதால் புலிகளே குழம்பிப் போயிருக்கின்றனர்.

உண்மையான வேட்பாளர்களும் பெயர்களைக் கொடுத்துவிட்டு தங்கள் கட்சிகளின் முகாம்களுக்குள்ளேயே பாதுகாப்பாக இருக்கின்றனர்.

வேட்பு மனுக்களின் பிரதிகள் புலிகளின் உளவுப் பிரிவினரிடம் சென்றுவிட்டது என்ற தகவல் வேட்பாளர்கள் மத்தியிலும் பரவி உள்ளது. இதனால் சரியான முகவரி கொடுத்த வேட்பாளர்கள் சிலர் முழித்துக் கொண்டிருக்கின்றனராம்.

# தேர்தலின் பின்பு பாரிய உதவிகள்

## வெளிநாட்டு அமைப்புக்கள் தயாராம்!

யுத்த செலவீனங்கள் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முடங்கி உள்ளன.

பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கு முன்பாக தென்னிலங்கையில் குறிப்பிட்டளவான அபிவிருத்திகளேனும் செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால், தம்மால் மக்களுக்கு முகம் கொடுக்க முடியாது என்று ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைமையிடம் தெரிவித்துவிட்டனராம்.

யுத்தச் செய்திகளை மட்டுமே நம்பி தேர்தல் களத்தில் கால்வைக்க முடியாது, கடந்த தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் சிலவற்றையேனும் நிறைவேற்றியாக வேண்டும் என்று ஆளும் கட்சி பா.உ.க்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு பகுதிகளில் ஜனநாயகம் நிலவுவதாகவும், இயல்பு வாழ்க்கைக்கான சூழல் இருப்பதாகவும் தெரிந்தால் பெருமளவு உதவி வழங்க வெளிநாடுகளும், வெளிநாட்டு நிறுவனங்களும் தயாராக உள்ளன.

யாழ் குடாநாட்டு உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்ட சூட்டோடு சூடாக பெரும் தொகையான கடன் உதவியும், அபிவிருத்திக்கான அன்பளிப்புக்களும் அரசுக்கு கிடைக்க உள்ளதாகவும் தெரிய வருகிறது.

அடுத்து கிழக்கு மாகாணத்திலும் உள்ளூராட்சி தேர்தலை நடத்தி முடித்துவிட்டால் நிதி உதவி இரட்டிப்பாக கிடைக்கலாம்.

அந்த நிதி உதவியை நாட்டின் ஏனைய பகுதிகளின் அபிவிருத்திக்கு தாராளமாக பயன்படுத்தவும் திட்டம் உள்ளதாக தெரிய வருகிறது.

**தொடர் விஜயங்கள்**

யாழ் குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டவுடன் அமைச்சர்கள் பலர் அங்கு அடுத்தடுத்து விஜயம் செய்தமை தெரிந்ததே. யாழ் குடாநாட்டு அபிவிருத்திக்காக என்று வேலைத் திட்டங்கள் தயாரித்து, வெளிநாட்டு உதவிகள் பெறும் முயற்சியே அதுவாகும் என்று கூறப்பட்டது.

நேரடியாக பார்த்துத்தான் முடிவு செய்வோம், உதவி தருவோம் என சில வெளிநாட்டு அமைப்புக்கள் கூறியதால் அம் முயற்சி கைவிடப்பட்டது. அமைச்சர்களின் யாழ் விஜயங்களும் நின்று போயின.

ஆனால், உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டு பிரதிநிதிகள் தெரிவானால் அரசுக்கு உதவ பல நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

ஏற்கனவே யாழ் குடாநாட்டுக்கு என நிறுவப்பட்ட புனரமைப்பு குழுவுக்கு பெரும்பான்மை இனத்தவரான சோமபால குணதீர என்பவரே பொறுப்பாக உள்ளார். இந்த புனரமைப்பு குழுவுக்கு எங்கிருந்து, எவ்வளவு பணம் வருகிறது? எங்கெங்கு செலவிடப்படுகிறது என்பது யாழ் மாவட்ட எம்.பி.களுக்கே தெரியாத மர்மமாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**உதவிகள்-அறிவிப்புகள்**

யாழ் மாவட்ட அபிவிருத்திக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என ஈ.பி.டி.பி.யிடமும், யாழ் மாவட்டத்தில் 500 தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் என ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பிடமும் ஜனாதிபதி கூறியதாக செய்திகள் வெளிவந்தன.

யாழ் உள்ளூராட்சித் தேர்தலின் பின்பு பெறப்படப்போகும் அரசியல், பொருளாதார, நிதி ஆதார இலாபங்களை கருத்தில் கொண்டும், உதவி வழங்கும் நிறுவனங்களுக்கு நம்பிக்கையூட்டவுமே யாழ் மாவட்டத்திற்கு அதிக சலுகைகள் வழங்கப்படுவது போன்ற அறிவிப்புக்கள் வெளியாகின்றனவா என்றும் சந்தேகிக்கப்படுகிறது. இறால் போட்டு சுறா பிடிக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதோ? என்று தமிழ்க் கட்சிப் பிரமுகர் ஒருவரிடம் கேட்டபோது, அவர் கருத்துக்கூற மறுத்துவிட்டார்.

தனது பெயரை குறிப்பிட விரும்பாத அரசியல் பிரமுகர் ஒருவர் கூறும்போது, யாழ் மாவட்ட மக்கள் ஏனைய மாவட்ட மக்களின் அபிவிருத்திக்காக தேர்தல் நாடகத்தில் பங்கேற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்றார். ■

# வங்கி அலுவல்கள் நிறுத்தம்!

மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை மாவட்டங்களின் பிராந்திய தலைமை இலங்கை வங்கிகளில் இடம் பெற்று வந்த சனிக்கிழமை அலுவல்கள்- ஜனவரி 10 ஆம் திகதியிலிருந்து நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திடீர் அறிவித்தலினால் இது வரை காலமும் நன்மை பெற்றுவந்த வாடிக்கையாளர்கள்- குறிப்பாக அரச தனியார்துறை ஊழியர்கள் பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளார்கள்.

வைப்புக்கள், காசோலைகள், வெளிநாட்டு உண்டியல்கள், நகை அடைவு என்பன முற்றாக நிறுத்தப்படுவதால் ஓய்வு நாட்களில் வங்கி அலுவல்களை முடிக்க காத்திருக்கும் அரச- தனியார்துறை ஊழியர்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இதே வேளை, அரச துறை சாரா வங்கிகள் அனைத்திலும் வார இறுதி விடுமுறை நாளான சனிக்கிழமையும் கரும மாற்றுவதால் வாடிக்கையாளர்கள் அங்கு தமது அலுவல்களை நாடக்கூடும் என்று கருதப்படுகிறது. ●

# அமெரிக்க தூதுக்குழு வருகை! – இன்னொரு ஏமாற்று நாடகம்

## தமிழ்க் கட்சிகளும் பங்கேற்பு

இலங்கை இனப்பிரச்சனையில் நீதியான தீர்வை விரும்புவதாக இலங்கை மக்களை நம்பவைக்க அமெரிக்கா விரும்புகிறது. அதற்கான நாடகங்களில் ஒன்றுதான் அமெரிக்க காங்கிரஸ் தூதுக் குழுவின் இலங்கை வருகை, என்று அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

புலிகள்மீதான தடை, இலங்கை அரசுக்கு உதவி, படையினருக்கு இராணுவப் பயிற்சி ஆகிய நிலைப்பாடுகள் காரணமாக இலங்கைத் தமிழர்கள் மத்தியில் அமெரிக்காவுக்கு எதிரான உணர்வுகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஊடாக மேற்கண்ட தகவல்கள் அமெரிக்க காங்கிரஸ் வரை சென்றிருக்கிறது.

இந்நிலையில் இலங்கை விவகாரத்தில் தன்னை நீதிமானாகக் காட்டும் முயற்சிதான் அமெரிக்க காங்கிரசின் கரிசனைக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையே, யாழ் தேர்தலுக்கான தங்கள் பிரசாரத்திற்கு, அமெரிக்கா காங்கிரஸ் பிரதிநிதிகளுடான சந்திப்பை பயன்படுத்தி அறிக்கைவிட சில தமிழ்க் கட்சிகள் முண்டியடித்தன.

புலிகளை அமெரிக்கா தடைசெய்ததை கண்டித்து புளொட் காட்டமான அறிக்கை ஒன்றை முன்னர் யாழ்ப்பாணத்தில் விடுத்திருந்தது. அமெரிக்காவுக்கு- உபதேசிக்கும் தகுதி கிடையாது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

அதே புளொட் இயக்கத்தினர் சமீபத்தில் விடுத்த அறிக்கையில்,தமிழ் மக்களின் நடைமுறைப் பிரச்சனை தொடர்பாக அமெரிக்க காங்கிரஸ் தூதுக்குழுவுக்கு எடுத்துரைத்ததாக கூறியுள்ளனர்.

யாழ் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாண மக்களிடம் தாங்கள் நல்ல பெயர் எடுப்பதற்காக, அமெரிக்காவுக்கு நல்ல பெயர் தேடிக் கொடுத்துள்ளன சில தமிழ்க் கட்சிகள்.

# சுதந்திரதின இரகசியத் திட்டம்

எதிர்வரும் பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்னர் வவுனியா-கிளிநொச்சி தரைவழிப் பாதையைத் திறக்குமாறு அரசாங்கம் படையினரைப் பணித்துள்ளது.

கிளிநொச்சியில் இருந்து பிரயாணிகள் பஸ் ஒன்றை வரவழைத்து, பெப்ரவரி 4ம் திகதியன்று கண்டியில் நடைபெறும் சுதந்திர தினக் கொண்டாட்ட வைபவத்தின்போது, அந்த பஸ்ஸை வரவேற்பது என அரசு இரகசியமாகத் திட்டமிட்டுள்ளதாலேயே குறித்த திகதிக்கு முன்னர் தரைவழிப்பாதையைக் கைப்பற்ற வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதாக 'யுக்திய' சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.

சுதந்திர தின விழாவின்போது அந்த பஸ்ஸை வரவேற்கும் நிகழ்ச்சிக்கு அதி முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதால், அரசு அதற்கான முயற்சிகள் வெற்றி பெற சகல விதத்திலும் முயன்று வருவதாகவும், ஆனால் தரைவழிப் பாதையைக் கைப்பற்றும் குறித்த இலக்கை அடைய படையினருக்கு, ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. ■

# நகர சபைக்குள் அத்துமீறல்

## சபைத் தலைவரின் சண்டித்தனம்!

(நமது நிருபர்)

திருமலை நகர சபைத் தலைவரின் பாதுகாவலர்களான பொலிசார் ஆயுதங்களுடன் சபைக் கூட்டத்தில் பிரவேசித்தனர். நகர சபை உறுப்பினர் ஒருவரை தாக்கவும் முற்பட்டனர். இந்த அத்துமீறல் சம்பவம் 5.01.98 அன்று நடைபெற்றது.

இச் சம்பவம் தொடர்பாக முரசுக்குக் கிடைத்த தகவல்களாவன:

29.12.97ல் நகர சபைக் கூட்டத்தை தன்னிச்சையாக கூட்டினார் நகர சபைத் தலைவர். அக் கூட்டத்தில் நகர சபைக்கான பட்ஜெட் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது எனவும் அறிவித்திருந்தார்.

05.01.98ல் நகர சபைக் கூட்டம் நடந்தபோது, முன்னைய கூட்ட அறிக்கையை உறுப்பினர்கள் எதிர்த்தனர்.

அவ்வாறு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டால் சபையில் வாக்கெடுப்புக்கு விடுவதே முறையாகும். வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் தோல்வி ஏற்படும் என்பதால் சண்டித்தனத்தில் இறங்கினார் சபைத் தலைவர்.

தனக்குப் பிடிக்காத உறுப்பினர்களை சபையில் இருந்து வெளியேற்றுமாறு தனது மெய்க்காவலர்களான பொலிசாரை அழைத்தாராம்.

அவர்களும் ஆயுதங்களுடன் உட்பிரவேசித்து, நந்தகுமார் என்ற உறுப்பினரை சட்டையில் பிடித்து இழுத்து வெளியே கொண்டுபோயினராம்.

ஆயுதங்களுடன் சபையில் பிரவேசிக்கவோ, நகர சபை உறுப்பினர்களை வெளியேற்றவோ நகர சபைத் தலைவரின் பாதுகாவலர்களான பொலிசாருக்கு அதிகாரம் கிடையாது. இது தொடர்பாக நகர சபை உறுப்பினர்கள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு முறையிட்டுள்ளனர். ■

# கசிப்பு வாங்கி வா!– நோன்பாளி மீது தாக்குதல்!

புனித றம்ழான் நோன்பு காலத்தில் ஏனைய மதத்தவர்களும்கூட முஸ்லிம்கள் நோன்பை அனுஷ்டிப்பதற்கு கண்ணியம் கொடுத்து வருவது தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் சிறப்பம்சமாகும்.

இது ஒரு புறமிருக்க, பொலிஸ்காரர் ஒருவரால், கசிப்பு வாங்கிவர மறுத்த நோன்பாளியான வயோதிப முஸ்லிம் ஒருவர் துரத்தித் துரத்தித் தாக்கப்பட்டு, சேற்றுக்குள் மூழ்கடிக்கப்பட்ட சம்பவமொன்று ஏறாவூரில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எம்.எம்.இப்றாஹிம் (43 வயது) என்பவர் வியாபாரத்திற்குச் சென்று திரும்பிக் கொண்டிருக்கும் போது, ஏறாவூர் பிரதேச செயலகத்திற்கு முன்னாலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் சிவில் உடையில் நின்றிருந்த ஜெகத் (இல 37535) என்ற பொலிஸ்காரன் அவரை வழிமறித்து தனக்குக் கசிப்பு வாங்கித் தருமாறு கேட்டாராம்.

"நான் நோன்பாளி, அதுவுமல்லாமல் புனித நோன்பு காலத்தில் இதுவெல்லாம் செய்யக்கூடாத காரியங்கள். நான் களைத்துப் போய் வருகிறேன் எனக்கு முடியாது" என்றிருக்கிறார்.

இதைக் கேட்டு ஆத்திரமுற்ற அந்தப் பொலிஸ்காரர் அவரைச் சைக்கிளிலிருந்து கீழிறக்கி துரத்தித் துரத்தித் தாக்கியிருக்கிறார். அவரைத் துரத்திச் சென்று, ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள சேறும் சகதியும் நிறைந்த சாக்கடை நீருக்குள் வீழ்த்தி அமுக்கிப் பிடித்துக்கொண்டு மேலும் பலமாகத் தாக்கினாராம். பலத்த அடி-உதை காரணமாக அவர் தள்ளாடிய நிலையில் காணப்பட்டார். அவர் அணிந்திருந்த சேர்ட் சேற்று அழுக்குடன் கீலங்கீலமாகக் கிழிந்திருந்தது. அரை நிர்வாணியாக அவர் சேற்று நீரிலிருந்து மீண்டு வந்தார்.

தனது மூவாயிரத்து முன்னூறு ரூபாவும் கொள்ளையடிக்கப்பட்டதாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள முறைப்பாட்டில் கூறியுள்ளார். தற்சமயம் அவர் ஏறாவூர் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

புனித நோன்பு காலத்தில் அடாவடித்தனத்தில் ஈடுபட்ட பொலிஸ்காரரின் செய்கை ஊர் மக்களைக் கொதிப்படைய வைத்துள்ளது. சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதை வாடிக்கையாகக் கொண்டவர் என்று பொலிஸ் தரப்பிலுள்ள சிலரே தெரிவிக்கிறார்கள்.

இந்த விடயம் ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், அமைச்சர் அலவி மௌலானா, பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ், பா.உ. செய்யுதலி ஸாஹிர் மௌலானா, பொலிஸ் மா அதிபர், பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் கவனத்திற்கு ஏறாவூர் பிரதேச சபையால் கொண்டு வரப்பட்டுள்ளது. சம்பவம் 04.01.98 அன்று பிற்பகல் மூன்று மணிக்கு நடந்தது.

இது போன்று முன்னரும் பலமுறை ஏறாவூரில் தனது இனத்துவேஷம் காட்ட முனைந்த பொலிஸார் மீது ஏறாவூர் மக்கள் கொதித்தெழுந்து நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட பொலிசாரை வேறு இடங்களுக்கு அனுப்பியிருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ■

# யாழ் மாணவர்கள் கேள்விக் கணை!

## அன்று பகிஷ்கரிப்பு!

## இன்று பங்குபற்றலா?

யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு தமிழ்க் கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் சென்றனர். அங்கு கருத்தரங்கு நடத்தினர்.

அப்போது மாணவ- மாணவிகள் மத்தியில் இருந்து கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டன.

"1981ல் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல், 1983ல் உள்ளூராட்சித் தேர்தல் ஆகியவற்றில் கூட்டணியினர் போட்டியிட்டதை எதிர்த்தீர்கள். பகிஷ்கரிக்குமாறு கோரிக்கை விடுத்தீர்கள். இன்று ஏன் போட்டியிடுகிறீர்கள்?" என்று கேட்கப்பட்டதாம்.

"திம்புவில் சகல கட்சிகளும் இணைந்து தானே அடிப்படைக் கோரிக்கைகளை முன் வைத்தீர்கள். இன்று ஏனைய தமிழ்க் கட்சிகள் மட்டும் ஏன் பின்வாங்கி நிற்கிறீர்கள்?" என்பன போன்ற பல கேள்விகள் தொடுக்கப்பட்டதாம்.

மாணவர்கள் கேட்ட இன்னொரு கேள்வி: தமிழ் கட்சி உறுப்பினர்களை கலங்கடித்துவிட்டது: இத் தேர்தலில் யாழ்ப்பாண மக்கள் வாக்களிப்பார்கள் என்றா நினைக்கிறீர்கள்?" என்று கேட்டனராம்.

இவர்களே தங்கள் பெற்றோர்களை தடுத்து விடுவார்கள் போல் இருக்கிறதே என்று அந்தக் கட்சியினர் கலங்கிப் போனார்களாம். ■

# "தமிழீழம் போய் வந்தீர்களா?"

## நிருபர் வீட்டில் சோதனை

இந்தியப் பத்திரிகையாளரான நிருபமா சுப்ரமணியம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கிலப் பத்திரிகையில் நிருபராக கொழும்பில் பணியாற்றி வருகிறார். முன்னர் 'இந்தியா ருடே'யில் பணியாற்றினார்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தங்கியுள்ள வீட்டுப் பகுதியில் ஒரு வீடு எடுத்து தங்கியுள்ளார் நிருபமா. கடந்த 3ம் திகதி அதிகாரி ஒருவர் தலைமையில் ஆயுதம் தாங்கிய இராணுவ வீரர்கள் 12 பேர் அனுமதி ஏதுமின்றி இவரது வீட்டிற்குள் நுழைந்தனர். உள்ளே சென்று சோதனை நடத்தினர்.

இது குறித்து நிருபமா சுப்ரமணியம் கூறியதாவது:

கதவைத் திறந்ததும் வீட்டிற்குள் அனுமதியின்றி திபுதிபுவென புகுந்தனர். இவர்களது சத்தத்தைக் கேட்டு, மாடியில் இருந்த நான் கீழே இறங்கி வந்தேன். 2 பெண் வீராங்கனைகள் உட்பட வீரர்கள் அனைவரும் வீடு முழுவதும் பரவிக் கிடந்தனர். என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தேன்.

வீடு முழுவதும் சோதனை செய்தனர். மாடியில் உள்ள அலுவலகத்தையும் எனது படுக்கை அறையையும் சோதனையிட்டனர். என்னிடம் இருந்த கம்பியூட்டரில் புலிகள் அனுப்பிய ஃபக்ஸ் செய்திகள், சண்டை நடந்து வரும் பகுதி வரைபடங்கள் ஆகியவற்றைக் கண்டு ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு மட்டக்களப்பு நகருக்குச் சமீபத்தில் நான் சென்றிருந்தபோது புலிகளின் கோர்ட்டை நான் ஃபோட்டோ எடுத்து வைத்திருந்தேன். அதைக் கவனித்த இராணுவ அதிகாரி, 'ஓ... நீங்கள் தமிழீழத்திற்கு சென்றீர்களா?' எனக் கேட்டார். அது உங்கள் நாடு எனக் கூறினேன். 45 நிமிட சோதனைக்குப் பின்னர் அவர்கள் திரும்பி விட்டனர்.

இந்தியப் பத்திரிகையாளர் என்பதால் அத்துமீறி நுழைந்து இந்தச் சோதனையை நடத்தி உள்ளனர். இவ்வாறு நிருபமா சுப்ரமணியம் கூறியுள்ளார்.

இந்தச் சோதனையில் நிருபமா சுப்ரமணியத்திற்கு எந்தப் பாதிப்பும் இல்லை. இது வழக்கமான சோதனைதான் என இராணுவ அதிகாரி தெரிவித்து விட்டுச் சென்றார்.

ஆனால் நிருபமா இதை மறுக்கிறார். "இது வழக்கமான சோதனை அல்ல: இந்தத் தெருவில் என் வீடு மட்டும்தான் சோதனை செய்யப்பட்டது. அப்படி இருக்கும்போது வழக்கமான சோதனை என்று எப்படிக் கூறமுடியும். மேலும் அந்தத் தெருவில் உள்ள வீடுகள் அனைத்தும் சிங்களவர்கள் வீடு. அதனால் அவர்கள் வீடுகளில் சோதனை நடத்தவில்லை" என்றும் கூறினார்.



பொங்கட்டும்
எங்கும் இன்பம்!
பொங்கட்டும்
எங்கும் உண்மை!
பொங்கட்டும்
எங்கும் நீதி!
பிறக்கட்டும்
புதிய பூமி!
வாசக
நெஞ்சங்களுக்கு
முரசின்
வாழ்த்துப்
பொங்கல்! ■



படிப்பகம்

www.padippakam.com

# "எங்களை ஏன் மறந்தனரோ?"

## -மன்னார் மாவட்ட பட்டதாரிகள்-

கடந்த மூன்று ஆண்டுகளாக மன்னார் மாவட்டத்தில் ஏறத்தாழ 75 பேர் வேலையற்ற பட்டதாரிகளாகவே காணப்படுகிறோம். இவர்கள் 1994/95, 1995/96 ஆகிய இரு கல்வியாண்டைச் சேர்ந்த கலை, வர்த்தக, விஞ்ஞான பீடங்களில் இருந்து படிப்பைப் பூர்த்தி செய்து வெளியேறியவர்களாவர். இது இவ்வாறிருக்க தற்போதைய அரசாங்கம் பட்டதாரிகளைத் தவிர்த்து ஏனையோரைக் கொண்டு இட நிரப்பு செய்வது எமக்கு கவலை தரும் ஒரு விடயமாகக் காணப்படுகிறது.

அத்துடன் எமது மாவட்டத்தில் காணப்படும் சில வெற்றிடங்களுக்கு எமது மாவட்ட பட்டதாரிகளைப் புறக்கணித்து பிற மாவட்ட பட்டதாரிகளைக் கொண்டு இடநிரப்பும் இச்செயலை எமது ஒன்றியம் வன்மையாகக் கண்டித்து நிற்கிறது.

சமுர்த்தி-சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின் சமுர்த்தி முகாமையாளருக்கான வெற்றிடங்கள் ஏனைய மாவட்டங்களில் நிரப்பப்பட்டுள்ளன. எனினும் எமது மாவட்டத்தில் இத்திட்டம் அமுல்படுத்தப் படாததுடன் அதற்கான எதுவித ஏற்பாடும் செய்யப்படாத நிலைமையே தொடர்கிறது.

எமது மாவட்ட- கல்வித் திணைக்களத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான 17 வெற்றிடங்கள் உட்பட 439 வெற்றிடங்களும் கமநலசேவைகள் திணைக்களத்தில் பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் ஒன்பதும் காணப்படுகின்றன. இப்பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டும் இதுவரை எதுவித நேர்முகப் பரீட்சையோ அதற்குரிய ஆயத்தங்களோ மேற்கொள்ளப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

வேலையற்ற பட்டதாரிகளாகிய நாங்கள் கடந்த காலங்களில் போர் அபாயங்கள் சூழ்ந்த பகுதியான யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில்- பல பிரயாணக் கஷ்டங்களின் மத்தியில்- அச்சம் எம்மை அச்சுறுத்திய - வேளையிலும் பெரும் தொகையான பணத்தைச் செலவு செய்து எமது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தோம். ஆயினும் இதுவரை எமக்கு நிம்மதியைப் பெற்றுத்தரக்கூடியவகையில் எந்தவிதமான வேலைவாய்ப்பும் கிடைக்கவில்லை. இது தொடர்பாக எமது மாவட்ட மேல்மட்ட நிர்வாக கட்டமைப்புக்களும் எமது இத்தகைய நிலையை ஆராய்ந்து, எமக்காக எந்தவிதமான செயற்பாடுகளையோ அல்லது நடவடிக்கைகளையோ மேற்கொள்ளத் தவறிவிட்டன. இது எம்மை மிகவும் மனவேதனையில் ஆழ்த்தியுள்ளது.

மேற்கண்டவாறு 'மன்னார் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்' வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எம் தமிழே...! ஏன் தமிழே?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் வர்த்தக சேவை ஒலிபரப்பானது தெளிவற்றதாகவே ஒலிபரப்பாகிறது.

இந்த வர்த்தக சேவை ஒலிபரப்பானது வகை வகையான இரைச்சல்களுடன் ஒலிபரப்பாகிறது. இவ்விரைச்சலானது முதலில் இடையிடையே கேட்டுக் கொண்டிருக்கும். பின்னர் நிகழ்ச்சியே தடைப்படுமளவுக்கு இரைச்சலே கேட்டுக் கொண்டிருக்கும். எத்தனையோ நாட்கள் செய்தியினைக்கூட கேட்க முடியாமல் இந்த இரைச்சலே கேட்டிருக்கிறது.

இதனால் இச்சேவை மீது மட்டுமல்லாமல் இச்சேவை ஒலிபரப்பாளர்கள் மீதும் வெறுப்பேற்படுகிறது. தமிழ் வர்த்தக சேவையானது இரைச்சலாயிருக்க ஏனைய சிங்கள, ஆங்கில ஒலிபரப்புக்கள் மிக, மிக தெளிவாக ஒலிபரப் பாகின்றன.

இந்த செயற்பாட்டினை சகிக்கலாமா....? இதற்கு காரணம் என்ன...? இயற்கையின் இடைஞ்சலாயிருந்தால் எல்லா ஒலிபரப்புகளுக்கும் ஒரே நிலைமையாயிருக்கும். இது அவ்வாறில்லையே..! தொழில் நுட்பத் தடங்கலா..? அப்படியாயின் இதை திருத்த முடியாதா..? அல்லது மாற்ற முடியாதா..?

தமிழ் வர்த்தக சேவை பணிப்பாளரே...! தொழில்நுட்பவியலாளரே..!"தமிழுக்கு அமுதென்று பெயர்" ஐயா....! எனவே,தமிழ் வர்த்தக சேவைமீது கரிசனை கொண்டு எமக்கு சீரான சேவையினை தருமாறு கேட்கிறோம்.

ரெட்ணம் சாந்தசீலன், பொத்துவில்.

# 14 சமாதான நீதவான்கள்

(காத்தான்குடி முரசு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி, ஏறாவூர்ப்பிரதேசங்களில் 14 சமாதான நீதவான்களை பிரதி தகவல்துறை, தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நியமித்துள்ளார்.

ஏறாவூரைச் சேர்ந்த யூ.எல்.எம். ஹனீபா, எம்.எஸ்.ஏ. கபூர்தீன், யூ எல்.எம்.ஜெயினுதீன், ஐ. செய்யது இப்றாஹீம், ஏ.எம். தௌபீக், ஏ. இஸ்ஸதீன், ஏ.எம்.ஜவாத் ஆகியோரும் காத்தான்குடியைச் சேர்ந்த எம்.சீ.எம். முஸ்தபா, எம்.ஏ.சீ.எம். பதூர்தீன், யூ.எஸ்.எச்.ஏ. வஹாப்,எஸ்.எச்.எம். பஷீர்,எம்.உதுமா லெப்பை ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# முஸ்லிம் படைப்பாளிகள் புறக்கணிப்பு!

## மத்திய மாகாணசபையில் கண்டனம்

(கண்டி நிருபர்)

மலையக தமிழாராய்ச்சி மற்றும் சாகித்திய விழாவில் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் எழுத்தாளர்களும் சிரேஷ்ட பத்திரிகையாளர்களும் கௌரவிக்கப்படாத நிலை குறித்து மத்திய மாகாண சபையில் எதிர்க்கட்சி, மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பெரும் கண்டனம் தெரிவித்தனர்.

மத்திய மாகாண சபையின் 1998 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய பலரும், தினமுரசில் வெளிவந்த செய்தியை ஆதாரம் காட்டி அமைச்சர்களான திரு. புத்திரசிகாமணி, ஜனாப் எம்.எச்.ஏ.ஷலீம் ஆகியோரின் அமைச்சுக்கள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் இந்தப் பாரபட்சம் குறித்து கண்டனம் தெரிவித்தனர்.

புலவர் அருள்வாக்கி அப்துல் காதிர், அறிஞர் சித்திலெப்பை ஆகியோர் மலையகத்தில் தமிழ்ப்பணிக்கு ஆற்றிய தொண்டு பற்றி எடுத்து விளக்கிய ஜனாப் இலாஹி ஆப்டீன் (பொ.ஜ.மு), மலையகத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் புரிந்துணர்வுடன்-நல்லெண்ணத்துடன் தமிழுக்குப் பணியாற்றி வரும் இவ்வேளையில் முஸ்லிம் எழுத்தாளர் வேண்டுமென்றே ஓரங்கட்டப்பட்டதைச் சுட்டிக்காட்டினார். "இனப்பிரச்சனை பற்றி நாம் பெரிதாக பீற்றிக் கொள்ளும் இவ்வேளையில் இது போன்ற செயற்பாடுகளை நாம் அறவே ஒழித்துக் கட்ட வேண்டும்" எனவும் கூறினார்.

திரு.எஸ். அருள்சாமி (இ.தொ.கா) பேசுகையில், "தமிழ்மொழி வளர்ச்சிக்கு மலையகத்தில் முஸ்லிம்களும் பெரும் தொண்டு புரிகின்றனர். அந்தச் சமூக எழுத்தாளர்கள் பாராட்டப்பட எவரும் தெரிவாகவில்லை. இந்தச் சபையின் முஸ்லிம் அமைச்சருக்கும் அழைப் பில்லை. விழாவுக்கு 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. செலவு விபரம் எமக்கு வேண்டும். ஒரே மொழி பேசும் இரு சமூகங்களின் மக்களை இது போன்ற இலக்கியத் துறையில் பிரித்துப்பார்க்க இயலாது. இவ்விழாவில் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் உரிய இடம் வழங்கப் படவில்லை. ர்.அய்யாத்துரை, பீ.ஏ.காதர் ஆகியோர்கூட புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர்" என்றார்.

எம்.என்.எம்.ஷாபி (ஐ.தே.க) பேசுகையில்,

"பாராட்டப்பட்ட 33 பேரில் ஒருவர் கூட முஸ்லிம் இல்லை. இதுசரியல்ல. அமைச்சர் புத்திரசிகாமணிக்கு தவறான ஆலோசனைகளை சிலர் தந்துள்ளனர். இனிமேலும் இப்படியான பிழை விடாதீர்கள். மலையகத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இரு கண்களாக இருக்கின்றனர்," என்றார்.

# ஒன்றரை மணிநேர அறுவை!

## ஊனமுற்றோரை கேலி செய்யும் வக்கிரம்

புத்தாண்டை முன்னிட்டு 31.12.97 இரவு 10.30 மணிமுதல் 11.30 மணிவரை எம்.ரி.வி. தொலைக்காட்சியில் 'ஸ்டார்நைட்' நிகழ்ச்சி ஒளிபரப்பானது. தமிழ்க் கொலை மன்னர்களில் ஒருவரான உவைஸ் ஷெரிப் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

எம்.ரி.விதான் அதிக நேரம் தமிழ் நிகழ்ச்சிகளை வழங்குகிறது. தரமான சில நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகின்றன. அதனை முதற்கண் பாராட்டவேண்டும்.

ஆனால், புத்தாண்டு பிறக்கும் சமயத்தில் நேயர்களை சலிப்பூட்டும் நிகழ்ச்சியை வழங்கியது ஏன்? ஒருவேளை திருஷ்டி பரிகாரமோ? ஒன்றரை மணி நேரத்தை அநியாயமாக சாப்பிட்டு விட்டார் உவைஸ் ஷெரிப். எங்கோ ஒளிப்பதிவு செய்யப்பட்ட, ஒளிப்பதிவும் சரியில்லாத நட்சத்திர கலை விழாவை போட்டு அறுத்து விட்டனர்.

அதுமட்டுமல்ல, ராதாரவியும், இன்னொருவரும் நகைச்சுவை என்ற பெயரில் செவிடர்கள் மற்றும் முடமானவர்களை வக்கிரமாகக் கிண்டல் செய்த நகைச்சுவையை ஒளிபரப்பினர். உவைஸ் ஷெரிப்பின் இரசனையா? அல்லது எம்.ரி.வி.யின் ஊனமுற்றோர் எதிர்ப்பா?

"நொண்டியா முடமா?, செவிட்டுப் பிணமே" என்றெல்லாம் வார்த்தைப் பிரயோகங்கள்! எம்.ரி.வி. தமிழ் நிகழ்ச்சிப் பொறுப்பாளர் தூங்கி விட்டாரா?

-நொந்துபோன நேயர்-

# ரூபவாஹினியின் முதற் கோலை

## புத்தாண்டு பிறந்ததும் முதற் கோணல்!

(நமது நிருபர்)

1998 புத்தாண்டு மலர்ந்தபோது நள்ளிரவு 12 மணிக்கு சகல தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறப்பட்டன.

மும்மொழிகளிலும், மும்மொழி அறிவிப்பாளர்களும் வாழ்த்துக் கூறினார்கள். இலங்கை அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் ரூபவாஹினியில் மட்டும் சிங்களப் பெண் அறிவிப்பாளர் ஒருவர் தனது வர்ணம் தீட்டப்பட்ட உதடுகளால் தமிழைக் கொலை செய்து கொண்டிருந்தார்.

ரூபவாஹினியில் தமிழ் பேசும் அறிவிப்பாளர்களுக்கு பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? இனப்பிரச்சனைத் தீர்வு பற்றி ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் நல்ல பல கருத்துக்களைக் கூறிவருகிறார். அவரது பொறுப்பில் உள்ள ரூபவாஹினி மட்டும் தமிழ்பேசும் மக்களை வெறுப்பூட்டி வருகிறதே!

'பேச்சு மட்டும்தான், செயல் இல்லை' என்பதை அரசாங்க மேல் மட்டத்தில் இருந்து, அதிகாரிகள் மற்றும் கீழ்மட்டம் வரை நிரூபித்து வருகிறார்கள் போலும்!

இந்த ஆண்டு தமிழ் கொலைக்கு புத்தாண்டில் முதலடி எடுத்துவைத்து விட்டதோ ரூபவாஹினி?!


அஸ்மா வைத்தியம்

* அஸ்மா * தொய்வு * முட்டு * சளி
* இருமல் * இழுப்பு * இளைப்பு
போன்ற குணங்களுக்கு சுகமடைய

Dr. சுறாஜ். சோமசுந்தரம்
அஸ்மா சிகிச்சை நிபுணர்
25, சென். சில்வெஸ்டர் றோட்,
கல்கிசை. (மவுண்ட்லேவீனியா)
தினமும் மாலை 4 மணி
முதல் 7 மணி வரை
ஒரு முறை வைத்தியம் செய்து
பாருங்கள் பலன் தெரியும்
☎ 074 - 201582

Admiral Graphics Wellawatte



மனோதத்துவ வைத்தியம்

வவுனியாவிலும் சந்திக்கலாம்
பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை
கீழ்க்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்.
வவுனியாவில் ஜனவரி 10,11,12ம் திகதிகளில்
வன்னியில் ஞான வைரவர் கோவில் வீதி, VANNI INNல் சந்திக்கலாம்.
T.P. 024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
கொழும்பில் ஜனவரி 19 முதல் 27 வரை
DR. P.ARUMUGAM
AHAMED TOURIST INN
BANG BANG BUILDING NO. 10, RECALAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST. OPPOSITE RENJANAS) COLOMBO-11. T.P. 436383, 436390
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388, கொழும்பில்



31ம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்





அமரர். பூபதி அம்பலவாணர்

மலர்வு:14.08.1941 உதிர்வு:03.12.1997

எமது குடும்ப விளக்காய் திகழ்ந்து, இறையடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் பிரிவின்போது உடன் வந்து எமக்கு ஆறுதல் கூறியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், பாடசாலையில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வி.அம்பலவாணர்-குடும்பத்தினர்



ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)





இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 250/=,150/=
தங்க பஸ்பம் கலந்தது 1125/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398



நவீன தொழில் நுட்பம்
ஆயுள் பூராவும்
உழைக்கக்கூடிய உத்தரவாதம்
PHOENIX
பைசிக்கள்
அசல் நூறு வீதம் சீனாவின் தயாரிப்பு



பைசால் ஹார்ட்வெயார் ஸ்டோர்ஸ்
(FAIZAL HARDWARE STORES)
74, டாம் வீதி, கொழும்பு 12. தொலை: 433727
பெக்ஸ்: 446088, E-mail - faisto@sri.lanka.net
இலங்கை மக்களின் ஏகோபித்த தெரிவு - பீனிக்ஸ் பைசிக்கள்



ASIAN COMPUTER SYSTEMS
5ஆம் ஆண்டில் வெள்ளவத்தையிலும்
தனது கிளையை ஆரம்பிக்கின்றது.
APPROVED BY VOCATIONAL EDUCATION COMMISSION
INSTITUTE AFFILIATED TO IDPM (IMIS) ENGLAND
O/L மாணவர்க்கு
விசேட கொம்பியூட்டர் பயிற்சிகள்
DIPLOMA IN COMPUTER STUDIES
Introduction , MS Windows, Dbase III+, Word Perfect, Lotus 123, Info. Technology
காலம் : 4 மாதம்
MICROSOFT OFFICE APPLICATION
Introduction , Microsoft Windows 95, MS Excel, MS Word, MS Power Point
காலம் : 3 மாதம் கட்டணம் : 5,750/=
DIP. IN DESKTOP PUBLISHING (Typesetting)
Aldus Pagemaker, Core Draw, Art Gallery, Word Art, Paint Brush, Type Styler,
காலம் : 3 மாதம் கட்டணம் 5650/=
ADVANCED DIP. IN INFO. TECHNOLOGY
Introduction, Windows 95, MS Word, MS Excel, Dbase III+, Foxpro 2.5, IT
காலம்:4 மாதம் கட்டணம் : 6500/=
GROUP & INDIVIDUAL CLASSES
Unlimitd Practical Hours
தவணைமுறை கட்டணங்கள்
வெளிநாடு செல்வோருக்கு குறுகிய கால வகுப்புகள்
ASIAN COMPUTER SYSTEMS
250 First Floor, George R. De. Silva Mw, Colombo 13. Tel : 075-338726
HARROW INTERNATIONAL No : 11, Rajasinghe Rd, Colombo 6. Tel : 077-315271



மகிழ்ச்சியான
மணவாழ்விற்குப்
பொருத்தமான துணையைத்
தேடுகிறீர்களா?

உங்களுக்கு உகந்த மணமகனை அல்லது மணமகளை விரும்பிய நாட்டில் தெரிவு செய்யலாம். நேரடியாக நீங்களே தொடர்பு கொள்ள வசதிசெய்து தரப்படும். திருமணம் நிச்சயிக்கப் படுமிடத்து தேவையெனில் விசா தொடர்பான சேவையும் வழங்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

RAJAH INTERNATIONAL MARRIAGE PROPOSALS
P.O.BOX-1050
EPPING MDC. VIC. 3076
AUSTRALIA.




படிப்பகம்

www.padippakam.com

# தரையிறக்கமும்–தாக்குதலும்

## புத்தாண்டில் முதல் இழப்பு

புதிய ஆண்டுக்கு சீனாவில் புலி ஆண்டு என்று பெயரிட்டுள்ளனர். நம் நாட்டிலும் புலிகள் வன்னியில் மோட்டார் ஷெல் முழக்கங்களுடன் புத்தாண்டை வரவேற்றுள்ளனர்.

புத்தாண்டு தினத்தன்று ஒலுமடுவில் படைநிலைகள்மீது புலிகள் நடத்திய தாக்குதலில் ஏழு படையினர் பலியானதாக படைத்தரப்பு ஒப்புக் கொண்டுள்ளது. இருவருபோவரை காயம்.

முதல் முழக்கம் அதுதான்.

புத்தாண்டின் மறுநாளான 02.01.98 அன்று ஒலுமடு படை முகாம் பகுதியில் தரையிறங்கிய ஹெலிமீது புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல் தொடுத்தனர்.

புத்தாண்டு பிறந்த சூட்டோடு சூடாக புலிகள் நடத்திய தாக்குதல்கள் படையினருக்கு அபசகுனம் போலாகிவிட்டது.

எம்.ஐ.17 ஹெலி தீப்பிடித்து எரிந்த பின்னரும், ஹெலி சேதம் என்றுதான் படைத்தரப்பினர் கூறினார்கள்.

புத்தாண்டு கொண்டாட்டத்தின் பின்னர் களத்தில் இருந்து தெரிவிக்கப் படும் செய்தியை பெரிதுப்புச் செய்தியாக அறிவிக்கத் தயங்கியதாகவே தெரிகிறது.

ஹெலிக்கு சிறு சேதம் என்றும், ஹெலியில் இருந்த விமானிகள் உட்பட ஆறு ஏழு பேருக்கு காயம் என்றும் முதலில் கூறப்பட்டது.

ஹெலிக்குள் இருந்தவர்களுக்கு காயம் ஏற்படுகிறது என்றால், ஹெலியின் கதி என்னாகியிருக்கும் என்பது ஊகிக்க முடியாத ஒன்றல்ல.

ஆனாலும், மெல்ல மெல்லத்தான் உண்மையை படைத்தரப்பு கசியவிட்டது.

மறுபுறத்தில் புலிகளுக்கு உற்சாகம். இந்த ஆண்டின் முதல் தாக்குதல் துல்லியமாக அமைந்ததில் புலிகளின் அணிகளுக்கு உளவியல் ரீதியிலும் மேலும் தெம்பு சேர்ந்திருக்கிறது.

எம்.ஐ.17 மீது நடத்தப்பட்டது தற்செயலான தாக்குதல் அல்ல.

திட்டமிட்டு, பல நாட்கள் நோட்டம் பார்த்து நடத்தப்பட்ட தாக்குதல்.

மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் மாங்குளத்தில் இருந்து ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் இருப்பது ஒலுமடு.

ஒலுமடுவில் நிலைகொண்டுள்ள படையினருக்கான விநியோகங்கள் பெரும்பாலும் வான்மார்க்கமாக ஹெலி மூலமே செல்கின்றன.

**புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு வாய்ப்பில்லாத வான் பாதையையும், பறப்பு உயரத்தையும் நம்பியே ஹெலிகள் வன்னிக் களத்தில் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.**

ஒலுமடுவிற்கு செல்லும் ஹெலிகள் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளுக்கு மேலாக பறந்து செல்வதும் உண்டு.

ஏவுகணைத் தாக்குதலில் இருந்து தப்பும் உத்தியோடு ஹெலிகள் சென்று வரத் தொடங்க, அந்த உத்திக்கு மாற்று உத்தி ஒன்றை புலிகள் வகுத்தனர்.

சமீபகாலமாக ஹெலிகள்மீது ஏவுகணைத் தாக்குதல்களே நடைபெறுவதால், வான் பரப்பில் பறக்கும்போது மட்டுமே உஷாராக இருக்கிறார்கள்.

தரை இறங்கியதும் 'அப்பாடா' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொள்வார்கள்.

எனவே, அதற்கேற்ப தங்கள் திட்டத்தை வகுத்துவிட்டனர் புலிகள்.

ஹெலி இறங்கிப் பொருட்களை இறக்கத் தொடங்கியதும், மோட்டார் தாக்குதலை நடத்துவதுதான் திட்டம்.

**ஏற்கனவே பலாலி விமானத்தளத்தில் விமானப்படை வான்கலன்கள் தரையிறங்கும்போதும், ஓடுபாதையை குறிவைத்து புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்.**

யாழ் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது நடைபெற்ற தாக்குதல்கள் அவை.

ஆனால், வன்னிக் களத்தில் அடிக்கடி ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதால், பறக்கும்போதான தாக்குதல் பற்றித்தான் விமானப்படையினர் விழிப்பாக இருந்தனர். முன்னைய அனுபவங்களை மறந்துவிட்டனர்.

ஒலுமடு படை முகாமுக்கு ஹெலி மூலம் விநியோகம் நடப்பதால், அடிக்கடி ஹெலி வந்து சென்றது.

ஹெலி எங்கே தரையிறங்கி நிற்கிறது? என்ற தகவலை வேவு நடவடிக்கை மூலம் திரட்டிக் கொண்ட புலிகள் தாக்குதலுக்கு தயாராக இருந்தனர்.

**புத்தாண்டின் பின்னர் முதலாவது வெற்றிகரமான தாக்குதலாக நடத்துவதற்காகவே புலிகள் தாமதித்து இருந்தனராம்.**

புத்தாண்டு அன்று ஒலுமடு படை நிலைகள்மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஹெலி மீதான தாக்குதலுக்கான வலை விரிப்புத்தான்.

மோட்டார் ஷெல் தாக்குதல்களால் பலியான படையினரை மீட்க ஹெலி வரும். தரையிறங்கும்போது தாக்கலாம் என்றே திட்டமிட்டனர்.

ஆனால் அதற்கேற்ற சாதகம் அமையவில்லை. மறுநாள்தான் சந்தர்ப்பம் வாய்த்தது.

**02.01.97 வெள்ளிக்கிழமை அன்று உணவுப் பொருட்களுடன் ஒலுமடு படை நிலைகளின் பகுதிக்குள் எம்.ஐ.17 தரையிறங்கியது.**

நிறுத்தி பொருட்ளை இறக்க தொடங்க எவ்வளவு நேரம் எடுக்கும் என்பதைக் கணித்து புலிகள் தாமதித்தனர்.

ஏனெனில், நிறுத்தப்பட முன்னர் தாக்கத் தொடங்கினால், ஹெலியை அதே வேகத்தில் கிளப்பிச் சென்று விடுவர்.

ஹெலி இறங்கிய பின்னர் குறிப்பிட்ட நேர இடைவெளிகொடுத்துவிட்டு புலிகள் மோட்டார்கள் ஷெல்களை ஏவத் தொடங்கின.

எத்திசையில் இருந்து மோட்டாரை ஏவினால், ஹெலி தரையிறங்கும் பகுதியில் சென்று விழும் என்பதை முன்கூட்டியே கணித்து வைத்திருந்தனர்.

சில ஷெல்கள் ஹெலியை எட்டவில்லை. ஹெலியை அவசரமாக மேலே உயர்த்த விமானிகள் தயாராகினர்.

ஹெலி உயர முற்பட்டபோது சரமாரியான ஷெல்கள் பறந்து வரத் தொடங்கின.

எனினும் ஹெலியில் படவில்லை.

**எப்படியாவது ஹெலியை காப்பாற்றி கொண்டு சென்று விடவேண்டும் என்று ஹெலியை கிளப்பியபோது, ஷெல் ஒன்று வந்து ஹெலியின் உடம்பில் மோதி வெடித்தது.**

ஹெலி நன்றாக உயர்ந்திருந்தால் உள்ளே இருந்த எவரும் தப்பியிருக்க முடியாது. சிறியளவில் எழுந்தபோது தாக்கப்பட்டதால் ஹெலி எரியத் தொடங்கிய நொடியே விமானிகள் உட்பட, ஹெலியில் இருந்தவர்கள் கீழே குதித்து உருண்டு புரண்டு தப்பினார்கள்.

அப்படியிருந்தும் அவர்கள் காயம் அடைந்தனர்.

எம்.ஐ.17 நாசமாகிவிட்டது.

இத் தாக்குதலின் பின்னர் வன்னியில் படைமுகாம்களுக்கு ஹெலி மூலம் விநியோகம் செய்தல், காயப்பட்ட வீரர்களை அவசரமாக எடுத்துவர ஹெலியை பயன்படுத்தல் போன்றவை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன.

வன்னிக் களத்தில் வவுனியா யாழ் வீதியில் உள்ள படையினர்தான் தொடர்ச்சியாக நிலைகொண்டுள்ளனர்.

வவுனியா-யாழ் வீதிக்கு கிழக்கே உள்ள மதியாமடு, நயினாமடு, பெரியமடு, கரிப்பட்ட முறிப்பு, ஒலுமடு போன்ற பகுதிகளில் உள்ள படையினர் தமக்கிடையே தொடர்ச்சியான தரைத் தொடர்புகளை பேண முடியாமல் உள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள படை நிலைகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் புலிகளின் நடமாட்டம், ஊடுருவல் என்பவை இருந்து கொண்டே இருக்கும்.

அதனால்தான் காயப்பட்ட வீரர்களை எடுத்துவர இரவில் ஹெலிகள் பயன்படுத்தப்படுகின்றன.

முகாம்களுக்கு இடையிலான தரைப் பாதையை இரவில் பயன்படுத்துவது ஆபத்து. புலிகள் பதுங்கி இருந்து தாக்கக்கூடும். ஒலுமடுவுக்கு தரைப்பாதை ஊடாக பிரதான விநியோகம் செல்ல வேண்டுமானால் பெரிய மடு முகாமில் இருந்துதான் அனுப்பவேண்டும்.

பெரியமடுவில் இருந்து ஒலுமடு 12 கிலோமீட்டர் தூரத்தில் வடமேற்கில் இருக்கிறது. பெரும் எடுப்பாக பெரும் தொகைப் படையினராக இடைப்பட்ட பகுதியில் சென்று வரலாம். சிறு குழுக்களாக சென்றால் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கவேண்டி இருக்கும்.

எனவேதான் பெரும்பாலும் வான் மார்க்க விநியோகங்களையே வன்னிக்களத்தில் படையினர் பயன்படுத்தி வந்தனர்.

ஏவுகணைகளில் இருந்து தப்பிவிட்டால் போதும் என்று நினைத்தமையால், அதிலிருந்து தப்பக்கூடிய பாதையில் ஹெலிகள் சென்றுவந்தன.

**இப்போது ஏவுகணையில் இருந்து தப்பினாலும், தரையிறங்கிய பின்னர் புலிகளின் மோட்டார் தாக்குதல்களில் இருந்தும் தப்பியாக வேண்டிய நெருக்கடி தோன்றிவிட்டது.**

இதிலிருந்து தப்ப வேண்டுமானால் புலிகளின் மோட்டார்களின் சுடுதூரத்துக்கு எட்டாத அளவுக்கு முகாம் பரப்புக்களை விஸ்தரிக்க வேண்டும்.

அப்படித்தான் பலாலியில் செய்தனர். ஆனால் வன்னியில் படையினர் தமது தேவைக்கேற்ப முகாம்களை விஸ்தரிக்க களநிலவரம் ஒத்துழைக்காது.

**அதுதவிர, புலிகளிடம் ஆட்டிலெறிகளும் உள்ளன. அவற்றின் சுடுதூரத்தில் இருந்து முகாம் விஸ்தரிப்புக்களும் பாதுகாப்பளிக்காது.**

**இவ்வாறான களநிலவரத்தில் கிளிநொச்சிவரை ஜயசிக்குறுய் செல்லவேண்டுமானால் பாரிய இழப்புக்களைச் சந்தித்தாக வேண்டும். அது முதற்கட்டம்.**

**பாரிய இழப்பின் பின்னர் பிடித்த பகுதிகளில் நிலைகொள்ளும் படையினரை புலிகள் மூர்க்கமாகத் தாக்கத்தொடங்குவர்.**

நீண்ட நிலப்பரப்பில் படைப்பலம் பரவலாகிவிட்டால், புலிகளின் ஊடுருவல்களை எதிர்த்து நிற்பது படையினருக்கு கடினமான காரியமாகிவிடும்.

**முன்வைத்த காலை பின்வைத்தால் அரசாங்கத்திற்கு அரசியல் நஷ்டம். எதிர்கால தேர்தல் வெற்றிகளுக்கான மூலதன நஷ்டம். முன்வைத்த காலை மேலும் மேலும் முன்வைத்தால் படையினருக்கு ஆட்பல, ஆயுதபல நஷ்டம் என்ற நிலையில்தான் ஜயசிக்குறுய் படை நடவடிக்கை சிக்கியிருக்கிறது.**

புலிகளை பல திசைகளில் இழுத்து அவர்களது எதிர்ப்பை பலவீனமாக்க படையினர் கைக்கொண்ட தந்திரம் பலமுனை முன்னேற்றம்.

**ஆனால், பல முனைகளில் முன்னேறுவதற்காக படையினரும் தங்கள் பலத்தை பரவலாக்க வேண்டி இருந்தது. இதனால் ஒரேமுனையில் படை பலத்தை ஒன்று குவித்து முன்னேறுவதில் உள்ளசாதகங்களை படையினரும் இழந்துள்ளனர்.**

பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்னர் எப்படியாவது வன்னியில் இருந்து வெற்றிச் செய்தியை பெற்றாக வேண்டும் என்பது பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் விருப்பம்.

அவ்வாறு வெற்றிச் செய்தியைப் பெற முடிந்தால், சுதந்திரதின விழாவின் நாயகர் அவராகத்தான் இருப்பார்.

ஆனால் படைத்தரப்புக்கு அந்த நம்பிக்கை அறவே இல்லை. வன்னிக் களத்தில் படையினரின் முன்னைய கணிப்புக்கள் பொய்த்துவிட்டன. அதனால் நிதானமாக கால் எடுத்துவைக்கவே நினைக்கின்றனராம்.

**எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியும் பொறிக்குள் வைக்கப்படுகிறதா? வெற்றியை நோக்கி வைக்கப்படுகிறதா? என்பது தெரியாத நிலையில் அகலக் கால் வைத்தால், பேராசை பெரும் நஷ்டமாகிவிடும் என்பது அனுபவம் வாய்ந்தவர்களின் கருத்தாக இருக்கிறது.**

ஆனால், அரசாங்கத்திற்கும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் 50வது, சுதந்திர தின சாதனையாக சொல்வதற்கு வன்னிக்கள வெற்றிச் செய்தி அவசரமாக தேவைப்படுகிறது.

கிளிநொச்சிவரை ஒரு தடவை போய் விட்டால்கூட போதும், அதைச் சொல்லியே ஒரு கலக்கு கலக்கிவிடலாம் என்று நினைக்கிறது அரசாங்கம்.

**மறுபுறத்தில், சிறீலங்காவின் 50வது சுதந்திர தினத்துக்கு புலிகள் காட்டப் போகும் எதிர்ப்பு எப்படி இருக்கும் என்பதும் பாதுகாப்பு தரப்பினருக்கு தலையிடியாகியுள்ளது.**

தலைநகரில் மட்டும் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தால் போதாது. புலிகள் எந்த ரூபத்தில், எந்தப் பகுதிக்குள்ளும், எந்த நேரத்திலும் ஊடுருவக் கூடியவர்கள் என்பதை சமீபகால சம்பவங்கள் கோடிட்டுக் காட்டியுள்ளன.

மலையகத்தில் புலிகளின் நடமாட்டம் மின்மாற்றித் தகர்ப்புக்களின்போது தெரிந்திருக்கிறது.

காலியில் புலிகளின் லொறியில் ஏற்பட்ட வெடி விபத்து, தென்னிலங்கைப் பகுதியிலும் புலிகளின் ஊடுருவலை உணர்த்தியிருக்கிறது.

காலியில் வெடித்த குண்டு புத்தாண்டுத் தாக்குதலுக்காக கொண்டுவரப்பட்டதா?

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

அல்லது சுதந்திர தினத்தை முன்னிட்டு புலிகள் திட்டமிட்டுள்ள பாரிய தாக்குதலுக்காக காலி வழியாக கொழும்புக்குள் கொண்டு வந்து சேர்க்கப்பட இருந்ததா? போன்ற சந்தேகங்களுக்கு பாதுகாப்புத் தரப்பினரால் இன்னமும் பதில் அறிய முடியவில்லை.

சுதந்திர தினத்துக்கு முன்பாக பாரிய நகர்வில் படையினர் ஈடுபடக்கூடும் என்று வன்னியில் புலிகளும் உஷார் நிலையிலேயே இருக்கின்றனர்.

ஆனால், படையினரைப் பொறுத்தவரை நாடெங்கும் உஷார் நிலையில் இருந்தாக வேண்டிய நிலையில் உள்ளனர்.



**சுதந்திர தினத்தை முன்னிட்டு புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியே தீருவர். ஆனால் எந்த முனையில் இருந்து தாக்குதல் வரும், புலிகளின் இலக்கு எது? என்பனதான் படையினரால் ஊகிக்க முடியாத இரகசியங்களாக உள்ளன.**

சுதந்திர தினத்துக்கு முன்பாக 'ஜயசிக்குறுய்' கிளிநொச்சியை சென்றடைந்துவிட்டால், சுதந்திரதின கொண்டாட்ட நாட்களில் வன்னியில் புலிகளை சண்டைக்கு இழுத்துக் கொண்டிருக்கலாம்.

அப்படி புலிகளின் கவனத்தை இழுத்தால், ஏனைய பகுதிகளை நோக்கி புலிகளின் கவனம் பெரியளவில் திரும்பாது என்றுகூட படையினர் நினைக்கக்கூடும்.

அவ்வாறான கணிப்புக்கள் கடந்த காலத்தில் தப்புக் கணிப்பாகவே போயுள்ளன என்பதும் உண்மை.

**முன்கூட்டியே களநிலவரங்களை கணிப்பிட்டு அதற்கேற்ப பதில் உத்திகளை வகுப்பதுடன், குறிப்பிட்ட தாக்குதலுக்கு உரிய அணிகளும் ஆங்காங்கே அனுப்பப்பட்டு விடுகிறது.**

எனவே, திட்டமிட்டபடி தாக்குதல்கள் நடத்தப்படுவதுதான் வழக்கம். யாழ் குடாநாட்டை கைப்பற்ற படையினர் மும்முரம் காட்டிக் கொண்டிருக்கையில் கொழும்பில் நடைபெற்ற தாக்குதல்கள் அதற்கு உதாரணம்.

கொழும்பிலோ அல்லது வடக்கு கிழக்குக்கு வெளியே உள்ள வேறொரு பகுதியிலோ பாரிய தாக்குதலுக்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டுவிட்டதையே காலியில் லொறியில் ஏற்பட்ட வெடி விபத்து முன்னறிவிப்புச் செய்திருக்கிறது.

50 வது சுதந்திர தினம் நெருங்க நெருங்க, பாதுகாப்புக்கான நெருக்கடியும் சூழ்ந்து கொண்டிருக்கிறது. ■

### நாரதர்

### எம்.ஐ.17 சிறப்புத் தகுதிகள்

* சோவியத் யூனியன் ஒன்றாக இருந்த போதே தயாரான தரமான உற்பத்தி.
* 24 இருக்கைகள்.
* 12 தற்காலிக படுக்கைகளை ஏற்படுத்தி நோயாளர்களைக் காவிச் செல்ல முடியும். மருத்துவ சாதனங்களையும் பொருத்தலாம்.
* வசதிக்கு ஏற்ப மாற்றக் கூடிய கதவுகள்.
* மீட்புப் பணிகளுக்கும் நன்கு ஒத்துழைக்கும்.
* மணிக்கு 240 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும்.
* ஒரு முறை எரிபொருள் போட்டுவிட்டால் 800 கிலோ மீட்டர் தூரம் வரை தாக்குப் பிடிக்கும். பூரண சுமையோடு என்றால் 550 கிலோ மீட்டர்.
* மேலதிக எரிபொருள் தேவைக்கு ஒரிரு பெற்றோல் தாங்கிகளையும் எடுத்துச் செல்லும் வசதி இருக்கிறது.
* ஏவுகணை எதிர்ப்பு வசதிகள் கிடையாது.

## அதிரடி அய்யாத்துரை



**யாழ்ப்பாணத்துச் சனத்தை** தம்பிமார் மெத்தக் குறைவாக எடை போட்டிருக்கினம். ஆனால் சனம் சகல திருகுதாளங்களையும் பார்த்துக் கொண்டிருக்குது. வாக்குக் கேட்டுப் போன கட்சி ஒன்றிடம், "தம்பிமார்! உங்கள் வேட்பாளர் பட்டியலை ஒருக்கா காட்டுகிறியளே" எண்டு கேட்டவையாம். மெல்ல நழுவிப் போய் விட்டார்களாம். அப்படியே சிறு குறிப்பாக வேட்பாளர்களின் போராட்ட வரலாற்றையும் எழுதித்தரச் சொல்லி கேட்டிருக்கலாம்!

**சுவர்களை முற்றாக** புல்டோசரால் இடிக்காமல் விட்டதற்காக பச்சை உடையினருக்கு தமிழ்க் கட்சிகள் உளமார நன்றி தெரிவிக்க வேணும். இல்லையெண்டால் சுவரொட்டி ஒட்ட இடம் வாய்த்திருக்குமோ? ஒரு இயக்கத்தின் முதுகில் இன்னொரு இயக்கம் ஒட்ட, சமரசம் செய்ய படையினர் படாத பாடு பட்டிருக்க வேணும்!

**கூட்டான கட்சியினர்** திட்டமிட்டுத்தான் தள்ளுப்பட்டு வந்தவை என்பதெல்லாம் பொய்யிலும் பொய் என்று சொன்னேன் பார்த்தியளோ! நீதி கேட்டு வழக்குப் போட்டுவிட்டனர். நீலமானவர் மேலிடத்துக்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற ஒற்றைக்காலில் நிற்கிறாராம். 'திட்டமிட்டு தள்ளுப்பட்டு வந்திருப்பினமோ?' என்ற சந்தேகம் மேலிடத்திலும் ஏற்பட்டதாம். அதுதான் வழக்குப் போட்டவையாம். அது சரி, "போடமாட்டோம்" எண்டு பேட்டி கொடுத்த சங்கதியாரின் சங்கதி என்னாச்சு பாத்தியளோ?

**தீர்வுப் பொதிக்கு சர்வசன வாக்கெடுப்பு** வரப் போவதாக புரளிகள் கிளப்பப்படுகிறது. எல்லாம் பச்சைக் கட்சிக்கு நிர்ப்பந்தம் கொடுக்கும் காய் நகர்த்தல் புரளிகள்தான்! இந்தா வருகுது, அந்தா வருகுது எண்டு சொல்லுகினம். நன்றாய் வருமோ? நலிந்து வருமோ? மெலிந்த பொதியை வைத்துக் கொண்டே உந்தப்பாடு என்றால்...?

**மறைந்த முன்னாள் இடதுசாரி** (இந்நாள் அல்ல) பெர்னாட் சொய்சாவைப் பற்றி வழக்கம்போல தமிழ்க் கட்சிகளும் பாராட்டத் தவறவில்லை. 1972ல் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்புக்கு 'ஆமாம்' போட்டவர்களில் அன்னாரும் ஒருத்தர். அந்த அரசியலமைப்பின் விளைவுதான் இன்றைய யுத்தம். எத்தனை உயிர்கள் பலியாகிவிட்டன! அதனை மறந்து அவர் மறைவுக்கு மட்டும் எப்படிப் பாருங்கோ கண்ணீர் சிந்த முடியும்?! மலையக தனித்துவக் கட்சிப் பிரமுகரும் அன்னாரைப் பாராட்டித் தள்ளிப் போட்டார். தொழிலாளர்களின் தோழராம். மலையகத் தொழிலாளர்களை நாடற்றவராக்குவதற்கு அன்னாரும் தோள் கொடுத்தவரல்லோ? அளவுக்கு மீறிப் புகழ்தல் நன்றன்று.

**'ஊதியம் வாங்கமாட்டேன்!'** என்று ஊரறிய அறிவித்த திருவான்மலை சபைத் தலைவர், மறுபடியும் ஊதியம் பெற்று வருகிறார். அதை மட்டும் ஊரறியச் சொல்லமாட்டாராக்கும்! அன்பளிப்பாக வாங்குவதையும் இரகசியமாக வாங்கிச் சேர்த்து குவித்து வைத்துள்ளார் எண்டுதான் ஊர் அறியப் பேசப்படுகிறதாம்.

**வருசத்துக்கு தலைநகர** ஹொட்டல்கள், மற்றும் விடுதிகளில் ஒரே கொண்டாட்டம்தான். ஆட்டம், பாட்டம்- ஒரே கூட்டம். பாவம், சிறுடையினர் மட்டும் சோதனை அரண்களில் நோட்டம். சனத்துக்கு சூழ்நிலை பழகிப்போச்சுது.

**பி.பி.சி நம்நாட்டு** அதிகாரத் தரப்பாருடன் ஒப்பந்தம் செய்த பின்னர், ஐ.பி.சி.தான் இப்போது பிரபலமாகிக் கொண்டிருக்கிறது. பி.பி.சி.யில் இருந்து பிரிந்து போனவர்களைக் கொண்டது தான் ஐ.பி.சி. நல்லதைச் செய்தால் நாடு போற்றும்!

**தமிழ்க் கட்சிகள்** தன்னிடம் வருவதே ஒருவரைப் பற்றி ஒருவர் கோள் மூட்டத்தான் என்று அம்மையார் தன்னைச் சந்தித்த ஒருவரிடம் கூறினாராம். மெய்தானே!

**இவ்வாரம்** பொன்மொழி. 'விடாய் போ' எழுதியது.

"இரவு முடிந்து
காலை மலர்கிறது.
ஆனால், வாழ்வின்
கடந்து போன நாட்கள்
திரும்புவதில்லை!
அடிவானம்வரை
கண்பார்வை செல்கிறது!
ஆனால், வசந்தகாலம்
பதித்த வடு இதயத்தில்
ஆழப் பதிந்துவிட்டது!" ■



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை




**1989 ஜூலை** 15 ஞாயிற்றுக் கிழமை இரவு.

கொழும்பு பம்பலப்பிட்டியில் கடற்கரைப் பக்கமாக சடலம் ஒன்று கிடந்ததைக் கண்டவர்கள் பொலிசாருக்கு தகவல் கொடுத்தனர்.

சடலத்தை பொலிசார் வந்து பார்வையிட்டபோது, அடையாளம் தெரியவில்லை.

சடலத்தின் அருகே இரண்டு அடையாள அட்டைகள் காணப்பட்டன.

ஒன்றில், கதிர்காமர் நல்லைநாதன் என்றும், இன்னொன்றில், அப்துல்லா முகம்மது நவாஸ் என்றும் காணப்பட்டது.

கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு சடலத்தை கொண்டுபோனார்கள். புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையில் சடலம் யாருடையது என்பது தெரிந்துவிட்டது.

**அது உமாமகேஸ்வரனின் சடலம்.**

**புளொட் இயக்கத் தலைவரான, முகுந்தன் என்று அழைக்கப்பட்ட உமா மகேஸ்வரனின் சடலம்தான் அது.**

பாதுகாவலர்களுடன் நடமாடும் உமா மகேஸ்ரன் தனியாக, அநாதைப் பிணமாக கிடந்திருக்கிறார்.

அப்படியானால் அவருடன் சென்ற மெய்க்காவலர்கள் எங்கே, புளொட் இயக்கத்தினர் தங்கள் தலைவரை ஏன் தேடவில்லை?

புலனாய்வுப் பிரிவினருக்கு சந்தேகம் ஏற்படுத்திய கேள்விகள் அவை.

முதலில் சடலத்தை இனம் காணும் படலம் நடந்தது. உமாமகேஸ்வரனின் துணைவியாரான அகிலேஸ்வரியும், உமாவின் சகோதரர் கதிர்காமர் ஞானேஸ்வரனும் அடையாளம் காட்டினர்.

அதுதான் உமாமகேஸ்வரன் என்று திட்டவட்டமாக உறுதியான பின்னர் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுக்கப்பட்டது.

சடலம் எடுக்கப்பட்டது ஞாயிற்றுக் கிழமை. அடையாளம் காணப்பட்டது செவ்வாய்க்கிழமை.

முகம் அடையாளம் தெரியாமல் இருக்க முகத்தை சிதைக்க கொலையாளிகள் முயன்றிருந்தனர். அந்த முயற்சியில் முழு வெற்றி பெறவில்லை.

மொத்தம் ஐந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் உடலில் காணப்பட்டன. அவற்றில் மூன்று மார்பிலும், ஒன்று முகப்பகுதியிலும், அடிவயிற்றில் இன்னொன்றுமாக காணப்பட்டன.

## யார் காரணம்?

1982 மே மாதம் தமிழ்நாட்டில் சென்னை பாண்டி பஜாரில் பிரபாகரனுக்கும், உமாமகேஸ்வரனுக்கும் இடையே துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

அதன்பின்னர் பலத்த பாதுகாப்புடன் தான் தமிழ்நாட்டிலும் உமா மகேஸ்வரன் நடமாடினார்.

ஈழப் போராட்ட அமைப்புக்களில் உட்படுகொலைகள் அதிகமாக இடம் பெற்ற இயக்கம் புளொட் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புளொட்டில் இருந்து வெளியேறிய 'தீப்பொறி குழுவினரால்' புதியதோர் உலகம் என்றொரு ஆவணம் வெளியிடப்பட்டது.

புளொட் இயக்கத் தலைவர்களில் ஒருவராக இருந்த ஜான் மாஸ்டர் உட்பட முக்கியமானவர்கள் தீப்பொறி குழுவாக செயற்பட்டனர்.

புதியதோர் உலகத்தில் கூறப்பட்டுள்ளதின் படியும், தீப்பொறி குழுவினரின் தகவல்களின் படியும் 200ற்கு மேற்பட்ட புளொட் உறுப்பினர்கள் பயிற்சி முகாம்களில் வைத்து கொல்லப்பட்டனர்.

உமா மகேஸ்வரனின் நேரடி உத்தரவின்பேரில் இக்கொலைகள் நடத்தப்பட்டன.

ஏனைய இயக்க உளவாளிகள் என்று முத்திரை குத்தப்பட்டு, உமா தலைமைக்கு எதிரானவர்கள் கொல்லப்பட்டனர்.

அதனால், இயக்கத்தின் உள்ளேயும், வெளியேயும் இருந்து இரு முனைகளில் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிய ஒருத்தராகவே உமா இருந்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர்தான் உமா கொழும்பில் தங்கத் தொடங்கினார்.

கொழும்பு கிருலப்பனையில் தலகொட்டுவவில் வீடு வாடகைக்கு எடுத்து மனைவியுடன் தங்கியிருந்தார்.

ஆச்சி, சுரேஸ் ஆகியோர் உமாவுக்கு நம்பிக்கையான மெய்க்காப்பாளர்களாக இருந்தனர்.

தனது பாதுகாப்பில் மிகுந்த ஜாக்கிரதை உடையவரான உமா எப்படி தனியாளாய் மாட்டுப்பட்டு, கடற்கரையில் பிணமாகக் கிடக்க முடியும்?

கடற்கரையில் பிணம் கிடந்ததே தவிர, அங்கு வைத்து கொலை நடக்கவில்லை.

## உமா கொலையும்


உமாமகேஸ்வரன்

சித்திரவதை நடந்ததற்கு அறிகுறியாக உடம்பில் காயங்கள் காணப்பட்டன.

வேறெங்கோ வைத்திருந்து சித்திரவதை செய்து, பின்னர் சுட்டுக் கொன்றுவிட்டு, கடற்கரைப்பக்கமாக கொண்டுவந்து உடலைப் போட்டிருக்கின்றனர் என்பது ஊர்ஜிதமாகியது.

உமாமகேஸ்வரன் கடைசியாகக் காணப்பட்டது அமிர்தலிங்கத்தின் மரணச் சடங்கில் தான். கொழும்பில் நடைபெற்ற அஞ்சலியில் முதல் ஆளாய் காணப்பட்டார்.

அமிரின் அஞ்சலிக்காக வெள்ளிகாலை வீட்டில் இருந்து புறப்பட்ட உமாமகேஸ்வரன் அதன் பின்னர் வீட்டுக்கு திரும்பவே இல்லை. நவாஸ் என்ற பெயரில் உமா அந்த வீட்டை வாடகைக்கு பிடித்திருந்தார்.

## நடந்தது என்ன?

**புலிகள்தான் உமாவைப் போட்டுவிட்டனர் என்பது போன்று புளொட் இயக்கத்தினர் சிலர் கூறினார்கள். ஆனால் புளொட் முக்கியஸ்தர்கள் எவரும் புலிகள்தான் காரணம் என்று கூறவில்லை.**

உமா கொலை தொடர்பாக புளொட் இயக்க வவுனியாப் பொறுப்பாளராக இருந்த மாணிக்கதாசனால் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

தமது இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற ஏழுபேர் மேற்கொண்ட சதி முயற்சி தான் உமா கொலைக்கு காரணம் என்று மாணிக்கதாசன் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்ப் பகுதிகளில் ஏழு நாட்களுக்கு துக்கம் அனுஷ்டிக்குமாறும் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டிருந்தது.

பிரிந்து போனவர்கள் யார்? என்ற விபரத்தை அறிக்கையில் வெளியிடவில்லை.

எப்படி வெளியிட முடியும்? உமா கொலைக்கு உத்தரவிட்டதே புளொட் தலைமைப்பீடம்தான்.

அதன் பின்னணியில் பல திடுக்கிடும் தகவல்கள் உள்ளன.

உமா மகேஸ்வரன் உயிருடன் உள்ள வரை புளொட் இயக்கம் உருப்படமாட்டாது என்ற நிலை உருவானது.

இயக்கத்தின் பெயரில் திரட்டப்பட்ட நிதியையும், இயக்கத்தின் பெயரால் நடத்தப்பட்ட வியாபாரங்கள் பற்றிய கணக்கையும் உமாமகேஸ்வரன் இரகசியமாக வைத்திருந்தார்.

தன்னையும், தனக்கு நம்பகமான சில உறவினர்களையும் தவிர இயக்கத்தில் இருந்த எவருக்கும் வியாபாரம், முதலீடுகள், கணக்கு வழக்குகள் பற்றி உமா மகேஸ்வரன் மூச்சுக் காட்டுவதில்லை.

தனது மனைவியின் பெயரிலும், தனது சகோதரி மகனான முகுந்தனின் பெயரிலும் வெளிநாடுகளில் உமா முதலீடுகள் செய்த விடயமும் மெல்ல கசியத் தொடங்கியது.

கண்மூடித்தனமான விசுவாசம் கொண்டிருந்த உறுப்பினர்களுக்கு தன்னைப்பற்றிய சந்தேகங்கள் தோன்றப் போவதில்லை என்றுதான் உமா நினைத்தார்.

இறுதியாக உமாவுக்கு யமனாக அமைந்தது மாலைதீவு இராணுவ நடவடிக்கை.

மாலைத்தீவு இராணுவ நடவடிக்கை பெரும் பேரத்தின் அடிப்படையில் நடைபெற்ற ஒன்றுதான்.

திட்டமிட்டபடி நடவடிக்கை வெற்றியளித்திருந்தால், புளொட்டுக்கு மாலைதீவில் பெரும் வருமானம் கிடைத்துக் கொண்டு இருந்திருக்கும்.

நடவடிக்கை தோல்வியடைந்ததால் புளொட் இயக்க உறுப்பினர்கள் மாலை தீவுச் சிறைகளில் அடைக்கப் பட்டனர்.

## மறைக்கப்பட்ட உண்மைகளும்

மொட்டை அடிக்கப்பட்ட நிலையில்-சிறைகளில் புளொட் உறுப்பினர்கள் பட்ட துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

அதேநேரத்தில், "மாலைதீவு இராணுவ நடவடிக்கையானது, புளொட்டில் இருந்து தன்னிச்சையாக சென்ற இராணுவக் குழுவின் வேலைதான். புளொட்டுக்கும் அதற்கும் தொடர்பில்லை" என்று மறுத்திருந்தார் உமா.

இராஜதந்திரக் காரணங்கள் கருதி சில நடவடிக்கைகளை மறுப்பது வழக்கம்தான். ஆனால், உமா மறுத்ததோடு, மாலைதீவில் கைதான தமது உறுப்பினர்களை மீட்டெடுக்க எவ்வித அக்கறையும் காட்டாமல் இருந்து விட்டார்.

வியாபாரம், முதலீடுகள், இலங்கை அரச உயர்மட்டத்தோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல், சொந்த வாழ்க்கை ஆகிய வட்டங்களுக்குள் உமா சிக்கிக்கொண்டு விட்டார். உமாவின் தீவிர விசுவாசிகள் அப்போதுதான் விழித்துக் கொண்டனர்.

**உமா சொன்னால் மறு பேச்சின்றி சக உறுப்பினர்களையே தீர்த்துக்கட்டியவர்களுக்கு, உமா தங்களுக்கும் தலையைச் சுற்றத் தொடங்கிவிட்டார் என்பது விளங்கத் தொடங்கியது.**

கொழும்பிலும், வவுனியாவிலும் இயக்க உறுப்பினர்களின் செலவுக்கான பணம்கூட உமாவால் கொடுக்கப்பட்டது அரிது, வவுனியாவில் திரட்டப்பட்ட நிதி மூலமே இயக்கச் செலவினங்களை சமாளித்தனர்.

பணக்கஷ்டம் என்று கூறிக்கொண்டே இயக்கப் பணத்தை சொந்த முதலீடுகளாக மாற்றிக் கொண்டிருந்தார் உமாமகேஸ்வரன்.

தமிழகத்தில் தங்கியிருந்த இயக்கத் தலைவர்களில் பலருக்கு தமிழக அரசியலின் பந்தாவும், பகட்டும், போலித்தனமும் நிறைந்த அரசியலில் ஆசை ஏற்பட்டது உண்மை.

அந்த ஆசையில் இருந்து தப்பியவர் பிரபாகரன் மட்டும்தான். தான் தப்பியது மட்டுமல்லாமல் இந்திய அரசியல்வாதிகளை அதிகம் நம்பவும் கூடாது என்ற எண்ணத்தை தனது இயக்கத்தினரிடமும் ஏற்படுத்தியவர் பிரபாகரன்.

ஏனைய இயக்கத் தலைவர்களிடம் தமிழக அரசியலின் ஏமாற்றும், போலித்தனமும் தொற்றிக்கொண்டது. அந்த சாக்கடை வாசத்தை கண்டு மூக்கை சுளிப்பதற்கு பதிலாக, அதற்குள் மூழ்கி இருக்க பழக்கப் பட்டுக் கொண்டார்கள்.

தவறான சூழலை மாற்றுவதைவிட எந்தச் சூழல் இருக்கிறதோ அதற்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்வதும், கொள்கைகளை உதறிவிட்டு, தமது முன்னைய நிலைகளுக்கு முற்றிலும் மாறாக போய்விடுவதும் தமிழ்க் கட்சித் தலைமைகளின் குணாம்சம்.

அந்தக் குணாம்சம்தான் தமிழ்க் கட்சிகளை இன்று தரம் தாழ்ந்த அரசியலின் பிதாமகர்களாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

உமா மகேஸ்வரனும் தமிழ்நாட்டில் நீண்டகாலம் இருந்தவர்.

உமா மகேஸ்வரன் உயிருடன் இருந்தால் புளொட் உயிருடன் இருக்காது என்ற முடிவுக்கு புளொட் முக்கியஸ்தர்களை கொண்டு வந்தவர்களில் ஒருவர் சிவராம். தராக்கி என்ற பெயரில் பத்திரிகைகளில் எழுதிவருபவர்தான் சிவராம்.

சிவராமும் உமாவின் தீவிர விசுவாசி. இயக்க உட்கொலைகளில் பங்கெடுத்தவர்.

உமாவை விமர்சித்த உறுப்பினர்கள் பலரை சித்திரவதை செய்து கொன்றதில் முன்னின்றவர் சிவராம்.

தாசன், சித்தர், ஆர்.ஆர்.குரு போன்றோர் சிவராமின் கருத்தையே கொண்டிருந்தனர்.

தாசனும் உமாவின் தீவிர விசுவாசியாக இருந்தவர். உமா மீது கண்மூடித்தனமான பற்றுக் கொண்டிருந்தவர்.

பின்னர் உமாவின் சுய ரூபம் தெரிந்த போது, உமாவைப்போட சம்மதம் தெரிவித்தார்.

சித்தர் மென்மையான போக்குக் கொண்டவர். ஆனாலும் உமாவின் போக்கில் அவருக்கும் உடன்பாடில்லை. குறிப்பாக மாலைதீவில் உறுப்பினர்களை கைவிட்ட செயலால் சித்தரும் வெறுப்புற்றிருந்தார்.

**புளொட்டின் மத்திய குழுக் கூட்டத்தில் உமாவை தீர்த்துக் கட்டும் முடிவு எடுக்கப் பட்டது.**

உமாவின் மெய்க்காவலராக இருந்த ஆச்சியை கைக்குள் போட்டுக் கொண்டனர்.

ஆச்சியும் உமாவை மலையாக நம்பியிருந்தவர். உமாவின் கட்டளைப்படி உட்கொலைகள் பலவற்றைச் செய்தவர்.

தங்கள் தலைவரை விமர்சித்தவர்களை இயக்க விரோதிகள் என்றும், இயக்க உறுப்பினர்களை தலைமை ஏமாற்றி வருவதை சுட்டிக் காட்டியவர்களை துரோகிகள் என்றும் நம்பி ஆச்சி போன்ற சிலர் தங்கள் உடனிருந்த தோழர்களையே கொன்று, குழியில் போட்டு மூடினார்கள்.

அத்தனை விசுவாசங்களும் விழலுக்கு இறைத்த நீராக மாறியபோது, கண் எதிரேயே தங்கள் தலைவர் தன்னலவாதி என்பது உறுதியானபோது, தங்களால் காக்கப்பட்ட சக்தியை தாங்களே அழிக்க முடிவுசெய்தார்கள்.



ஆச்சி உமாவைத் தீர்த்துக் கட்டும் திட்டத்துக்கு உடன்பட்டது அவ்வாறுதான்.

ஆச்சிக்கு ஒரு காதலி இருந்தார். அவர் சுவிற்ஸர்லாந்துக்கு சென்றிருந்தார். அங்கு செல்ல விரும்பினார் ஆச்சி.

உமாவைப் போட ஒத்துழைக்குமாறும், ஆச்சி வெளிநாடு செல்ல பண உதவி செய்வதாகவும் கூறப்பட்டது.

ஆச்சி ஒத்துழைத்தார்.

உமாவை கடத்திச் சென்று தெகிவளையில் உள்ள வீடொன்றில் வைத்து விசாரித்தனர்.

எங்கெங்கே முதலீடுகள் உள்ளன? யார் பெயர்களில் உள்ளன? போன்ற விபரங்களை கறக்க முயன்றனர்.

கடைசியாக துப்பாக்கிச் சூடுகள் விழுந்தன.

வாகனம் ஒன்றில் ஏற்றிக் கொண்டு வந்து பம்பலப்பிட்டி கடற்கரையில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர்.

உமா உயிருடன் இருக்கும்போது இயக்கத்தை உயிரோட்டத்துடன் வைத்திருக்கத் தவறிவிட்டார். உமாவின் இறப்பை வைத்தாவது இயக்கத்திற்கு அனுதாபத்தை தேடலாம் என நினைத்தது புளொட்.

அதனால்தான் ஏழுநாள் துக்கதினக் கோரிக்கை. வருடா வருடம் உமா நினைவுநாள் அனுஷ்டிப்பு.

பின்னர், சித்தரின் தீவிர முயற்சியால் தான் மாலைதீவில் சிறை இருந்த புளொட் உறுப்பினர்கள் விடுதலையாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உமா மகேஸ்வரனின் சொந்தப் பெயர் கதிர்காமர் நல்லைநாதன். யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்.

முதலில் நில அளவையாளராக கடமையாற்றினார். தமிழர் கூட்டணியின் கொழும்புக் கிளையில் பணியாற்றினார். பின்னர் தமிழீழ புதிய புலிகள் இயக்கத்தில் செயற்பட்டார். ஈரோஸின் உதவியுடன் லெபனானில் பயிற்சி பெற்றார். பின்னர் அதிலிருந்து விலகினார். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபரானார்.

1984 ஜனவரி 29ம் திகதி திருமணம் நடந்தது. காதல் திருமணம். பிள்ளைகள் இல்லை. மூன்று சகோதரர்களும், இரு சகோதரிகளும் இருந்தனர். உமா கல்வி கற்றது தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில்.

ஈழப்போராட்ட இயக்கங்களில் பாரிய உட்கொலைகளுக்கு காரணகர்த்தாவாக இருந்ததுடன், இறுதியில் உட்கொலையிலேயே உமாவின் கதையும் முடிந்துவிட்டது.

(தொடர்ந்து வரும்)

## களக் காட்சிகள்





வன்னியில் மன்னகுளத்தில் 4.12.97 அன்று விசேஷ கொமாண்டோக்கள் மீதான புலிகளின் தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதி. நடுத்தர கொமாண்டோ மோட்டார்களும் காணப்படுகின்றன. முதலாவது படத்தில் புலிகளின் சிறுத்தைப் படையணி.



படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தரையிறக்கமும்–தாக்குதலும்

# புத்தாண்டில் முதல் இழப்பு

புதிய ஆண்டுக்கு சீனாவில் புலி ஆண்டு என்று பெயரிட்டுள்ளனர். நம் நாட்டிலும் புலிகள் வன்னியில் மோட்டர் ஷெல் முழக்கங்களுடன் புத்தாண்டை வரவேற்றுள்ளனர்.

புத்தாண்டு தினத்தன்று ஒலுமடுவில் படைநிலைகள்மீது புலிகள் நடத்திய தாக்குதலில் ஏழு படையினர் பலியானதாக படைத்தரப்பு ஒப்புக் கொண்டுள்ளது. இருவதுபேர்வரை காயம்.

முதல் முழக்கம் அதுதான்.

புத்தாண்டின் மறுநாளான 02.01.98 அன்று ஒலுமடு படை முகாம் பகுதியில் தரையிறங்கிய ஹெலிமீது புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல் தொடுத்தனர்.

புத்தாண்டு பிறந்த சூட்டோடு சூடாக புலிகள் நடத்திய தாக்குதல்கள் படையினருக்கு அபசகுனம் போலாகிவிட்டது.

எம்.ஐ.17 ஹெலி தீப்பிடித்து எரிந்த பின்னரும், ஹெலி சேதம் என்றுதான் படைத்தரப்பினர் கூறினார்கள்.

புத்தாண்டு கொண்டாட்டத்தின் பின்னர் களத்தில் இருந்து தெரிவிக்கப்படும் செய்தியை பேரிழப்புச் செய்தியாக அறிவிக்கத் தயங்கியதாகவே தோன்றியது.

ஹெலிக்கு சிறு சேதம் என்றும், ஹெலியில் இருந்த விமானிகள் உட்பட ஆறு ஏழு பேருக்கு காயம் என்றும் முதலில் கூறப்பட்டது.

ஹெலிக்குள் இருந்தவர்களுக்கு காயம் ஏற்படுகிறது என்றால், ஹெலியின் கதி என்னாகியிருக்கும் என்பது ஊகிக்க முடியாத ஒன்றல்ல.

ஆனாலும், மெல்ல மெல்லத்தான் உண்மையை படைத்தரப்பு கசியவிட்டது.

மறுபுறத்தில் புலிகளுக்கு உற்சாகம். இந்த ஆண்டின் முதற் தாக்குதல் துல்லியமாக அமைந்ததில் புலிகளின் அணிகளுக்கு உளவியல் ரீதியிலும் மேலும் தெம்பு சேர்ந்திருக்கிறது.

எம்.ஐ.17 மீது நடத்தப்பட்டது தற்செயலான தாக்குதல் அல்ல.

திட்டமிட்டு, பல நாட்கள் நோட்டம் பார்த்து நடத்தப்பட்ட தாக்குதல்.

மாங்குளம் ஒட்டிச்சுட்டான் வீதியில் மாங்குளத்தில் இருந்து ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் இருப்பது ஒலுமடு.

ஒலுமடுவில் நிலைகொண்டுள்ள படையினருக்கான விநியோகங்கள் பெரும்பாலும் வான்மார்க்கமாக ஹெலி மூலமே செல்கின்றன.

**புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு வாய்ப்பில்லாத வான் பாதையையும், பறப்பு உயரத்தையும் நம்பியே ஹெலிகள் வன்னிக் களத்தில் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.**

ஒலுமடுவிற்கு செல்லும் ஹெலிகள் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளுக்கு மேலாக பறந்து செல்வதும் உண்டு.

ஏவுகணைத் தாக்குதலில் இருந்து தப்பும் உத்தியோடு ஹெலிகள் சென்று வரத் தொடங்க, அந்த உத்திக்கு மாற்று உத்தி ஒன்றை புலிகள் வகுத்தனர்.

சமீபகாலமாக ஹெலிகள்மீது ஏவுகணைத் தாக்குதல்களே நடைபெறுவதால், வான் பரப்பில் பறக்கும்போது மட்டுமே உஷாராக இருக்கிறார்கள்.

தரை இறங்கியதும் 'அப்பாடா' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொள்வார்கள்.

எனவே, அதற்கேற்ப தங்கள் திட்டத்தை வகுத்துவிட்டனர் புலிகள்.

ஹெலி இறங்கிப் பொருட்களை இறக்கத் தொடங்கியதும், மோட்டார் தாக்குதலை நடத்துவதுதான் திட்டம்.

**ஏற்கனவே பலாலி விமானத்தளத்தில் விமானப்படை வான்கலன்கள் தரையிறங்கும்போதும், ஓடுபாதையை குறிவைத்து புலிகள் மோட்டார் தாக்குதல்கள் நடத்தியிருக்கிறார்கள்.**

யாழ் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது நடைபெற்ற தாக்குதல்கள் அவை.

ஆனால், வன்னிக் களத்தில் அடிக்கடி ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதால், பறக்கும்போதான தாக்குதல் பற்றித்தான் விமானப்படையினர் விழிப்பாக இருந்தனர். முன்னைய அனுபவங்களை மறந்துவிட்டனர்.

ஒலுமடு படை முகாமுக்கு ஹெலி மூலம் விநியோகம் நடப்பதால், அடிக்கடி ஹெலி வந்து சென்றது.

ஹெலி எங்கே தரையிறங்கி நிற்கிறது? என்ற தகவலை வேவு நடவடிக்கை மூலம் திரட்டிக் கொண்ட புலிகள் தாக்குதலுக்கு தயாராக இருந்தனர்.

**புத்தாண்டின் பின்னர் முதலாவது வெற்றிகரமான தாக்குதலாக நடத்துவதற்காகவே புலிகள் தாமதித்து இருந்தனராம்.**

புத்தாண்டு அன்று ஒலுமடு படை நிலைகள்மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஹெலி மீதான தாக்குதலுக்கான வலை விரிப்புத்தான்.

மோட்டார் ஷெல் தாக்குதல்களால் பலியான படையினரை மீட்க ஹெலி வரும். தரையிறங்கும்போது தாக்கலாம் என்றே திட்டமிட்டனர்.

ஆனால் அதற்கேற்ற சாதகம் அமையவில்லை. மறுநாள்தான் சந்தர்ப்பம் வாய்த்தது.

**02.01.97 வெள்ளிக்கிழமை அன்று உணவுப் பொருட்களுடன் ஒலுமடு படை நிலைகளின் பகுதிக்குள் எம்.ஐ.17 தரையிறங்கியது.**

நிறுத்தி பொருட்ளை இறக்க தொடங்க எவ்வளவு நேரம் எடுக்கும் என்பதைக் கணித்து புலிகள் தாமதித்தனர்.

ஏனெனில், நிறுத்தப்பட முன்னர் தாக்கத் தொடங்கினால், ஹெலியை அதே வேகத்தில் கிளப்பிச் சென்று விடுவர்.

ஹெலி இறங்கிய பின்னர் குறிப்பிட்ட நேர இடைவெளிகொடுத்துவிட்டு புலிகள் மோட்டார்கள் ஷெல்களை ஏவத் தொடங்கின.

எத்திசையில் இருந்து மோட்டாரை ஏவினால், ஹெலி தரையிறங்கும் பகுதியில் சென்று விழும் என்பதை முன்கூட்டியே கணித்து வைத்திருந்தனர்.

சில ஷெல்கள் ஹெலியை எட்டவில்லை. ஹெலியை அவசரமாக மேலே உயர்த்த விமானிகள் தயாராகினர்.

ஹெலி உயர முற்பட்டபோது சரமாரியான ஷெல்கள் பறந்து வரத் தொடங்கின.

எனினும் ஹெலியில் படவில்லை.

**எப்படியாவது ஹெலியை காப்பாற்றி கொண்டு சென்று விடவேண்டும் என்று ஹெலியை கிளப்பியபோது, ஷெல் ஒன்று வந்து ஹெலியின் உடம்பில் மோதி வெடித்தது.**

ஹெலி நன்றாக உயர்ந்திருந்தால் உள்ளே இருந்த எவரும் தப்பியிருக்க முடியாது. சிறியளவில் எழுந்தபோது தாக்கப்பட்டதால் ஹெலி எரியத் தொடங்கிய நொடியே விமானிகள் உட்பட, ஹெலியில் இருந்தவர்கள் கீழே குதித்து உருண்டு புரண்டு தப்பினார்கள்.

அப்படியிருந்தும் அவர்கள் காயம் அடைந்தனர்.

எம்.ஐ.17 நாசமாகிவிட்டது.

இத் தாக்குதலின் பின்னர் வன்னியில் படைமுகாம்களுக்கு ஹெலி மூலம் விநியோகம் செய்தல், காயப்பட்ட வீரர்களை அவசரமாக எடுத்துவர ஹெலியை பயன்படுத்தல் போன்றவை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன.

வன்னிக் களத்தில் வவுனியா யாழ் வீதியில் உள்ள படையினர்தான் தொடர்ச்சியாக நிலைகொண்டுள்ளனர்.

வவுனியா-யாழ் வீதிக்கு கிழக்கே உள்ள மதியாமடு, நயினாமடு, பெரியமடு, கரிப்பட்ட முறிப்பு, ஒலுமடு போன்ற பகுதிகளில் உள்ள படையினர் தமக்கிடையே தொடர்ச்சியான தரைத் தொடர்புகளை பேண முடியாமல் உள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள படை நிலைகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் புலிகளின் நடமாட்டம், ஊடுருவல் என்பவை இருந்து கொண்டே இருக்கும்.

அதனால்தான் காயப்பட்ட வீரர்களை எடுத்துவர இரவில் ஹெலிகள் பயன்படுத்தப்படுகின்றன.

முகாம்களுக்கு இடையிலான தரைப் பாதையை இரவில் பயன்படுத்துவது ஆபத்து, புலிகள் பதுங்கி இருந்து தாக்கக் கூடும். ஒலுமடுவுக்கு தரைப்பாதை ஊடாக பிரதான விநியோகம் செல்ல வேண்டுமானால் பெரிய மடு முகாமில் இருந்துதான் அனுப்பவேண்டும்.

பெரியமடுவில் இருந்து ஒலுமடு 12 கிலோமீட்டர் தூரத்தில் வடமேற்கில் இருக்கிறது. பெரும் எடுப்பாக பெரும் தொகைப் படையினராக இடைப்பட்ட பகுதியில் சென்று வரலாம். சிறு குழுக்களாக சென்றால் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கவேண்டி இருக்கும்.

எனவேதான் பெரும்பாலும் வான் மார்க்க விநியோகங்களையே வன்னிக்களத்தில் படையினர் பயன்படுத்தி வந்தனர்.

ஏவுகணைகளில் இருந்து தப்பிவிட்டால் போதும் என்று நினைத்தமையால், அதிலிருந்து தப்பக்கூடிய பாதையில் ஹெலிகள் சென்றுவந்தன.

**இப்போது ஏவுகணையில் இருந்து தப்பினாலும், தரையிறங்கிய பின்னர் புலிகளின் மோட்டார் தாக்குதல்களில் இருந்தும் தப்பியாக வேண்டிய நெருக்கடி தோன்றிவிட்டது.**

இதிலிருந்து தப்ப வேண்டுமானால் புலிகளின் மோட்டார்களின் சுடுதூரத்துக்கு எட்டாத அளவுக்கு முகாம் பரப்புக்களை விஸ்தரிக்க வேண்டும்.

அப்படித்தான் பலாலியில் செய்தனர். ஆனால் வன்னியில் படையினர் தமது தேவைக்கேற்ப முகாம்களை விஸ்தரிக்க களநிலவரம் ஒத்துழைக்காது.

**அதுதவிர, புலிகளிடம் ஆட்டிலெறிகளும் உள்ளன. அவற்றின் சுடுதூரத்தில் இருந்து முகாம் விஸ்தரிப்புக்களும் பாதுகாப்பளிக்காது.**

**இவ்வாறான களநிலவரத்தில் கிளிநொச்சிவரை ஜயசிக்குறுய் செல்லவேண்டுமானால் பாரிய இழப்புக்களைச் சந்தித்தாக வேண்டும். அது முதற்கட்டம்.**

**பாரிய இழப்பின் பின்னர் பிடித்த பகுதிகளில் நிலைகொள்ளும் படையினரை புலிகள் மூர்க்கமாகத் தாக்கத்தொடங்குவர்.**

நீண்ட நிலப்பரப்பில் படைப்பலம் பரவலாகிவிட்டால், புலிகளின் ஊடுருவல்களை எதிர்த்து நிற்பது படையினருக்கு கடினமான காரியமாகிவிடும்.

**முன்வைத்த காலை பின்வைத்தால் அரசாங்கத்திற்கு அரசியல் நஷ்டம். எதிர்கால தேர்தல் வெற்றிகளுக்கான மூலதன நஷ்டம். முன்வைத்த காலை மேலும் மேலும் முன் வைத்தால் படையினருக்கு ஆட்பல, ஆயுதபல நஷ்டம் என்ற நிலையில்தான் ஜயசிக்குறுய் படை நடவடிக்கை சிக்கியிருக்கிறது.**

புலிகளை பல திசைகளில் இழுத்து அவர்களது எதிர்ப்பை பலவீனமாக்க படையினர் கைக்கொண்ட தந்திரம் பலமுனை முன்னேற்றம்.

**ஆனால், பல முனைகளில் முன்னேறுவதற்காக படையினரும் தங்கள் பலத்தை பரவலாக்க வேண்டி இருந்தது. இதனால் ஒரேமுனையில் படை பலத்தை ஒன்று குவித்து முன்னேறுவதில் உள்ளசாதகங்களை படையினரும் இழந்துள்ளனர்.**

பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்னர் எப்படியாவது வன்னியில் இருந்து வெற்றிச் செய்தியை பெற்றாக வேண்டும் என்பது பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் விருப்பம்.

அவ்வாறு வெற்றிச் செய்தியைப் பெற முடிந்தால், சுதந்திரதின விழாவின் நாயகர் அவராகத்தான் இருப்பார்.

ஆனால் படைத்தரப்புக்கு அந்த நம்பிக்கை அறவே இல்லை. வன்னிக் களத்தில் படையினரின் முன்னைய கணிப்புக்கள் பொய்த்துவிட்டன. அதனால் நிதானமாக கால் எடுத்துவைக்கவே நினைக்கின்றனராம்.

**எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியும் பொறிக்குள் வைக்கப்படுகிறதா? வெற்றியை நோக்கி வைக்கப்படுகிறதா? என்பது தெரியாத நிலையில் அகலக் கால் வைத்தால், பேராசை பெரும் நஷ்டமாகிவிடும் என்பது அனுபவம் வாய்ந்தவர்களின் கருத்தாக இருக்கிறது.**

ஆனால், அரசாங்கத்திற்கும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் 50வது, சுதந்திர தின சாதனையாக சொல்வதற்கு வன்னிக்கள வெற்றிச் செய்தி அவசரமாக தேவைப்படுகிறது.

கிளிநொச்சிவரை ஒரு தடவை போய் விட்டால்கூட போதும், அதைச் சொல்லியே ஒரு கலக்கு கலக்கிவிடலாம் என்று நினைக்கிறது அரசாங்கம்.

**மறுபுறத்தில், சிறீலங்காவின் 50வது சுதந்திர தினத்துக்கு புலிகள் காட்டப் போகும் எதிர்ப்பு எப்படி இருக்கும் என்பதும் பாதுகாப்பு தரப்பினருக்கு தலையிடியாகியுள்ளது.**

தலைநகரில் மட்டும் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தால் போதாது. புலிகள் எந்த ரூபத்தில், எந்தப் பகுதிக்குள்ளும், எந்த நேரத்திலும் ஊடுருவக் கூடியவர்கள் என்பதை சமீபகால சம்பவங்கள் கோடிட்டுக் காட்டியுள்ளன.

மலையகத்தில் புலிகளின் நடமாட்டம் மின்மாற்றித் தகர்ப்புக்களின்போது தெரிந்திருக்கிறது.

காலியில் புலிகளின் லொறியில் ஏற்பட்ட வெடி விபத்து, தென்னிலங்கைப் பகுதியிலும் புலிகளின் ஊடுருவலை உணர்த்தியிருக்கிறது.

காலியில் வெடித்த குண்டு புத்தாண்டுத் தாக்குதலுக்காக கொண்டுவரப்பட்டதா? அல்லது சுதந்திர தினத்தை முன்னிட்டு புலிகள் திட்டமிட்டுள்ள பாரிய தாக்குதலுக்காக காலி வழியாக கொழும்புக்குள் கொண்டு வந்து சேர்க்கப்பட இருந்ததா? போன்ற சந்தேகங்களுக்கு பாதுகாப்புத் தரப்பினரால் இன்னமும் பதில் அறிய முடியவில்லை.

சுதந்திர தினத்துக்கு முன்பாக பாரிய நகர்வில் படையினர் ஈடுபடக்கூடும் என்று வன்னியில் புலிகளும் உஷார் நிலையிலேயே இருக்கின்றனர்.

ஆனால், படையினரைப் பொறுத்த வரை நாடெங்கும் உஷார் நிலையில் இருந்தாக வேண்டிய நிலையில் உள்ளனர்.



**சுதந்திர தினத்தை முன்னிட்டு புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியே தீருவர். ஆனால் எந்த முனையில் இருந்து தாக்குதல் வரும், புலிகளின் இலக்கு எது? என்பனதான் படையினரால் ஊகிக்க முடியாத இரகசியங்களாக உள்ளன.**

சுதந்திர தினத்துக்கு முன்பாக 'ஜயசிக்குறுய்' கிளிநொச்சியை சென்றடைந்துவிட்டால், சுதந்திரதின கொண்டாட்ட நாட்களில் வன்னியில் புலிகளை சண்டைக்கு இழுத்துக் கொண்டிருக்கலாம்.

அப்படி புலிகளின் கவனத்தை இழுத்தால், ஏனைய பகுதிகளை நோக்கி புலிகளின் கவனம் பெரியளவில் திரும்பாது என்றுகூட படையினர் நினைக்கக்கூடும்.

அவ்வாறான கணிப்புக்கள் கடந்த காலத்தில் தப்புக் கணிப்பாகவே போயுள்ளன என்பதும் உண்மை.

**முன்கூட்டியே களநிலவரங்களை கணிப்பிட்டு அதற்கேற்ப பதில் உத்திகளை வகுப்பதுடன், குறிப்பிட்ட தாக்குதலுக்கு உரிய அணிகளும் ஆங்காங்கே அனுப்பப்பட்டு விடுகிறது.**

எனவே, திட்டமிட்டபடி தாக்குதல்கள் நடத்தப்படுவதுதான் வழக்கம். யாழ் குடாநாட்டை கைப்பற்ற படையினர் மும்முரம் காட்டிக் கொண்டிருக்கையில் கொழும்பில் நடைபெற்ற தாக்குதல்கள் அதற்கு உதாரணம்.

கொழும்பிலோ அல்லது வடக்கு கிழக்குக்கு வெளியே உள்ள வேறொரு பகுதியிலோ பாரிய தாக்குதலுக்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டுவிட்டதையே காலியில் லொறியில் ஏற்பட்ட வெடி விபத்து முன்னறிவிப்புச் செய்திருக்கிறது.

50 வது சுதந்திர தினம் நெருங்க நெருங்க, பாதுகாப்புக்கான நெருக்கடியும் சூழ்ந்து கொண்டிருக்கிறது. ■

**நாரதர்**

### எம்.ஐ.17 சிறப்புத் தகுதிகள்

* சோவியத் யூனியன் ஒன்றாக இருந்த போதே தயாரான தரமான உற்பத்தி.
* 24 இருக்கைகள்.
* 12 தற்காலிக படுக்கைகளை ஏற்படுத்தி நோயாளர்களைக் காவிச் செல்ல முடியும். மருத்துவ சாதனங்களையும் பொருத்தலாம்.
* வசதிக்கு ஏற்ப மாற்றக் கூடிய கதவுகள்.
* மீட்புப் பணிகளுக்கும் நன்கு ஒத்துழைக்கும்.
* மணிக்கு 240 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும்.
* ஒரு முறை எரிபொருள் போட்டுவிட்டால் 800 கிலோ மீட்டர் தூரம் வரை தாக்குப் பிடிக்கும். பூரண சுமையோடு என்றால் 550 கிலோ மீட்டர்.
* மேலதிக எரிபொருள் தேவைக்கு ஓரிரு பெற்றோல் தாங்கிகளையும் எடுத்துச் செல்லும் வசதி இருக்கிறது.
* ஏவுகணை எதிர்ப்பு வசதிகள் கிடையாது.

# அதிரடி அய்யாத்துரை



**யாழ்ப்பாணத்துச் சனத்தை** தம்பிமார் மெத்தக் குறைவாக எடை போட்டிருக்கினம். ஆனால் சனம் சகல திருகுதாளங்களையும் பார்த்துக் கொண்டிருக்குது. வாக்குக் கேட்டுப் போன கட்சி ஒன்றிடம், "தம்பிமார்! உங்கள் வேட்பாளர் பட்டியலை ஒருக்கா காட்டுகிறியளே" எண்டு கேட்டவையாம். மெல்ல நழுவிப் போய் விட்டார்களாம். அப்படியே சிறு குறிப்பாக வேட்பாளர்களின் போராட்ட வரலாற்றையும் எழுதித்தரச் சொல்லி கேட்டிருக்கலாம்!

**சுவர்களை முற்றாக** புல்டோசரால் இடிக்காமல் விட்டதற்காக பச்சை உடையினருக்கு தமிழ்க் கட்சிகள் உளமார நன்றி தெரிவிக்க வேணும். இல்லையென்டால் சுவரொட்டி ஒட்ட இடம் வாய்த்திருக்குமோ? ஒரு இயக்கத்தின் முதுகில் இன்னொரு இயக்கம் ஒட்ட, சமரசம் செய்ய படையினர் படாத பாடு பட்டிருக்க வேணும்!

**கூட்டான கட்சியினர்** திட்டமிட்டுத்தான் தள்ளுப்பட்டு வந்தவை என்பதெல்லாம் பொய்யிலும் பொய் என்று சொன்னேன் பார்த்தியளோ! நீதி கேட்டு வழக்குப் போட்டுவிட்டனர். நீலமானவர் மேலிடத்துக்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற ஒற்றைக்காலில் நிற்கிறாராம். 'திட்டமிட்டு தள்ளுப்பட்டு வந்திருப்பினமோ?' என்ற சந்தேகம் மேலிடத்திலும் ஏற்பட்டதாம். அதுதான் வழக்குப் போட்டவையாம். அது சரி, "போடமாட்டோம்!" எண்டு பேட்டி கொடுத்த சங்கதியாரின் சங்கதி என்னாச்சு பாத்தியளோ?

**தீர்வுப் பொதிக்கு சர்வசன வாக்கெடுப்பு** வரப் போவதாக புரளிகள் கிளப்பப்படுகிறது. எல்லாம் பச்சைக் கட்சிக்கு நிர்ப்பந்தம் கொடுக்கும் காய் நகர்த்தல் புரளிகள்தான்! இந்தா வருகுது, அந்தா வருகுது எண்டு சொல்லுகினம். நன்றாய் வருமோ? நலிந்து வருமோ? மெலிந்த பொதியை வைத்துக் கொண்டே உந்தப்பாடு ● என்றால்...?

**மறைந்த முன்னாள் இடதுசாரி** (இந்நாள் அல்ல) பெர்னாட் சொய்சாவைப் பற்றி வழக்கம்போல தமிழ்க் கட்சிகளும் பாராட்டத் தவறவில்லை. 1972ல் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்புக்கு 'ஆமாம்' போட்டவர்களில் அன்னாரும் ஒருத்தர். அந்த அரசியலமைப்பின் விளைவுதான் இன்றைய யுத்தம். எத்தனை உயிர்கள் பலியாகிவிட்டன! அதனை மறந்து அவர் மறைவுக்கு மட்டும் எப்படிப் பாருங்கோ கண்ணீர் சிந்த முடியும்?! மலையக தனித்துவக் கட்சிப் பிரமுகரும் அன்னாரைப் பாராட்டித் தள்ளிப் போட்டார். தொழிலாளர்களின் தோழராம். மலையகத் தொழிலாளர்களை நாடற்றவராக்குவதற்கு அன்னாரும் தோள் கொடுத்தவரல்லோ? அளவுக்கு மீறிப் புகழ்தல் நன்றன்று.

**'ஊதியம் வாங்கமாட்டேன்!'** என்று ஊரறிய அறிவித்த திருவானமலை சபைத் தலைவர், மறுபடியும் ஊதியம் பெற்று வருகிறார். அதை மட்டும் ஊரறியச் சொல்லமாட்டாராக்கும்! அன்பளிப்பாக வாங்குவதையும் இரகசியமாக வாங்கிச் சேர்த்து குவித்து வைத்துள்ளார் எண்டுதான் ஊர் அறியப் பேசப்படுகிறதாம்.

**வருசத்துக்கு தலைநகர** ஹொட்டல்கள், மற்றும் விடுதிகளில் ஒரே கொண்டாட்டம்தான். ஆட்டம், பாட்டம்- ஒரே கூட்டம். பாவம், சீருடையினர் மட்டும் சோதனை அரண்களில் நோட்டம். சனத்துக்கு சூழ்நிலை பழகிப்போச்சுது.

**பி.பி.சி நம்நாட்டு** அதிகாரத் தரப்பாருடன் ஒப்பந்தம் செய்த பின்னர், ஐ.பி.சி.தான் இப்போது பிரபலமாகிக் கொண்டிருக்கிறது. பி.பி.சியில் இருந்து பிரிந்து போனவர்களைக் கொண்டது தான் ஐ.பி.சி. நல்லதைச் செய்தால் நாடு போற்றும்!

**தமிழ்க் கட்சிகள்** தன்னிடம் வருவதே ஒருவரைப் பற்றி ஒருவர் கோள் மூட்டத்தான் என்று அம்மையார் தன்னைச் சந்தித்த ஒருவரிடம் கூறினாராம். மெய்தானே!

**இவ்வாரம்** பொன்மொழி. 'லிடாய் போ' எழுதியது.

"இரவு முடிந்து
காலை மலர்கிறது.
ஆனால், வாழ்வின்
கடந்து போன நாட்கள்
திரும்புவதில்லை!
அடிவானம்வரை
கண்பார்வை செல்கிறது!
ஆனால், வசந்தகாலம்
பதித்த வடு இதயத்தில்
ஆழப் பதிந்துவிட்டது!" ■



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# 164

# உமா கொலையும் மறைக்கப்பட்ட உண்மைகளும்

**1989 ஜூலை** 15 ஞாயிற்றுக் கிழமை இரவு.

கொழும்பு பம்பலப்பிட்டியில் கடற்கரைப் பக்கமாக சடலம் ஒன்று கிடந்ததைக் கண்டவர்கள் பொலிசாருக்கு தகவல் கொடுத்தனர்.

சடலத்தை பொலிசார் வந்து பார்வையிட்டபோது, அடையாளம் தெரியவில்லை.

சடலத்தின் அருகே இரண்டு அடையாள அட்டைகள் காணப்பட்டன.

ஒன்றில், கதிர்காமர் நல்லைநாதன் என்றும், இன்னொன்றில், அப்துல்லா முகம்மது நவாஸ் என்றும் காணப்பட்டது.

கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு சடலத்தை கொண்டுபோனார்கள். புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையில் சடலம் யாருடையது என்பது தெரிந்துவிட்டது.

**அது உமாமகேஸ்வரனின் சடலம்.**

**புளொட் இயக்கத் தலைவரான, முகுந்தன் என்று அழைக்கப்பட்ட உமா மகேஸ்வரனின் சடலம்தான் அது.**

பாதுகாவலர்களுடன் நடமாடும் உமா மகேஸ்ரன் தனியாக, அநாதைப் பிணமாக கிடந்திருக்கிறார்.

அப்படியானால் அவருடன் சென்ற மெய்க்காவலர்கள் எங்கே, புளொட் இயக்கத்தினர் தங்கள் தலைவரை ஏன் தேடவில்லை?

புலனாய்வுப் பிரிவினருக்கு சந்தேகம் ஏற்படுத்திய கேள்விகள் அவை.

முதலில் சடலத்தை இனம் காணும் படலம் நடந்தது. உமாமகேஸ்வரனின் துணைவியாரான அகிலேஸ்வரியும், உமாவின் சகோதரர் கதிர்காமர் ஞானேஸ்வரனும் அடையாளம் காட்டினர்.

அதுதான் உமாமகேஸ்வரன் என்று திட்டவட்டமாக உறுதியான பின்னர் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுக்கப்பட்டது.

சடலம் எடுக்கப்பட்டது ஞாயிற்றுக் கிழமை. அடையாளம் காணப்பட்டது செவ்வாய்க்கிழமை.

முகம் அடையாளம் தெரியாமல் இருக்க முகத்தை சிதைக்க கொலையாளிகள் முயன்றிருந்தனர். அந்த முயற்சியில் முழு வெற்றி பெறவில்லை.

மொத்தம் ஐந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் உடலில் காணப்பட்டன. அவற்றில் மூன்று மார்பிலும், ஒன்று முகப்பகுதியிலும், அடிவயிற்றில் இன்னொன்றுமாக காணப்பட்டன.

## யார் காரணம்?

1982 மே மாதம் தமிழ்நாட்டில் சென்னை பாண்டி பஜாரில் பிரபாகரனுக்கும், உமாமகேஸ்வரனுக்கும் இடையே துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

அதன்பின்னர் பலத்த பாதுகாப்புடன் தான் தமிழ்நாட்டிலும் உமா மகேஸ்வரன் நடமாடினார்.

ஈழப் போராட்ட அமைப்புக்களில் உட்படுகொலைகள் அதிகமாக இடம் பெற்ற இயக்கம் புளொட் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புளொட்டில் இருந்து வெளியேறிய 'தீப்பொறி குழுவினரால்' புதியதோர் உலகம் என்றொரு ஆவணம் வெளியிடப்பட்டது.

புளொட் இயக்கத் தலைவர்களில் ஒருவராக இருந்த ஜான் மாஸ்டர் உட்பட முக்கியமானவர்கள் தீப்பொறி குழுவாக செயற்பட்டனர்.

புதியதோர் உலகத்தில் கூறப்பட்டுள்ளதின் படியும், தீப்பொறி குழுவினரின் தகவல்களின் படியும் 200ற்கு மேற்பட்ட புளொட் உறுப்பினர்கள் பயிற்சி முகாம்களில் வைத்து கொல்லப்பட்டனர்.

உமா மகேஸ்வரனின் நேரடி உத்தரவின்பேரில் இக்கொலைகள் நடத்தப்பட்டன.

ஏனைய இயக்க உளவாளிகள் என்று முத்திரை குத்தப்பட்டு, உமா தலைமைக்கு எதிரானவர்கள் கொல்லப்பட்டனர்.

அதனால், இயக்கத்தின் உள்ளேயும், வெளியேயும் இருந்து இரு முனைகளில் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிய ஒருத்தராகவே உமா இருந்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர்தான் உமா கொழும்பில் தங்கத் தொடங்கினார்.

கொழும்பு கிருலப்பனையில தலகொட்டுவவில் வீடு வாடகைக்கு எடுத்து மனைவியுடன் தங்கியிருந்தார்.

ஆச்சி, சுரேஸ் ஆகியோர் உமாவுக்கு நம்பிக்கையான மெய்க்காப்பாளாகளாக இருந்தனர்.

தனது பாதுகாப்பில் மிகுந்த ஜாக்கிரதை உடையவரான உமா எப்படி தனியாளாய் மாட்டுப்பட்டு, கடற்கரையில் பிணமாகக் கிடக்க முடியும்?

கடற்கரையில் பிணம் கிடந்ததே தவிர, அங்கு வைத்து கொலை நடக்கவில்லை.



உமாமகேஸ்வரன்

சித்திரவதை நடந்ததற்கு அறிகுறியாக உடம்பில் காயங்கள் காணப்பட்டன.

வேறெங்கோ வைத்திருந்து சித்திரவதை செய்து, பின்னர் சுட்டுக் கொன்றுவிட்டு, கடற்கரைப்பக்கமாக கொண்டுவந்து உடலைப் போட்டிருக்கின்றனர் என்பது ஊர்ஜிதமாகியது.

உமாமகேஸ்வரன் கடைசியாகக் காணப்பட்டது அமிர்தலிங்கத்தின் மரணச் சடங்கில் தான். கொழும்பில் நடைபெற்ற அஞ்சலியில் முதல் ஆளாய் காணப்பட்டார்.

அமிரின் அஞ்சலிக்காக வெள்ளிகாலை வீட்டில் இருந்து புறப்பட்ட உமாமகேஸ்வரன் அதன் பின்னர் வீட்டுக்கு திரும்பவே இல்லை. நவாஸ் என்ற பெயரில் உமா அந்த வீட்டை வாடகைக்கு பிடித்திருந்தார்.

## நடந்தது என்ன?

**புலிகள்தான் உமாவைப் போட்டுவிட்டனர் என்பது போன்று புளொட் இயக்கத்தினர் சிலர் கூறினார்கள். ஆனால் புளொட் முக்கியஸ்தர்கள் எவரும் புலிகள்தான் காரணம் என்று கூறவில்லை.**

உமா கொலை தொடர்பாக புளொட் இயக்க வவுனியாப் பொறுப்பாளராக இருந்த மாணிக்கதாசனால் ஒரு அறிக்கை வெளியிடப் பட்டது.

**தமது இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற ஏழுபேர் மேற்கொண்ட சதி முயற்சி தான் உமா கொலைக்கு காரணம் என்று மாணிக்கதாசன் குறிப்பிட்டிருந்தார்.**

தமிழ்ப் பகுதிகளில் ஏழு நாட்களுக்கு துக்கம் அனுஷ்டிக்குமாறும் அநத அறிக்கையில் கேட்கப்பட்டிருந்தது.

பிரிந்து போனவர்கள் யார்? என்ற விபரத்தை அறிக்கையில் வெளியிடவில்லை.

**எப்படி வெளியிட முடியும்? உமா கொலைக்கு உத்தரவிட்டதே புளொட் தலைமைப்பீடம்தான்.**

அதன் பின்னணியில் பல திடுக்கிடும் தகவல்கள் உள்ளன.

உமா மகேஸ்வரன் உயிருடன் உள்ள வரை புளொட் இயக்கம் உருப்படமாட்டாது என்ற நிலை உருவானது.

இயக்கத்தின் பெயரில் திரட்டப்பட்ட நிதியையும், இயக்கத்தின் பெயரால் நடத்தப் பட்ட வியாபாரங்கள் பற்றிய கணக்கையும் உமாமகேஸ்வரன் இரகசியமாக வைத்திருந்தார்.

தன்னையும், தனக்கு நம்பகமான சில உறவினர்களையும் தவிர இயக்கத்தில் இருந்த எவருக்கும் வியாபாரம், முதலீடுகள், கணக்கு வழக்குகள் பற்றி உமா மகேஸ்வரன் மூச்சுக் காட்டுவதில்லை.

தனது மனைவியின் பெயரிலும், தனது சகோதரி மகனான முகுந்தனின் பெயரிலும் வெளிநாடுகளில் உமா முதலீடுகள் செய்த விடயமும் மெல்ல கசியத் தொடங்கியது.

கண்மூடித்தனமான விசுவாசம் கொண்டிருந்த உறுப்பினர்களுக்கு தன்னைப்பற்றிய சந்தேகங்கள் தோன்றப் போவதில்லை என்றுதான் உமா நினைத்தார்.

இறுதியாக உமாவுக்கு யமனாக அமைந்தது மாலை தீவு இராணுவ நடவடிக்கை.

மாலைத்தீவு இராணுவ நடவடிக்கை பெரும் பேரத்தின் அடிப்படையில் நடைபெற்ற ஒன்றுதான்.

திட்டமிட்டபடி நடவடிக்கை வெற்றியளித்திருந்தால், புளொட்டுக்கு மாலைதீவில் பெரும் வருமானம் கிடைத்துக் கொண்டு இருந்திருக்கும்.

நடவடிக்கை தோல்வியடைந்ததால் புளொட் இயக்க உறுப்பினர்கள் மாலை தீவுச் சிறைகளில் அடைக்கப் பட்டனர்.

மொட்டை அடிக்கப்பட்ட நிலையில்- சிறைகளில் புளொட் உறுப்பினர்கள் பட்ட துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

அதேநேரத்தில், "மாலைதீவு இராணுவ நடவடிக்கையானது, புளொட்டில் இருந்து தன்னிச்சையாக சென்ற இராணுவக் குழுவின் வேலைதான். புளொட்டுக்கும் அதற்கும் தொடர்பில்லை" என்று மறுத்திருந்தார் உமா.

இராஜதந்திரக் காரணங்கள் கருதி சில நடவடிக்கைகளை மறுப்பது வழக்கம்தான். ஆனால், உமா மறுத்ததோடு, மாலைதீவில் கைதான தமது உறுப்பினர்களை மீட்டெடுக்க எவ்வித அக்கறையும் காட்டாமல் இருந்து விட்டார்.

வியாபாரம், முதலீடுகள், இலங்கை அரச உயர்மட்டத்தோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல், சொந்த வாழ்க்கை ஆகிய வட்டங்களுக்குள் உமா சிக்கிக்கொண்டு விட்டார். உமாவின் தீவிர விசுவாசிகள் அப்போதுதான் விழித்துக் கொண்டனர்.

**உமா சொன்னால் மறு பேச்சின்றி சக உறுப்பினர்களையே தீர்த்துக்கட்டியவர்களுக்கு, உமா தங்களுக்கும் தலையைச் சுற்றத் தொடங்கிவிட்டார் என்பது விளங்கத் தொடங்கியது.**

கொழும்பிலும், வவுனியாவிலும் இயக்க உறுப்பினர்களின் செலவுக்கான பணம்கூட உமாவால் கொடுக்கப்பட்டது அரிது, வவுனியாவில் திரட்டப்பட்ட நிதி மூலமே இயக்கச் செலவீனங்களை சமாளித்தனர்.

பணக்கஷ்டம் என்று கூறிக்கொண்டே இயக்கப் பணத்தை சொந்த முதலீடுகளாக மாற்றிக் கொண்டிருந்தார் உமாமகேஸ்வரன்.

தமிழகத்தில் தங்கியிருந்த இயக்கத் தலைவர்களில் பலருக்கு தமிழக அரசியலின் பந்தாவும், பகட்டும், போலித்தனமும் நிறைந்த அரசியலில் ஆசை ஏற்பட்டது உண்மை.

அந்த ஆசையில் இருந்து தப்பியவர் பிரபாகரன் மட்டும்தான். தான் தப்பியது மட்டுமல்லாமல் இந்திய அரசியல்வாதிகளை அதிகம் நம்பவும் கூடாது என்ற எண்ணத்தை தனது இயக்கத்தினிடமும் ஏற்படுத்தியவர் பிரபாகரன்.

**ஏனைய இயக்கத் தலைவர்களிடம் தமிழக அரசியலின் ஏமாற்றும், போலித்தனமும் தொற்றிக்கொண்டது. அந்த சாக்கடை வாசத்தை கண்டு மூக்கை சுளிப்பதற்கு பதிலாக, அதற்குள் மூழ்கி இருக்க பழக்கப் பட்டுக் கொண்டார்கள்.**

தவறான சூழலை மாற்றுவதைவிட எந்தச் சூழல் இருக்கிறதோ அதற்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்வதும், கொள்கைகளை உதறிவிட்டு, தமது முன்னைய நிலைகளுக்கு முற்றிலும் மாறாக போய்விடுவதும் தமிழ்க் கட்சித் தலைமைகளின் குணாம்சம்.

அந்தக் குணாம்சம்தான் தமிழ்க் கட்சிகளை இன்று தரம் தாழ்ந்த அரசியலின் பிதாமகர்களாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

உமா மகேஸ்வரனும் தமிழ்நாட்டில் நீண்டகாலம் இருந்தவர்.

உமா மகேஸ்வரன் உயிருடன் இருந்தால் புளொட் உயிருடன் இருக்காது என்ற முடிவுக்கு புளொட் முக்கியஸ்தர்களை கொண்டு வந்தவர்களில் ஒருவர் சிவராம். தராக்கி என்ற பெயரில் பத்திரிகைகளில் எழுதிவருபவர்தான் சிவராம்.

சிவராமும் உமாவின் தீவிர விசுவாசி. இயக்க உட்கொலைகளில் பங்கெடுத்தவர். உமாவை விமர்சித்த உறுப்பினர்கள் பலரை சித்திரவதை செய்து கொன்றதில் முன்னின்றவர் சிவராம்.

தாசன், சித்தர், ஆர்.ஆர்.குரு போன்றோர் சிவராமின் கருத்தையே கொண்டிருந்தனர்.

தாசனும் உமாவின் தீவிர விசுவாசியாக இருந்தவர். உமா மீது கண்மூடித்தனமான பற்றுக் கொண்டிருந்தவர்.

பின்னர் உமாவின் சுய ரூபம் தெரிந்த போது, உமாவைப்போட சம்மதம் தெரிவித்தார்.

சித்தர் மென்மையான போக்குக் கொண்டவர். ஆனாலும் உமாவின் போக்கில் அவருக்கும் உடன்பாடில்லை. குறிப்பாக மாலை தீவில் உறுப்பினர்களை கைவிட்ட செயலால் சித்தரும் வெறுப்புற்றிருந்தார்.

**புளொட்டின் மத்திய குழுக் கூட்டத்தில் உமாவை தீர்த்துக் கட்டும் முடிவு எடுக்கப் பட்டது.**

உமாவின் மெய்க்காவலராக இருந்த ஆச்சியை கைக்குள் போட்டுக் கொண்டனர்.

ஆச்சியும் உமாவை மலையாக நம்பியிருந்தவர். உமாவின் கட்டளைப்படி உட்கொலைகள் பலவற்றைச் செய்தவர்.

தங்கள் தலைவரை விமர்சித்தவர்களை இயக்க விரோதிகள் என்றும், இயக்க உறுப்பினர்களை தலைமை ஏமாற்றி வருவதை சுட்டிக் காட்டியவர்களை துரோகிகள் என்றும் நம்பி ஆச்சி போன்ற சிலர் தங்கள் உடனிருந்த தோழர்களையே கொன்று, குழியில் போட்டு மூடினார்கள்.

அத்தனை விசுவாசங்களும் விழலுக்கு இறைத்த நீராக மாறியபோது, கண் எதிரேயே தங்கள் தலைவர் தன்னலவாதி என்பது உறுதியானபோது, தங்களால் காக்கப்பட்ட சக்தியை தாங்களே அழிக்க முடிவுசெய்தார்கள்.



ஆச்சி உமாவைத் தீர்த்துக் கட்டும் திட்டத்துக்கு உடன்பட்டது அவ்வாறுதான்.

ஆச்சிக்கு ஒரு காதலி இருந்தார். அவர் சுவிற்ஸர்லாந்துக்கு சென்றிருந்தார். அங்கு செல்ல விரும்பினார் ஆச்சி.

உமாவைப் போட ஒத்துழைக்குமாறும், ஆச்சி வெளிநாடு செல்ல பண உதவி செய்வதாகவும் கூறப்பட்டது.

ஆச்சி ஒத்துழைத்தார்.

உமாவை கடத்திச் சென்று தெகிவளையில் உள்ள வீடொன்றில் வைத்து விசாரித்தனர்.

எங்கெங்கே முதலீடுகள் உள்ளன? யார் பெயர்களில் உள்ளன? போன்ற விபரங்களை கறக்க முயன்றனர்.

கடைசியாக துப்பாக்கிச் சூடுகள் விழுந்தன.

வாகனம் ஒன்றில் ஏற்றிக் கொண்டு வந்து பம்பலப்பிட்டி கடற்கரையில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர்.

உமா உயிருடன் இருக்கும்போது இயக்கத்தை உயிரோட்டத்துடன் வைத்திருக்கத் தவறிவிட்டார். உமாவின் இறப்பை வைத்தாவது இயக்கத்திற்கு அனுதாபத்தை தேடலாம் என நினைத்தது புளொட்.

அதனால்தான் ஏழுநாள் துக்கதினக் கோரிக்கை. வருடா வருடம் உமா நினைவுநாள் அனுஷ்டிப்பு.

பின்னர், சித்தரின் தீவிர முயற்சியால் தான் மாலைதீவில் சிறை இருந்த புளொட் உறுப்பினர்கள் விடுதலையாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உமா மகேஸ்வரனின் சொந்தப் பெயர் கதிர்காமர் நல்லைநாதன். யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்.

முதலில் நில அளவையாளராக கடமையாற்றினார். தமிழர் கூட்டணியின் கொழும்புக் கிளையில் பணியாற்றினார். பின்னர் தமிழீழ புதிய புலிகள் இயக்கத்தில் செயற்பட்டார். ஈரோஸின் உதவியுடன் லெபனானில் பயிற்சி பெற்றார். பின்னர் அதிலிருந்து விலகினார். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபரானார்.

1984 ஜனவரி 29ம் திகதி திருமணம் நடந்தது. காதல் திருமணம். பிள்ளைகள் இல்லை. மூன்று சகோதரர்களும், இரு சகோதரிகளும் இருந்தனர். உமா கல்வி கற்றது தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில்.

ஈழப்போராட்ட இயக்கங்களில் பாரிய உட்கொலைகளுக்கு காரணகர்த்தாவாக இருந்ததுடன், இறுதியில் உட்கொலையிலேயே உமாவின் கதையும் முடிந்து விட்டது.

(தொடர்ந்து வரும்)

## களக் காட்சிகள்





வன்னியில் மன்னகுளத்தில் 4.12.97 அன்று விசேஷ கொமாண்டோக்கள் மீதான புலிகளின் தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதி. நடுத்தர கொமாண்டோ மோட்டார்களும் காணப்படுகின்றன. முதலாவது படத்தில் புலிகளின் சிறுத்தைப் படையணி.



படிப்பகம்

www.padippakam.com

# விசாரணைக் கமிஷன்கள் அடிக்கடி தோன்றும் மாயமான்கள்!

அலசுவது- இராஜதந்திரி

யாழில் காணாமல் போனோர் படுகொலை செய்யப்பட்டு விட்டனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை வெளியிட்டது.

அத் தாக்கத்தில் இருந்து அரசு மீள்வதற்கு இடையே களுத்துறை சிறையில் படுகொலை வேட்டை நடைபெற்றது.

அவ்விடயத்திலும் சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல்வேறு மனித உரிமை அமைபுக்கள் தங்கள் கவனத்தை செலுத்தி இருந்தன.

சமாதானத்தை நாடும் அரசு என்று தன் தோற்றப்பாடுமீது அடுத்தடுத்து விழுந்த அடிகளை கண்டு ஜனாதிபதிகூட ஆடித்தான் போயிருந்தார்.

**சர்வதேச அரங்கில் நிதி உதவி கேட்டு ஜனாதிபதி நடத்தும் சுற்றுப் பயணங்களில், அவர் சிந்தும் புன்னகைக்கும், அவர் உதிர்க்கும் சமாதானம் பற்றிய, அரசியல் தீர்வு பற்றிய இதமான பேச்சுக்களுக்கும் முன்பிருந்த மரியாதை இப்போது குறையத் தொடங்கியிருக்கிறது.**

களுத்துறைச் சிறைப்படுகொலை அரசாங்கமே எதிர்பாராத ஒன்றுதான் என்பதில் ஐயமில்லை.

யாழில் காணாமல் போனோர் விவகாரத்தில் ஏற்பட்ட பழியில் இருந்து புத்திசாலித்தனமாக மீள்வதற்கான வழிகளை அரசாங்கம் சிந்தித்துக் கொண்டிருக்கையில், களுத்துறைச் சிறைப்படுகொலை ஜனாதிபதிக்கும் எரிச்சலை ஏற்படுத்துவதாகவே அமைந்தது.

ஆயினும், அரசாங்கத்தின் நிலை இருதலைக்கொள்ளி எறும்பின் நிலைபோன்றே அமைந்திருக்கிறது.

யுத்தத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்ல சர்வதேச உதவி, ஆதரவு போன்றவையும் ஆட்சியாளர்களுக்கு தேவையாக உள்ளது.

அதேசமயம், சர்வதேச உதவிகள், ஆதரவு போன்றவற்றை வைத்து மட்டும் யுத்தத்தை முன்னெடுக்கவியலாது. படையினரதும், பாதுகாப்புத் தரப்பினரதும் பூரண ஒத்துழைப்பும், உற்சாகமும் அவசியமாகிறது.

**எனவே, சர்வதேச அரங்கில் கெட்ட பெயர் ஏற்படாதவகையிலும், யுத்த முனையில் உள்ள படையினரையோ, பாதுகாப்பு துறைகள் சார்ந்தோரையோ அதிருப்திக்கு உள்ளாக்காத வகையிலுமே ஆட்சியாளர்கள் நடந்து கொள்ள வேண்டியவராகிறார்கள்.**

யுத்த வெற்றிகளையே தங்கள் தென்னிலங்கை அரசியலுக்கான மூலதனமாக நம்பியிருக்கும் ஆட்சியாளர்களால், படையினர்மீது நேர்மையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது.

**வெளியுலகின் கண்களுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்த மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஒரு சிலவற்றின்மீது மட்டும் நடவடிக்கை எடுத்து வெளியுலகை திருப்திப்படுத்தவே ஆட்சியாளர்கள் முற்படுகின்றனர். உதாரணம், கிருஷாந்தி பாலியல் வல்லுறவு படுகொலை.**

அக் கோரச் சம்பவம்கூட அரசாங்கமோ, அன்றிப் படையினரோ தங்களிடம் செய்யப்பட்ட புகார்கள் மீது மேற்கொண்ட நடவடிக்கையால் கண்டறியப்பட்டதல்ல.

மயானத்தில் புதைப்பட்ட உடலின் சில பாகங்கள் வெளியே நீட்டிக் கொண்டிருந்தமையால், அதனைக் கண்டவர்கள் கொடுத்த தகவல்களால்தான் கிருஷாந்தி படுகொலை அம்பலமாகியிருந்தது.

இல்லாவிட்டால் காணாமல் போனோர் பட்டியலில் கிருஷாந்தியின் பெயரும் இப்போது காணப்பட்டிருக்கும்.

இதே வேளை வடக்கு-கிழக்கில் நடைபெற்ற ஏனைய பல பாலியல் வல்லுறவுப் படுகொலைச் சம்பவங்கள் பூசிமெழுகப்பட்டுள்ளன. உதாரணம்: கிழக்கில் கோணேஸ்வரி என்ற தாயின் மரணம்.

படையினரை அதிருப்திக்கு உள்ளாக்கக் கூடாது என்பதாலேயே இத்தகைய பூசிமெழுகல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**வெளியுலக ஆதரவு தேவைப்படவில்லை என்றால், அத்தி பூத்தாற் போன்று எப்போதாவது ஒரு முறை மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்கூட மேற்கொள்ளப்பட மாட்டாது என்றுதான் கருதவேண்டியிருக்கிறது.**

களுத்துறைப் படுகொலையில் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று பல உண்மைகளை அறியக்கூடியதாக இருந்தது.

சம்பவம் நடைபெற்றபோது பணியில் இருந்த சிறை அதிகாரிகளும், பாதுகாப்புக் கடமையில் இருந்த இராணுவத்தினரும் தமிழ் பேசும் கைதிகள் வேட்டையாடப்படுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்துள்ளனர்.

**எனவே, குறிப்பிட்ட கோரச் சம்பவம் மீதான உடனடி நடவடிக்கை என்பது, யாரெல்லாம் பணியில் இருந்தனரோ, அவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்வதாகவே அமைந்திருக்க வேண்டும்.**

சம்பவம் நடைபெற்றபோது பொறுப்பாக இருந்த அதிகாரிகளையாவது தற்காலிக வேலைநீக்கம் செய்திருக்க வேண்டும்.

களுத்துறை சிறைப் படுகொலைகளுக்கு ஆட்சியாளர்கள் மேற்கொண்டிருக்க வேண்டிய தகுந்த நடவடிக்கை பின்வருமாறு அமைந்திருக்க வேண்டும்.

1. கடமையைச் செய்ய தவறியோர்மீது உடனடி நடவடிக்கை.

2. சட்டரீதியான துரித விசாரணை

**விசாரணைக் கமிஷன் அறிக்கையை வைத்து, அந்த அறிக்கையில் குற்றம் சாட்டப் பட்டோர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது.**

**அந்த அறிக்கையின் அடிப்படையில் அரசு சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம். வழக்குத் தொடுக்கலாம்.**

**கொழும்பு ஏரிகளில் மிதந்த தமிழர்களின் பிணங்கள் தொடர்பான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் விடுதலையாகி சுதந்திரமாக உலாவுகின்றனர்.**

**சட்ட விசாரணை முடிவுக்கே அந்தக் கதி என்றால், விசாரணைக் கமிஷன் முடிவு களின் கதி என்னாகும்?**

மூலம், தவறு செய்த அதிகாரிகளைப் பிடித்து நீதிமன்றம் முன்பாக நிறுத்தல்.

3. விசாரணைக் கமிஷன் நியமித்தல்.

முதல் இரண்டு நடவடிக்கைகளும் முக்கியமானவையாகும். சட்டரீதியாக துரித நீதி வழங்கும் அணுகுமுறைகளாகும்.

விசாரணைக் கமிஷன்கள் என்பவை இரகசியமாக மறைந்திருக்கும் விவகாரங்களை வெளிக்கொண்டுவர அமைக்கப்படுபவையாகும்.

களுத்துறை சிறைப்படுகொலையில் சம்பந்தப்பட்டவர்கள் யார், கடமையைச் செய்யாமல் வேடிக்கை பார்த்தவர்கள் யார்? என்பதெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோன்று உடனடியாகவே அறியப்பட்ட விடயங்களாகும்.

எனவே, அவற்றை ஆராய்வதற்கு கமிஷன் எதுவும் அவசியமில்லை என்பது நன்கு தெளிவான உண்மையாகும்.

அப்படியானால் விசாரணைக் கமிஷன் ஏன்? என்ற கேள்வி எழுவது இயல்பானதே. களுத்துறை படுகொலைகள் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் விதமாக தூண்டிவிடப்பட்டது என்றும், குறிப்பிட்ட சிறை அதிகாரி ஒருவருக்கும் முன்னைய ஆளும் கட்சிக்கும் இடையே நெருக்கம் இருந்தது எனவும் அரசாங்கம் சந்தேகிக்கிறது என்று தெரிகிறது.

தனது சந்தேகத்தைப் பற்றி ஆராய்வதற்கு தேவையானால் அரசாங்கம் விசாரணைக் கமிஷனை தனியாக நியமித்திருக்கலாம்.

**சிறைப்படுகொலையில் சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க துரிதமான சட்ட நடவடிக்கை, குறிப்பிட்டவர்களின் பின்னணியில் வேறு ஒரு சக்தி சம்பந்தப்பட்டுள்ளதா என்று கண்டறிய விசாரணைக் கமிஷன் என்று அரசு தன் நடவடிக்கைகளை இருமுனைகளில் மேற்கொண்டிருக்க வேண்டும்.**

ஆனால், அரசாங்கம் தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது, விசார்ணைக் கமிஷனை சாக்காக வைத்து, உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் நழுவிக்



கொள்வதாகவே அமைந்திருக்கிறது.

**விசாரணைக் கமிஷனைப் பற்றிய செய்திகள் மூலம், உலகைத் திருப்திப்படுத்தும் அதே சமயத்தில், உடனடி நடவடிக்கை எடுக்காமல் தவிர்த்தது மூலம் பாதுகாப்புத் தரப்பினரையும் அதிருப்திக்கு உள்ளாக்காது ஆட்சியாளர்கள் நடந்து கொண்டுள்ளனர்.**

எனவே, தமிழ் பேசும் மக்கள்மீதான ஒடுக்குமுறைகள் விடயத்தில், விசாரணைக் கமிஷன்கள் உலகை ஏமாற்றும் மாயமான்களாகவே இருந்து வருகின்றன.

**ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்திலும் விசாரணைக் கமிஷன்கள் அமைக்கப்பட்டதுண்டு. யாழ் நகரை தீயிட்டு பொலிசாரும், குண்டர்களும் நடத்திய வெறியாட்டத்தைப் பற்றி ஆராய சன்சோனிக் கமிஷன் நியமிக்கப்பட்டது.**

பொலிஸ் அதிகாரி தமோதரம்பிள்ளை உட்பட பலர் அக் கமிஷன் முன்பாக பொலிசாரின் அட்டூழியங்களை எடுத்துரைத்திருந்தனர். சன்சோனிக் கமிஷன் விசாரணைகள் பத்திரிகைகளில் வெளியானபோது, நீதியான விசாரணை நடைபெறுவது போன்ற எண்ணத்தை மக்களிடம் தோற்றுவித்தது.

**பின்னர் சன்சோனிக் கமிஷன் அறிக்கை குப்பைத் தொட்டியில் போடப்பட்டது. வெறியாட்டம் நடத்திய, படுகொலைகள் புரிந்த எவர்மீதும் நடவடிக்கை எடுக்க முன்னைய அரசு துணியவில்லை.**

உண்மையில் நடவடிக்கை எடுக்க விரும்பியிருந்தால், அப்போது யாழ் நகரில் பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிகாரிகளை உடனடியாக வேலை நீக்கம் செய்ய முடிந்திருக்கும்.

ஒருபுறம் பொலிசாரை தட்டிக் கொடுத்தபடி, மறுபுறத்தில் உலகை ஏமாற்றும்விதமாக 'சன்சோனிக் கமிஷன்' போட்டிருந்தனர்.

தற்போதைய அரசாங்கமும் விசாரணைக் கமிஷன்கள் விடயத்தில் முன்னைய அரசின் பாதையில் செல்வதையே அவதானிக்க முடிகிறது.

வடக்கு-கிழக்கில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைக் கமிஷன் ஒன்றை இன்றைய அரசு பதவிக்கு வந்த கையோடு அமைத்திருந்தது.

அந்தக் கமிஷனுக்கு இன்று என்ன நேர்ந்துள்ளது என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும்.

கடந்த ஆட்சிக்காலத்தில் வந்தாறுமூலை அகதிமுகாமில் படையினரால் கைது செய்யப்பட்டு சத்துருக்கொண்டான் இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்ட 150ற்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர்.

கிழக்கில் காணாமல்போனோர் தொடர்பாக அவர்களின் உறவினர்கள் கூறிய கண்ணீர் கதைகளையும், நெஞ்சை உறைய வைக்கும் உண்மைகளையும் அக் கமிஷன் பதிவு செய்திருந்தது.

**வடக்கு-கிழக்கில் காணாமல் போனோர் கதி அறிய முன்னாள் நீதியரசர் பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி நியமித்த கமிஷன் சமர்பித்த அறிக்கை தூங்கிக் கொண்டிருக்கிறது. கமிஷன் அறிக்கைகள் எங்கே என்று ஆராயவும் கமிஷன் தேவைப்படலாம்.**

எனினும், புலிகளுடன் போர் தொடங்கிய பின்னர், படையினரை சார்ந்திருக்க வேண்டிய கட்டத்தில், இன்றைய ஜனாதிபதியின் நிலைப்பாடுகளும் மாற்றமடைந்திருந்தன.

**வடக்கு-கிழக்கில் காணாமல்போனோர் தொடர்பான விசாரணைக் கமிஷனில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் படையினரை அதிருப்திக்கு உள்ளாக்கியதால், அக்கமிஷனை துரிதமாக முடிவிடுவதில்தான் ஆட்சியாளர்கள் அக்கறை காட்டினர்.**

வடக்கு-கிழக்கில் காணாமல் போனோரின் கதி அறிய என்று ஜனாதிபதி சந்திரிக்காவால் நியமிக்கப்பட்ட அக் கமிஷன் யாழ் குடாநாட்டுக்கு செல்லவே சந்தர்ப்பம் இல்லாமல் தன் பணிகளை முடித்துக் கொண்டது.

**அக் கமிஷனின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பல மாதங்களாகின்றன. ஜனாதிபதியின் அலுவலகத்தில் அறிக்கை தூங்கிக் கொண்டிருக்கிறது. காணாமல்போய் பலியானோரின் குடும்பங்கள் நஷ்ட ஈடும் இன்றி, மரண அத்தாட்சிப் பத்திரங்கள் பெறவும் முடியாமல் திண்டாடி வருகின்றன.**

காணாமல் போனோர் பலியாகினர் என்பதை அரசு ஒத்துக் கொண்டால்தான் நஷ்ட ஈடு வழங்க முடியும்.

அவ்வாறு ஒப்புக் கொண்டால் படையினர்தான் கொன்றனர் என்பதை உறுதிசெய்வதோடு, குறிப்பிட்ட சில அதிகாரிகள் மீதாவது நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

தென்னிலங்கையில் சிங்கள இளைஞர்களை காணாமல்போகச் செய்தவர்கள் என்று இனம் காணப்பட்ட அதிகாரிகள் விடயத்தில்கூட ஆட்சியாளர்களால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

தென்னிலங்கையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் பலர்கூட ஜே.வி.பி. என்ற போர்வைக்குள் காணாமல் போயிருந்தனர். அவ்வாறிருந்தும் படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாமல் இருக்கிறது.

**இந்நிலையில் வடக்கு-கிழக்கில் சென்ற ஆட்சியில் காணாமல் போனோர் விவகாரத்தில் மட்டுமன்றி, இந்த ஆட்சியிலும் காணாமல் போனோர், காணாமல் போய்க்கொண்டிருப்போர் விவகாரத்திலும் துணிச்சலான, தகுந்த நடவடிக்கையை எதிர்பார்ப்பது முடியாத காரியமேயாகும்.**

எனவே, களுத்துறை சிறை படுகொலை பற்றிய கமிஷன் மட்டுமல்ல, யாழ் குடாநாட்டில் காணாமல் போனோருக்காக நியமிக்கப்போவதாக ஜனாதிபதி கூறியுள்ள கமிஷனும் கண்துடைப்பாகவும், காலத்தை இழுத்தடித்து, ஆறப்போடும் முயற்சியாகவுமே விளங்கப்போகின்றன.

யாழ் குடாநாட்டில் காணாமல்போனோர் விடயத்திலும், களுத்துறை இனப்படுகொலை விடயத்திலும் பாதுகாப்புத் தரப்பினர்மீது அரச தரப்பினர் எவருமோ, ஜனாதிபதியோ குறைகூற முன்வரவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்.

மனித உரிமை மீறல் விடயங்களில் அரசாங்கம் கரிசனை காட்டுகிறது என்று காண்பிக்க இந்த விசாரணைக் கமிஷன்கள் அரசுக்கு உதவுகின்றன.

**மறுபுறத்தில், தமிழ்க் கட்சிகளும் குறிப்பிட்ட விசாரணைக் கமிஷன்கள் தங்கள் கோரிக்கையின் பிரகாரம் கிடைத்த வரப்பிரசாதங்கள் என்று தமிழ் மக்களுக்கு காண்பிக்க முயற்சிப்பதையும் அவதானிக்க முடிகிறது.**

விசாரணைக் கமிஷன்கள் என்பதும், அவற்றை நம்பி ஏமாந்துபோன அனுபவங்களும் இலங்கைத் தமிழ்பேசும் மக்களுக்கு புதியதொன்றல்ல.

ஆனாலும், விசாரணைக் கமிஷன் என்ற மாயமான் மூலம் அரசுக்கு மட்டுமன்றி தமிழ்க் கட்சிகளுக்கும் இலாபம் இருக்கிறது.

உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதாக உலகுக்கு காட்டுகிறது அரசாங்கம். 'நாங்கள் சொன்னால் அரசு கேட்கிறது பாருங்கள். உரிய நடவடிக்கை வரும் பொறுத்திருங்கள்' என்று தமிழ் மக்களிடம் தமிழ்க் கட்சிகள் தம்பட்டம் அடிக்கவும் உதவுகிறது.

பாதிக்கப்பட்டோர் கடைசியில் பெறப்போவது மட்டும் பலத்த ஏமாற்றம்தான். அதனை அவர்கள் உணர்ந்து கொள்ளும்போது அவர்களது பிரச்சனை ஆறிப்போன பிரச்சனையாக மாறிப்போயிருக்கும் என்பதே சோகமான உண்மையாகும்.

## சந்திக்கு வராத சங்கதிகள் ~நக்கீரன்~

# சாராய ஆறு தயாராகிறது

யாழ் குடாநாட்டு தேர்தல் களத்தில் மக்களிடம் சூடு பரவவில்லை. சூட்டைப் பரப்ப கட்சிகள் மேற்கொண்ட முயற்சிகளும் எதிர்மாறான விளைவுகளையே தோற்றுவித்துள்ளன.

இக் கட்சிகளுக்கு எங்கே கிடைத்தது இத்தனை பணம்? தண்ணீராய் செலவழிக்கிறார்களே? என்றுதான் மக்கள் வியப்புறுகின்றனர்.

உடைந்த வீடுகள் ஒரு புறம், தொழில் இன்றித் தவிப்போர் மறுபுறம், கண்ணீரும், இரத்தமும் கலங்கிச் சேறான மண்ணாக காட்சி தருகிறது யாழ் குடாநாடு.

நாடு எரியும்போது பிடில் வாசித்த நீரோ மன்னனைப்போல, மக்கள் வயிறு பற்றி எரிந்து கொண்டிருக்க தேர்தல் பிரசார போட்டியில் குதித்துள்ளன தமிழ்க்கட்சிகள்.

மரணவீட்டில் நின்று திருமண அலங்காரம் செய்வதுபோல, யாழ் மண்ணில் தமிழ்க் கட்சிகள் செய்யும் ஆரவாரமான பிரசாரத்திற்கும், அங்குள்ள மக்களின் நிலைக்கும் இடையே பொருத்தமற்ற தன்மை காணப்படுகிறது.

இது ஒன்றே, தமிழ்க் கட்சிகளின் மனப்போக்கு மக்களின் உணர்வுகளை விட்டு அந்நியப்பட்டமையாக மாறிவிட்டமைக்கு தக்க உதாரணமாக இருக்கிறது.

இதற்கிடையே, யாழ் மனிதனை பலவீனங்களின் மொத்த வடிவமாக மாற்றிவைத்துக் கொண்டு, அவன் முதுகில் சவாரி செய்யும் திட்டங்கள் தீட்டப்பட்டுவிட்டன.

தமிழ்க் கட்சி ஒன்று இரண்டரை இலட்சம் ரூபாய்களை சாராயம் கொள்வனவு செய்ய ஒதுக்கியுள்ளது என்ற தகவல் சிறிது அதிர்ச்சி தரக்கூடும்.

இன்னொரு கட்சி அதனை மிஞ்சக் கூடிய வகையில் ஏற்கனவே சாராயம் கொள்வனவை ஆரம்பித்து களஞ்சியப் படுத்தத் தொடங்கிவிட்டது.

யாழ் நகரில் குரு நகர், நாவாந்துறை, ஆரியகுளம் போன்ற பகுதிகளில் சாராயத்தை கொடுத்து வாக்கு வாங்கிக் காட்டுவதாக சில கட்சிகள் பந்தயம் கட்டியிருக்கின்றன. அங்குள்ள மக்கள் அத்தனை இளக்காரமாகத் தெரிகிறார்கள் இக்கட்சிகளுக்கு.

கசிப்புக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். சீல் சாராயம் கொடுக்கப்போகிறோம். தேர்தல் தினத்திற்கு முந்திய இரவு முதல் மறுநாள் காலைவரை குளிப்பாட்டல்தான் என்கின்றனர்.



ஜனவரி 28ல் சாராய ஆறு யாழ் குடாநாட்டில் பெருக்கெடுத்துப் பாயப் போகிறது.

குடாநாட்டின் சில பகுதிகளில் மதுப் பாவனைக்குத் தடைபோட்டுள்ளனர் அங்குள்ள படை அதிகாரிகள். ஏனைய பகுதிகளிலும் தடை வந்தால்கூட, தங்கள் முகாமுக்குள் வைத்து பருகி மகிழ கட்சிகள் முன்வரக் கூடும்.

வேட்டி, சேலைகள் போன்றவற்றை கொழும்பில் பல இலட்சங்களுக்கு கொள்வனவு செய்து கொண்டு போயிருக்கிறார் தமிழ்க் கட்சி பிரமுகர் ஒருவர்.

யாழ்ப்பாணத்தவர்களை முன்னர் தென்னிலங்கை இனவாதிகள் பனங்கொட்டை என்று கேலி செய்வர். அவர்களே இப்போது தமிழர்களைக் கண்டால் 'புலி..புலி' என்கிறார்கள்.

ஆனால் தமிழ்க் கட்சிகள் மட்டும் யாழ்ப்பாணத்தார் பனங்கொட்டைகள் தான். விலைக்கு வாங்கிவிடலாம் என நம்புகின்றன.

நம்பிக்கை பலிக்குமா? அல்லது புத்திசாலியான யாழ் குடிமகன் பெறுவதை எல்லாம் பெற்றுவிட்டு, கொடுப்பதையெல்லாம் வாங்கிவிட்டு இறுதியில் எதிர்பாராத அதிர்ச்சியை தமிழ்க் கட்சி களுக்கு தரப் போகிறாரா? பார்க்கலாம்.


படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி



## பூலான்தேவி

**77** தருவது **ரசிகன்**

> **கடந்த வாரம்**
>
> சிறை அதிகாரியை பூலான் கொலை செய்கிறாள். தனது ஆட்களை மீட்டு வருகிறாள். அவர்களுடன் பொலிஸ் உளவாளி ஒருவனும் சேர்ந்து கொள்கிறான். மான் சிங் அவனை அடையாளம் காண்கிறான். இனி...

உளவாளி சொன்ன தகவல் மான் சிங்கை கொதிப்படையச் செய்தது.

பூலானின் ஆட்களுடன் சிறையில் இருந்து கைதி போன்று நடித்து பூலானின் இருப்பிடத்தை அறிய முயன்றான்.

இப்போது பூலானையே தீர்த்துக் கட்டவும் துணிந்து வந்திருக்கிறான்.

அவனை உயிரோடு விட்டுவைப்பது, விஷப்பாம்பை நடமாட விடுவதற்கு ஒப்பான காரியம் என நினைத்தான் மான் சிங்.

அவனைச் சுட்டுக் கொல்வதற்கு முன்னர், ஏவியது யார் என்று அறியத்தான் அக்கேள்வியை வீசினான்.

"எந்த வேசிமகனடா சொன்னான்?"

அந்தக் கேள்விக்கு அவன் சொன்ன பதிலைக் கேட்டதும், பூலானின் நெஞ்சுக்குள் தீப்பற்றிக் கொண்டது.

"ஜகதிஷ் சிங்" என்றான் உளவாளி.

அந்தப் பொலிஸ் அதிகாரிதான் தன்னை இக் காரியத்தில் ஈடுபடுத்தினான் என்ற உண்மையைக் கக்கிவிட்டான்.

அவன்தான் பூலானை பொலிஸ் நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்த அதிகாரி.

கோழிக்குஞ்சுபோல பூலான் ஒடுங்கி, ஒடுங்கிப்போக, அவள் இளமையை சாப்பிட்ட பருந்துதான் அந்த அதிகாரி.

சிறை அதிகாரியை பழிதீர்த்து விட்டாள். அவனைவிடக் கொடிய பொலிஸ் அதிகாரியை இதுவரை விட்டுவைத்திருந்தாள்.

அது எத்தனை பெரிய தப்பு என்பதை இப்போது உணர்ந்தாள் பூலான்.

"அவன் வீடு எங்கேயடா இருக்கிறது?" பூலான் கேட்ட கேள்வியில் மிரண்டுபோன உளவாளி, சகல விபரங்களையும் ஒப்புவித்துவிட்டான்.

அவனை என்ன செய்வது என்பது போல பூலானின் முகத்தைப் பார்த்தான் மான் சிங்.

கோபத்தில் பூலானின் கண்கள் பளபளத்துக் கொண்டிருந்தன.

அவள் எதுவும் கூறவில்லை. மான் சிங் தன் முடிவை நிறைவேற்றினான்.

'டுமீல்'

உளவாளியின் தலையை துப்பாக்கி ரவை துளைத்தது.

குபுக்கென்று இரத்தம் பீறிட, குப்புறக் கவிழ்ந்து, கடைசியாக மண்ணை முத்தமிட்டான்.

அன்றிரவே பொலிஸ் அதிகாரியின் வீட்டுக்குள் பூலானின் குழுவினர் புகுந்தனர்.

காவலுக்கு நின்ற பொலிஸ்காரன் ஒருத்தனை மான் சிங் மடக்கி கழுத்தை முறித்ததில் அவன் கத்தக்கூட வழியில்லாமல் செத்துப் போனான்.

கதவை உடைத்து உள்ளே புகுந்த சத்தம் கேட்டு, தனது கைத்துப்பாக்கியுடன் எழுந்து ஓடிவந்தான் பொலிஸ் அதிகாரி.

அதற்குள் மான் சிங் முந்திக் கொண்டான்.

'டுமீல், டுமீல்'

கைத்துப்பாக்கி அவன் கையில் இருந்து உதிர்ந்தது. அவன் உடல் தரையில் மல்லாந்து சரிந்தது. ஆனால் இன்னமும் உயிர் இருந்தது.

பொலிஸ் அதிகாரியின் மனைவியும், இரண்டு பிள்ளைகளும் கூக்குரலிட்டுக் கொண்டு அவன் உடல்மேல் புரண்டு அழுதனர்.

பொலிஸ் அதிகாரியின் கண்களுக்குள் மரணத்தின் நிழல் தெரிந்தது.

தன் முகம் எதிரே குனிந்து பார்க்கும் பூலானை, அந்தக் கடைசி நொடியிலும் அடையாளம் காண அவன் கண்கள் விரும்பின போன்று தெரிந்தது.

'அவனை அணு அணுவாகச் சித்திர வதை செய்து கொல்ல வேண்டும். நிர்வாணமாக்கி, கதறவைத்து ஓட, ஓட விரட்டிக் கொல்ல வேண்டும்' என்றுதான் பூலான் நினைத்துக்கொண்டு வந்தாள்.

அதற்கு சந்தர்ப்பம் கிட்டவில்லை. எங்கே அவன் முந்திக் கொள்வானோ என நினைத்து, மான் சிங் சுட்டுவிட்டான்.

தன்னை யார், என்று அறியாமல் அவன் செத்துப் போகக்கூடாது என்று பூலான் விரும்பினாள்.

"என்னைத் தெரிகிறதா? நான் தான்டா பூலான் தேவி. உன்னால் பொலிஸ் நிலையத்தில் நார்நாராகக் கிழிக்கப்பட்ட பூலானடா! இப்போது புலியாக வந்திருக்கிறேன்...!"

அவன் கண்கள் அகலவிரிந்தன. அச்சமா, ஆச்சரியமா, அதிர்ச்சியா என்று தெரியவில்லை.

அவன் உதடுகள் ஏதோ சொல்லத் துடித்தன. மன்னிப்புக் கேட்டு மன்றாட நினைத்தானா? தன்னைக் காப்பாற்றுமாறு கடைசிநேர உயிர் ஆசை உந்தித்தள்ளியதா? என்று புரியவில்லை.

ஆனால், இனியும் அவன் உடலில் தாமதிக்க முடியாத நிலையில், காக்கி உடைக்குள் இருந்த அந்த மிருகத்தைவிட்டு உயிர் வெளியேறியது.

அவன் மனைவியின் கதறல் அந்த வீட்டையே அதிரவைத்தது.

"ஏன் இந்தக் கொடுமையைச் செய்தீர்கள்?" என்று அவன் மனைவி பூலானைப் பார்த்து புலம்பினாள்.

பூலானுக்கு அவளைப் பார்த்தபோது சிறிது இரக்கம் ஏற்பட்டது.

ஒன்றுமே புரியாமல் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்த இரண்டு பிள்ளைகளையும் பார்த்தபோது இரக்கம் மேலும் அதிகமானது.

இரண்டுபேரில் ஒன்று பெண்பிள்ளை அதன் அருகே சென்று, அதன் கையைப் பிடித்துக் கொண்டு பூலான் பேசினாள்:

"இது உன் பிள்ளை தானே? இவளை கொடுமைப் படுத்தினால் நாசப்படுத்தினால் என்னாகும்? என் ஆட்களிடம் சொல்லிவிடவா?"

"ஐ...ய்...யோ... வேண்டாம் அம்மா... என் பிள்ளையை ஒன்றும் பண்ணாதீங்கம்மா!" பொலிஸ் அதிகாரியின் மனைவி பூலானின் பாதங்களை கண்ணீரால் கழுவினாள்.

"உன்னை மாதிரித்தான் என் அம்மாவும், அப்பாவும் கத்தினார்கள். மன்றாடினார்கள். யார் கேட்டார்கள்? எந்த நாயின் காதிலும் கேட்கவில்லையே! உன் புருசன் மனுசனேயல்ல- சதை தின்னும் நாய். அவனை இந்தளவில் விட்டதே பெரிது. அங்கம் அங்கமாய் வெட்டிக் கொன்றிருக்க வேண்டும் தூ..."

உடல் மீது காறி உமிழ்ந்து விட்டு பூலான் வெளியேறினாள்.

பொலிஸ் அதிகாரியின் மனைவி சட்டென்று அழுகையை நிறுத்தினாள்.

தன் பிள்ளைகளை அணைத்துக் கொண்டாள்.

அவளுக்கு இப்போது பூலானில் எவ்வித



கோபமும் இல்லை. வாய் பிளந்தபடி செத்துக் கிடக்கும் தன் புருசன்மேல்தான் கோபம் கோபமாக வந்தது.

"சிறை அதிகாரி படுகொலை! பொலிஸ் அதிகாரி கொலை!"

"கொள்ளை ராணி பூலான் தேவியின் இராஜாங்கம் விரிகிறது!"

"ஒரு பெண்ணைக் கண்டு பொலிசார் ஓடுகிறார்கள். ஓடி ஒளிக்கிறார்கள்!"

"பழிவாங்கும் புலியாக பூலான்தேவி பழிதீர்த்து வருகிறாள்!"

பத்திரிகைகள் எல்லாம் பூலான் புராணம் பாடின.

பொலிஸ்காரர்களுக்கு பெரும் அவமானமாகிவிட்டது.

பூலானைப் பிடித்தே தீருவது என்று சபதம் எடுத்தபோது, கொள்ளைக் கோஷ்டிகளுக்கு எதிரான தேடுதல் வேட்டைகளை முன்னெப்போதும் இல்லாதளவுக்கு முடுக்கி விட்டனர்.

"ஒரு மாதத்துக்குள் பூலானை உயிருடனோ அல்லது பிணமாகவோ சம்பல் பள்ளத்தாக்கில் இருந்து வெளியே கொண்டு வருவோம்!" என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் பேட்டி கொடுத்தார்.

உண்மையில் பொலிசார் தீவிர வேட்டைதான் நடத்தத் தொடங்கினர்.

பூலான் கோஷ்டியை தேடும் பொலிசாரின் வேட்டையில் ஏனைய கொள்ளைக் கோஷ்டிகளைச் சேர்ந்த பலர் சிக்கினார்கள்.

பூலானுக்கு விரித்த வலையில் சிறு கொள்ளைக் குழுத் தலைவர்கள் பலர் விழுந்தனர்.

அதனால் கொள்ளைக் கோஷ்டிகள் பலவற்றுக்கு பூலான் தேவிமீதும், அவள் ஆட்கள்மீதும் கோபம் ஏற்பட்டது.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் நேரடிப் பணிப்பின் பிரகாரம் பல ஆயிரம் பொலிசார் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர்.

காடுகள், கணவாய்கள் என்று கொள்ளைக் கோஷ்டிகள் நடமாடும் பகுதிகள் எங்கும் பொலிசாரின் கண்காணிப்பு அதிகமாயிற்று.

எங்கும் சல்லடை போட்டுத் தேடத் தொடங்கினார்கள்.

"சிறை அதிகாரியையும், பொலிஸ் அதிகாரியையும் கொல்வதற்கு இத்தனை அவசரப்பட்டது சரியல்லை; அடுத்தடுத்து கொன்றிக்க வேண்டாம்!" என்றார் பாபா.

பாபா தலைமையில் பூலான் உட்பட கொள்ளைக் கோஷ்டித் தலைவர்கள் பலர் அவசரமாகக் கூடியிருந்தனர்.

பூலானைப் பற்றி அவள் முகம் எதிரே குறை சொல்ல பாபாவைத் தவிர வேறு யாருக்கும் தைரியம் இருக்கவில்லை.

முன்னர் ஒரு தடவை பூலானை இவர்களிடம் பாபா அறிமுகப்படுத்திய போது, 'இந்தப் பெண் பெரிதாக என்ன சாதிக்கப் போகிறாள்?' என்ற சந்தேகம் அவர்கள் பார்வையில் இருந்தது.

இப்போது பூலானை அவர்கள் பார்த்த பார்வையில் அச்சம்தான் இருந்தது.

பாபாவுடன் தனிமையில் உரையாடிய போது பூலானை எதிர்த்துக் கருத்துக் கூறியவர்கள், பூலான் முன்பாக அடக்கமாக இருந்ததையும் பாபா கவனிக்கத் தவறவில்லை.

எவருமே பூலானை குறைகூறத் தயங்கியதால் பாபா தானாகவே பூலானை கண்டித்தார்.

பூலான் நேரடியாக விளக்கம் சொல்லாமல், "நடந்தது நடந்துவிட்டது, இனி என்ன செய்யவேண்டுமோ அதனைத்தான் யோசிக்க வேண்டும்!" என்றாள்.

தான் செய்த காரியம் தவறு என்று பூலான் வருந்தவில்லை. ஆனால் வாதம் செய்யவும் விரும்பவில்லை என்பது பாபாவுக்குப் புரிந்தது.

நீண்டநேர கலந்தாலோசனையின் பின்னர் பாபா தனது முடிவை அறிவித்தார்.

"எங்கள் ஆயுதங்களை பத்திரமான இடங்களில் மறைத்து வைத்துவிட்டு, சில காலத்திற்கு சகல நடவடிக்கைகளையும் நிறுத்தி வைப்போம். வேறு எங்காவது சென்றுவிட்டு, பொலிஸார் ஓய்ந்த பின்னர் திரும்பவும் ஒன்று கூடுவோம். மறுபடியும் ஆரம்பிக்கலாம்!" என்றார் ப்பாபா.

பூலானுக்கு அந்த முடிவில் இணக்கம் ஏற்படவில்லை.

"பொலிஸாருக்குப் பயந்து ஓடவேண்டுமா?" என்று முணுமுணுத்தாள். அருகில் இருந்த மான் சிங் அவள் கையை அழுத்தினான். 'பேசாமல் இரு' என்று அர்த்தம்.

பாபாவின் பேச்சுக்கு மறுவார்த்தை ஏது? அதுமட்டுமன்றி பொலிசாரிடம் இருந்து தப்ப வேறு மார்க்கமும் இருக்கவில்லை.

கூட்டம் கலைந்தபின்னர் பூலானை தனியாக அழைத்த பாபா தன்முடிவுக்கான காரணத்தை விளக்கினார்.

பூலானுக்கு துணையாக இன்னொரு கொள்ளைக் கோஷ்டி தலைவனான பல்வான் சிங்கின் காதலி மீரா என்பவளை அனுப்ப பாபா முடிவு செய்தார்.

மறுநாள் காலையில் பூலான் புறப்பட வேண்டி இருந்தது. அன்றிரவு பூலானுக்கு மட்டுமல்ல, மான் சிங்குக்கும் தூக்கம் வரவில்லை.

மான் சிங்கின் அருகே சென்று பூலான் அமர்ந்து கொண்டாள்.

இருவருக்குமே பிரிவை நினைக்கும் போதுதான், தங்களுக்கிடையே தங்களையும் அறியாமல் இறுக்கமாகிவிட்ட பந்தம் புரிந்தது.

"மான் சிங்!" என்று அழைத்தாள் பூலான்.

அவன் கண்கள் கலங்கியிருந்தன: அவர்கள் இருந்த இடத்தில் குப்பி விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

விளக்கை ஊதி அணைத்தாள் பூலான். கூடவே மான் சிங்கையும் அணைத்துக் கொண்டாள்.

(தொடர்ந்து வரும்)

---

## உருளுகிறது கிளின்ரன் தலை

அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன்மீது பவலா ஜோன்ஸ் என்னும் பெண் பாலியல் பலாத்கார முயற்சி பற்றித் தொடுத்த வழக்கு தள்ளுபடியாகக்கூடும்.

1997ம் ஆண்டு கிளின்ரனின் அந்தரங்கச்



செயலாளராக பவலா இருந்தார். அப்போது அவரை செக்ஸ் தொடர்புக்கு கிளின்ரன் அழைத்தார் என்பதுதான் குற்றச்சாட்டு.

கிளின்ரனின் விருப்பத்திற்கு ஒத்துழைப்புக் கொடுக்காமையால் தனக்கு வரவேண்டிய பதவி உயர்வும், சம்பள உயர்வும் இரத்துச் செய்யப்பட்டன. அதற்கான நஷ்டஈட்டை கிளின்ரன் தரவேண்டும், என்று கேட்கிறார் பவலா ஜோன்ஸ்.

இக்குற்றச்சாட்டை கிளின்ரன் பலமாக மறுத்திருக்கிறார். வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறு கோரியிருக்கிறார். இதற்கிடையே டோலி கேல் என்னும் பெண்மணி தொடுத்துள்ள புகாரும் அமெரிக்கர்களால் சுவையாக மெல்லப்படுகிறது:

"முப்பது வருடங்களாக கிளின்ரனுடன் தொடர்பு வைத்திருக்கிறேன். அவரது அங்க அடையாளங்களை விலாவாரியாக ஒப்புவிக்கத் தயார்," என்கிறார் டோலி.

"டோலிக்கு 49 வயது. பயங்கரமான செக்ஸ் பைத்தியம். அதனைக் கட்டுப்படுத்த தனியான சிகிச்சை பெற்றிருக்கிறார். எனவே டோலி சொல்வதை நம்புவதற்கில்லை," என்கிறார்கள் கிளின்ரன் தரப்பு சட்டத்தரணிகள். எப்படியோ அடிக்கடி 'செக்ஸ்' புகார்களில் கிளின்ரனின் தலை உருளுகிறது.

---

## முட்டாளாக ஆசையில்லை வாக்களிக்க விருப்பமில்லை

இந்தியப் பொதுத் தேர்தலில் பாரதிய ஜனதா முதலிடத்திலும் இந்திரா காங்கிரஸ் இரண்டாம் இடத்திலும் வரும் என்று கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. கடந்த தேர்தலில் இரண்டாம் இடத்தைத் கைப்பற்றிய ஐக்கிய முன்னணி மூன்றாம் இடத்திற்கு தள்ளப்படப் போகிறது.



எப்படியாகிலும், இத் தேர்தலில் கடந்த தேர்தல்களைவிட வாக்களிப்போர் எண்ணிக்கை பெரிதும் குறைவடையும் என்றும் கருத்துக் கணிப்புக்கள் கூறியுள்ளன.

அரசியல்வாதிகள் தங்களை முட்டாள்களாக்க நினைக்கிறார்கள். என்பதால், வாக்காளர்கள் மிகுந்த கோபத்தில் உள்ளனராம்.

சகல அரசியல்வாதிகளும் ஒரே ரகத்தினராக இருப்பதால், யாருக்கு வாக்களிப்பது என்பதிலும் குழப்பம் நிலவுகிறது. அடுத்தடுத்து தேர்தல்கள் வருவதும், பிரசார ஆரவாரங்களால் பணத்தை விரயமாக்குவதும் மத்திய தர வாக்காளர்களிடம் அதிருப்திகளை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டணி ஆட்சியில் ஏற்பட்ட தகராறுகளும், பதவிச் சண்டைகளும் வாக்காளர்களை எரிச்சல்படுத்தி உள்ளன. இந்நிலையில் வாக்களித்து முட்டாள்களாவதைவிட, வாக்களிக்காமல் இருப்பதே புத்திசாலித்தனம், என்று வாக்காளர்களில் ஒரு சாரார் கருதுவதாகக் கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன!

---

## கார்டூனால் ஆபத்து

ஜப்பான் குழந்தைகள் 311 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். அத்தனை பேரும் தொலைக்காட்சியில் கார்டூன் படம் பார்த்தவர்கள் என்பதுதான் அதிர்ச்சியான சமாச்சாரம்.

ஜப்பான் ரி.வி.யில் குழந்தைகளுக்கான கார்டூன் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. அதில் பிரபலமானது 'பொக்கெட் மொன்ஸ்டர்'. ஜப்பானில் உள்ள 37 ரி.வி. நிலையங்கள் இதனை ஒளிபரப்புகின்றன. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இக்கார்டூன் படம் ஒளிரப்பாகிவருகிறது.



மூன்று முதல் 20 வயதுக்குட்பட்டோர் இந்த நிகழ்ச்சியை விரும்பிப் பார்க்கின்றனர். பல மணி நேரம் அவ்வாறு தொடர்ந்து பார்ப்பதால் கண்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

காரணம் என்ன? பொதுவாகவே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை விடாமல் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பது கண்களுக்குக் கேடுதான்.

ஆனால் 'பொக்கெட் மொன்ஸ்டர்' கார்டூன் படத்தில் தோன்றும் கார்டூன் பாத்திரங்களின் கண்கள் அதிகப்படியான பளிச்சிடும் ஒளியைப் பீச்சி அடிக்கின்றனவாம். அதனால்தான் குழந்தைகளுக்கு கண்பார்வை பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. நம்நாட்டிலும் கண்டபடி தொடர்ந்து காட்டூன் பார்க்கும் குழந்தைகளை சற்று கட்டுப்படுத்தி வைப்பது நல்லது.

---

## பெண்களுக்கு மரண தண்டனை!

அமெரிக்காவில் 47 பெண்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு குற்றங்களுக்காக விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்றுவதில் தடைகள் ஏற்பட்டுள்ளன.



பெண்களுக்கு மரண தண்டனை விதிக்கக் கூடாது என்று அமெரிக்கர்கள் பலர் குரல் கொடுக்கின்றனர். அதனால்தான் தண்டனையை நிறைவேற்றுவதில் தயக்கம் ஏற்பட்டுள்ளது.

1863ம் ஆண்டுதான் அமெரிக்காவில் முதன் முதலாக பெண் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவர் செய்த குற்றம் குதிரை திருடியது.

அதன்பின்னர் பல பெண்கள் மரண தண்டனை பெற்றுள்ளனர். எனினும் தற்போதுதான் பெண்களுக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது என்று எதிர்ப்புக் கிளம்பி இருக்கிறது.

சமீபத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பெண்களில் ஒருவர் கர்லா டக்கர். ஒருவனை கத்தியால் குத்தி கொன்றதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது.

சிறையில் கிறிஸ்தவ மதத்தில் ஆர்வம் காட்டத் தொடங்கினார் கர்லா டக்கர். அச் செய்தி புகைப்படங்களுடன் பத்திரிகைகளிலும் வெளியானது. "கர்லா டக்கர் மனம் திருந்திவிட்டார். அவரைத் தண்டிக்கக்கூடாது. மன்னிப்பு வழங்க வேண்டும்" என்று பல குரல்கள் எழுந்துள்ளன. முடியைத் பிய்த்துக் கொண்டிருக்கிறது அரசாங்கம்.

---

## அடுத்த வீட்டுப் பெண்

அடுத்த வீட்டில் என்ன சங்கதி என்று ஆராயாவிட்டால் சிலருக்கு மண்டையே வெடித்து விடும். அப்படிப்பட்ட ஆசாமி ஒருத்தர் சமீபத்தில் மாட்டிக் கொண்டார்.



பக்கத்து வீட்டு கல்லூரி மாணவி தன் ஆண் நண்பருடன் ஜாலியாக இருந்த காட்சியை பல நாட்களாகப் பார்த்தாராம். அந்த மாணவியும் விவஸ்தையே இல்லாமல் ஜன்னலை எல்லாம் திறந்து வைத்துக் கொண்டு நண்பனுடன் ஜாலியாக இருந்தாளாம்.

அடிக்கடி கண்ணாரக் கண்ட காட்சியை ஒருநாள் கமரா கொண்டு படமாக்கிவிட்டார் ஜேம்ஸ் பிரவுண். பிலிம் சுருளை ஸ்ருடியோ ஒன்றில் கொடுத்தார்.

அங்குதான் வம்பு வந்தது. புகைப்படங்களை பார்த்த ஸ்ருடியோக்காரர் பொலிசுக்கு புகார் கொடுத்தார். ஜேம்ஸ் பிரவுண் மாட்டினார்.

நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. "குடியிருப்புக்கள் மத்தியில் இப்படி நடப்பதைத் தடுக்கவும், அம்பலப்படுத்தவுமே படம் எடுத்தேன்!" என்றார் ஜேம்ஸ் பிரவுண்.

"எங்கள் தனிப்பட்ட விவகாரத்தில் தலையிட இவர் யார்?" என்று கேட்டாள் மாணவி.

மாணவிக்கு சார்பாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு அபராதம் கட்டிவிட்டுத் திரும்பினார் 43 வயதான ஜேம்ஸ் பிரவுண்.



படிப்பகம்

www.padippakam.com

## சாதனைச் சோத்தி



## தேனீத் தாடி

→ எந்தக் தாடிக்காரரும் இந்தத் தாடிக்காரருடன் போட்டிக்கு நிற்க முடியாது. இது சுவையான தாடி. இனிப்பான தாடி.

பொதுவாக தேனீக்கள் மனிதரைக் கொட்டி வேதனைப் படுத்தும் என்பார்கள். இந்த மனிதரின் முகத்தில் இலட்சக் கணக்கில் தேனீக்கள் மொய்த்துக் கிடக்கின்றன. இவருடைய தலைத் தொப்பி முதல் நாடி வரை தேனீக்களை மொய்க்க விட்டுள்ளார்.

தேனீக்கள் மனிதர்களுடன் நெருக்கமாகப் பழகக் கூடியவை அவற்றைத் துன்புறுத்த நினைப்பவரைத்தான் விஷக் கொடுக்கால் கொட்டும்.

வாத நோய்களைக் குணப்படுத்த மருத்துவர்கள் உடலின் குறிப்பிட்ட பகுதிகளில் தேனீக்களைக் கொட்ட விட்டுப் பரிகாரம் தேடுவார்கள்.

இப்படத்தில் காணப்படும் தேனீக்களின் நண்பர் அமெரிக்காவில் ஒகையோ மாநிலத்தைச் சொந்த சின்சினாட்டியில் வசித்து வந்த ஃபிராங்க போர்ண் ஹொஃபர். 1924ம் ஆண்டு ஜூன் மாதம் இப்படம் பிடிக்கப்பட்டது.

உலகில் அதிக தேனீக்களுக்கு தாடியில் குடியிருக்க இடம்கொடுத்தவர் என்ற பெருமைக்கு இன்றுவரை இவர்தான் சொந்தக்காரர். முல்லைக்கு தேர் கொடுத்தான் பாரி. இவர் தேனீக்கு தாடி கொடுத்தார்.




↑ காய் கனிகள், தாவரங்கள் ஆகியவற்றை மிகப் பருமனாகவும் உயரமாகவும் வளர்த்துச் சாதனை புரிவதில் பல தோட்டக்காரர்கள் முயன்று வருகின்றனர்.

இங்கிலாந்தின் சவுத்வேல்ஸ்- லான்ஹரி எனும் இடத்தைச் சேர்ந்த பேர்னாட் லவேரி என்பவர் தனது பண்ணையில் தரை இனத் தாவரம் ஒன்றினை வளர்த்தார். பட்டை, நார் எதுவுமேயில்லாம் வெறும் சோத்தியாகவே வளர்ந்த இத் தாவரத்தின் சோத்தியின் எடை 49.04 கிலோ கிராம்- (108 இறாத்தல் 2 அவுன்ஸ்) ஆகும்.

ஒன்றுக்கும் உதவாத காய்தான் 'சோத்தி' என்று அழைக்கப்படும். ஆனால் இந்தச் சோத்தி வழக்கத்தைவிட பெரிதாக வளர்ந்ததால் உலக சாதனை படைத்துவிட்டது. தோட்டக்காரரையும் புகழ்பெற வைத்துவிட்டது. சோத்தியையும் அசத்தலாக்கலாம், முயற்சி செய்தால்! (ஆனால் மக்களையும் சோத்தியாக்க முற்படும் கட்சிகளை என்ன செய்யலாம்?)

## தொங்கு மனிதர்கள்



↙ அசத்தலான உலக சாதனைச் சாகசம். பாரம் தூக்கப் பயன்படும் கிறேனின் மூலம் அந்தரத்தில் தொங்குகின்றனர். 16 சாகசக்காரர்கள்.

அதி உச்சத்தில் தொங்கும் 16 பேரில் ஒருவர் தவறி விழுந்தால் கூட எழும்புக்களைத் தேடவேண்டியிருக்கும்.

இந்த சாகசக் காட்சியை இங்கிலாந்தின் சுறோ மாநிலத்தைச் சேர்ந்த சர்க்கஸ் குழுவினர் ஜெர்மனியின் முனிச் நகரில் செய்து காட்டினார்கள். மரணத்துடன் விளையாடும் சாகசங்களை செய்வதில் பெயர் பெற்றவர்கள் இந்தச் சர்க்கஸ் குழுவினர்.

பி.குறிப்பு:
அரசின் தயவில் தொங்கி நின்றபடி யாழ்ப்பாண எலக்ஷனில் சாகசம் காட்டும் நம் கட்சிகளும் உலக சாதனைக்கு விண்ணப்பித்துப் பார்க்கலாம்.




↓ நங்கையர் தம் சின்ன இடை அசைத்து ஆடுவதே அழகு. அதிலும் வித்தியாசமாக ஆடினால் காணக்கண் ஒரு கோடி போதாது.

படத்தில் காணப்படுவதும் வித்தியாச உலக சாதனை நடனம் தான். ஒரே வரிசையில் மிக அதிகமானோர் கலந்துகொண்ட நடனம் என்று கின்னஸில் பொறிக்கப்பட்ட நடனம் இது. மொத்தம் 332 பேர் ஒரே வரிசையில் நின்று குழு நடனம் ஆடினார்கள். 1983 செப்டம்பர் 29ம் திகதி பிரிட்டனில் இந்த உலக சாதனை படைக்கப்பட்டது. 'ஏ கோரஸ் லைன்' என்பது இந்த நிகழ்ச்சியின் பெயர்.

இந்தக் குழு நடனம் குளு குளு நடனமாக பார்வையாளர்களையும் கவர்ந்தது.

## நீளமான ஆட்டம்



## தகவல் பெட்டி

## தாங்காது ராசா

↑ எங்கே, எதிலே, யார் எவர் ஏறி விளையாடுவது என்று ஒரு விவஸ்தையே இல்லையா?

சாதாரண மனிதர்களுக்காக தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் இந்த மனித மலைகளை எப்படித்தான் தாங்கிக் கொள்கிறதோ?

இரு மலைகளும் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். ஒருவர் பெயர் பில்லி லியோன். மற்றவர் பென்னி லொமிட். மல்யுத்த வீரர்கள்.

இவர்களது எடை என்ன தெரியுமா? 349 கிலோ கிராம்! இடை அளவு மட்டும் 7 அடி விட்டம். இவர்கள் எந்தக் கடையிலே ட்ரவுசர் வாங்குவார்கள்? சொல்லித்தான் தைக்க வேண்டும்.

ஒரு சோகமான செய்தி; முதலில் அமர்ந்திருக்கும் பில்லி லியோன் இப்போது உயிருடன் இல்லை. 1979 ஜூலை 13ல் நயகரா நீர்விழ்ச்சியில் தவறி விழ்ந்தவர் வீழ்ந்தவர்தான். திரும்ப வரவே இல்லை.


படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 37

# காதல் இளவரசனை கட்டுப்படுத்தலாமா?

## எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்ட கோபம்

மூன்றெழுத்தில் சுருக்கமாக அழைக்கப்படும் முன்னணி நடிகர் அவர். நடிக்க வந்த புதிதில் மிக இளமையாக இருந்தார். சிறு வயதில் இருந்தே நடித்திருந்தாலும், குமரனான பின்னர் உடற்பயிற்சிகள் செய்து உடம்பைக் கச்சிதமாக வைத்திருந்தார்.

காதல் இளவரசனாக இரசிகைகள் மத்தியில் பெயரெடுத்தார். கல்லூரி மாணவிகள் பலரது நோட்டுப் புத்தகங்களில் காதல் இளவரசனின் படம் ஒளிந்து கொண்டிருக்கும்.

ஆரம்பகாலப் படங்களில் அவரது உடம்பையும் காண்பித்தனர் இயக்குநர்கள். நடனத்திலும் தூள் கிளப்பிக் கொண்டிருந்தார்.

அவர்மீது வித்யமான நடிகைக்கு மயக்கம் ஏற்பட்டது. படிப்படியாக தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். நடிகரும் 'அந்த விஷயங்களில்' அப்போது தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார்.

பிற நடிகைகளோடு நடிகர் 'அந்த மாதிரிப்' பழகுவதையும் 'வித்ய' நடிகை கட்டுப்படுத்த நினைத்தார். நடிகருக்கு அது பிடிக்கவில்லை. எனினும் நடிகையின் வித்தியாசமான சில உபசரணைகள் காரணமாக அவரை நேரடியாக எதிர்க்காமல் அனுசரித்துப் போனார் நடிகர்.

பதினாறுவயது நடிகையுடனும் நடிகருக்கு நட்பு ஏற்பட்டது. இருவரும் தனியாகச் சந்தித்துக் கொள்கிறார்கள் என்பதை மோப்பம் பிடித்த வித்யமான நடிகை, 'தேவி' நடிகையை தனியாகச் சந்தித்து ஒரு பிடி பிடித்து விட்டார்.

இயல்பாகவே பயந்த சுபாவம் உள்ள 'தேவி' பொறிகலங்கிப் போனார். நடிகரைக் கண்டாலே ஒளியத் தொடங்கினார்.

'தேவி'யின் மனதைக் கெடுத்தது வித்ய நடிகைதான் என்பது காதல் இளவரசனுக்கு தெரியவந்தபோது, 'வித்ய' நடிகையுடன் தன் தொடர்பை துண்டித்தார்.

'வித்ய' நடிகை இடிந்துபோனார். தன்னைத்தான் கல்யாணம் செய்யப்போகிறார் என்று நினைத்திருந்தவரின் நம்பிக்கையில் இடி விழுந்தது.

எல்லாம் சில காலத்திற்கு மட்டும்தான். பின்னர் வித்ய நடிகை வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டார். சில கால மனக்கசப்பின் பின்னர் காதல் இளவரசனுடன் நட்பை புதிதாக்கியும் கொண்டார்.

### எம்.ஜி.ஆர். கோபம்.

நடிகர் கமலஹாசன் தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு பேட்டியளித்திருந்தார். அப்போது தமிழக முதல்வராக இருந்தவர் எம்.ஜி.ஆர்.

கமல் தனது பேட்டியில், "நாங்கள் எல்லாம் இன்று 'டூப்' போடாமல் கஷ்டப்பட்டு சண்டைக் காட்சிகளில் நடிக்கிறோம். முன்பெல்லாம் இப்படி சிரமம் எடுத்துக்கொள்ள மாட்டார்கள்." என்று கூறியதாக பிரசுரமாகியிருந்தது.

சினிமாவை விட்டு அரசியலுக்குப் போனாலும்கூட, சினிமா உலகை கண்காணித்துக் கொண்டிருந்தவர் எம்.ஜி.ஆர்.

குறிப்பிட்ட சஞ்சிகையில் வெளியான கமலின் பேட்டி எம்.ஜி.ஆரின் கவனத்திற்குச் சென்றது.

கமலுக்கு தானே நேரடியாக ஃபோன் செய்தார் எம்.ஜி.ஆர்.

"நீங்கள் எல்லாம் வீரர்கள். நாங்கள் எல்லாம் சும்மா... அப்படித்தானே?" கேட்டுவிட்டு ஃபோனை வைத்துவிட்டார். வேறு எதுவும் பேசவில்லை. கமல் பதில் சொல்லவும் வாய்ப்பளிக்கவில்லை.

கமல் பதறிப்போனார். தான் சொல்லாத கருத்தை பிரசுரித்து விட்டார்கள் என்பதை விளக்க ராமாவரம் தோட்டத்திற்கு ஓடினார். எம்.ஜி.ஆர். சந்திக்கவில்லை. பின்னர் கோட்டைக்குச் சென்று எம்.ஜி.ஆரைக்காண முயன்றார். எம்.ஜி.ஆர் அப்போதும் கமலைப் பார்க்கப் பிரியப்படவில்லை.

குறிப்பிட்ட சஞ்சிகைக்கு காட்டமாக மறுப்பு எழுதிப்போட்டார் கமல். மறுப்பும் வெளியானது.

அந்த மறுப்புடன் சென்று எம்.ஜி.ஆரைப் பார்க்கலாம் என்று கமல் நினைத்திருந்தார்.

கமலே எதிர்பாராதவகையில், எம்.ஜி.ஆரிடமிருந்து ஃபோன் அன்போடும், பரிவோடும் எம்.ஜி. ஆரின் குரல் ஒலித்தது.

அதுதான் எம்.ஜி.ஆர். கமலுக்கு அப்போதுதான் நிம்மதி.

| முகப்பில் | |
|---|---|
| மீனா | கரண் |





## தேடுகிறார் மீனா

வயதான ஹீரோக்களோடு நடித்தது போதும், அப்பாஸ், அஜித், விஜய் போன்ற இளம் ஹீரோக்களோடு நடித்தால் தான் சரிப்பட்டுவரும். இல்லாவிட்டால் எனக்கும் வயதாகி விட்டது என்று நினைப்பார்கள் என்கிறார் மீனா.

இதே மீனாதான் முன்னர் விஜய் போன்ற சின்னப் பையன்களோடு நடிக்கமாட்டேன் என்று அடம் பிடித்தவர். அப்போது ரஜினியின் சிபாரிசு காரணமாக அடுத்தடுத்து அவரது ஜோடியாக நடித்தார்.இப்போது ரஜினியின் வாய்ப்புக்கள் இல்லை என்பதால் இளம் ஹீரோக்களை தேடுகிறார்.

## நீண்ட பயணம்

'இசைப் பயணம்' என்றொரு படம் பற்றி சினிவிசிட்டில் செய்திகளும், படங்களும் வெளியாகின. பார்த்திருப்பீர்கள். இலங்கை நடிகைகளும் முழுத் திறமையைக் காட்டி கவர்ச்சிக் குலுக்கல் நடத்திய படம்.

என்ன இழவோ தெரியவில்லை பல வருடங்களாகியும் படத்தை ஒப்பேற்றி முடிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். இசைப் பயணம் என்று பெயர் வைத்த ராசி, பயணம் நீண்டுகொண்டே போகிறது என்கிறார்கள்.

படத்தின் இயக்குநரான ஆதவன் இப்போது மறைமுகம்! என்ற தொலைக் காட்சித் தொடரை இயக்கி வருகிறார்.

## 'சொல்லாமலே'

'என் புருஷன் குழந்தை மாதிரி' படத்தை இயக்கி நடித்துவருகிறார் லிவிங்ஸ்டன். அப்படத்தை தயாரிக்கும் 'சூப்பர் குட்' பிலிம்சுக்காக லிவிங்ஸ்டன் நடிக்கும் இன்னொரு படம், 'சொல்லாமலே.' கதாநாயகி தேர்வு நடந்து வருகிறது.

கரண், விவேக், பாத்திமா பாபு, வையாபுரி ஆகியோரும் நடிக்கின்றனர். படத்தை இயக்குகிறார் சசி. இவர் புது இயக்குநர். பாபி என்ற பெயரில் புதிய இசையமைப்பாளரும் அறிமுகமாகிறார்.

## மனிஷா ஏன் மறுத்தார்?

பாரதிராஜாவின் மகன் மனோஜ் கதாநாயகனாக நடிக்க, மணிரத்னம் வசனத்தில், ரகுமான் இசையில், பாரதிராஜா இயக்கத்தில், ராஜீவ் மேனன் கதையில் உருவாகும் படம் 'தாஜ்மஹால்'. இது பழைய செய்தி.

மனோஜ் ஜோடியாக நடிக்க மனிஷா கொய்ராலாவை அணுகினார்களாம். மணிரத்னம் படமான பம்பாயில் நடித்தவர் என்பதால், தமிழ் பட ரசிகர்களுக்கு நன்கு தெரிந்தவர் மனிஷா. அதுதான் அவரை ஜோடியாகப் போட விரும்பினார்கள்.

ஆனால், மனிஷா தரப்பில் சாதகமான பதில் வரவில்லை. பாரதிராஜா படம் என்றதும்தான் மனிஷா நடிக்க மறுத்தாராம்.

'இந்தியன்' படத்தில் நடித்தபோது கமலுடன் மனிஷாவுக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. கமலுடன் பாரதிராஜா பகை என்பது தெரிந்த சமாச்சாரம்.

'காதலா, காதலா' படத்தில் மீனாவை நடிக்கவிடாமல் செய்தவர் பாரதிராஜா. அந்த விஷயமும் மனிஷாவுக்கு தெரியுமாம். அதுதான் தனக்குப் பிரியமான கமலுக்காக பாரதிராஜாவுக்கு 'நோ' சொல்லிவிட்டார் மனிஷா என்கிறார்கள்.

## 'ஜீன்ஸைத் தா'

இத்தாலி பைசா கோபுரம் முன்பாக 'ஜீன்ஸ்' படப்பிடிப்பு நடந்தபோது பிரசாந்திற்கு ஏற்பட்ட அனுபவம் திரிலானது.

பைசா கோபுரம் அருகே பிரசாந்த் உடை மாற்றிக் கொண்டிருந்தபோது ஓர் இத்தாலியப் பெண் அங்கே வந்தாளாம். பிரமாதமான அழகியாம்.

"படத்தின் பெயர் என்ன?" என்று கேட்டாளாம். "ஜீன்ஸ்" என்று பிரசாந்த் சொன்னதுதான் தாமதம், 'ஜீன்ஸ்' ஒன்று தந்தால்தான் இடத்தைக் காலி பண்ணுவேன் என்று அடம் பிடிக்க, 'ஜீன்ஸ்' ஒன்றை பரிசாகக் கொடுத்தாராம் பிரசாந்த்.

## வருத்த வேலு

வடிவேலுவுக்கு தினமும் பெண் ரசிகைகளின் கடிதங்கள் வருகிறதாம். அப்படியிருந்தும் ஒரு வருத்தம். கடிதங்களில் 'அண்ணே' என்று தான் அன்பொழுக அழைக்கிறார்கள். ஒன்றுகூட காதல் கடிதம் இல்லையாம். மனிதர் காய்ந்து போய்க் கிடக்கிறார்.

**சினிவிசிட்**




## ஹொட்ட...
## ...கையும் கள...

பாலச்சந்தரால் அறிமுகமாகி புகழ்பெற்றவ[r]...
கொண்டார்.

முகேஷ் சபலப்பேர்வழி. பல நடிகைகளுட...
படங்களில் நடித்த நடிகை வாணி விசுவநாத்...
பக்கம் போனவர். முகேஷின் வலையில் விழு...

இருவரது காதல் லீலைகளும் மலையாள...
சமீபத்தில் துபாய்க்கு நட்சத்திர கலைவிழ...
அவருடன் சரிதாவும் சென்றார். மறுநாள் ...
முகேஷ் குழுவினர் தங்கியிருந்த ஹொட...
தங்கினார்.

நட்சத்திர நிகழ்ச்சி முடிந்ததும் ச...
சென்றார். அதுதான் தருணம் என்று நி...
வாணியின் அறைக்குள் புகுந்தார். ஒரே ...
குளுவாம்.

சற்று நேரத்தில் திரும்பிவந்த ச...
தேடினார். சந்தேகப்பட்டு பக்கத்து ...
அங்கே அரைகுறை ஆடைகளுடன் ...
காதலியையும் கண்டார்.

இருவரும் திருதிருவென்று விழிக்க...
கூச்சலில் விவகாரம் ஹொட்டல் ...
தெரியவந்தது.

தங்கள் ஹொட்டலில் தப்பாக நடந்து...
காக பொலிசில் புகார் செய்தனராம். ...
இலட்சம் ரூபாய் தண்டம் கட்டிவிட்டு தி...
களாம். தற்போது மலையாளப் பட உலகில் ...
மாகப் பேசப்படும் விஷயம் அதுதான்.

சரிதா விரைவில் விவாகரத்து செய்ய...
என்றும் பேச்சு உண்டாம்.

## சபதத் தாடி

இயக்குநர் கே.பாலச்சந்தர் சமீபகாலமாக தாடி வளர்த்திருந்தார். அந்தத் தாடியின் பின்னால் ஒரு கதையே இருக்கிறதாம்.

தமிழ்த் திரைப்பட படைப்பாளிகள், தொழிலாளர்கள் கூட்டமைப்பு என்ற பெயரில் புதிய அமைப்பு தோன்றியதல்லவா. அதனை தோற்றுவித்தவர்களில் ஒருவர் பாலச்சந்தர்.

இந்த அமைப்பு பலமாகும்வரை தாடியை எடுப்பதில்லை என்று முடிவு செய்திருந்தாராம் பாலச்சந்தர். இப்போது அமைப்பு பலமாகிவிட்டதால் தாடிக்கு விடை கொடுத்துவிட்டார்.

## மிரட்டல்

மதுபாலாவின் புதிய காதலர் பெயர் ஆனந்த்ஷா.

இவர் 'மபத்லால் சூட்டிங்ஸ்' என்னும் பிரபலமான நிறுவனத்தைச் சேர்ந்தவர்.

மதுபாலாவும், ஆனந்தஷாவும் சரசமாகப் பழகுவதை அறிந்த ஆனந்தஷாவின் பெற்றோர்கள் மதுபாலாவிற்கு மறைமுக மிரட்டல் விடுத்துள்ளனராம்.

ரவி வர்மன் எழுதாத கலையோ?
ரவி தேவி வடிவான சிலையோ?
கவி ராஜன் எழுதாத கவிதையோ?
கரைபோட்டு நடக்காத நதியோ?
விழியோரச் சிறுபார்வை போதும்—நான்
விளையாடும் மைதானமாகும்!
இதழோரச் சிரிப்பொன்று போதும்—நான்
இளைப்பாறும் மலர்ப்பந்தலாகும்!
(வைரமுத்து)

www.padippakam.com



ஜெயராம்-மந்த்ரா
படம்:பெரிய இடத்து மாப்பிள்ளை

# மினி சினி

★ பஞ்சு அருணாசலம் தயாரிப்பில் வசந்த் இயக்கும் படத்திற்கு முதலில் 'ரொமான்ஸ்' என்று பெயர் வைக்கப்பட்டு பின்னர் 'பூவெல்லாம் கேட்டுப்பார்' என்று மாற்றப்பட்டது. தற்போது அதையும் மாற்றி 'தத்தித் தாவுது மனசு' என்று பெயரிட்டுள்ளார்கள்.

★ 'அதர்மம்', 'பகைவன்', 'தடயம்' ஆகிய மூன்று சண்டைப் படங்களை இயக்கி, வெற்றிப் பட இயக்குநராக வலம் வரும் ரமேஷ் கிருஷ்ணன், அடுத்து காதல் படம் ஒன்றை இயக்கவுள்ளார்.

★ தனது தந்தை பாரதிராஜா இயக்கும் 'தாஜ்மஹால்' படம் மூலம் அறிமுகமாகும் மனோஜ், இப்படம் முடிவடைந்ததும் அகத்தியன், சேரன் ஆகியோர் இயக்கும் படங்களில் நடிக்கவிருக்கிறார்.

★ இராம. நாராயணன் இயக்கும் நூறாவது படத்தில் விஜயகாந்த் கதாநாயகனாக நடிப்பார் என்பது பழைய செய்தி. இப்படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக நடிக்க இருப்பவர் கீர்த்தி ரெட்டி என்பது புதிய செய்தி.

★ தற்போது தெலுங்கில் நம்பவர் வன் இடத்தில் இருக்கும் நாகார்ஜுன் நடிக்கும் புதிய தெலுங்குப்படத்தின் பெயர் 'ஆட்டோ ட்ரைவர்'. இப்படத்தை இயக்குபவர் யார் தெரியுமா? சுரேஷ் கிருஷ்ணா.

★ சிவாஜி புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் 'வாய்ஜாலம்' படத்தில் நடித்து வரும் சின்னி ஜெயந்த் அடுத்து 'உனக்காக மட்டும்' என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இப்படத்தை சின்னி ஜெயந்தே இயக்கவுள்ளார்.

★ கடந்த வருடம் அதிகப் படங்களில் கதாநாயகனாக நடித்தவர் ராம்கி. கதாநாயகியாக நடித்தவர் ரம்பா. கடந்த வருடம் ராம்கி 7 படங்களிலும், ரம்பா 6 படங்களிலும் நடித்துள்ளார்கள்.

★ தமிழில் 'இனியெல்லாம் சுகமே', 'மனசுக்குள் வரலாமா', 'ஆசைத்தம்பி', 'ஜாலி' ஆகிய படங்களில் நடித்து வருகிறார் அப்பாஸ். இப்படங்களில் எல்லாம் அப்பாஸிற்குப் பின்னணிக் குரல் கொடுப்பவர் நடிகர் விக்ரம்.

★ கமலின் இந்தி 'அவ்வை சண்முகி' யான 'சாச்சி 420' அண்மையில் வெளியாகி உள்ளது. இப்போது 'காதலா காதலா' வில் முழுமூச்சாக நடித்து வரும் கமல், விரைவில் இந்தி 'மகளிர் மட்டும்' படமான 'லேடீஸ் ஒன்லி' படத்தை முடித்து வெளியிடவுள்ளார்.

★ என்.கே. விஸ்வநாதன் இயக்கும் 'விவரமான ஆளு' படத்தில் பார்த்திபனுக்கு ஜோடியாக ரோஜா நடிக்கவுள்ளார். ஏற்கனவே 'சரிகமபதநி' படத்தில் பார்த்திபனுக்கு ஜோடியாக ரோஜா நடித்துள்ளார்.

## தாராள ராமன்

'வள்ளி' படத்தில் அறிமுகமான பிரியா ராமனை மறந்திருக்க மாட்டீர்கள். சமீபத்தில் சூர்ய வம்சத்திலும் நடித்திருந்தார்.

"கதைக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் நடிக்க மாட்டேன். கதைக்கு முக்கியத்துவம் உள்ள படங்கள் வந்தால் மட்டும் சம்மதிப்பேன்" என்றெல்லாம் முன்னர் பந்தா காட்டினார்.

அம்மணியை தமிழ்ப்படவுலகம் கண்டு கொள்ளவில்லை. இப்போது தன் கொள்கையை கைகழுவி விட்டு, கவர்ச்சிக்கு ரெடியாகிவிட்டார் பிரியாராமன்.

'பொன்மனம்' படத்தில் அழகுகளை தரிசனமாக்கியிருக்கிறார். விதம் விதமான கவர்ச்சி உடைகளில் தோன்றுகிறார்.

அறிமுக காட்சியில் மட்டும் பதினாலு விதமான உடைகள். அத்தனையும் தாராளமான தரிசன ஆடைகள்.

## வித்தியாச பதில்

"எப்போது திருமணம்?" என்ற கேள்விக்கு ஒரே விதமாக பதில் சொல்லிச் சலித்துவிட்டார் மீனா. அதனால் இப்போது சற்றுவித்தியாசமாகப் பதில் சொல்கிறார்.

"இத்தனை நாள் என் வயதுக்கு மீறிய பாத்திரங்களில் நடித்து விட்டேன். இப்போதுதான் நான் விரும்பும் இளமையான பாத்திரங்கள் கிடைக்கின்றன. வயசுக்கு தகுந்த படி சாதித்துவிட்டு வருகிறேன்" என்கிறார்.

## வணக்கம்

நடிகர் பிரபு தன் காரில் அப்பா சிவாஜியின் படத்தை வைத்திருக்கிறார். காரில் ஏறியதும் தந்தையின் படத்தைத் தொட்டு வணங்கிவிட்டுத் தான் பயணத்தை ஆரம்பிப்பார். பிரபு அப்பா பிள்ளை.



கஸ்தூரி-நாகார்ஜுன்-ரம்பா கிருஷ்ணன்
படம்: அன்னமாச்சார்யா

## ரஜினி வருவாரா

தனது அடுத்த படத்தை தேர்தலின் பின்னர் எடுத்தால் என்னவென்று யோசித்து வருகிறார் ரஜினி.

நேபாளம் சென்ற ரஜினி சென்னைக்கு எப்போது வருவார் என்று தி.மு.க., த.மா.க. கட்சிகளின் கூட்டணி காத்திருக்கிறது.

ஜெயலலிதா அணியை முறியடிக்க ரஜினியின் பிரசார கசட் இருந்தால் நன்று என்று நினைக்கிறார் கலைஞர் கருணாநிதி.

ரஜினிக்கு பாரதிய ஜனதா தலைவர் அத்வானிமீதும் பிரியம். வாஜ்பேய்மீதும் அபிமானம். அதனால் இம்முறை ஒதுங்கி இருந்து வேடிக்கை பார்க்கவே நினைக்கிறார்.

அதனால் தேர்தல் காலத்தில் வெளிநாடுகளில் ஓய்வாக இருந்துவிடலாமா என்று யோசிக்கிறாராம். எனவே அடுத்த பட ஏற்பாடுகள் தள்ளிப் போகக்கூடும் என்கிறார்கள்.

## சமரசம்

கார்த்திக்கின் கிளு கிளு தாவல்களுக்கு தடைபோட முடியாமல் தாய் வீடு சென்றார் மனைவி ராகினி. எப்படியோ சமாதானம் பண்ணி திரும்ப அழைத்து வந்துவிட்டாராம்.

சென்னையில் புதுவீடு ஒன்றும் வாங்கி குடிபுகுந்துள்ளார் கார்த்திக். ஆனாலும் தாவல்கள் மட்டும் ஓய்ந்ததாகத் தெரியவில்லை.

## ...ில் கலாட்டா!
## ...மாக மாட்டினர்

...நா. மலையாள நடிகர் முகேஷை காதலித்து திருமணம் செய்து

...தொடர்பு வைத்துள்ளவர். 'பூந்தோட்டக் காவல்காரன்' போன்ற
...ில் வாய்ப்பில்லாமல் மலையாளப்
... வாணி விசுவநாத்.
...வுலகில் பரகசியம்.
...த்தச் சென்றார் முகேஷ்.
...யும் துபாய் சென்று,
... ரும் எடுத்து

...ஷொப்பிங்
...து முகேஷ்
...கிளு. குளு

...கணவரை
...யத் தட்ட,
...வரையும்,

...ா போட்ட
...த்திற்கும்

...டதற்
...கால்
...ார்
...ய



அஜித்குமார்-கஞ்சன்
படம்:காதல் புத்தகம்

## காதோடு சொல்லுகிறோம்

அம்பிக நடிகை பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்துப் பிடித்து வாய்ப்புக் கேட்டும் திருப்தியான 'சான்ஸ்' இல்லை. இப்போது தெலுங்குப் பக்கம் இடம்பெயர்ந்திருக்கிறார். அம்மா வேசம் கொடுத்தாலும் கலக்கிக் காட்டுகிறேன் என்கிறாம். தெலுங்கில் முன்னர் கைக்குள் போட்டு வைத்திருந்த சில இயக்குநர்களை துரத்திக் கொண்டிருக்கிறார்.

தேவதை நடிகைமீது இளைய திலக நடிகர் பிரேமை கொண்டிருக்கிறாராம். யாருக்கும் இலகுவில் மசியாத தேவதை பெரிய வீட்டுப் பிள்ளையுடன் குஜாலாகப் பழகுகிறார். பூ நடிகை, மந்திர நடிகை, என்று நீண்ட பட்டியலில் இப்போது தேவதைக்கும் இடம் கொடுத்திருக்கிறார் இளையதிலகம்.

இளைய திலகம்மீது பெரிய திலகத்திற்கு மனத்தாங்கல். இளமை இருக்கும்போது அனுபவிக்கணும். தப்பில்லை. அதற்கு முன்னாலே செய்யும் தொழிலில் முத்திரை பதிக்கணும். நாம அப்படித்தானே பண்ணினோம் என்று தன் நெருங்கிய நண்பர்களிடம் கூறி வருத்தப்படுகிறாராம். அதனால்தான் மூன்றெழுத்து ஹாசனை தன் பிள்ளைகளைவிட உசத்தி என்று பகிரங்கமாகவே பாராட்டிப் பேசினாராம் பெரிய திலகம்.

ரம்ய நடிகை தனக்கேற்ற கிருஷ்ணர்களை தெலுங்கில் தேடித் தோற்றுப் போனார். "எல்லோருமே ஏமாற்றிவிட்டார்கள். என் கள்ளம் கபடமில்லாத மனம் காரணமாக யாரையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல் அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் இழுபட்டுப் போனேன்" என்று மும்பாய் சஞ்சிகை நிருபர் ஒருவரிடம் குமுறினாராம். ஒட்டியிருந்த இயக்குநரும் வெட்டிக் கொண்டதில் 'அப்செட்'டாக இருக்கிறார் ரம்யம்.

ஜெயமான ராம நடிகரின் கடுமையான சிபாரிசால் மலையாளத்தில் இரண்டு படங்கள் மந்திர நடிகைக்கு கிடைத்துள்ளன. அதற்கு நன்றிக்கடனாக ஜெயமான ராமருடன் கேரளா கடற்கரைப் பக்கம் காணப்பட்டாராம் மந்திர நடிகை.

## சௌந்தர்யா ஓரம்போ

'காதலா காதலா'வில் கமலுடன் ஒட்டிக் கொண்டார் சௌந்தர்யா. அவரை இனி மேல் தங்கள் படங்களுக்கு பயன்படுத்துவதில்லை என்று முடிவு செய்துவிட்டனர் படைப்பாளிகள்.

சௌந்தர்யா அலட்டிக் கொள்ளவில்லை. "கமலுடன் ஜோடியாக நடிப்பதே பெரிய விஷயம். எனக்கு இவர்கள் வாய்ப்புத் தராவிட்டால் என்ன? தெலுங்குப் பட உலகில் ஆட்கள் இருக்கிறார்கள்" என்கிறார்.

சிம்ம நடிகை பற்றி தமிழக சஞ்சிகை ஒன்று வெளியிட்டுள்ள திடுக் தகவல். நடிகை 'பாஸ்' நடிகருடன் பழகியதால் நிலமை விபரீதமானதாம். கருக்கலைப்பு செய்யுமாறு நடிகர் கூறினாராம். ஏற்பாடும் செய்து தந்தாராம். இன்னொரு திடுக் தகவல், தமிழக அரசியல்வாதிகள் சிலரது பார்வையும் சிம்ம நடிகைமீது திரும்பியுள்ளதாம். நாளை ஆட்சி மாறினால் 'சுகன்ய' நடிகையின் கதி தனக்கும் ஏற்பட்டு விடுமே என்று பயந்து கொண்டிருக்கிறாராம் சிம்ம நடிகை.

## என் மகன்

தாஜ்மஹால் நாயகன் மனோஜ் இனிய 22 வயசு இளைஞர். ஒரு வருட காலம் மணிரத்னத்திடம் உதவியாளராக இருந்தார். கொஞ்சக் காலம் அமெரிக்காவில் படித்தார்.

"என் மகனுக்கு ஹீரோவுக்கான அழகோ, கலரோ கிடையாது ஆனால் புதுசா தெரிவான்.

நான் நடிக்க ஆசைப்பட்டு வந்து, இயக்குநரானவன். என் மகன் இயக்குநராக வேண்டும் என்று நினைச்சு திடீரென்று நடிகராகியிருக்கிறான்." என்கிறார் பாசமுடன் பாரதிராஜா.

## லதா வீட்டில்

எம்.ஜி.ஆருடன் தனக்கு நெருக்கம் இருந்ததை
...த்திரிகிறார் லதா. அரசியலில் குதித்துள்ள லதா வீட்டில் எம்.ஜி.ஆர் படம்
...் தொங்குகிறது.
...ப் படம்கூட லதாவுக்கு யாரோ ஒருவர் தனது செலவில் போட்டுக்
...ததுதானாம். எம்.ஜி.ஆர். பெயரை விற்பதில் லதா படு தீவிரமாக உள்ளார்.


படிப்பகம்

www.padippakam.com

# உதடுகளை கவனிக்கவும்



பெண்களின் முகத்திற்கு அழகைக் கொடுத்து வசீகரிப்பது அவர்களின் உதடுகள் என்று சொன்னால் மிகையாகாது. உதடுகள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு மாதிரியாக இருக்கும்.

சிலரது உதடுகள் அழகாக இருக்காது. ஆனாலும் அதனை நன்றாகப் பராமரிப்பதன் மூலம் அழகையும், ஆரோக்கியத்தையும் பேணலாம்.

உதடுகளில் கறுப்பு திட்டுக்களோ நிறமோ இருந்தால் பாலாடையையும், எலுமிச்சம் பழச்சாற்றையும் கலந்து தேய்க்க வேண்டும்.

குளிர் காலத்தில் உதடுகளைப் பராமரிப்பதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். கிளிசரின், எலுமிச்சம் பழச்சாறு, பன்னீர் ஆகியவற்றைக் கலந்து உதடுகளில் தேய்க்க வேண்டும். இதன் மூலம் கீறல் தன்மை மறையும்.

மென்மையான உதடுகளுக்கு பால்,வெண்ணெய் போன்றவை துணை புரிகின்றன.

லிப்ஸ்டிக் பூசும் பெண்கள் தூங்கச் செல்வதற்கு முன்னால் உதடுகளை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். தொடர்ச்சியாக லிப்ஸ்டிக் பயன்படுத்தினால் உதடுகளின் நிறம் மங்கும். அதனால் லிப்ஸ்டிக் பயன்படுத்துபவர்கள் உதடுகள்மீது அதிக அக்கறை காட்டவேண்டும்.

# நிறுத்தினால் நிலைக்கலாம்



மாரடைப்பைத் தடுக்க வேண்டுமா? உணவு விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

இனிப்பு, கொழுப்பு கலந்த உணவுகளை அதிகம் சாப்பிட்டால் மாரடைப்பு உங்களைத் தேடி வந்து விடும்.

மாரடைப்பு வராமல் தடுக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட உணவு முறையைக் கடைப்பிடியுங்கள்.

★ வெண்ணெய், நெய், உப்பு, ஊறுகாய் வகைகளை உணவில் அதிகம் சேர்க்கக் கூடாது.

★ முடிந்த அளவு ஆவியில் வேக வைத்த உணவுகளைச் சாப்பிடுங்கள்.

★ வறுத்த, பொரித்த உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டாம்.

★ தேங்காய்ப்பால் சேர்க்கும் குழம்பு வகைகளில் அதற்குப் பதிலாக ஆடை நீங்கிய பாலைப் பயன்படுத்துங்கள்.

★ நார்ச்சத்து நிறைந்த உணவுகளை அதிகம் சாப்பிடுங்கள். பயறு வகைகள், முருங்கைக்காய், சோயா அவரை, கோவா போன்றவை நல்லது.

# அடடா... என்ன அழகு!

ஆரோக்கியமான உடலுக்குப் பயனுள்ள அழகுக் குறிப்புக்கள் இதோ:

★ மஞ்சளை அரைத்து பன்னீரில் சேர்த்துக் குளித்தால் தோல் நோய்கள் குணமாகும்.

★ முகம் கறுப்பு நிறமாக இருந்தால், மஞ்சள் மற்றும் பாலாடைக்கட்டியைக் கலந்து முகத்தில் தேய்த்து அவை காய்ந்ததும் முகத்தைக் கழுவிவிட வேண்டும். முகம் நல்ல நிறமாகும்.

★ கர்ப்பிணிகளின் காலில் நீர் கட்டி வீக்கம் ஏற்படும். அதைப் போக்க தினமும் முருங்கை இலை, நெல்லிக்காய் போன்றவைகளை உணவில் சேர்க்க வேண்டும்.

★ நெல்லிக்காயைக் காய வைத்துத் தூளாக்கி தேனில் சேர்த்துத் தினமும் இரவு தூங்கச் செல்வதற்கு முன்னால் சாப்பிட்டால், பார்வைச் சக்தி அதிகரிக்கும்.

★ சிறிய வெங்காயத்தை எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி, கூந்தலில் தேய்த்தால் முடி உதிர்வது ஓரளவு கட்டுப்படும்.

★ துளசிச் சாற்றில் சந்தனம் கலந்து இரவில் முகத்தில் பூசி வந்தால் முகப்பரு நீங்கும்.

★ சுடுநீரில் உப்பும், பேக்கிங் பவுடரும் கலந்து அந்த நீரில் குளித்தால் உடல் சதை வலிக்கு நிவாரணம் கிடைக்கும்.

என்ன, ஆரோக்கியம் கலந்து அழகு பெற தயாராகிவிட்டீர்களா?!

## முரசு-அருள் ஜுவலர்ஸ் தங்கமாலை பரிசுப் போட்டி அதிஷ்டசாலிகள் இவர்கள்

தங்கமாலை பரிசுப்போட்டியில் பங்குகொண்ட பல்லாயிரம் வாசகிகளில் ஆறுதல் பரிசுபெறும் 50 அதிஷ்டசாலிகளில் முதல் பத்துப்பேரின் பெயர் விபரம்:

1. எஸ்.அனோஜா
   கோட்டுலாஜ் எஸ்டேட், கந்தப்பளை.
2. திருமதி ஏ.தேவகி
   104 5/2, மனிங் பிளேஸ், கொழும்பு-6.
3. செல்வி. எஸ்.கிருபாஷினி
   பெட்ரோ டிவிஷன், பெட்ரோ குறூப், நுவரெலியா.
4. திருமதி என்.லோகநாதன்
   பூபாலரத்தினம் வீதி,
   ஆரையம்பதி, காத்தான்குடி.
5. செல்வி. ஏ. சிரானி
   1வது டிவிஷன், கோட்டைக்கல்லாறு.
6. செல்வி எஸ்.ஜானகி
   34/13, ஹெரவலப்பிட்டிய வீதி,
   ஹெந்தளை, வத்தளை.
7. எஸ்.எம்.என்.ஹுஸ்னா
   1335/4, மன்னார் வீதி, புத்தளம்.
8. செல்வி ஏ.ஜெயமோகா
   2, புனித அந்தோனியார் வீதி.
   கூழாவடி, மட்டக்களப்பு.
9. முஸ்.:பிதா சமத்
   நெய்தல் நகர், மூதூர்-01.
10. திருமதி, ஜே. தயாநிதி
   225, லோவர் ஸ்ரீட், பதுளை.

தங்கமாலை பரிசுபெறும் சூப்பர் அதிர்ஷ்டசாலியின் பெயர் விபரமும், ஏனையோரது பெயர் விபரங்களும் அடுத்த வாரம் வெளியாகும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CZ

பெயர்:.............................
முகவரி:.............................
.............................
தொழில்:.............................
கையொப்பம்:.............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 17-01-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 17

டயானாவின் எளிமையும், வசீகரமும் அரண்மனை ஊழியர்களைக் கவர்ந்தது. அரண்மனை வரலாற்றில், அங்கு பணியாற்றும் ஊழியர்களை மனிதர்களாக நினைத்து மரியாதை கொடுத்த முதல் ஆள் டயானாதான்.

தங்கள் பணியாட்களைப் பார்த்து புன்னகைக்கக்கூட அரச குடும்ப உறுப்பினர்கள் ஆயிரம் தடவை யோசிப்பார்கள்.

அடிமைகள் எவ்வாறு நடந்து கொள்வார்களோ, அவ்வாறுதான் தங்கள் பணியாட்களும் நடந்து கொள்ள வேண்டும் என்றே அரச குடும்பத்தினர் விரும்பினர்.

டயானா அந்த எண்ணங்களுக்கு நேர் மாறாக நடந்து கொள்ளத் தொடங்கினார்.

அரண்மனை பணியாட்களை டயானாவின் இதமான புன்னகையும், பரிவான வார்த்தைகளும் வருடிக்கொடுத்தன.

இயந்திரத்தனமாக இருந்த அரச குடும்பத்திற்குள் உயிருள்ள ஜீவன் ஒன்று நுழைந்து விட்டது போல இருந்தது.

இதமான தென்றல் அரண்மனைக்குள் குடி புகுந்துவிட்டது போன்று பணியாட்களுக்கு சந்தோசமாக இருந்தது.

அவ்வாறு இருந்தாலும் பணியாட்களுக்குள் மகாராணிக்கு விசுவாசமான ஆட்கள் சிலரும் இருந்தனர்.

டயானாவுக்கு சாள்ஸ் துரோகம் செய்கிறார் என்பது அரண்மனை ஊழியர்கள் அறியாத விடயமல்ல.

கடல் போன்ற அரண்மனைக்குள் எத்தனையோ அறைகள். டயானாவை மணந்த பின்னரும், சாள்ஸும், கமீலாவும் அந்த அறைகளில் ஒன்றில் தனிமையாக தம்மை மறந்திருந்ததை ஊழியர்கள் சிலர் அறிந்தே இருந்தனர்.

இத்தனை அழகான, இளமையான மனைவி இருக்கும்போது, சாள்ஸ் ஏன் கமீலாவை நாடுகிறார்? என்பதுதான் அவர்களுக்கு புதிராக இருந்தது.

அழகில், இளமையில், ஆளுமையில் டயானாவை எட்டமுடியாத தூரத்தில் இருந்தாள் கமீலா.

சில சமயங்களில் சாள்ஸை டயானா தேடும்போதோ, தங்களிடம் விசாரிக்கும்போதோ, அவளிடம் பொய் சொல்ல வேண்டியிருக்கிறதே என்று பணியாட்கள் கவலைப் படுவார்கள்.

ஒரு பணியாளன் மட்டும் சாள்ஸ்–கமீலா உறவையும், அந்த உறவுக்கு அடித்தளமிட்டவரே சாள்ஸின் தந்தையார்தான் என்பதையும் டயானாவிடம் கூறிவிட்டான்.

அதன்பின்னர்தான் சாள்ஸை கண் கொத்திப் பாம்பாக கண்காணிக்க ஆரம்பித்தார் டயானா.

சாள்ஸ்–கமீலா பற்றி பத்திரிகைகளில் வந்த செய்திகளை ஊன்றிக் கவனிக்கத் தொடங்கினார்.

சாள்ஸும், கமீலாவும் நெருக்கமாக இருந்ததை தன் கண்ணால் கண்டபின்னர்தான் டயானாவுக்கு சாள்ஸ்மீது பயங்கரமான வெறுப்பு ஏற்படத் தொடங்கியது.

அதன் பின்னர் சாள்ஸை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பழிவாங்குவதில் டயானாவுக்கு ஒருவிதமான சந்தோசம் ஏற்பட்டது.

### மொனக்கீ

பக்கிங்ஹாம் அரண்மனையில் மொனக்கீ என்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் பணியாற்றினான்.

டயானாவின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட மெய்க்காப்பாளர்களில் மொனக்கீயும் ஒருவர்.

தான் எங்கு சென்றாலும் தன்னைச் சுற்றி மெய்க்காப்பாளர்கள் செல்வதை டயானா விரும்பவில்லை. ஆனாலும் மெய்க்காப்பாளர்கள் தன்மேல் கொண்டுள்ள அக்கறையும் டயானாவுக்கு புரியாமல் இல்லை.

மெய்க்காப்பாளர்களில் மொனக்கீ டயானாவுடன் சற்று கூடுதலாகவே நெருங்கிப் பழகினார்.

அர்ண்மனைக்குள் வெறும் சம்பிரதாய உணர்ச்சிகளைத் தவிர வேறெதுவும் இல்லாத நிலையில் டயானா சலிப்புற்றிருந்தார்.

சாள்ஸ்–கமீலா நெருக்கத்தை நேரடியாகக் கண்ட பின்னர் மனப் போராட்டத்தில் வாழ்க்கையே வெறுத்திருந்தது.

அச் சமயத்தில் மொனக்கீயின் பரிவும், தன்மேல் அவனுக்குள்ள அக்கறையும் டயானாவுக்கு ஆறுதலாக இருந்தது.



### புவனா

மொனக்கீக்கு பொலிஸ் உடம்பு. கம்பீரமான தோற்றம். அரவணைத்து ஆறுதல் சொல்வதற்காகவே உருவாக்கப்பட்டது போன்ற நீளமான கரங்கள்.

சாள்ஸால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்த டயானாவுக்கு மொனக்கீயின் ஆதரவும், பரிவும் ஆறுதலாக இருந்தது.

தனது படுக்கையறைவரை மொனக்கீக்கு இடமளித்தாள் டயானா.

அப்போதுதான் எதிர்பாராத விதமாக அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

டயானா தன் படுக்கை அறைக் கட்டிலில் கால்களை நீட்டியபடி மல்லாந்து படுத்திருந்தாள்.

கட்டிலின் விளிம்பில் மொனக்கீ அமர்ந்திருந்தான். டயானா கூறிய ஜோக் ஒன்றுக்காக, மொனக்கீ தன் கைகளால் வாயைப் பொத்திக் கொண்டு சத்தம் இல்லாமல் சிரித்துக் கொண்டிருந்தான்.

அதே நேரம் அறைக்கதவைத் தள்ளிக் கொண்டு சாள்ஸ் உள்ளே வந்தார்.

மொனக்கீ சட்டென்று எழுந்து நின்று கொண்டான்.

சாள்ஸின் முகத்தில் பொறாமையையும், கண்களில் சந்தேகத்தின் சாயலையும் டயானா கவனித்துக் கொண்டே படுத்திருந்தாள்.



"சாள்ஸை பழிவாங்க நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதை நினைக்க எனக்கு குரூரமான சந்தோசம் ஏற்பட்டது. மொனக்கீதான் பயந்து போனான்." என்று அந்த சம்பவத்தை பின்னர் நினைவுகூர்ந்தார் டயானா.

மொனக்கீ அறையைவிட்டு வெளியே போய் விட்டான். சாள்ஸ் டயானாவுடன் எதுவுமே பேசவில்லை. தங்களுக்கிடையே ஏற்பட்டு விட்ட இறுக்கத்தை போக்க இருவருமே முன்வரவில்லை.

## டயானாவை உலுக்கிய முதற் கார் விபத்து!

அச் சம்பவம் நடைபெற்று சில வாரங்களுக்குள் கார் விபத்து ஒன்றில் மொனக்கீ செத்துப் போனான்.



சகலரும் அதனை சாதாரண விபத்து என்றுதான் நம்பினார்கள். டயானா மட்டும்தான் திட்டமிட்ட சதியாக இருக்கலாமோ என நினைத்தார்.

மொனக்கீயின் முகமும், சாள்ஸின் பொறாமையும், சந்தேகமும் கலந்த முகமும் டயானாவின் மனக்கண்ணில் தோன்றின.

சாள்ஸை சீண்டுவதற்காக தான் செய்த காரியம், மொனக்கீயின் உயிரையே தீண்டிவிட்டதா என்ற சந்தேகத்தால் டயானா நிம்மதி இழந்து போனார்.

தன் சந்தேகத்தை நெருங்கிய தோழிகளிடம் மட்டுமே பகிர்ந்து கொண்டார்.

மொனக்கீயின் மரணச் சடங்கில் கலந்து கொண்டதுடன், வருடா வருடம் மொனக்கீயின் நினைவு தினத்தன்று கல்லறைக்குச் சென்று மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தவும் தவறுவதில்லை.

மொனக்கீயின் மரணத்தால் ஏற்பட்ட மனக் காயத்தை மறக்கவும், சொந்தத் துயரங்களை மறக்கவும் மக்களை நோக்கிச் சென்றார் டயானா.

### மக்களின் இளவரசி

இலண்டன் நகர வீதிகளில் தன்னந் தனியாக ஷொப்பிங் செல்லும் இளவரசியை கண்ட மக்கள் ஆர்ப்பரித்தார்கள்.

பூச்செண்டுகள் கொடுத்து தங்கள் மகிழ்ச்சியைப் பரிமாறவும், தங்கள் இளவரசியின் மென்மையான கரத்தில் முத்தமிட்டு பாசத்தைப் பொழியவும் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் முண்டியடித்தார்கள்.

கடைத் தெருவில் உள்ள பிச்சைக்காரர் களைக்கூட டயானா நலம் விசாரித்தார். அவர்களுடன் ஜோக் அடித்து மகிழ்ந்தார்.

மக்கள் வியந்தனர். அந்த வியப்பை பத்திரிகைகள் தாங்கி வந்தன.

அரண்மனைக்குள் ஒரு புரட்சிக்காரி. மக்களுக்கும் அரச குடும்பத்தினருக்கும் இடையே தொங்கவிடப்பட்டுள்ள இரும்புத் திரையை இந்தப் புரட்சிக்காரியால் கழற்றிப் போட முடியுமா? என்று கேள்வி எழுப்பினார்கள் விமர்சகர்கள்.

அரச குடும்பம் முகம் சுளித்தது. மகாராணி மனதுக்குள் கறுவினார்.

இத்தனை கசப்புக்கள் மத்தியிலும் ஓர் இனிப்பான செய்தியும் வெளிவந்தது.

'டயானா கருவுற்றிருக்கிறார்' என்பதை அறிந்ததும் மகாராணிகூட கசப்பை மறந்து தன் மருமகளை வாழ்த்தினார்.

அந்த இனிப்பான செய்தியைக்கூட ஒரே ஒருவரால் ஜீரணிக்க முடியவில்லை.

அவர்தான் இளவரசர் சாள்ஸ்.

டயானா தன் மூலம்தான் கருவுற்றாளா? என்ற சந்தேகம் அவர் மனதை அரித்ததாக அரண்மனை வட்டாரத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

டயானா கர்ப்பிணியாக இருந்தபோது சாள்ஸின் அரவணைப்பை, ஆதரவை பெரிதும் விரும்பினார். முதற் கர்ப்பம், முதல் அனுபவம், யாராவது அருகில் இருந்தால் பயமின்றி இருக்கலாம் எனத் தோன்றும்.

சாள்ஸ் ஒரு முறைகூட டயானாவை பரிவுடன் நலம் விசாரிக்கவில்லை. டயானா கர்ப்பமாக இருந்த நாட்களில் கமீலாவுடன் தான் சாள்ஸ் சுற்றிக் கொண்டிருந்தார்.

பொறுமை இழந்த டயானாவுக்கும், கமீலா பின்னால் அலைந்த சாள்ஸுக்கும் இடையே அடிக்கடி வாய்த்தர்க்கங்கள் ஆரம்பித்தன.

டயானா தன் மணிக்கட்டை பிளேடால் கீறி தற்கொலைக்கு முயற்சித்தும் சாள்ஸ் மனம் இரங்கவில்லை.

போதாக்குறைக்கு சாள்ஸ் தன் வாயால் விசிறியடித்த வார்த்தைகள் டயானாவின் மனதில் இரத்தக் காயத்தை ஏற்படுத்தின.

"சாவது என்றால் செத்துத்தொலை. எனக்கு நிம்மதியாக இருக்கும்." சாள்ஸ்.

"ஓ.. அப்படியானால்தானே நீங்களும் கமீலாவும் கூத்தடிக்கலாம்." டயானா.

"ஆம். கூத்தடிப்போம், கும்மாளம் போடுவோம். நான் அப்படித்தான் இருப்பேன்." சாள்ஸ்.

அரச குடும்பம் என்றாலும், குடும்பச் சண்டையில் பாவிக்கப்படும் வார்த்தைகள் சாதாரண குடும்பச் சண்டைகள் போன்றுதான் இருக்கும்.

டயானா ஒடிந்து போவார். டயானா உடைந்து போவார். தலையணை கண்ணீரில் குளிக்கும்.

### வில்லியம்ஸ்

1982 ஜூன் 21ல் டயானாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது.

பிரசவ வலி எடுத்து டயானா துடி துடித்தபோது, சாள்ஸ் 'போலோ' விளையாடப் போயிருந்தார்.

டயானாவை மருத்துவமனையில் சேர்ப்பித்துவிட்டு, சாள்ஸுக்கு தகவல் அனுப்பினார்கள். (அடுத்த வாரமும் வரும்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**ஆர். மாலினி,**
இல. 33, காத்தான் கோட்டம்.
நெலுக்குளம், வவுனியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

## இதயங்களை இணைப்போம்!

'தேன்வந்து பாயும்'
என்று
காத்திருந்த காதுக்குள்ளே
தேனீயே புகுந்து விட்ட
துன்பம் போல்...

ஏன் வந்து
நீ புகுந்தாய்
என் உயிருக்குள்...?
என்னுடலை—

ஊன் வடித்த
நாரைப் போல்
உருக் குலைத்து
ஏங்கவிட்டு—

ஏன் மடித்துப் போட்டாய்
என் இதயத்தை...?

சித்தர்களும் புத்தர்களும்
எத்தனைதான்
சொன்னாலும்
காதலெனும்

பித்தத்தைத்
தவிர்த்து நிற்க
முடிவதில்லை மானுடத்தால்...!

வண்டுக்கும்
மகரந்த மலருக்கும்
இடையினிலே
காற்று வந்து மோதுவது

சொந்தத்தைக் கலைக்கவா...?
இல்லை...
சோபிதங்களை வளர்க்கவே—
தெரிந்துகொள்...!

மானுடத்தில் மட்டுமல்ல
மண்ணுயிர்கள்
அத்தனையுமே

காதலெனும் ஊடகத்தால்
கலப்பது தான்
வாழ்க்கை.
இனியேனும்—

ஆசைகளை மட்டுமே
பகிர்ந்து கொள்ளும்
இதயங்களை
எடுத்துவிட்டு

உணர்வுகளைப்
புரிந்து கொள்ளும்
இதயங்களை
இணைத்துக்கொள்வோம்!

நீர்கொழும்பு தருமலிங்கம்.

## நீ வராத இரவு!

விளக்கு
வைத்துக் கொண்ட
விழிகள் இரண்டும்
விழித்துக் கொண்டன...!
▫▫
நீ
வரப்போவதாய்
வந்து சொல்லிற்று
காற்று!
▫▫
உன்
பாதங்கள்
படப்போவதற்காய்
பாதைகளெல்லாம்
தவித்துக் கொண்டன—
ஓரு
பிரசவக் காரியைப்போல்!
▫▫
மலர்கள்
முண்டியடித்துக்கொண்டன—
ஓர்
உயிருள்ள மலர்
வருவதைக் காண!
▫▫
விளக்கு வைத்துக்கொண்ட
விழிகள் இரண்டும்
விழித்துக் கொண்டன—
நீ வரப்போவதாய்
வந்து சொல்லிற்று
காற்று!
▫▫
ஆசைகளெல்லாம்
அடுக்கிக் கட்டிய
கோபுரத்தில்
எம்பி எம்பிக் குதிக்கும்
இதயத்தோடு நான்
காத்திருந்தேன்!
▫▫
விடியும் வரை
விழிகளெனும்
விளக்குகள்
எரிந்து கொண்டேயிருந்தன!
வரவேயில்லை
நீ!

எம்.எல். ஷர்ஹான்— கம்மல்துறை.

## தேர்தலைகள்.....

கயிறி ழுத்துக் கொடி பிடித்து
குர லடைக்கப் பேசுவர்
வயிறி ழுத்த மனித ருக்கு
விடிய லென்று ஓதுவர்
துயிலெ ழுந்த நடிகராக
தெரு நடுவே ஓடுவர்
வெயிலி ருக்க முகில் மழையை
பொழியு மென்று கூறுவர்!

குருதி யோடு நிலம் நனைய
குளிர் அறையில் வாழ்ந்தவர்
சுருதி மாறிச் சுரம் இசைத்து
சுயம் மிளிரக் காத்தவர்
உறுதி கூறி உளங்கனிந்து
உயிர ளிக்கப் போவதாய்
எருது ஏறி மிதித்த கதை
இனித் தொடரும் நாடகம்!

மரிக்கும் மாந்தர் உயிர்ப் பெறுதி
மலிந்து வீணிற் போகவே
எரித்தும் வீட்டில் நிலை பிடுங்க
எறிந்த தேர்தல் பாசத்தில்
தெரிந்தும் ஓட்டித் தலை கொடுத்தார்
தனம ழிந்து வீடிலோ!
சிரிக்கும் போட்டிச் செயலு மிங்கு
சரிவைக் காட்டும் பாதையே!

விடியும் நாளை விடியு மென்று
வழி நெடுகக் காத்துமே
கொடிய வாழ்வின் கதி சுமந்து
கன த்த தெங்கள் நெஞ்சமே!
மிடியும் தீரப் பொருளு மில்லை
மனை யுமாற இல்லையே
நடிக-ராள்வை நிறுத்தி யின்று
நிலைமை யோங்கச் செய்யுமே!

மாவை வரோதயன்.



## தேன்கிண்ணம்

## அருள் தந்துவிடு




பூத்துச் சிரிக்கும்
புன்னகை பிறையே
உன்னில்
புதைந்து கிடப்பது
எத்தனை அர்த்தங்கள்!
**
சைத்தானுக்கு விலங்கிட்டு
மலையாய் ஏறும்
பாவக் குவியலை
கடுகாய் குறைத்து
கருணை செய்யும்
ரமழானே நீ!
**
ஏழைகள் பசியினை
உயர்ந்தவர் அறிந்து
கொடுக்கும் எண்ணம்
கொழுந்து விட்டெழுந்து
தருமம் கூடி
வறுமை குறைய
இறைவன் தரும்
வாய்ப்பு!
**
புனித குர் ஆன்
பூத்த நாளாம்
லைலத்துல் கத்ர்
அற்புத இரவை
சுமந்து நிற்கும்
புண்ணிய நோன்பே
உன்னில்
எத்தனை மகத்துவம்!
**
உன்னை
எண்ணிக்கையில்லா
மகிழ்ச்சியில்
வாழ்த்துச் சொல்லி
வரவேற்கின்றோம்!
**
பதினொரு மாதங்கள்
பாடுபட்டுழைத்து
ஒரு மாதம்
ஓய்வெடுக்க
வழி சமைத்துத்
தருகின்றாய்!
**
ரமழானே வா!
நம் பாவம் துடைத்து
அருளைத்
தந்துவிடு!

எம். ஸாலிஹ் அஸீம்— புத்தளம்.

## தேசிய நீரோட்டம்

### அப்துல் ரகுமான்



அணைகளை உடைத்து
கரைகளைத் தகர்த்து
மரங்களைச் சாய்த்து
பிணங்களைச் சுமந்து
இதோ பாய்ந்து வருகிறது
தேசிய நீரோட்டம்!

ஏன் விலகி நிற்கிறீர்கள்?
குதியுங்கள்!
நவீன பாவங்களைக்
கழுவுவதற்காகவே
புறப்பட்டு வந்த
புண்ணிய தீர்த்தம் இது.

அதோ
சாக்கடைகள் எல்லாம்
இதில்
சங்கமமாகிப்
பவித்திரமடைவதை நீங்கள்
பார்க்கவில்லையா?

இதோ....
தங்கள் தீட்டுத் துணிகளை
இதில்
துவைத்துக் கொள்கிறவர்களை
தங்கள்
வலையை வீசி இதில்
மீன் பிடித்துக்
கொண்டிருப்பவர்களை—
நீங்கள் பார்க்கவில்லையா?

நீங்கள் மட்டும் ஏன்
விலகி நிற்கிறீர்கள்?

வான் பொய்த்தாலும்
தான் பொய்க்காத
நீரோட்டம் இது!
தாகம் தணித்துக்கொள்ளுங்கள்;
வறண்ட வயல்களுக்கு
வாய்க்கால் வெட்டிப் பாய்ச்சுங்கள்!

உங்கள்
கப்பரைகளுக்கு இதனால்
ஞானஸ்நானம் கொடுங்கள்!

உங்கள் தீபங்களை இதில்
மிதந்து போக விட்டுவிடுங்கள்!

உங்கள் முகவரிச் சுவடிகளை இதில்
போட்டு விடுங்கள்!

உங்கள் கனவுகளின் அஸ்தியை இதில்
கரைத்து விடுங்கள்.

உங்கள் இரத்தத்தை
வெளியே கொட்டி விட்டு
இதை நிரப்பிக்கொள்ளுங்கள்.

இனி
நீர்களுக்கு
தனி விலாசங்கள்
தேவை இல்லை.

நதிகள் குளங்கள் கிணறுகள்
எல்லாம் மூழ்கிவிட்டன.
கண்ணீரும் மூழ்கிவிட்டது.

நீங்களும் மூழ்கிவிடுங்கள்.

## அகதிச் சிறுவனின் பாடல்

தெட்டத் தெளிவாக
புரிகிறது எனக்கு—
நீர் அடித்து
நீர் விலகுமென்று!

உணர்கின்றேன் இப்போது
கோழிகள் மிதித்தாலும்
அதன்
குஞ்சுகள் சாகுமென்று!

தான் ஆடாது
விட்டாலும்
தசை ஆடும்— ஆம்
தசை மட்டும்தான்
உணர்வுகள் அல்ல!

உயர்ந்த ஆயுதம்
மன்னிப்பு!
உயர்ந்த பொருள்
பொறுமை!

மன்னிப்பும் பொறுமையும்
எம்மிடம்
நிறையவே' உண்டு— எதையும்
மறவாத குணமும்

'புதிய' செயல்கள்
'பழைய' செயல்களை

ஞாபகம் ஊட்டும்
நன்றி!

அறிக்கைகளை
சேகரித்துக்
கொள்கிறேன்
திருப்பிக் கொடுக்கும்
காலம்
வராமலா போகும்!

சுபா வரன்— கண்டி.

## இ(செ)யற்கை

குண்டுத்
தாக்குதல்...
இடி!
..
வெடிப்பின்
சிதறல்...
மழை!
..
வைத்தியசாலை
பயணம்...
வெள்ளம்!
..
கைதுகள்...
நிவாரணம்!!

எஸ். பிரபா.

## பேனா நண்பர்கள்

|  |  |  |  |
|---|---|---|---|
| பெயர்: ஆர். சங்கரன் | பெயர்: சி. கவிதா | பெயர்: எம்.எஃப்.எம் நபாய்ஸ் | பெயர்: பாதிமா பரீதா |
| வயது: 18 | வயது: 17 | வயது: 22 | வயது: -- |
| முகவரி: 26, புகையிரத நிலைய வீதி, அம்பலாங்கொடை. | முகவரி: 3ம் வட்டாரம், சாம்பலதீவு, திருகோணமலை. | முகவரி: 115, கிம்பத்த வீதி, வேரவத்தை, பாணந்துறை. | முகவரி: 99/4, ரன்வள மாவத்தை, தளுபொத, நீர்கொழும்பு. |
| பொழுது போக்கு: கிரிக்கெட். | பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி. | பொழுது போக்கு: மன நோயாளர்களுடன் உரையாடுதல். | பொழுது போக்கு: டி.வி., கிரிக்கெட், பத்திரிகை பார்த்தல். |

## இந்த வாரம் உங்கள் பலன்

(11.01.1998 தொடக்கம் 17.01.1998 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மேடம்:

| (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| புதன்- காரியானுகூலம், புதிய முயற்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், செய்தொழில் நன்மை. | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்:

| (கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பலவித பேறு, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- இனசன விரோதம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, கௌரவக் குறைவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்:

| (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, பலவித நன்மை. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பண முடங்கல். | பி.ப. | 2 | மணி |
| சனி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்:

| (புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பெரியோர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- வீண் துயர், மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- கடன் சுமை, பிரயாண மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, செய்தொழில் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழிலில் பிரச்சனை, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்:

| (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| சனி- காரிய நஷ்டம் , மனப் பயம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:

| (உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, வீண் மனஸ்தாபம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- அந்நியர் பகை, மனப் பயம். | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்:

| (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், தொழில் உயர்ச்சி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பி.ப. | 3 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வீண் கவலை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| சனி- பிரயாசை மிகுதி, கடன் சுமை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்:

| (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், காரியத்தடை. | பகல் | 11 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் | 12 | மணி |
| புதன்- காரியானுகூலம், பெரியோர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பலவித நன்மை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பண முடங்கல். | பகல் | 11 | மணி |
| சனி- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு:

| (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், உறவினர் பகை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வீண் கவலை, தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பணவரவு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- ஆடம்பர வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் சிறப்பு மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்:

| (உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, தொழில் உயர்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன் - கடன் சுமை, கௌரவக் குறைவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பெரியோர் சகாயம், பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்:

| (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கவலை, கடன் சுமை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, பலவித நன்மை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- இனசனக் கஷ்டம், காரியத் தடை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மீனம்:

| (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- மறைமுக எதிர்ப்பு, வீண் துயர். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், கடன் சுமை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பயனற்ற செயல், மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, கௌரவக் குறைவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வீண் பிரயாணம், பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### நவக்கிரக சஞ்சாரம்


| | |
|---|---|
| தனு | - சூரியன், புதன். |
| மகரம் | - வியாழன், வெள்ளி, செவ்வாய். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |

(14-01-1998- மகரச் சூரியன்-தைப்பொங்கல்)

★சந்திரன்- இடபம், மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.★


படிப்பகம்





> தென்னையின் கீற்றுச் சலசல வென்றிடச்
> செய்துவருங் காற்றே!
> உன்னைக் குதிரைகொண் டேறித்
> திரியுமோர்
> உள்ளம் படைத்துவிட்டோம்!
> –சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# பொன் முட்டை பரிசு



மாசிடோனியாவை ஆண்ட சிற்றரசரான இரண்டாம் பிலிப் திடீரென மரணமடைய, அவருடைய இளைய மகன் அலெக்ஸாண்டர் மன்னனானான்.

அலெக்ஸாண்டர் வயதில் சிறியவன்; ஆனாலும் வீரத்தில் சிறந்தவன்.

மாசிடோனியா சிற்றரசர்கள் பெர்சியப் பேரரசருக்குக் கட்டுப்பட்டவர்கள். எனவே பெர்சியப் பேரரசர் மூன்றாம் டைரஸுக்கு 'பொன் முட்டைகள்' கப்பம் கொடுத்து வந்தனர்.

அலெக்ஸாண்டர் பொன் முட்டை அனுப்ப மறுத்துவிடவே, பெர்சிய மன்னர் தூதுவர் மூலம் காரணம் கேட்டான். அதற்கு அலெக்ஸாண்டர் தூதுவரிடம்,

"பொன் முட்டையிடும் பறவை நரகத்திற்குச் சென்றுவிட்டது. டைரஸ் அதை நரகத்தில் சந்தித்து பொன் முட்டை கேட்க வேண்டும்," எனப் பதில் அனுப்பினான்.

பதிலைப் பெற்ற டைரஸ், அலெக்ஸாண்டருக்கு ஒரு பந்தையும் அதை அடிக்க ஒரு மட்டையையும் அனுப்பி,

"விளையாட்டுச் சிறுவனான உனக்கு, அரசாளும் வயது இன்னமும் வரவில்லை," எனச் செய்தி அனுப்பி வைத்தான்.

அந்தச் செய்தியைக் கொண்டு வந்தவர்களிடம் அலெக்ஸாண்டர் வீரத்துடன்,

"இந்த மட்டையால் டைரஸின் கையில் உள்ள அதிகாரம் என்ற பந்தை வீழ்த்தி விடுவேன்!" எனக் கூறினான்.

இதனால் கோபமடைந்த டைரஸ் கசப்பான கனியொன்றை அலெக்ஸாண்டருக்கு அனுப்பி,

"இனி உன் வாழ் நாட்கள் எல்லாம் இந்தக் கனியைப் போல் கசப்பாக இருக்கும்!" எனச் செய்தி அனுப்பினான்.

அதைக் கொண்டு வந்த தூதுவரிடம் அலெக்ஸாண்டர்,

"உங்கள் அரசரை அக் கனியை உண்ண வைத்து, இக்கனியைப் போன்று அவரது வாழ் நாட்களை கசப்பாக்குவேன்!" என்று கூறினான்.

இதைக் கேட்டுக் கடுஞ்சினம் கொண்ட டைரஸ், அலெக்ஸாண்டரின் வீரத்தை அறியாது அவனுடன் போரிட்டுத் தோற்றான். இதனால் அவனுக்குப் பெருத்த அவமானம் ஏற்பட்டது.

# அதிசயம்–ஆனால் உண்மை!



**டாக்டர் ஜேம்ஸ் மூவட்:**

← ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஜேம்ஸ் மூவட் 120 ஆண்டுகள் வாழ்ந்தார். இதில் 95 ஆண்டுகள் டாக்டராகப் பணிபுரிந்தார்.



**காலநிலைச் செடி**

↑ 'வெதர் திசில்' என்ற முட் செடியில் உள்ள மலர், தனது இதழ்களை மூடினால் மழை வருவதற்கு அறிகுறி. இதழ்கள் திறந்திருந்தால் மழை வராது.

**ஆபிரிக்க வெட்டுக் கிளி:**

↓ இந்த வெட்டுக்கிளி பூப்போன்று காணப்படும். இதைப் பூ என்று நினைத்து தேனுக்காக இதன் மீது வந்து அமரும் பூச்சிகளை இந்த வெட்டுக்கிளி பிடித்து உண்ணும்.



**பழமையான மணி:**

→ ஜெர்மனியில் உள்ள துறவிகள் மடத்தின் உச்சியில் உள்ள இந்த மணி மிகப் பழமையானது. கடந்த 919 ஆண்டுகளாக இந்த மணி அவ்வப்போது அடிக்கப்படுகிறது.



# வாரம் ஒரு நாடு

## ஸாம்பியா

**தலைநகர்** – லுஸாகா
**பரப்பு** – 7,52,620 சதுரகிலோமீட்டர்.
**மக்கள் தொகை** – 95 இலட்சம்
**மொழி** – பாண்ட், ஆங்கிலம்
**எழுத்தறிவு** – 54%
**சமயம்** – கிறிஸ்தவம்,இஸ்லாம்,ஆவி வழிபாடு.
**நாணயம்** – சுவாச்சா
**தனிநபர் வருமானம்** – 370 டொலர்.

**அமைவிடம்:**

ஸாம்பியா, தெற்கு ஆபிரிக்க நாடுகளால் சூழப்பட்ட ஒரு குடியரசாகும். இது ஸிம்பாப்வே நாட்டிலிருந்து சாம்பெசி என்னும் நதியால் பிரிக்கப்படுகிறது.

**வரலாறு:**

முற்காலத்தில் வடக்கு ரொடீஷியா என்று வழங்கப்பட்டது. 1964ல் பிரிட்டன் சுதந்திரம் வழங்கியது. ஒரே கட்சி– ஒரே ஆட்சி நடைபெறுகின்றது. அரசை மக்கள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கின்றனர். 1980களின் விலை வீழ்ச்சி, தொடர்ந்து வறட்சியினால் ஏற்பட்ட பஞ்சம் நாட்டைப் பாதித்தது.



**பொருளாதாரம்:**

மக்கள் தொகையில் 70 சதவீதமானோர் விவசாயம் சார்ந்துள்ளனர். மிகுந்த கனிவளங்கள் கொண்டது. செம்பு மிக முக்கிய ஏற்றுமதிப் பொருள். நாட்டு வருமானத்தில் 80 சத வீதம் செம்பு ஏற்றுமதி மூலம் கிடைக்கின்றது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17.01.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 227
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 225

பரிசுக்குரியவர்:
ஜே. அனுஷியா,
திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| க. திவாகர், ப/எலதலுவ தமிழ் வித்தியாலயம், ஹாலி–எல. | செல்வி ஃபாத்திமா ஃபாய்ஹா ஃபாரீஸ், கேம்பிரிஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை. |
| ம்ர்ஸியா நாஃபிர், அல்-பாஸியதுல் நஸ்ரியா மு.ம.வித். மருதானை, பேருவளை. | க. கிருஸ்ண வேந்தன், இந்து கல்லூரி, வாழைச்சேனை. |
| செல்வி ரம்யஹாசினி விஜயகுமார், வடிவாம்பிகா அரசினர் தமிழ் வித். முன்னேஸ்வரம், சிலாபம். | எஸ். ரேவதி, தமிழ் மகா வித்தியாலயம், பசறை. |
| எம்.கே. முகமது சல்மி, அல்/மின்ஹாஜ் மு.வித்.மட்கோ, திருகோணமலை. | ஸ்ரீஸ்கந்தராஜா லோகிதராஜ், கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை. |
| பீ.ஈ. சுபத்திரா, ஸ்ரீ சன்முகா இந்து மகளிர் கல்லூரி, திருமலை. | ஜெயரெத்தினம் அசோக், களுதாவளை ம.வி, களுவாஞ்சிக்குடி–01. |

## நில நடுக்கம்

ஆண்டுதோறும் பூமியில் இலட்சக்கணக்கான நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன. ஆனால் 90 வீதமானவை வெறும் நிலச் சிலிர்ப்புக்கள்தான். அவற்றை மனிதர்களால் உணர முடியாது.

இருந்தாலும் ஆண்டுதோறும் குறைந்த பட்சம் 100 நிலநடுக்கங்களாவது தங்கள் சக்தியை வெளிப்படையாகக் காட்டி விடுகின்றன.

உலகின் அதிகமான நிலநடுக்கங்கள் ஜப்பான், இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் தான் ஏற்படுகின்றன.

□□

செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடியில் சிவப்பு நிறச் சிலுவை காணப்படும் என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் சிலுவைக் குறியைப் பயன்படுத்தாத சில நாடுகள் உள்ளன.

மத்திய கிழக்காசிய நாடுகளிலுள்ள சங்கங்கள், சிவப்பு நிறத்தில் பிறையையும், ஈரான் நாடு சிவப்பு நிறத்தில் சிங்கத்தையும் தங்கள் நாட்டு (செஞ்சிலுவை) சங்கத்தின் கொடிகளில் பயன்படுத்தி வருகின்றன.

# மைக்கல் ஃபாரடே



மின்காந்தச் சக்தியின் காரணமாக இன்று மனித இனம் அனுபவிக்கும் சுகங்கள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணமானவர் மைக்கல் ஃபாரடே.

இங்கிலாந்துக்காரரான இவர் ஒரு வேதியல் வல்லுநர், இயற்பியல் ஆய்வாளர், எதையும் பரிசோதனைக்கு உட்படுத்திப் பார்ப்பவர்.

மிக எளிய ஏழைக் குடும்பத்தில் 1791 செப்டெம்பர் 22ம் திகதி பிறந்தார் ஃபாரடே. ஓர் ஏழைத் தொழிலாளியின் மகன். படிக்க வசதியில்லை. சிறு வயதிலேயே புத்தகங்கள் பைண்ட் செய்யும் வேலையில் சேர்ந்தார்.

இதனால் பலநூல்களைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பின்னர் தன் திறமையால், பிரபல விஞ்ஞானியான ஹம்ப்ரி டேவி அவர்களின் உதவியாளராகச் சேர்ந்தார். அப்போது ஃபாரடேயின் வயது 21.

டேவியும், ஃபாரடேயும் ஆசிரியர்– மாணவர் போல ஒன்றாக ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர். டேவி தான் செல்லும் வெளிநாடுகள் அனைத்திற்கும் ஃபாரடேயையும் அழைத்துச் சென்றார்.


1821ல் ஃபாரடே தனது முதல் மின் கண்டுபிடிப்பை வெளியிட்டார். அதுமுதல் அவருக்கு வெற்றிமேல் வெற்றி வந்து சேர்ந்தது.

மின் பகுப்பியல், மின்காந்தத் தூண்டல், ஒளிக்கும் காந்த விசைக்குமான அடிப்படைத் தொடர்புகள் ஆகியவை பற்றி ஆராய்ந்தார்.

1867 ஒகஸ்ட் மாதம் 25ம் திகதி ஃபாரடே மரணமானார்.

# அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல்

அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் 1954ம் ஆண்டு முதன் முதலாக அமெரிக்காவால் தயாரிக்கப்பட்டது.



சாதாரண நீர்மூழ்கிக் கப்பல்கள் டீசல் மற்றும் மின்சார பற்றரிகளால் இயக்கப்படுவதால் அவை அடிக்கடி தரைக்கு வந்து எஞ்சின் மற்றும் ஓட்டுநர்களுக்கு வேண்டிய காற்றைப் பெற்று மீண்டும் கடலில் மூழ்கும்.

ஆனால் அணுசக்தி நீர்மூழ்கி பல மாதங்கள் கரைக்கே வராமல் கடலின் அடியில் தங்கி நிற்கும் திறன் கொண்டவை. கடல் நீரைக் குடிநீராகவும், காற்றாகவும் மாற்றும் வசதி அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலில் உண்டு.

அணுசக்தியால் ஓடும் நீர்மூழ்கியை முதன் முதலில் தயாரித்த பெருமையை அமெரிக்கா அடைந்தாலும், முதன் முதலில் அணுசக்தி நீர்மூழ்கியைப் போருக்குப் பயன்படுத்திய நாடு இங்கிலாந்து ஆகும்.

1982ம் ஆண்டு போக்லாந்து தீவுகள் காரணமாக மூண்ட யுத்தத்தில் ஆர்ஜென்டீனாவுக்கு எதிராக இங்கிலாந்து அணுசக்தி நீர்மூழ்கியைப் பயன்படுத்தியது.

# பெயர் வரக் காரணம்

ஜனவரி மாதம், ஆண்டின் முதல் மாதம். இந்தப் பெயர் வரக்காரணம் என்ன?

ரோமானியக் கடவுளான ஜேனஸ் (JANUS) என்ற பெயரில் இருந்துதான் 'ஜனவரி' உருவானது. வாசல் கதவுகளின் கடவுளாகக் குறிப்பிடப்படுகிறார் இவர்.

இவரது இருதலைகளும் இருவேறு திசைகளில் பார்த்திருக்கும். எனவே இவர் புத்தாண்டின் நுழைவாயிலான முதலாம் மாதத்தை துர்தேவதைகள், தீயசக்திகள் நுழையாமல் காக்கும் என்ற நம்பிக்கையில் ஜனவரி என அவர் பெயரால் மாதத்தை அமைத்து ஆண்டின் முதல் மாதமாக்கினர்.

# பண்டைத் தமிழரின் கால அளவுகள்

| | |
|---|---|
| 2 கண்ணிமை | – 1 நொடி |
| 2 கை நொடி | – 1 மாத்திரை |
| 2 மாத்திரை | – 1 குரு |
| 2 குரு | – 1 உயிர் |
| 2 உயிர் | – சணிகம் |
| 12 சணிகம் | – 1 வினாடி |
| 60 வினாடி | – 1 நாழிகை |
| 60 நாழிகை | – 1 ஓரை |
| 3/4 நாழிகை | – 1 முகூர்த்தம் |
| 2 முகூர்த்தம் | – 1 சாமம் |
| 4 சாமம் | – 1 பொழுது |
| 2 பொழுது | – 1 நாள் |
| 15 நாள் | – 1 பக்கம் |
| 2 பக்கம | – 1 மாதம் |
| 6 மாதம் | – 1 அயனம் |
| 2 அயனம் | – 1 ஆண்டு |
| 60 ஆண்டு | – 1 வட்டம் |



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## புதிய தொடர் 5

**எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி சஸ்பென்ஸ் கலந்து எழுதிய விறு விறு நாவல்.**

# இனி என் முறை

**எழுத்துச் சித்தர் பாலகுமாரன்**

குழந்தைகள் நிறையக் கற்றுக் கொள்ளுகிறார்கள். திலீப்புக்கு நீச்சல், கராத்தே, யோகா எல்லாம் சொல்லித் தர வேண்டும். அவன் அப்பாவைவிட பெரிய ஆளாய் வரவேண்டும்.

மொபெட்டில் பிள்ளை உட்கார்ந்து இடுப்பைப் பிடித்துக் கொண்டான். அமுதா ஒரு நிமிஷம் யோசித்தாள். சரி. பிடித்துக் கொள்ளட்டும் என்று வண்டியை விரைவாக்கினாள்.

இரவு எட்டு மணிக்கு ஃபோன் வந்தது. செல்வராஜ் ஃபோன் செய்தான். நாலு நாள் ஆகுமாம். எஸ்கார்ட் வேலைதான். பெரிய புள்ளிகளை பெங்களூர் விட்டு நகர்த்த முடியவில்லையாம். லோக்கல் தொந்தரவாம்.

"பையனை ஸ்விம்மிங்ல சேர்க்கறது பத்தி யோசனை பண்ணினியா?"

"சேர்ந்துட்டான்."

"என்னிக்கு?"

"இன்னிக்கு."

"வெரிகுட்." செல்வா சந்தோஷப்பட்டான். அமுதாவுக்கும் சந்தோஷமாய் இருந்தது. புருஷன் பிரிவு பெரிதாய் தெரியவில்லை.

'நாளை ஸ்விம்மிங் போக வேண்டும்' என்கிற நினைப்பே அதிகம் இருந்தது.

"நாலாவது நாளே ஸ்விம் பண்றான் பார்த்தீங்களா?"

"ட்யூப் போட்டு தானே செய்யறான்,"

"நாளைக்கு எடுத்துடுவேன்."

"பயப்படுவான்னு தோணுது. வீக்கா இருக்கான்."

"பலத்துக்கும் பயத்துக்கும் சம்பந்தமேயில்லீங்க. முட்டை, மீன், சிக்கன் சூப் தினம்கொடுங்க பயத்தை நான் மெள்ள மெள்ள எடுத்துடுவேன். இவங்க அப்பாவை வரச் சொல்லுங்க ஒரு நாள் ஸ்விம்மிங் பூலுக்கு. அவர் பார்க்கட்டும்."

"அவர் டெல்லில இருக்கார்."

"திலீப்! தலையைத்தூக்கி ஸ்விம்ங் பண்ணு மேன்." உட்கார்ந்த இடத்திலிருந்து இரைந்தான். ஷவருக்கு நேர் எதிரே உள்ள பளிங்கு கல் மேடையில் வாசுதேவனும், அமுதாவும் உட்கார்ந்திருந்தார்கள். வாசுதேவன் முழு உடுப்பில் இருந்தான். உதவியாளர்கள் இரண்டு பேர் நீரில் இருந்தபடி குழந்தைகளை உற்சாகப்படுத்தினார்கள். பெண்கள் இருவருக்கு பேக் ஸ்ட்ரோக் சொல்லிக் கொடுத்தார்கள். அதில் ஒரு பெண் போட்டிக்குத் தயாராகிறாளாம். பேய் நீச்சல் போட்டுக் கொண்டிருந்தாள்.

"மிஸ் கனகம்மா! புஷ் சரியா இல்லை. ஒவ்வொரு தடவை ஒவ்வொரு டைரக்ஷன்ல திரும்பறீங்க."

"டேய் தம்பி, அந்தப் பையனைப் பாரு தவிக்கறான். மேலேத்திவுடு."

"ஏன் இன்னிக்கு நீங்க இறங்கலையா.?"

"வொய்: எம்.ஸி.ஏ. போறேன் மேடம். உங்க இன்டர் ஸ்டேட் ஆளுங்க நாலு பேருக்கு கோச்சிங் தரேன்."

"நீங்க காம்படீஷன்ல......"

"நாலு தடவை இன்டர் ஸ்டேட்ல ஃப்ர்ஸ்ட் ப்ரைஸ் வாங்கிட்டேன். ஏஷியன் கேம்ஸ் போனேன். நம்ம பாச்சா அங்க எடுபடலை."

"இரண்டாவதா வந்தீங்களா?."

"இல்லை."

"வெண்கலமா?."

"இல்லை."

"பிறகு?"

"நான்தான் லாஸ்ட்."

"ஏன்?."

"எனக்கு சரியா கோச் அமையலை. சைனீஸ் லெவலுக்கு எனக்கு ஸ்பீட் இல்லை. ஹாட் வாட்டர் நீச்சல் குளம், பயம்."

"யாரும் திட்டலை?."

"திட்டா? செருப்பால அடிக்காத குறை."

"அப்புறம்?."

"அழுதேன். வந்து ஷவர்ல குளிச்சுக்கிட்டே விக்கி விக்கி பொம்பளை மாதிரி அழுதேன். சரி நமக்கு முடியலை. நாம நாலு பேருக்கு உற்சாகம் கொடுப்போம்னு."

"இந்த கோச்சிங்ல வர காசு தானா?."

"காசு இருக்கு மேடம். வீடு இருக்கு. வாடகை வருது. பெட்ரோல் பங்க் இருக்கு. இலட்சியம் அடைய முடியலையேன்னு வேதனையும் இருக்கு."

"ட்ரை பண்ணலாமே."

"வயசாயிடுச்சு. பதிமூணு வயசுலேர்ந்து பதினெட்டு வயசு தான் இதுக்கு சரி. அப்புறம் உடம்பு அகலமாயிடும். அந்த லெவலுக்கு நீச்சலடிக்க முடியாது. உங்க பையன் மாதிரி நாலு பேர் கிடைச்சா எனக்கே எனக்குன்னு கிடைச்சா..... வருஷக்கணக்குல ட்ரையினிங் பண்ணி, ஒலிம்பிக் வரைக்கும்........ சரி அது கிடைக்கறதும் கஷ்டம். பசங்க படிப்பு முக்கியம். நான் வரட்டுங்களா? வெங்கடேஷ் பசங்களைப் பார்த்துக்க. அஞ்சு மணிக்கு மேலே எடுத்துரு. குட்நைட். பாய்ஸ் குட்நைட் எவ்ரிபடி" -குனிந்து குளத்தில் இருக்கிறவர்களுக்கு வணங்கினான்.

சகலரும் திரும்பி கையசைக்க, திலீப் மட்டும் தவறு செய்தான். எட்டடி சுழற்றி ட்யூப்போடு நேரே நின்று நீரில் பௌவ் செய்தான். 'பௌக்' என்று தலை உள்ளே போய் கால் மேலே வந்தது. சிரித்தார்கள். மேலே ட்யூப் கொண்டு வரும் என்று நம்பினார்கள்.

வாசுதேவன் நகர்ந்தான். ஹெல்மெட் போட்டுக்கொண்டான். 'தடாப்' என்று ட்யூப் மேலே வந்தது. திலீப் தலை வெளியே வந்து திணறி தவித்து ட்யூப்புக்கு கை நீட்ட, வெள்ள வேகத்தில் நீரடித்து ட்யூப் நகர்ந்து போனது. திலீப் உள்ளே போனான்.

"திலீப்" சின்ன கூச்சலோடு அமுதா எழுந்தாள்.

வாசுதேவன் திரும்பினான்.

பையன் தலை வெளியே வந்து திணறி உள்ளே போயிற்று. வெங்கடேஷ் என்கிற உதவியாளன் எகிறி கரையேறி திலீப் என்று கூவினான்.

வாசுதேவனுக்குப் புரிந்துவிட்டது.

ஹெல்மேட் கழட்டி, தரையில் உதறி முழு உடுப்போடு நீரில் பாய்ந்தான். ஒரே எட்டில் பிள்ளையை அடைந்தான். கொத்தாய் மேலே தூக்கினான். ஒரு உதையில் கரை திரும்பினான்.

"திலீப், திலீப்" அமுதா பதறினாள். கரையில் நின்று பையனை வாங்கினாள்.

"ஒன்னுமில்லை, ஒன்னுமில்லை, விடுங்க"

பிள்ளை துவண்டு தரையில் சரிந்தது. கன்னத்தில் அடிக்க தலை சிலும்பியது.



புரட்டி முதுகு அழுத்த 'குபுக்' என்று நீரை வாந்தியெடுத்தது. சகலரும் கரையேறினார்கள். சூழ்ந்து கொண்டார்கள்.

"திலீப், திலீப்" புரட்டி நிமிர்த்தி கன்னம் தட்ட, மறுபடி நீர் வெளியே வந்தது. எழுந்து இடுப்பைப் பிடித்து கரகரவென்று சுழற்ற, மேலும் கொப்பளித்தது.

"திலீப் நில்லு, நில்லு!"

பிள்ளை தள்ளாடி நின்றது. மாஸ்டரை கெட்டியாய் பிடித்துக் கொண்டது. ஓவென்று பயத்தில் அழுதது.

"குட். ஒன்னுமில்ல, ஒன்னுமில்ல போங்க"

"உட்கார வையுங்கள். படுக்க வேணாம். சாச்சாப்பல உட்கார வையுங்க. டவல் எடு. உடம்புல போர்த்து!"

"தண்ணீல பௌவ் பண்ணிட்டான் சார். ட்யூப் ஸ்லிப் ஆயிடுச்சு." ஹெல்பர் பேச வாசுதேவன் அவனைக்கூட்டத்தை விட்டு நெட்டித் தள்ளிக் கொண்டு போனான். பளீரென்று அறைந்தான். "ஒருத்தன் தண்ணீல ஒருத்தன் கரைல இருங்கன்னு பலதடவை சொல்லியிருக்கேனில்ல. உனக்கு இன்னிக்கு கரை ட்யூட்டி தானே? ஏன் இறங்கின?"

"சார்."

"பின்னிடுவேன் உன்னை. போ வெளியே!"

அமுதா பையனை நெஞ்சு நீவி விட்டாள். மார்பில் கை வைத்துப் பார்த்தாள். வாசுதேவன் ஓட்டல் சிப்பந்தியைக் கூப்பிட்டு காபிக்கு ஆர்டர் செய்தான். சட்டையை மெல்ல கழட்டினான். பேண்ட் பாக்கெட்டிலிருந்த பர்ஸ் காகிதங்கள் எடுத்துப் போட்டான். சகலமும் நனைந்திருந்தன. ஷூக்களை களைந்தான். டவல் கட்டிக்கொண்டு பேண்ட் உருவிப்போட்டான்.

"ஐயம் ஸாரி மேடம்."

"அதனால என்ன.. என் பையன் தப்பு பண்ணிட்டான். தினம் மாஸ்டரை பௌவ் பண்ணிட்டு வரணும்ங்கறத தண்ணீல செஞ்சுட்டான்."

"தப்பு என்னுது மேடம். நான் பேண்ட் ஷர்ட் போட்டு கிளம்பினது தப்பு. இவங்களை நம்பினது தப்பு. உங்கக்கிட்ட பேசினது தப்பு."

"பேசினதா?"

"உங்க பையன் மாதிரி நாலு பையன் வேணும்னு கேட்டது தப்பு. நான் பேட்லக்கோட பிறந்தவன். நான் இதுக்கெல்லாம் ஆசைப்படறது தப்பு."

"சேச்சே. என்னங்க இது?"

"நிஜம் மேடம். நிஜம் அது. எனக்குத்தான் தெரியும். திலீப் ஆர் யூ ஆல்ரைட்?"

"யெஸ் மாஸ்டர்."

காபி குடித்து பிள்ளை உடுத்தி ஷூக்கள் அணிந்து, மாஸ்டர் எதிரே போய் "குட்நைட் மாஸ்டர்" என்று பௌவ் செய்தது. வாசுதேவன் விரல்களால் கண்களைப் பொத்திக் கொண்டான். கண் திறக்க, கண்கள் நீர் கோர்த்து, பளபளத்தன.

"குட்நைட் மை ஸன், குட் நைட்."

குனிந்து வணங்கினான். பிள்ளையை அருகே போய் தழுவிக்கொண்டான். "கடவுளே உனக்கு வந்தனம்." சுத்தமான ஆங்கிலத்தில் சத்தமான குரலில் ப்ரேயர் சொன்னான்.

"நாளைக்கு வருவியா திலீப்?"

"வருவேன் மாஸ்டர்!"

"நீ வரணும். மாஸ்டருக்காக வரணும். குட்நைட்." மறுபடி குனிந்து வணங்கினான்.

பிள்ளை படியிறங்குகிறவரைக் கூடவே வந்தான். படி விளிம்பில் கை கூப்பி மறுபடி அமுதாவிடம் மன்னிப்புக் கேட்டான்.

மறுநாள் மழை. ஸ்விம்மிங்கில யாருமே இல்லை. அடுத்தநாள் வெய்யில் புழுக்கமான வெய்யில் ஹெல்மெட்டுக்குள் தலை முடி கசகசத்தது. நீச்சல் குளத்தில் குழந்தைகள் பெரும் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள். திலீப் அவசரமாக சட்டை கழற்றி ஷவரில் நின்று, ட்யூப் இடுப்பில் போட்டு 'தொபேர்' என்று நீரில் குதித்தான். கால் உதைத்து கை வீசி நீந்தினான்.

அமுதா கூலிங் கிளாஸ் மாட்டிக் கொண்டு சகலரையும் கவனித்தாள். வாசுதேவனைத் தேடினாள். வாசுதேவன் நீரில் இருந்தான். ஒவ்வொரு குழந்தையாக எதிர்க் கரைக்கு அனுப்பினான். எதிர்க் கரையில் வெங்கடேஷ் நடுவில் இன்னொரு பையன். திலீபின் கவிழ்தலால் ஜாக்கிரதை அதிகமாய் இருப்பது தெரிந்தது.

வாசுதேவன் பேச வரவில்லை. எல்லாக் குழந்தைகளும் கரை ஏற கடைசியில் அவன் கரையேறினான். ஷவரில் குளித்தான். ஈரம் துவட்டாமல் துண்டு சுற்றி குழந்தைகளுக்கு வணக்கம் சொன்னான். குழந்தைகள் வணங்கின.

"நாளைக்கு ட்யூப் எடுத்து நீந்த அனுப்புவேன் மேடம். பயம் தெளிஞ்சிருச்சு திலீபுக்கு."

"திலீபை விட நீங்க பயந்து போயிருக்கீங்கன்னு நினைக்கிறேன். நீச்சல் குளத்தை விட்டு வெளியே வரவேயில்லையே!"

"திலீப் அப்பா வந்து என்ன சொல்லப் போறார்ங்கற பயம் இன்னும் இருக்கு."

"பயப்படாதீங்க. சொல்லமாட்டேன்."

"திலீப் சொல்லிடுவான்."

"அவன் கிட்டயும் சொல்லிட்டேன், அப்பாகிட்ட இதுபத்தி பேசாதேன்னு, பேசமாட்டான்."

"தேங்க் யூ. நாளைக்கு வாங்க!" கரம் கூப்பினான். "அப்புறம் ஒரு விஷயம்."

"என்ன?"

"கூலிங் க்ளாஸ் புதுசா?"

"இல்லை. ஏன்? வெய்யில்னு போட்டுக்கிட்டேன்."

"கூலிங்க்ளாஸோட உங்களைப் பார்த்தா கோபமா இருக்கறாப் போல இருந்துச்சு. அதுவும் ஒரு ரீஸன், நான் ஜலத்தை விட்டு வராததுக்கு."

அமுதா சிரித்தாள். "அப்படியா? அப்ப போடலை!" கழட்டினாள். கரம் குவித்தாள் படியிறங்கினாள்.

மறுநாள், அதற்கு மறுநாள், திலீப் ட்யூப் இன்றி நீந்தினான். எட்டடி ஆழம். தரை தொட்டுவிட்டு வெளியே வந்தான். சுவரில் கால் உதைத்து குட்டித் திமிங்கிலம் போல் நீர் கிழித்தான். அமுதாவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. சந்தோஷமாய் இருந்தது. செல்வாவிடம் சொல்ல வேண்டும். திலீப் நீந்துவது காட்ட வேண்டும்.

செல்வா அன்று மாலை பெங்களூரிலிருந்து கைது செய்யப்பட்டவர்களுடன் காரில் வந்தான். ஆட்களை சென்னை சி.பி.ஐ.யிடம் ஒப்படைத்தான். களைப்புடன் வீடு வந்தான். வீடு குதூகலத்துடன் அவனை வரவேற்றது.

"இன்னிக்கு ஒரு நாள் விட்டுருங்கப்பா இரண்டு பேரும். நாளைக்கு நிறைய பேசறேன்." உணவு முடித்து கட்டிலில் சாய்ந்து அயர்ந்து தூங்கினான்.

அம்மாவும் பிள்ளையும் உற்சாகமிழந்தார்கள்.

விடிகாலை ஃபோன் ஒலித்தது.

"செல்வராஜ், ஹியர். சொல்லு மகேந்திரன். என்ன விஷயம்? கேஸ் மெட்ராஸ்லதானா? எனக்கு போஸ்டிங் எங்கே? மெட்ராஸா? தேங்க்யூ மகேந்திரன். யார் உத்தரவு இது நாயரா?"

"நான் ஒண்ணும் கேட்கவேயில்லை. ரொம்ப இழுத்தடிக்கிறமேன்னு அவரா பார்த்து இங்க போட்டுருப்பாரு. எப்ப கேஸ் முடியும்? ரெண்டு மாசமாவது ஆகுமில்ல. மாத்திடாதீங்கப்பா. தேங்க் யூ. அப்புறம் இன்னிக்கு விட்டுரு. நாளைலேர்ந்து ஆபீஸ் வரேன்!" ரிஸீவரை வைத்துவிட்டு மணி பார்த்தான். நாலு நாற்பது. நகர்ந்து அருகே தூங்கும் மனைவியை அணைத்துக்கொண்டான். அவள் உடம்பு தகதகப்பு இவனைத் தூக்கிற்று. கன்னத்தில் முத்தமிட்டு இறுக்கிக் கொண்டான். அரைத் தூக்கத்தில் அமுதா புரண்டாள். இவனுக்காக திரும்பி இறுக்கிக் கொண்டாள். அனிச்சையாய் அவனுக்கு இடம் கொடுத்தாள்.

**(தொடர்ந்து வரும்)**

## கடித இலக்கியம்

**முன்னாள் தமிழக முதல்வர், முத்தமிழ் வித்தகர் அறிஞர் அண்ணா! தமிழக மக்களை தட்டியெழுப்ப 'தம்பிக்கு மடல்' என்ற தலைப்பில் அவர் தீட்டிய கருத்துக்கள் இன்றும் கூர்மைதான். பொருத்தமான நாளில் வருகிறது இக் கடிதம்.**

# மனப்பொங்கலும் தைப்பொங்கலும்

தம்பி,

தெரிகிறது, தெரிகிறது, உன் முகத்திலே அழகு பொங்கி நிற்கும் காரணம்- புத்தாடை அணிந்துள்ள உன் நடை, காட்டுப் பாதையில் செல்லும் வேழம், வேங்கையின்மீது உராய்ந்து செல்லும் போது ஏற்படுவது போன்ற ஓசையை அல்லவா எழுப்புகிறது? கிளியும், புறாவும், நாகண வாயும், சிட்டும், குயிலும், மயிலும், காட்சிக்கினிய பொருளனைத்தையும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் கலந்துறவாடுவது போலன்றோ, இல்லம் விளங்கிட வேண்டுமென விழைகிறாய்!

என்ன அவசரம், ஏன் அவ்வளவு அவசரம்? சென்று சென்று பார்க்கிறாயே, பால் பொங்கிற்றா என்று! அன்னை அறிவார்களே, எத்துணை நேரம் தணலிடை இருந்தால் பொங்கிப் பதமாகும், புத்தரிசி என்பதனை! உனக்கேன் அந்தத் தொல்லை; ஓராயிரம் தடவை சென்று கேட்கிறாயே? ஓஹோ! உன்னை உற்றாரும் நண்பரும், கேட்கிறார்களா? பால் பொங்கிற்றா என்று! 'ஆம்' எனப் பதிலும் கூறவேண்டுமா- அகத்தினழகுதான் முகத்தில் தெரிகிறதே!

அறப்போர் வீரனாக, அஞ்சா நெஞ்சனாக, அடக்குமுறையை எதிர்த்து நிற்போனாக, மடமையிலாழ்ந்து விட்ட மக்களிடை அறிவு கொளுத்துவோனாக, ஆதிக்க வெறி பிடித்தலையும் ஆட்சியை எதிர்த்து ஆற்றலுடன் பணிபுரிவோனாக- இவ்விதமெல்லாம் உன்னைக் கண்டு, உளம் பூரிக்கிறேன். இன்று, உன்னை விழாக்கோலத்தில் காண மகிழ்கிறேன். இல்லத்தில் ஒளியளித்து, களிப்புடன் விருந்துண்டு உலவும் நிலையில் உன்னை இங்கிருந்து காண்கிறேன். காட்சி, கவர்ச்சி தருகிறது- பார்த்ததும்; ஒரு கணம் பிறகோ...!

ஊர் விழாக்கோலம் கொள்ளவேண்டும்; இசையும் கூத்தும், உடற்பயிற்சி விளையாட்டுக்களும் இன்ன பிறவும் நடைபெறவேண்டும்! தமிழரின் தொன்மை பற்றியும், மூதாதையர் காலத்தில் இருந்த பொலிவு பற்றியும், அஃதே பிறகு நலிவாக மாறிவிடும்படி செய்த நயவஞ்சகர் போக்குப் பற்றியும் முத்தமிழ் மூலம் ஆர்வமூட்டி வருதல் வேண்டும்.

எனினும், இந்த ஆண்டு ஒரு பெரிய மனக்குமுறலுக்கு இடையிலேயே இந்த விழா கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

நமக்கு வந்துற்ற இடரும் இன்னலும் எத்தகைய நெஞ்சுறுதி கொண்டோரையும் நிலைகுலையச் செய்வதாகவே இருக்கிறது.

தம்பி! நாம் அடிமைப்பட்டு, வாழ்விழந்து தன்மானம் அழிக்கப்பட்டுத் தத்தளித்துக் கிடக்கிறோம்- மனம் எதுபோல் உளது




என்பதை, அதோ மத்திடைத் தயிர் காட்டும்!

விழா நாளன்று விசாரம் ஆகாது எனினும், எண்ணிடும் போது நெஞ்சு பதைத்திடாது இருக்குமோ! எண்ணாது விடத்தான் இயலுமோ!

ஆட்சியாளரின் பிடியுடன் தொல்லை விட்டதோ! இல்லை! எல்லையைக் களவாடி, ஏனையோரும், நமது திராவிட இனத்தினராம் தெலுங்கரும், மலையாளிகளும், இனத்தையும் மறந்த நிலைகொண்டு மொழிவழி அரசு எனும் உரிமையையும் இகழ்ந்து, தமிழருக்கு உரிய பகுதிகளைக் கவர்ந்துகொண்டு, வட்டாட்டமாடுகின்றனர்; இதனைக் கண்டு நீதி வழங்கும் நேர்மையற்று, பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர் ஆட்சியாளர்.

விழாவின்போது இவை பற்றி எண்ணாமலும், மக்களிடம் எடுத்து இயம்பாமலும் இருத்தல் இயலுமா? எண்ணிடும்போதோ, விழாக் கோலமே கலைகிறது; வேதனை பொங்கி வழிகிறது; 'எந்தமிழர் நாட்டிலே ஏன் இந்த அவலநிலை'- என்றெண்ணி வாட நேரிடுகிறது. இம்மட்டோ! அந்தோ! தமிழகம் பெற்றுள்ள வடு, இயற்கையின் கோரத் தாண்டவத்தால் ஏற்பட்டுவிட்ட புண்- எண்ணும்போதே, கண்ணீர் கன்னத்தில் புரள்கிறது; கையறைந்து, முகத்தில் மோதிக் கொண்டு கதறும் நிலைக்குச் செல்ல வேண்டி வருகிறது. எனினும், என் செய்வது! விழா, திங்கள்தோறும் வருவதன்று- ஆண்டுக் கோர் விழா: எனவே, கண்ணீரைத் துடைத்துக்கொண்டேனும் அதனைக் கொண்டாடுகிறோம்!

'நேரிட்டுவிட்ட பேரிடியினால் நெஞ்சு ஒடிந்து கிடக்கும் நிலையினை ஓரளவுக்கு மாற்றிக்கொள்வதற்கேனும், விழா பயன்படாதா'- என்ற ஆசை வேறு, உந்துகிறது.

செங்கரும்பு, பலா, மா, வாழை, செந்நெல், ஆவின்பால், புத்தாடை- ஏதேதோ தரலாம், தம்பி, உனக்கு! ஆனால், என்ன செய்வது? இவைகளை எல்லாம்விட, என் 'அன்பு' இம்மலர் மூலம் உனக்குக் கிடைத்திடச் செய்தலே முறை என்று எண்ணினேன். உன்னிடம் கூறவேண்டுமென்று எண்ணிய கருத்துக்கள் பல; பலப்பல; ஒரு சிலவற்றைத்தான் கதை, கட்டுரை வடிவாக்கி அளித்திட முடிந்தது. இவற்றினைப் பார்க்கும்போது, உன் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் வேறு பல நற்கருத்துக்களை ஒழுங்குபடுத்தி, வரிசைப்படுத்தி, நற்செயலுக்கு உறைவிடமாக்கி, நமது நாட்டினுக்கு நல்கி, பொங்கலன்று காணும் மகிழ்ச்சி நாட்டின் பொதுமகிழ்ச்சி ஆவதற்கான நற்பணியாற்றிட வரவேண்டும் என்று அழைக்கிறேன்- உரிமையுடன்- நம்பிக்கையுடன்.

'இன்று கூடவா, அண்ணா!' என்றா கேட்கிறாய்?

சரி, சரி போ! போ! அதோ பொங்கும் இன்பத்தைப் பெறு; பொலிவு கண்டு அகமகிழ்ந்திரு; உள்ளம் நிறைந்திடும் உவகையுடன் உரையாடிக் களிப்புற்று இரு; நின் இல்லம் இன்பப் பூங்காவாகத் திகழட்டும்; அங்கு அறிவு மணம் கமழட்டும்; அன்பு பொங்கட்டும்; அறம் தழைத்திடத்தக்க அரும்பணியாற்றிடும் ஆற்றல் எழட்டும்.

பொங்கற் புதுநாளன்று என் அன்பு நிறைந்த வாழ்த்துதலை வழங்கி மகிழ்கிறேன்.

அதோ, பெற்றோர் அழைக்கிறார்கள் போலும்; சென்று, செங்கரும்பின் சாறன்ன அன்புரை பெற்று இன்புற்றிரு!


அன்பன்,

அண்ணாதுரை.



படிப்பகம்

www.padippakam.com




நடிகை ஜோதி மீனாவுக்கு தொழில் விரோதி வேறு எங்கும் இல்லை. பக்கத்திலேயேதான் இருக்கிறார். இன்று கவர்ச்சியில் அவருக்குக் கடும் போட்டி- அவர் அம்மா ஜோதி லட்சுமிதான்.

-ஜூ.வி.ஷோ துணுக்கில்... 7.5.97 ஜூனியர் விகடனில்-

அந்த விபத்தைத் தடுத்துவிட மதுமிதா எவ்வளவோ முயன்றும் முடியாமல்போனது. இவள் சரியாக இடது புறம் காரை ஓட்டிக் கொண்டிருந்தாலும், எதிர்ப்புறம் இடது புறமாக வர வேண்டிய அந்த மோட்டார் பைக், வலது புறமாக படுவேகத்தில் வந்தது. தூரத்திலேயே அதைக் கவனித்திருந்தாலும், சமாளித்திருக்கக்கூடும்.

திருப்பத்தில் வந்த சீறல் அது. உடனடியாகக் காரை வலது புறம் திருப்ப முயன்று, அதே சமயம் பின்புறம் ஒரு லாரி வேகமாக இவள் காரை ஓவர்டேக் செய்யும் முயற்சியில் இருப்பதைக் கடைசித் துல்லிய வினாடியில் கணித்து, உடனே மறுபடி இடது புறமே காரைத் திருப்பியதில் ஏற்பட்ட தடுமாற்றத்தில், மதுமிதாவின் கார் இடது ஓரத்தில் இருந்த விளக்குக் கம்பத்தில் பெரிய சத்தத்துடன் மோதியது. பைக்வாலா சறுக்கிக் கொண்டே தொலைதூரம் சென்றான். மதுமிதா உடனடியாக நினைவிழந்தாள்.

அந்த நட்சத்திர மருத்துவ் மனையில் ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியில் துர்க்காவும், ஈஸ்வரும் பதை பதைப்போடு காத்திருந்தார்கள்.

"கால்ல சின்ன ஆபரேஷன்தான்னு சொன்னாங்க. ஆனா ஒரு மணி நேரத்துக்கும் மேல ஆயிடுச்சேங்க!"

"உயிர் பொழைச்சதே பெரிய விஷயம் துர்க்கா."

"நல்லவேளை... நீங்க பின்னாடியே வந்ததால உடனே உங்க கார்ல தூக்கிப் போட்டுட்டு வந்துட்டீங்க... ரொம்ப இரத்தம் போயிருச்சா?"

"முன் பக்கம் அப்படியே நசுங்கினதால அவளோட லெஃப்ட் லெக் சிக்கிடுச்சு. ஆனா துண்டாகலை. வலி தாங்காம மயக்கம் போட்டுட்டா."

"அந்த பைக்ல வந்தவனுக்கு என்ன ஆச்சு?"

"உடம்பெல்லாம் சிராய்ப்பு! ஆனா உணர்வு இருந்துச்சி. தப்பு அவன் பேர்லதான். அதனால அவன் உடனே பைக்கை நிமிர்த்திக்கிட்டுப் பறந்திட்டான்."

"வணக்கம் சார்" என்ற குரலுக்குத் திரும்பினார்கள்.

பத்திரிகை நிருபர் ரவி நின்றிருந்தார்.

"மதுமிதாவுக்கு ஆக்ஸிடெண்டாமே... அப்படியா?"

"அதுக்குள்ள உங்களுக்கு தகவல் வந்துடுச்சா?"

"இதுவே லேட் சார்.. ஆக்ஸிடண்ட் நடந்து ரெண்டு மணி நேரமாச்சாமே... எப்படி சார் மேஜரா?"

"இல்லை... மைனர் தான்!"

"ஹெட் இன்ஜுரியா?"

"அதெல்லாம் எதுவும் இல்லை. கால்ல தான் அடி. ஆபரேஷன் நடந்திட்டிருக்கு."

"கார்ல வேற யாரு இருந்தாங்க?"

"அவ மட்டும் தான் இருந்தா"

"என்னாச்சு? பிரேக் பிடிக்கலையா?"

"எதிர்ல பைக்காரன் ராங் சைடுல வந்துட்டான். அவன் மேல மோதிடக் கூடாதுன்னு சமாளிக்கிறதில பேலன்ஸ் போய் லைட்போஸ்ட்ல மோதிட்டா."

"மயக்கமாயிட்டாங்களா?"

"ஆமாம்"

"ஓட்டறப்பவே மயக்கத்திலே இருந்தாங்களா?"

"என்னது?"

"ஏதாச்சும் பார்ட்டிக்குப் போய் திரும்பிட்டிருந்தாங்களான்னு கேட்டேன்..."

"ஏம்பா நீ வேற! போதும். போயிட்டு அப்புறம் வாங்க."

ரவி நேராக ரிசப்ஷனுக்குப் போய் தன் பத்திரிகை அலுவலகத்துக்கு ஃபோன் செய்யத் துவங்க, ஈஸ்வர் பாக்கெட்டிலிருந்து பீடா கவர் எடுத்தார். பின்னை ஜாக்கிரதையாக நகத்தால் நீக்கி எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு பீடாவை வாயில் போட்டுக் கொண்டார்.

"யாருன்னு தெரிஞ் சிக்கிட்டீங்களா?" என்றாள் துர்க்கா.

"எது பைக்ல வந்தவனா?"

"அதில்லை. அவ பார்க்கப் போனது யாரைன்னு கேட்டேன். அதைத் தெரிஞ்சுக்கத்தானே அவ்வளவு அவசரமா உங்களை அவ பின்னாடியே அனுப்பி வைச்சேன்."

"டிஸ்கோ ஹால்ல அவங்க நுழைஞ்சிட்டாங்க. ஜோடி இல்லாம என்னை உள்ளே விட முடியாதுன்னுட்டான். தூரத்திலிருந்து அவன் பின் பக்கத்தைத் தான் பார்த்தேன். நல்ல உயரம். அகலமான தோள். கரு கருன்னு தலை. ஸ்டைலான டிரெஸ். அவ்வளவுதான் கவனிக்க முடிஞ்சுது."



## பட்டுக்கோட்டை பிரபாகர்

"எதுக்குத்தான் நீங்க பிரயோஜனம்?"

"அலுத்துக்காதே! இந்த ஆக்ஸிடெண்ட் நமக்கு ஒரு விதத்தில சௌகரியம்தான்."

"என்ன சௌகரியம் இதுல?"

"நிலைமையைப் பார்த்தா பத்து நாளைக்காவது பெட்ல இருக்கச் சொல்லிடுவாரு டாக்டர். அவளோட இரகசிய கல்யாணத் திட்டத்தை வேற வழியே இல்லாம தள்ளி வைச்சாகணும். நீ ஒண்ணு செய்யி...!"

"என்ன?"

"மதுமிதாவுக்கு இப்படி அடி பட்டிருக்குன்னு தெரிஞ்சதும் அவன் நிச்சயம் துடிச்சிப் போயிடுவான். நேர்ல பார்க்க வருவான். இல்லை, அட்லீஸ்ட் ஃபோன்ல யாவது பேசுவான். அவகூட துணைக்கு நீதான் இருக்கப் போறே... கண்கொத்திப் பாம்பு மாதிரி அவளை கண்காணிச்சுக்கிட்டே இரு. அவளோட காதலன் யாருன்னு மட்டும் தெரிஞ்சி என்கிட்டே சொல்லிடு."

"சொல்லிட்டா?"

"மிச்சத்தை நான் பார்த்துக்கறேன்"

"பார்த்துக்கறேன்னா?"

"உனக்கு என்ன நடக்கணும் துர்க்கா?"

"அவ இப்படி திடுதிப்புன்னு கல்யாணம் பண்ணிட்டுப் போயிடக்கூடாதுங்க. ஏகப்பட்ட சிக்கலைச் சந்திக்க வேண்டியதாயிடும்."

"அதத்தான் நான் பார்த்துக்கறேன்னு சொன்னேன்."

ஈஸ்வர் பீடாவின் குதப்பலைத் துப்ப, வாஷ்பேசின் தேடி நடந்தார். துர்க்கா எதிர்ப்புறம் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள்.

மதுமிதா கண்விழித்தபோது, காலில் இரும்பு வைத்துக் கட்டியது போல உணர்ந்தாள்.

வலது காலில் பெரிய பாண்டேஜ் போடப்பட்டு உயரமாக இழுத்துத் தொங்க விடப்பட்டிருந்தது.

மசமசப்பிலிருந்து முழுப் பார்வைக்கு வந்தபோது, அருகில் இருந்த அம்மா, அவள் தோளில் கை வைத்தாள்.

"கவலைப்படாதே மது. பெருசா எதுவும் இல்லை. சின்ன ஆக்ஸிடெண்ட்தான் இது."

"உனக்கு ஏமாற்றமாப் போயிடுச்சாம்மா?"

"என்ன கேக்கறே?"

"பெரிய ஆக்ஸிடெண்ட்டா எதுவும் நடக்கலையேன்னு ஏமாற்றமாப் போயிடுச்சான்னு கேட்டேன்."

"என்னடி பேச்சு இது? தகவல் தெரிஞ்சு பதறிக்கிட்டு ஓடிவந்து ஆபரேஷன் தியேட்டர் வாசல்ல உயிரைக் கைல பிடிச்சிக்கிட்டு காத்திருந்ததுக்கு இப்படி ஒரு குத்தல் பேச்சா? எந்த அம்மாவாவது பொண்ணுக்கு விபத்துன்னா சந்தோஷப்படுவாளா?"

மதுமிதா பேசாமல் இருந்தாள்.

"உனக்கு புத்தி ரொம்ப வக்கிரப் பட்டுப் போச்சி!"

"சரி... டாக்டர் என்ன சொன்னார்?"

"இருபது நாள் நீ இங்கே இருந்தாகணுமாம்!"

"இருபது நாளா? என்ன ஆச்சு கால்ல?"

"எலும்பு முறிஞ்சு உள்ளே சதையில குத்திருச்சி. உடைஞ்ச இடத்தில எவர் சில்வர் பிளேட் வெச்சு போல்ட் போட்டிருக்காங்க! எலும்பு சேர்ந்ததும் கொஞ்ச நாள் கழிச்சி அந்த பிளேட்டை ஆபரேஷன் செஞ்சி எடுத்திடலாம்."

"என்னால நடக்க முடியுமாம்மா?"

"அதெல்லாம் முடியும். ஆனா, இருபது நாளைக்கு கால அசைக்கக் கூடாதாம். இப்படியேதான் இருக்கணுமாம். தைரியமா இரு மதுமிதா."

மதுமிதா அமைதியானாள். கண்களை மூடிக் கொண்டாள்.

'ஏன் இந்த தண்டனை இறைவனே? என்ன தப்பு செய்தேன்? இன்னும் நான்கு தினங்களில் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து வைத்திருந்தேனே... வாழ்வின் முக்கியமான திருப்புமுனை முடிவை யோசித்து யோசித்து வடிவமைத்து செயலுக்குக் காத்திருந்தேனே...'

"பசிக்குதா மதுமிதா?"

"இல்லை."

"ஜூஸ் ரெடியா இருக்கு. பசிக்கிறப்ப கேளு."

"அம்மா!"

"என்ன?"

"டாக்டரைப் பார்க்கணும்!"

"ஈவினிங் ரவுண்ட்ஸ் வர்றப்ப பார்க்கறேன்னு சொல்லிட்டுப் போயிருக்கார் மது."

"பேப்பர்ல வந்துடுச்சா?"

"எல்லாப் பேப்பர்லையும்... நிறைய பேர் ஃபோன் செஞ்சாங்க. நேர்லு வந்தாங்க. ரெண்டு நாளைக்கு அப்புறம்தான் விசிட்டர்சை அலோ செய்யறது நல்லதுன்னு டாக்டர் சொல்லிட்டார்."

அம்மா மூக்குக் கண்ணாடி அணிந்து தினசரி இதழ் ஒன்றைப் புரட்டி, அவள் விபத்து பற்றி வந்த செய்தியைக் காட்டினாள். டெலிஃபோன் ஒலித்தது. துர்க்கா எடுத்தாள்.

"சந்திரசேகர் பேசறேன். மதுமிதா கிட்டே பேசமுடியுமா?"

"சந்திரசேகர்னா எந்த சந்திரசேகர்?"

மதுமிதாவின் கவனம் சட்டென்று திரும்பியது. "அம்மா கொடு. நான் பேசிக்கறேன்."

துர்க்கா ரிசீவரை அவளிடம் தர, "அம்மா, நீ கொஞ்சம் வெளில இருக்கியா? நான் பர்சனலா பேசணும்," என்றாள் மதுமிதா

(தொடரும்)

## யார் இவர்கள்?



1



2



3



4

முதல் படத்தில் உள்ள குழந்தை இன்று வணக்கத்துக்குரிய பெருமகனார். இரண்டாவது படத்தில் உள்ளவரும் அப்படித்தான். இவர் பெயர் உங்களுக்கு தெரிய'லாமா'?

மூன்றாவது படத்தில் இருப்பவர் சாள்ஸ்-டயானாவுடன் சம்பந்தமுள்ளவர்.

நான்காவது படத்தில் உள்ளவர் பெரிய கில்லாடி. அமெரிக்காவுக்கே சவால் விடுபவர். கண்டுபிடிக்க முடியாவிட்டால் பதினெட்டாம் பக்கம் செல்க.

## அனுபவம் புதுமை

எம்.ஒ.மத்தாய், இவர் ஒரு மலையாளி. மறைந்த பிரதமர் நேருவின் நேரடி உதவியாளர். நேருவின் மறைவிற்கு பல ஆண்டுகளுக்குப்பின் 'நேரு காலத்து நினைவுகள்' என்ற புத்தகத்தை எழுதி பரபரப்பு ஏற்படுத்தியவர். நேருவின் அந்தரங்கங்களை அறிந்தவர் இவர் என்பதால், இந்தப் புத்தகம் வெகு வேகமாக விற்பனையாகித் தீர்ந்தது.

அப்புத்தகத்தில் இருந்து ஒரு பகுதி:

**நேரு** 1947ல் குளிர்காலத்தில் லக்னோவுக்கு வருவதாக இருந்தார். சரோஜினி நாயுடு, அப்போது உ.பி. ஆளுநராக இருந்தார். நேரு, பத்மஜாவை திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்று ஒரு வதந்தியைப் பரப்பினார். பத்மஜாவும் மிக்க பரபரப்போடு இருந்தார். ஆனால், லேடி மவுண்ட் பேட்டனுடன், நேரு வந்து சேர்ந்ததும், பத்மஜா சீறினார். 1948-ல் பத்மஜா அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே, அவர் நேருவின் வீட்டிற்கு வந்து, பக்கத்து அறையில் தங்க ஆரம்பித்தார்.

'இவர் இப்படியே நிரந்தரமாகத் தங்க ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது?' என்கிற நிலைமை ஏற்பட்டபோது, 'கிழக்கிந்திய நாடுகளுக்கு சுற்றுலா போகும், மவுண்ட் பேட்டனின் மனைவி, வழியில் நேரு வீட்டில் தங்குவார்,' என்று பத்மஜாவிடம் தெரிவிக்கப்பட்டது. உடனே பத்மஜா கோபித்துக் கொண்டு வெளியில் போய் தங்கினார்.


இந்திராவைக் கூப்பிட்டனுப்பி, நேரு தனக்கு எழுதிய கடிதங்களை எல்லாம், தான் திருப்பிக் கொடுக்க விரும்புவதாகவும், தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகவும் சொன்னார் பத்மஜா!

உடனே, இந்திரா என்னிடம் வந்து இந்த விஷயத்தைச் சொன்னார். நான் சிரித்தேன்!

ஒரு வருடம் கழித்து, நேருவின் படுக்கை அறையில் லேடி மவுண்ட் பேட்டனின் இரண்டு புகைப்படங்கள் மாட்டப்பட்டிருப்பதைப் பார்த்து பத்மஜா தன் படம் ஒன்றையும் நேரு பார்க்கும் படியாக மாட்டி வைத்தார். ஆனால், நேரு அதை அப்புறப்படுத்திவிட்டார்.

காசியிலிருந்து ஷாரதா மாதா என்ற பெண் சந்நியாசினி 1948ல் டில்லி வந்தார். நேரு அவருக்குப் பேட்டியளித்தார். சந்நியாசினி ரொம்ப அழகாக, இளம்

## நேரு கிழித்த கடிதங்கள்



வயதினளாக இருந்தாள். அதன் பிறகு அவள் அடிக்கடி நேருவைப் பார்க்க வந்து போய்க் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் ஷாரதா மாதா திடீரென்று மறைந்துவிட்டார். 1949 நவம்பரில் பெங்களூரில் இருந்த ஒரு கன்னிமடத்தினர், ஒரு கட்டுக் கடிதங்களை ஒரு ஆள் மூலம் கொடுத்தனுப்பினார்கள்.

வட மாநிலத்திலிருந்து ஒரு பெண் தங்கள் கன்னிமடத்திற்கு வந்தாள் என்றும்,

> “பாலியல் என்றதும் காந்தி ஏன் இத்தனை பிரச்சனையாக நினைக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை பாலியல் உணர்வு தவறல்ல. அந்த உணர்வு எனது பணிகளிடம் இருந்து என்னைத் திசை திருப்புவதும் இல்லை”
>
> நேரு

அவள் ஒரு ஆண் சிசுவைப் பெற்றெடுத்தாள் என்றும், தான் யார் என்று சொல்ல மறுத்துவிட்டாள் என்றும், குழந்தையையும், இந்தக் கடிதக் கட்டையும் அங்கு விட்டு விட்டு, எங்கோ போய்விட்டாள் என்றும், இந்தியில் எழுதப்பட்ட அந்தக் கடிதங்கள் பிரதம மந்திரியால் எழுதப்பட்டவை என்று அறிந்து, அனுப்பியுள்ளதாகவும், கன்னிமடத் தலைவி (வெளிநாட்டு மாது) வந்தவரிடம் குறிப்பு அனுப்பி இருந்தார்.

இது விஷயங்கள் நேருவுக்குச் சொல்லப்பட்டன. அவர் கடிதங்களை வாங்கிக் கிழித்தெறிந்தார்.

சுபாஷ் சந்திரபோஸைப் பற்றிய ஒரு சம்பவம் இப்போது என் ஞாபகத்துக்கு வருகிறது. போசுடன் கூட இருந்த ஏ.ஸி.என்.நம்பியார் என்னிடம் சொன்னார்: ஜெர்மனியில், போசுடன் பணி புரிந்து கொண்டிருந்த ஒரு ஆஸ்திரியப் பெண், போஸ் மூலம் கருவுறவே, கருச்சிதைவு செய்ய வேண்டும் என்று போஸ் நினைத்தார். ஆனால், அவள் கருவுற்று பல மாதங்களாகி விட்டபடியால் கருச்சிதைவு ஆபத்தெனக் கருதப்பட்டது. அவளைத் திருமணம் செய்து கொள்ளவும் போசுக்கு விருப்பமில்லை. சீக்கிரமே, போஸ் ஒரு நீர் மூழ்கிக் கப்பலில் ஜெர்மனியை விட்டு ஜப்பான் சென்றுவிட்டார்.

லேடி மவுண்ட் பேட்டன் இந்தியாவை விட்டுப் பிரிந்து போன பிறகும், நேருவுக்கு கடிதங்கள் எழுதுவார். 'அவருக்கு' என்று போடப்பட்டு வரும் அந்தக் கடிதத்தை மட்டும் பிரிக்க எங்களுக்கு உரிமை கிடையாது. அதை நேருவே நேரடியாகப் பிரித்துப் படிப்பதுதான் வழக்கம்.



படிப்பகம்

www.padippakam.com

# புதிய தொடர் 5

எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி சஸ்பென்ஸ் கலந்து எழுதிய விறு விறு நாவல்.

# இனி என் முறை

எழுத்துச் சித்தர் பாலகுமாரன்

குழந்தைகள் நிறையக் கற்றுக் கொள்ளுகிறார்கள். திலீப்புக்கு நீச்சல், கராத்தே, யோகா எல்லாம் சொல்லித் தர வேண்டும். அவன் அப்பாவைவிட பெரிய ஆளாய் வரவேண்டும்.

மொபெட்டில் பிள்ளை உட்கார்ந்து இடுப்பைப் பிடித்துக் கொண்டான். அமுதா ஒரு நிமிஷம் யோசித்தாள். சரி. பிடித்துக் கொள்ளட்டும் என்று வண்டியை விரைவாக்கினாள்.

இரவு எட்டு மணிக்கு ஃபோன் வந்தது. செல்வராஜ் ஃபோன் செய்தான். நாலு நாள் ஆகுமாம். எஸ்கார்ட் வேலை தான். பெரிய புள்ளிகளை பெங்களூர் விட்டு நகர்த்த முடியவில்லையாம். லோக்கல் தொந்தரவாம்.

"பையனை ஸ்விம்மிங்ல சேர்க்கறது பத்தி யோசனை பண்ணினியா?"

"சேர்ந்துட்டான்."

"என்னிக்கு?"

"இன்னிக்கு."

"வெரிகுட்." செல்வா சந்தோஷப்பட்டான். அமுதாவுக்கும் சந்தோஷமாய் இருந்தது. புருஷன் பிரிவு பெரிதாய் தெரியவில்லை.

'நாளை ஸ்விம்மிங் போக வேண்டும்' என்கிற நினைப்பே அதிகம் இருந்தது.

"நாலாவது நாளே ஸ்விம் பண்றான் பார்த்தீங்களா?"

"ட்யூப் போட்டு தானே செய்யறான்."

"நாளைக்கு எடுத்துடுவேன்."

"பயப்படுவான்னு தோணுது. வீக்கா இருக்கான்."

"பலத்துக்கும் பயத்துக்கும் சம்பந்தமேயில்லீங்க. முட்டை, மீன், சிக்கன் சூப் தினம்கொடுங்க பயத்தை நான் மெள்ள மெள்ள எடுத்துடுவேன். இவங்க அப்பாவை வரச் சொல்லுங்க ஒரு நாள் ஸ்விம்மிங் பூலுக்கு. அவர் பார்க்கட்டும்."

"அவர் டெல்லில இருக்கார்."

"திலீப்! தலையைத்தூக்கி ஸ்விம்ங் பண்ணு மேன்." உட்கார்ந்த இடத்திலிருந்து இரைந்தான். ஷவருக்கு நேர் எதிரே உள்ள பளிங்கு கல் மேடையில் வாசுதேவனும், அமுதாவும் உட்கார்ந்திருந்தார்கள். வாசுதேவன் முழு உடுப்பில் இருந்தான். உதவியாளர்கள் இரண்டு பேர் நீரில் இருந்தபடி குழந்தைகளை உற்சாகப்படுத்தினார்கள். பெண்கள் இருவருக்கு பேக் ஸ்ட்ரோக் சொல்லிக் கொடுத்தார்கள். அதில் ஒரு பெண் போட்டிக்குத் தயாராகிறாளாம். பேய் நீச்சல் போட்டுக் கொண்டிருந்தாள்.

"மிஸ் கனகம்மா! புஷ் சரியா இல்லை. ஒவ்வொரு தடவை ஒவ்வொரு டைரக்‌ஷன்ல திரும்பறீங்க."

"டேய் தம்பி, அந்தப் பையனைப் பாரு தவிக்கறான். மேலேத்திவுடு."

"ஏன் இன்னிக்கு நீங்க இறங்கலையா.?"

"வொய்: எம்.ஸி.ஏ. போறேன் மேடம். உங்க இன்டர் ஸ்டேட் ஆளுங்க நாலு பேருக்கு கோச்சிங் தரேன்."

"நீங்க காம்படீஷன்ல......"

"நாலு தடவை இன்டர் ஸ்டேட்ல ஃபர்ஸ்ட் ப்ரைஸ் வாங்கிட்டேன். ஏஷியன் கேம்ஸ் போனேன். நம்ம பாச்சா அங்க எடுபடலை."

"இரண்டாவதா வந்தீங்களா?."

"இல்லை."

"வெண்கலமா?."

"இல்லை."

"பிறகு?"

"நான்தான் லாஸ்ட்."

"ஏன்?."

"எனக்கு சரியா கோச் அமையலை. சைனீஸ் லெவலுக்கு எனக்கு ஸ்பீட் இல்லை. ஹாட் வாட்டர் நீச்சல் குளம், பயம்."

"யாரும் திட்டலை?."

"திட்டா? செருப்பால அடிக்காத குறை."

"அப்புறம்?."

"அழுதேன். வந்து ஷவர்ல குளிச்சுக்கிட்டே விக்கி விக்கி பொம்பளை மாதிரி அழுதேன். சரி நமக்கு முடியலை. நாம நாலு பேருக்கு உற்சாகம் கொடுப்போம்னு."

"இந்த கோச்சிங்ல வர காசு தானா?."

"காசு இருக்கு மேடம். வீடு இருக்கு. வாடகை வருது. பெட்ரோல் பங்க் இருக்கு. இலட்சியம் அடைய முடியலையேன்னு வேதனையும் இருக்கு."

"ட்ரை பண்ணலாமே."

"வயசாயிடுச்சு. பதிமூணு வயசுலேர்ந்து பதினெட்டு வயசு தான் இதுக்கு சரி. அப்புறம் உடம்பு அகலமாயிடும். அந்த லெவலுக்கு நீச்சலடிக்க முடியாது. உங்க பையன் மாதிரி நாலு பேர் கிடைச்சா எனக்கே எனக்குன்னு கிடைச்சா..... வருஷக்கணக்குல ட்ரையினிங் பண்ணி, ஒலிம்பிக் வரைக்கும்........ சரி அது கிடைக்கறதும் கஷ்டம். பசங்க படிப்பு முக்கியம். நான் வரட்டுங்களா? வெங்கடேஷ் பசங்களைப் பார்த்துக்க. அஞ்சு மணிக்கு மேலே எடுத்துரு. குட்நைட். பாய்ஸ் குட்நைட் எவ்ரிபடி" –குனிந்து குளத்தில் இருக்கிறவர்களுக்கு வணங்கினான்.

சகலரும் திரும்பி கையசைக்க, திலீப் மட்டும் தவறு செய்தான். எட்டடி சுழற்றி ட்யூப்போடு நேரே நின்று நீரில் பௌவ் செய்தான். 'பௌாக்' என்று தலை உள்ளே போய் கால் மேலே வந்தது. சிரித்தார்கள். மேலே ட்யூப் கொண்டு வரும் என்று நம்பினார்கள்.

வாசுதேவன் நகர்ந்தான். ஹெல்மேட் போட்டுக்கொண்டான். 'தடாப்' என்று ட்யூப் மேலே வந்தது. திலீப் தலை வெளியே வந்து திணறி தவித்து ட்யூப்புக்கு கை நீட்ட, வெள்ள வேகத்தில் நீரடித்து ட்யூப் நகர்ந்து போனது. திலீப் உள்ளே போனான்.

"திலீப்" சின்ன கூச்சலோடு அமுதா எழுந்தாள்.

வாசுதேவன் திரும்பினான்.

பையன் தலை வெளியே வந்து திணறி உள்ளே போயிற்று. வெங்கடேஷ் என்கிற உதவியாளன் எகிறி கரையேறி திலீப் என்று கூவினான்.

வாசுதேவனுக்குப் புரிந்துவிட்டது.

ஹெல்மேட் கழட்டி, தரையில் உதறி முழு உடுப்போடு நீரில் பாய்ந்தான். ஒரே எட்டில் பிள்ளையை அடைந்தான். கொத்தாய் மேலே தூக்கினான். ஒரு உதையில் கரை திரும்பினான்.

"திலீப், திலீப்" அமுதா பதறினாள். கரையில் நின்று பையனை வாங்கினாள்.

"ஒன்னுமில்லை, ஒன்னுமில்லை, விடுங்க"

பிள்ளை துவண்டு தரையில் சரிந்தது. கன்னத்தில் அடிக்க தலை சிலும்பியது.



புரட்டி முதுகு அழுத்த 'குபுக்' என்று நீரை வாந்தியெடுத்தது. சகலரும் கரையேறினார்கள். சூழ்ந்து கொண்டார்கள்.

"திலீப், திலீப்" புரட்டி நிமிர்த்தி கன்னம் தட்ட, மறுபடி நீர் வெளியே வந்தது. எழுந்து இடுப்பைப் பிடித்து கரகரவென்று சுழற்ற, மேலும் கொப்பளித்தது.

"திலீப் நில்லு, நில்லு!"

பிள்ளை தள்ளாடி நின்றது. மாஸ்டரை கெட்டியாய் பிடித்துக் கொண்டது. ஓவென்று பயத்தில் அழுதது.

"குட். ஒன்னுமில்ல, ஒன்னுமில்ல போங்க"

"உட்கார வையுங்கள். படுக்க வேணாம். சாச்சாப்பல உட்கார வையுங்க. டவல் எடு. உடம்புல போர்த்து!"

"தண்ணீல பௌவ் பண்ணிட்டான் சார். ட்யூப் ஸ்லிப் ஆயிடுச்சு." ஹெல்பர் பேச வாசுதேவன் அவனைக்கூட்டத்தை விட்டு நெட்டித் தள்ளிக் கொண்டு போனான். பளீரென்று அறைந்தான்."ஒருத்தன் தண்ணீல ஒருத்தன் கரைல இருங்கன்னு பலதடவை சொல்லியிருக்கேனில்ல. உனக்கு இன்னிக்கு கரை ட்யூட்டி தானே? ஏன் இறங்கின?"

"சார்."

"பின்னிடுவேன் உன்னை. போ வெளியே!"

அமுதா பையனை நெஞ்சு நீவி விட்டாள். மார்பில் கை வைத்துப் பார்த்தாள். வாசுதேவன் ஓட்டல் சிப்பந்தியைக் கூப்பிட்டு காபிக்கு ஆர்டர் செய்தான். சட்டையை மெல்ல கழட்டினான். பேண்ட் பாக்கெட்டிலிருந்த பர்ஸ் காகிதங்கள் எடுத்துப் போட்டான். சகலமும் நனைந்திருந்தன. ஷூக்களை களைந்தான். டவல் கட்டிக்கொண்டு பேண்ட் உருவிப்போட்டான்.

"ஐயம் ஸாரி மேடம்."

"அதனால என்ன.. என் பையன் தப்பு பண்ணிட்டான். தினம் மாஸ்டரை பௌவ் பண்ணிட்டு வரணும்ங்கறத தண்ணீல செஞ்சுட்டான்."

"தப்பு என்னுது மேடம். நான் பேண்ட் ஷர்ட் போட்டு கிளம்பினது தப்பு. இவங்களை நம்பினது தப்பு. உங்கக்கிட்ட பேசினது தப்பு."

"பேசினதா?"

"உங்க பையன் மாதிரி நாலு பையன் வேணும்னு கேட்டது தப்பு. நான் பேட்லக்கோட பிறந்தவன். நான் இதுக்கெல்லாம் ஆசைப்படறது தப்பு."

"சேச்சே. என்னங்க இது?"

"நிஜம் மேடம். நிஜம் அது. எனக்குத்தான் தெரியும். திலீப் ஆர் யூ ஆல்ரைட்?"

"யெஸ் மாஸ்டர்."

காபி குடித்து பிள்ளை உடுத்தி ஷூக்கள் அணிந்து, மாஸ்டர் எதிரே போய் "குட்நைட் மாஸ்டர்" என்று பௌவ் செய்தது. வாசுதேவன் விரல்களால் கண்களைப் பொத்திக் கொண்டான். கண் திறக்க, கண்கள் நீர் கோர்த்து, பளபளத்தன.

"குட்நைட் மை ஸன், குட் நைட்."

குனிந்து வணங்கினான். பிள்ளையை அருகே போய் தழுவிக்கொண்டான். "கடவுளே உனக்கு வந்தனம்." சுத்தமான ஆங்கிலத்தில் சத்தமான குரலில் ப்ரேயர் சொன்னான்.

"நாளைக்கு வருவியா திலீப்?"

"வருவேன் மாஸ்டர்!"

"நீ வரணும். மாஸ்டருக்காக வரணும். குட்நைட்." மறுபடி குனிந்து வணங்கினான்.

பிள்ளை படியிறங்குகிறவரைக் கூடவே வந்தான். படி விளிம்பில் கை கூப்பி மறுபடி அமுதாவிடம் மன்னிப்புக் கேட்டான்.

மறுநாள் மழை. ஸ்விம்மிங்கில யாருமே இல்லை. அடுத்தநாள் வெய்யில் புழுக்கமான வெய்யில் ஹெல்மெட்டுக்குள் தலை முடி கசகசத்தது. நீச்சல் குளத்தில் குழந்தைகள் பெரும் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள். திலீப் அவசரமாக சட்டை கழற்றி ஷவரில் நின்று, ட்யூப் இடுப்பில் போட்டு 'தொளேர்' என்று நீரில் குதித்தான். கால் உதைத்து கை வீசி நீந்தினான்.

அமுதா கூலிங் கிளாஸ் மாட்டிக் கொண்டு சகலரையும் கவனித்தாள். வாசுதேவனைத் தேடினாள். வாசுதேவன் நீரில் இருந்தான். ஒவ்வொரு குழந்தையாக எதிர்க் கரைக்கு அனுப்பினான். எதிர்க் கரையில் வெங்கடேஷ் நடுவில் இன்னொரு பையன். திலீபின் கவிழ்தலால் ஜாக்கிரதை அதிகமாய் இருப்பது தெரிந்தது.

வாசுதேவன் பேச வரவில்லை. எல்லாக் குழந்தைகளும் கரை ஏற கடைசியில் அவன் கரையேறினான். ஷவரில் குளித்தான். ஈரம் துவட்டாமல் துண்டு சுற்றி குழந்தைகளுக்கு வணக்கம் சொன்னான். குழந்தைகள் வணங்கின.

"நாளைக்கு ட்யூப் எடுத்து நீந்த அனுப்புவேன் மேடம். பயம் தெளிஞ்சிருச்சு திலீபுக்கு."

"திலீபை விட நீங்க பயந்து போயிருக்கீங்கன்னு நினைக்கிறேன். நீச்சல் குளத்தை விட்டு வெளியே வரவேயில்லையே!"

"திலீப் அப்பா வந்து என்ன சொல்லப் போறாங்கற பயம் இன்னும் இருக்கு."

"பயப்படாதீங்க. சொல்லமாட்டேன்."

"திலீப் சொல்லிடுவான்."

"அவன் கிட்டயும் சொல்லிட்டேன், அப்பாகிட்ட இதுபத்தி பேசாதேன்னு, பேசமாட்டான்."

"தேங்க் யூ. நாளைக்கு வாங்க!" கரம் கூப்பினான். "அப்புறம் ஒரு விஷயம்."

"என்ன?"

"கூலிங் க்ளாஸ் புதுசா?"

"இல்லை. ஏன்? வெய்யில்னு போட்டுக்கிட்டேன்."

"கூலிங்க்ளாஸோட உங்களைப் பார்த்தா கோபமா இருக்கறாப் போல இருந்துச்சு. அதுவும் ஒரு ரீஸன், நான் ஜலத்தை விட்டு வராததுக்கு."

அமுதா சிரித்தாள். "அப்படியா? அப்ப போடலை!" கழட்டினாள். கரம் குவித்தாள் படியிறங்கினாள்.

மறுநாள், அதற்கு மறுநாள், திலீப் ட்யூப் இன்றி நீந்தினான். எட்டடி ஆழம். தரை தொட்டுவிட்டு வெளியே வந்தான். சுவரில் கால் உதைத்து குட்டித் திமிங்கிலம் போல் நீர் கிழித்தான். அமுதாவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. சந்தோஷமாய் இருந்தது. செல்வாவிடம் சொல்ல வேண்டும். திலீப் நீந்துவது காட்ட வேண்டும்.

செல்வா அன்று மாலை பெங்களூரிலிருந்து கைது செய்யப்பட்டவர்களுடன் காரில் வந்தான். ஆட்களை சென்னை சி.பி.ஐ.யிடம் ஒப்படைத்தான். களைப்புடன் வீடு வந்தான். வீடு குதூகலத்துடன் அவனை வரவேற்றது.

"இன்னிக்கு ஒரு நாள் விட்டுருங்கப்பா இரண்டு பேரும். நாளைக்கு நிறைய பேசறேன்." உணவு முடித்து கட்டிலில் சாய்ந்து அயர்ந்து தூங்கினான்.

அம்மாவும் பிள்ளையும் உற்சாகமிழந்தார்கள்.

விடிகாலை ஃபோன் ஒலித்தது.

"செல்வராஜ், ஹியர். சொல்லு மகேந்திரன். என்ன விஷயம்? கேஸ் மெட்ராஸ்ல தானா? எனக்கு போஸ்டிங் எங்கே? மெட்ராஸா? தேங்க்யூ மகேந்திரன். யார் உத்தரவு இது நாயரா?"

"நான் ஒண்ணும் கேட்கவேயில்லை. ரொம்ப இழுத்தடிக்கிறமேன்னு அவரா பார்த்து இங்க போட்டுருப்பாரு. எப்ப கேஸ் முடியும்? ரெண்டு மாசமாவது ஆகுமில்ல. மாத்திடாதீங்கப்பா. தேங்க் யூ. அப்புறம் இன்னிக்கு விட்டுரு. நாளை லேர்ந்து ஆபீஸ் வரேன்!" ரிஸீவரை வைத்துவிட்டு மணி பார்த்தான். நாலு நாற்பது. நகர்ந்து அருகே தூங்கும் மனைவியை அணைத்துக்கொண்டான். அவள் உடம்பு தகதகப்பு இவனைத் தூக்கிற்று. கன்னத்தில் முத்தமிட்டு இறுக்கிக் கொண்டான். அரைத் தூக்கத்தில் அமுதா புரண்டாள். இவனுக்காக திரும்பி இறுக்கிக் கொண்டாள். அனிச்சையாய் அவனுக்கு இடம் கொடுத்தாள்.

(தொடர்ந்து வரும்)

## கடித இலக்கியம்

முன்னாள் தமிழக முதல்வர், முத்தமிழ் வித்தகர் அறிஞர் அண்ணா! தமிழக மக்களை தட்டியெழுப்ப 'தம்பிக்கு மடல்' என்ற தலைப்பில் அவர் தீட்டிய கருத்துக்கள் இன்றும் கூர்மைதான். பொருத்தமான நாளில் வருகிறது இக் கடிதம்.

# மணப்பொங்கலும் தைப்பொங்கலும்

தம்பி,

தெரிகிறது, தெரிகிறது, உன் முகத்திலே அழகு பொங்கி நிற்கும் காரணம்– புத்தாடை அணிந்துள்ள உன் நடை, காட்டுப் பாதையில் செல்லும் வேழம், வேங்கையின்மீது உராய்ந்து செல்லும் போது ஏற்படுவது போன்ற ஓசையை அல்லவா எழுப்புகிறது? கிளியும், புறாவும், நாகண வாயும், சிட்டும், குயிலும், மயிலும், காட்சிக்கினிய பொருளனைத்தையும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் கலந்துறவாடுவது போலன்றோ, இல்லம் விளங்கிட வேண்டுமென விழைகிறாய்!

என்ன அவசரம், ஏன் அவ்வளவு அவசரம்? சென்று சென்று பார்க்கிறாயே, பால் பொங்கிற்றா என்று! அன்னை அறிவார்களே, எத்துணை நேரம் தணலிடை இருந்தால் பொங்கிப் பதமாகும், புத்தரிசி என்பதனை! உனக்கேன் அந்தத் தொல்லை; ஓராயிரம் தடவை சென்று கேட்கிறாயே? ஓஹோ! உன்னை உற்றாரும் நண்பரும், கேட்கிறார்களா? பால் பொங்கிற்றா என்று! 'ஆம்' எனப் பதிலும் கூறவேண்டுமா– அகத்தினழகுதான் முகத்தில் தெரிகிறதே!

அறப்போர் வீரனாக, அஞ்சா நெஞ்சனாக, அடக்குமுறையை எதிர்த்து நிற்போனாக, மடமையிலாழ்ந்து விட்ட மக்களிடை அறிவு கொளுத்துவோனாக, ஆதிக்க வெறி பிடித்தலையும் ஆட்சியை எதிர்த்து ஆற்றலுடன் பணிபுரிவோனாக– இவ்விதமெல்லாம் உன்னைக் கண்டு, உளம் பூரிக்கிறேன். இன்று, உன்னை விழாக்கோலத்தில் காண மகிழ்கிறேன். இல்லத்தில் ஒளியளித்து, களிப்புடன் விருந்துண்டு உலவும் நிலையில் உன்னை இங்கிருந்து காண்கிறேன். காட்சி, கவர்ச்சி தருகிறது– பார்த்ததும்; ஒரு கணம் பிறகோ...!

ஊர் விழாக்கோலம் கொள்ளவேண்டும்; இசையும் கூத்தும், உடற்பயிற்சி விளையாட்டுக்களும் இன்ன பிறவும் நடைபெறவேண்டும்! தமிழரின் தொன்மை பற்றியும், மூதாதையர் காலத்தில் இருந்த பொலிவு பற்றியும், அஃதே பிறகு நலிவாக மாறிவிடும்படி செய்த நயவஞ்சகர் போக்குப் பற்றியும் முத்தமிழ் மூலம் ஆர்வமூட்டி வருதல் வேண்டும்.

எனினும், இந்த ஆண்டு ஒரு பெரிய மனக்குமுறலுக்கு இடையிலேயே இந்த விழா கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

நமக்கு வந்துற்ற இடரும் இன்னலும் எத்தகைய நெஞ்சுறுதி கொண்டோரையும் நிலைகுலையச் செய்வதாகவே இருக்கிறது.

தம்பி! நாம் அடிமைப்பட்டு, வாழ்விழந்து தன்மானம் அழிக்கப்பட்டுத் தத்தளித்துக் கிடக்கிறோம்– மனம் எதுபோல் உளது




என்பதை, அதோ மத்திடைத் தயிர் காட்டும்!

விழா நாளன்று விசாரம் ஆகாது எனினும், எண்ணிடும் போது நெஞ்சு பதைத்திடாது இருக்குமோ! எண்ணாது விடத்தான் இயலுமோ!

ஆட்சியாளரின் பிடியுடன் தொல்லை விட்டதோ! இல்லை! எல்லையைக் களவாடி, ஏனையோரும், நமது திராவிட இனத்தினராம் தெலுங்கரும், மலையாளிகளும், இனத்தையும் மறந்த நிலைகொண்டு மொழிவழி அரசு எனும் உரிமையையும் இகழ்ந்து, தமிழருக்கு உரிய பகுதிகளைக் கவர்ந்துகொண்டு, வட்டாட்டமாடுகின்றனர்; இதனைக் கண்டு நீதி வழங்கும் நேர்மையற்று, பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர் ஆட்சியாளர்.

விழாவின்போது இவை பற்றி எண்ணாமலும், மக்களிடம் எடுத்து இயம்பாமலும் இருத்தல் இயலுமா? எண்ணிடும்போதோ, விழாக் கோலமே கலைகிறது; வேதனை பொங்கி வழிகிறது; 'எந்தமிழர் நாட்டிலே ஏன் இந்த அவலநிலை'– என்றெண்ணி வாட நேரிடுகிறது. இம்மட்டோ! அந்தோ! தமிழகம் பெற்றுள்ள வடு, இயற்கையின் கோரத் தாண்டவத்தால் ஏற்பட்டுவிட்ட புண்– எண்ணும்போதே, கண்ணீர் கன்னத்தில் புரள்கிறது; கையறைந்து, முகத்தில் மோதிக் கொண்டு கதறும் நிலைக்குச் செல்ல வேண்டி வருகிறது. எனினும், என் செய்வது! விழா, திங்கள்தோறும் வருவதன்று– ஆண்டுக் கோர் விழா; எனவே, கண்ணீரைத் துடைத்துக்கொண்டேனும் அதனைக் கொண்டாடுகிறோம்!

'நேரிட்டுவிட்ட பேரிடியினால் நெஞ்சு ஒடிந்து கிடக்கும் நிலையினை ஓரளவுக்கு மாற்றிக்கொள்வதற்கேனும், விழா பயன்படாதா'– என்ற ஆசை வேறு, உந்துகிறது.

செங்கரும்பு, பலா, மா, வாழை, செந்நெல், ஆவின்பால், புத்தாடை– ஏதேதோ தரலாம், தம்பி, உனக்கு! ஆனால், என்ன செய்வது? இவைகளை எல்லாம்விட, என் 'அன்பு' இம்மலர் மூலம் உனக்குக் கிடைத்திடச் செய்தலே முறை என்று எண்ணினேன். உன்னிடம் கூறவேண்டுமென்று எண்ணிய கருத்துக்கள் பல; பலப்பல; ஒரு சிலவற்றைத்தான் கதை, கட்டுரை வடிவாக்கி அளித்திட முடிந்தது. இவற்றினைப் பார்க்கும்போது, உன் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் வேறு பல நற்கருத்துக்களை ஒழுங்குபடுத்தி, வரிசைப்படுத்தி, நற்செயலுக்கு உறைவிடமாக்கி, நமது நாட்டினுக்கு நல்கி, பொங்கலன்று காணும் மகிழ்ச்சி நாட்டின் பொதுமகிழ்ச்சி ஆவதற்கான நற்பணியாற்றிட வரவேண்டும் என்று அழைக்கிறேன்– உரிமையுடன்– நம்பிக்கையுடன்.

'இன்று கூடவா, அண்ணா!' என்றா கேட்கிறாய்?

சரி, சரி போ! போ! அதோ பொங்கும் இன்பத்தைப் பெறு; பொலிவு கண்டு அகமகிழ்ந்திரு; உள்ளம் நிறைந்திடும் உவகையுடன் உரையாடிக் களிப்புற்று இரு; நின் இல்லம் இன்பப் பூங்காவாகத் திகழட்டும்; அங்கு அறிவு மணம் கமழட்டும்; அன்பு பொங்கட்டும்; அறம் தழைத்திடத்தக்க அரும்பணியாற்றிடும் ஆற்றல் எழட்டும்.

பொங்கற் புதுநாளன்று என் அன்பு நிறைந்த வாழ்த்துதலை வழங்கி மகிழ்கிறேன்.

அதோ, பெற்றோர் அழைக்கிறார்கள் போலும்; சென்று, செங்கரும்பின் சாறன்ன அன்புரை பெற்று இன்புற்றிரு!

அன்பன்,

அண்ணாதுரை.



படிப்பகம்

www.padippakam.com




> நடிகை ஜோதி மீனாவுக்கு தொழில் விரோதி வேறு எங்கும் இல்லை. பக்கத்திலேயேதான் இருக்கிறார். இன்று கவர்ச்சியில் அவருக்குக் கடும் போட்டி– அவர் அம்மா ஜோதி லட்சுமிதான்.
>
> –ஜூ.வி.ஷோ துணுக்கில்.... 7.5.97 ஜூனியர் விகடனில்–

அந்த விபத்தைத் தடுத்து விட மதுமிதா எவ்வளவோ முயன்றும் முடியாமல்போனது. இவள் சரியாக இடது புறம் காரை ஓட்டிக் கொண்டிருந்தாலும், எதிர்ப்புறம் இடது புறமாக வர வேண்டிய அந்த மோட்டார் பைக், வலது புறமாக படுவேகத்தில் வந்தது. தூரத்திலேயே அதைக் கவனித்திருந்தாலும், சமாளித்திருக்கக்கூடும்.

திருப்பத்தில் வந்த சீறல் அது. உடனடியாகக் காரை வலது புறம் திருப்ப முயன்று, அதே சமயம் பின்புறம் ஒரு லாரி வேகமாக இவள் காரை ஓவர்டேக் செய்யும் முயற்சியில் இருப்பதைக் கடைசித் துல்லிய வினாடியில் கணித்து, உடனே மறுபடி இடது புறமே காரைத் திருப்பியதில் ஏற்பட்ட தடுமாற்றத்தில், மதுமிதாவின் கார் இடது ஓரத்தில் இருந்த விளக்குக் கம்பத்தில் பெரிய சத்தத்துடன் மோதியது. பைக்வாலா சறுக்கிக் கொண்டே தொலைதூரம் சென்றான். மதுமிதா உடனடியாக நினைவிழந்தாள்.

அந்த நட்சத்திர மருத்துவ மனையில் ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியில் துர்க்காவும், ஈஸ்வரும் பதை பதைப்போடு காத்திருந்தார்கள்.

"கால்ல சின்ன ஆபரேஷன்தான்னு சொன்னாங்க. ஆனா ஒரு மணி நேரத்துக்கும் மேல ஆயிடுச்சேங்க!"

"உயிர் பொழைச்சதே பெரிய விஷயம் துர்க்கா."

"நல்லவேளை... நீங்க பின்னாடியே வந்ததால உடனே உங்க கார்ல தூக்கிப் போட்டுட்டு வந்துட்டீங்க... ரொம்ப இரத்தம் போயிருச்சா?"

"முன் பக்கம் அப்படியே நசுங்கினதால அவளோட லெஃப்ட் லெக் சிக்கிடுச்சு. ஆனா துண்டாகலை. வலி தாங்காம மயக்கம் போட்டுட்டா."

"அந்த பைக்ல வந்தவனுக்கு என்ன ஆச்சு?"

"உடம்பெல்லாம் சிராய்ப்பு! ஆனா உணர்வு இருந்துச்சி. தப்பு அவன் பேர்லதான். அதனால அவன் உடனே பைக்கை நிமிர்த்திக்கிட்டுப் பறந்திட்டான்."

"வணக்கம் சார்" என்ற குரலுக்குத் திரும்பினார்கள்.

பத்திரிகை நிருபர் ரவி நின்றிருந்தார்.

"மதுமிதாவுக்கு ஆக்ஸிடெண்டாமே.... அப்படியா?"

"அதுக்குள்ள உங்களுக்கு தகவல் வந்துடுச்சா?"

"இதுவே லேட் சார்.. ஆக்ஸிடண்ட் நடந்து ரெண்டு மணி நேரமாச்சாமே... எப்படி சார் மேஜரா?"

"இல்லை... மைனர் தான்!"

"ஹெட் இன்ஜுரியா?"

"அதெல்லாம் எதுவும் இல்லை. கால்ல தான் அடி. ஆபரேஷன் நடந்திட்டிருக்கு."

"கார்ல வேற யாரு இருந்தாங்க?"

"அவ மட்டும் தான் இருந்தா"

"என்னாச்சு? பிரேக் பிடிக்கலையா?"

"எதிர்ல பைக்காரன் ராங் சைடுல வந்துட்டான். அவன் மேல மோதிடக் கூடாதுன்னு சமாளிக்கிறதில பேலன்ஸ் போய் லைட்போஸ்ட்ல மோதிட்டா."

"மயக்கமாயிட்டாங்களா?"

"ஆமாம்"

"ஒட்டறப்பவே மயக்கத்திலே இருந்தாங்களா?"

"என்னது?"

"ஏதாச்சும் பார்ட்டிக்குப் போய் திரும்பிட்டிருந்தாங்களான்னு கேட்டேன்..."

"ஏம்பா நீ வேற! போதும். போயிட்டு அப்புறம் வாங்க."

ரவி நேராக ரிசப்ஷனுக்குப் போய் தன் பத்திரிகை அலுவலகத்துக்கு ஃபோன் செய்யத் துவங்க, ஈஸ்வர் பாக்கெட்டிலிருந்து பீடா கவர் எடுத்தார். பின்னை ஜாக்கிரதையாக நகத்தால் நீக்கி எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு பீடாவை வாயில் போட்டுக் கொண்டார்.

"யாருன்னு தெரிஞ்சிக்கிட்டீங்களா?" என்றாள் துர்க்கா.

"எது பைக்ல வந்தவனா?"

"அதில்லை. அவ பார்க்கப் போனது யாரைன்னு கேட்டேன். அதைத் தெரிஞ்சுக்கத்தானே அவ்வளவு அவசரமா உங்களை அவ பின்னாடியே அனுப்பி வைச்சேன்."

"டிஸ்கோ ஹால்ல அவங்க நுழைஞ்சிட்டாங்க. ஜோடி இல்லாம என்னை உள்ளே விட முடியாதுன்னுட்டான். தூரத்திலிருந்து அவன் பின் பக்கத்தைத் தான் பார்த்தேன். நல்ல உயரம். அகலமான தோள். கரு கருன்னு தலை. ஸ்டைலான டிரெஸ். அவ்வளவுதான் கவனிக்க முடிஞ்சுது."

"எதுக்குத்தான் நீங்க பிரயோஜனம்?"

"அலுத்துக்காதே! இந்த ஆக்ஸிடெண்ட் நமக்கு ஒரு விதத்தில சௌகரியம்தான்."

"என்ன சௌகரியம் இதுல?"

"நிலைமையைப் பார்த்தா பத்து நாளைக்காவது பெட்ல இருக்கச் சொல்லிடுவாரு டாக்டர். அவளோட இரகசிய கல்யாணத் திட்டத்தை வேற வழியே இல்லாம தள்ளி வைச்சாகணும். நீ ஒண்ணு செய்யி...!"

"என்ன?"

"மதுமிதாவுக்கு இப்படி அடி பட்டிருக்குன்னு தெரிஞ்சதும் அவன் நிச்சயம் துடிச்சிப் போயிடுவான். நேர்ல பார்க்க வருவான். இல்லை, அட்லீஸ்ட் ஃபோன்ல யாவது பேசுவான். அவகூட துணைக்கு நீதான் இருக்கப் போறே... கண்கொத்திப் பாம்பு மாதிரி அவளை கண்காணிச்சுக்கிட்டே இரு. அவளோட காதலன் யாருன்னு மட்டும் தெரிஞ்சி என்கிட்டே சொல்லிடு."

"சொல்லிட்டா?"

"மிச்சத்தை நான் பார்த்துக்கறேன்"

"பார்த்துக்கறேன்னா?"

"உனக்கு என்ன நடக்கணும் துர்க்கா?"

"அவ இப்படி திடுதிப்புன்னு கல்யாணம் பண்ணிட்டுப் போயிடக்கூடாதுங்க. ஏகப்பட்ட சிக்கலைச் சந்திக்க வேண்டியதாயிடும்."

"அதத்தான் நான் பார்த்துக்கறேன்னு சொன்னேன்."

ஈஸ்வர் பீடாவின் குதப்பலைத் துப்ப, வாஷ்பேசின் தேடி நடந்தார். துர்க்கா எதிர்ப்புறம் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள்.

மதுமிதா கண்விழித்தபோது, காலில் இரும்பு வைத்துக் கட்டியது போல உணர்ந்தாள்.

வலது காலில் பெரிய பாண்டேஜ் போடப்பட்டு உயரமாக இழுத்துத் தொங்க விடப்பட்டிருந்தது.

மசமசப்பிலிருந்து முழுப் பார்வைக்கு வந்தபோது, அருகில் இருந்த அம்மா, அவள் தோளில் கை வைத்தாள்.

"கவலைப்படாதே மது. பெருசா எதுவும் இல்லை. சின்ன ஆக்ஸிடெண்ட்தான் இது."

"உனக்கு ஏமாற்றமாப் போயிடுச்சாம்மா?"

"என்ன கேக்கறே?"

"பெரிய ஆக்ஸிடெண்ட்டா எதுவும் நடக்கலையேன்னு ஏமாற்றமாப் போயிடுச்சான்னு கேட்டேன்."

"என்னடி பேச்சு இது? தகவல் தெரிஞ்சு பதறிக்கிட்டு ஓடிவந்து ஆபரேஷன் தியேட்டர் வாசல்ல உயிரைக் கைல பிடிச்சிக்கிட்டு காத்திருந்ததுக்கு இப்படி ஒரு குத்தல் பேச்சா? எந்த அம்மாவாவது பொண்ணுக்கு விபத்துன்னா சந்தோஷப்படுவாளா?"



மதுமிதா பேசாமல் இருந்தாள்.

"உனக்கு புத்தி ரொம்ப வக்கிரப் பட்டுப் போச்சி!"

"சரி... டாக்டர் என்ன சொன்னார்?"

"இருபது நாள் நீ இங்கே இருந்தாகணுமாம்!"

"இருபது நாளா? என்ன ஆச்சு கால்ல?"

"எலும்பு முறிஞ்சு உள்ளே சதையில குத்திருச்சி. உடைஞ்ச இடத்தில எவர் சில்வர் பிளேட் வெச்சு போல்ட் போட்டிருக்காங்க! எலும்பு சேர்ந்ததும் கொஞ்ச நாள் கழிச்சி அந்த பிளேட்டை ஆபரேஷன் செஞ்சி எடுத்திடலாம்."

"என்னால நடக்க முடியுமாம்மா?"

"அதெல்லாம் முடியும். ஆனா, இருபது நாளைக்கு கால அசைக்கக் கூடாதாம். இப்படியேதான் இருக்கணுமாம். தைரியமா இரு மதுமிதா."

மதுமிதா அமைதியானாள். கண்களை மூடிக் கொண்டாள்.

'ஏன் இந்த தண்டனை இறைவனே? என்ன தப்பு செய்தேன்? இன்னும் நான்கு தினங்களில் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து வைத்திருந்தேனே... வாழ்வின் முக்கியமான திருப்புமுனை முடிவை யோசித்து யோசித்து வடிவமைத்து செயலுக்குக் காத்திருந்தேனே...'

"பசிக்குதா மதுமிதா?"

"இல்லை."

"ஜூஸ் ரெடியா இருக்கு. பசிக்கிறப்ப கேளு."

"அம்மா!"

"என்ன?"

"டாக்டரைப் பார்க்கணும்!"

"ஈவினிங் ரவுண்ட்ஸ் வர்றப்ப பார்க்கறேன்னு சொல்லிட்டுப் போயிருக்கார் மது."

"பேப்பர்ல வந்துடுச்சா?"

"எல்லாப் பேப்பர்லையும்... நிறைய பேர் ஃபோன் செஞ்சாங்க. நேர்லயு வந்தாங்க. ரெண்டு நாளைக்கு அப்புறம்தான் விசிட்டர்சை அலோ செய்யறது நல்லதுன்னு டாக்டர் சொல்லிட்டார்."

அம்மா மூக்குக் கண்ணாடி அணிந்து தினசரி இதழ் ஒன்றைப் புரட்டி, அவள் விபத்து பற்றி வந்த செய்தியைக் காட்டினாள். டெலிஃபோன் ஒலித்தது. துர்க்கா எடுத்தாள்.

"சந்திரசேகர் பேசறேன். மதுமிதா கிட்டே பேசமுடியுமா?"

"சந்திரசேகர்னா எந்த சந்திரசேகர்?"

மதுமிதாவின் கவனம் சட்டென்று திரும்பியது. "அம்மா கொடு. நான் பேசிக்கறேன்."

துர்க்கா ரிசீவரை அவளிடம் தர, "அம்மா, நீ கொஞ்சம் வெளில இருக்கியா? நான் பர்சனலா பேசணும்," என்றாள் மதுமிதா **(தொடரும்)**

பட்டுக்கோட்டை பிரபாகர்

## யார் இவர்கள்?


1


2

முதல் படத்தில் உள்ள குழந்தை இன்று வணக்கத்துக்குரிய பெருமகனார். இரண்டாவது படத்தில் உள்ளவரும் அப்படித்தான். இவர் பெயர் உங்களுக்கு தெரிய'லாமா'?

மூன்றாவது படத்தில் இருப்பவர் சாள்ஸ்–டயானாவுடன் சம்பந்தமுள்ளவர்.


3

நான்காவது படத்தில் உள்ளவர் பெரிய கில்லாடி. அமெரிக்காவுக்கே சவால் விடுபவர். கண்டுபிடிக்க முடியாவிட்டால் பதினெட்டாம் பக்கம் செல்க.


4

## அனுபவம் புதுமை

# நேரு கிழித்த கடிதங்கள்

எம்.ஒ.மத்தாய், இவர் ஒரு மலையாளி. மறைந்த பிரதமர் நேருவின் நேரடி உதவியாளர். நேருவின் மறைவிற்கு பல ஆண்டுகளுக்குப்பின் 'நேரு காலத்து நினைவுகள்' என்ற புத்தகத்தை எழுதி பரபரப்பு ஏற்படுத்தியவர். நேருவின் அந்தரங்கங்களை அறிந்தவர் இவர் என்பதால், இந்தப் புத்தகம் வெகு வேகமாக விற்பனையாகித் தீர்ந்தது.

அப்புத்தகத்தில் இருந்து ஒரு பகுதி:

**நேரு** 1947ல் குளிர்காலத்தில் லக்னோவுக்கு வருவதாக இருந்தார். சரோஜினி நாயுடு, அப்போது உ.பி. ஆளுநராக இருந்தார். நேரு, பத்மஜாவை திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்று ஒரு வதந்தியைப் பரப்பினார். பத்மஜாவும் மிக்க பரபரப்போடு இருந்தார். ஆனால், லேடி மவுண்ட் பேட்டனுடன், நேரு வந்து சேர்ந்ததும், பத்மஜா சீறினார். 1948–ல் பத்மஜா அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே, அவர் நேருவின் வீட்டிற்கு வந்து, பக்கத்து அறையில் தங்க ஆரம்பித்தார்.


'இவர் இப்படியே நிரந்தரமாகத் தங்க ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது?' என்கிற நிலைமை ஏற்பட்டபோது, 'கிழக்கிந்திய நாடுகளுக்கு சுற்றுலா போகும், மவுண்ட் பேட்டனின் மனைவி, வழியில் நேரு வீட்டில் தங்குவார்,' என்று பத்மஜாவிடம் தெரிவிக்கப்பட்டது. உடனே பத்மஜா கோபித்துக் கொண்டு வெளியில் போய் தங்கினார்.

இந்திராவைக் கூப்பிட்டனுப்பி, நேரு தனக்கு எழுதிய கடிதங்களை எல்லாம், தான் திருப்பிக் கொடுக்க விரும்புவதாகவும், தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகவும் சொன்னார் பத்மஜா!

உடனே, இந்திரா என்னிடம் வந்து இந்த விஷயத்தைச் சொன்னார். நான் சிரித்தேன்!

ஒரு வருடம் கழித்து, நேருவின் படுக்கை அறையில் லேடி மவுண்ட் பேட்டனின் இரண்டு புகைப்படங்கள் மாட்டப்பட்டிருப்பதைப் பார்த்து பத்மஜா தன் படம் ஒன்றையும் நேரு பார்க்கும் படியாக மாட்டி வைத்தார். ஆனால், நேரு அதை அப்புறப்படுத்திவிட்டார்.

காசியிலிருந்து ஷாரதா மாதா என்ற பெண் சந்நியாசினி 1948ல் டில்லி வந்தார். நேரு அவருக்குப் பேட்டியளித்தார். சந்நியாசினி ரொம்ப அழகாக, இளம் வயதினளாக இருந்தாள். அதன் பிறகு அவள் அடிக்கடி நேருவைப் பார்க்க வந்து போய்க் கொண்டிருந்தாள்.



ஒரு நாள் ஷாரதா மாதா திடீரென்று மறைந்துவிட்டார். 1949 நவம்பரில் பெங்களூரில் இருந்த ஒரு கன்னிமடத்தினர், ஒரு கட்டுக் கடிதங்களை ஒரு ஆள் மூலம் கொடுத்தனுப்பினார்கள்.

வட மாநிலத்திலிருந்து ஒரு பெண் தங்கள் கன்னிமடத்திற்கு வந்தாள் என்றும்,

> "பாலியல் என்றதும் காந்தி ஏன் இத்தனை பிரச்சனையாக நினைக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை பாலியல் உணர்வு தவறல்ல. அந்த உணர்வு எனது பணிகளிடம் இருந்து என்னைத் திசை திருப்புவதும் இல்லை"
>
> நேரு

அவள் ஒரு ஆண் சிசுவைப் பெற்றெடுத்தாள் என்றும், தான் யார் என்று சொல்ல மறுத்துவிட்டாள் என்றும், குழந்தையையும், இந்தக் கடிதக் கட்டையும் அங்கு விட்டு விட்டு, எங்கோ போய்விட்டாள் என்றும், இந்தியில் எழுதப்பட்ட அந்தக் கடிதங்கள் பிரதம மந்திரியால் எழுதப்பட்டவை என்று அறிந்து, அனுப்பியுள்ளதாகவும், கன்னிமடத் தலைவி (வெளிநாட்டு மாது) வந்தவரிடம் குறிப்பு அனுப்பி இருந்தார்.

இது விஷயங்கள் நேருவுக்குச் சொல்லப்பட்டன. அவர் கடிதங்களை வாங்கிக் கிழித்தெறிந்தார்.

சுபாஷ் சந்திரபோஸைப் பற்றிய ஒரு சம்பவம் இப்போது என் ஞாபகத்துக்கு வருகிறது. போசுடன் கூட இருந்த ஏ.ஸி.என்.நம்பியார் என்னிடம் சொன்னார்: ஜெர்மனியில், போசுடன் பணி புரிந்து கொண்டிருந்த ஒரு ஆஸ்திரியப் பெண், போஸ் மூலம் கருவுறவே, கருச்சிதைவு செய்ய வேண்டும் என்று போஸ் நினைத்தார். ஆனால், அவள் கருவுற்று பல மாதங்களாகி விட்டபடியால் கருச்சிதைவு ஆபத்தெனக் கருதப்பட்டது. அவளைத் திருமணம் செய்து கொள்ளவும் போசுக்கு விருப்பமில்லை. சீக்கிரமே, போஸ் ஒரு நீர் மூழ்கிக் கப்பலில் ஜெர்மனியை விட்டு ஜப்பான் சென்றுவிட்டார்.

லேடி மவுண்ட் பேட்டன் இந்தியாவை விட்டுப் பிரிந்து போன பிறகும், நேருவுக்கு கடிதங்கள் எழுதுவார். 'அவருக்கு' என்று போடப்பட்டு வரும் அந்தக் கடிதத்தை மட்டும் பிரிக்க எங்களுக்கு உரிமை கிடையாது. அதை நேருவே நேரடியாகப் பிரித்துப் படிப்பதுதான் வழக்கம். ☐



படிப்பகம்

www.padippakam.com

# கொம்பு

அந்தத் தொழுவத்தில் இரண்டு
பசுமாடுகள் இருந்தன.
எஜமானனின் ஜீவனம் இந்தப்
பசுமாடுகளின் பாலில்தான்
நடந்துவந்தது.
புல்லைப் போடும்போது ஒரு
பசுவுக்குக் குறைவாகவும் மற்றொரு
பசுவுக்குக் கொஞ்சம் கூடுதலாகவும்
போட்டு வந்தான் எஜமானன்.

"ஒரே தொழுவத்தில்தானே
இருக்கிறோம். ஒரே மாதிரித்தானே
பாலும் தருகிறோம். பிறகு ஏன்
எனக்கு மட்டும் புல்லைக் குறைத்துப்
போடுகிறான்?" என்று அந்தப் பசு
குழம்பியது.
தீவனம் போதாமல் அந்தப் பசு சில
நேரத்தில் 'அம்மா' என்று கத்தும்.
அப்படிக் கத்தும் போதெல்லாம்-
எஜமானன் பசுவுக்குத் 'தண்ணி
காட்டுவான்.' சில நேரத்தில்
அடிப்பான்.
அரை குறைத் தீவனத்தால் அந்தப்
பசு இளைத்துக்கொண்டே வந்தது.
ஒருநாள் கன்றுக்குட்டி அந்தப்
பசுவிடம் பால் குடித்துக்
கொண்டிருந்தது.
எஜமானன் பால் செம்போடு
வந்தான். கன்றுக் குட்டியைப்
பிடித்துத் தூரத் தள்ளினான். பால்
கறக்க ஆரம்பித்தான்.
என்றைக்கும் இல்லாமல் அன்று
பசுவுக்குக் கோபம் வந்துவிட்டது.
எஜமானனைக் காலால் உதைத்து
முட்டித் தள்ளியது.
எஜமானன் அலறினான்.
அலறலைக்கேட்டு கூட்டம்
கூடிவிட்டது.
"என்ன நடந்தது?" என்றான்
ஒருவன்.
"இத்தனை நாளாய்ப் புல்லைப்
போட்டு வளர்த்தேன். இந்த நன்றி
விசுவாசம் இல்லாத பசு என்னை
முட்டிவிட்டது." என்று ஒப்பாரி
வைத்தான் எஜமானன்.
"பசு என்றால் சாதுவாக அல்லவா
இருக்க வேண்டும்? அதெப்படி
முட்டலாம்?" என்று நியாயம்
பேசினார் ஒருவர்.
"பசுவுக்குக் கொம்பு எதற்காக
இருக்கிறது?" என்று ஒரு சிறுவன்
சந்தேகத்தோடு கேட்டான்.
"அதுவா? பொங்கல் வந்தால் வர்ணம்
அடித்து அலங்காரம் செய்வதற்காக."
என்றார் ஒருவர்.
"பசு என்றால் பால் மடி மட்டும்தான்
இருக்க வேண்டும். கொம்பு
இருக்கக்கூடாது." என்றார் ஒருவர்.



**அப்துல் ரகுமான்**
(தமிழகக் கவிஞர்)

"பசுவுக்குத் தீவனம் போதவில்லையோ
என்னவோ? அதனால்
முட்டியிருக்கலாம்!" என்றார் ஒருவர்.
"தீவனம் போதவில்லையென்றால்
முட்டுவதா? கேட்டு வாங்கிக் கொள்ள
வேண்டியதுதானே?" என்றார் ஒருவர்.
"பசு புல்லை மட்டுமா சாப்பிடுகிறது?
பக்கத்தில் கிடக்கும் குப்பை கூளத்தை
எல்லாம் திருட்டுத்தனமாக மேய்ந்து
விடுகிறதே. பிறகென்ன குறை?" என்றார்
ஒருவர்.
"பசு என்றால் ஒழுங்காகப் பால் தர
வேண்டாமோ? இப்படிச் சண்டித்தனம்
செய்தால் நமக்கெல்லாம் பால் எப்படிக்
கிடைக்கும்? நன்றாக அடித்தால்தான்
இதற்குப் புத்தி வரும்!" என்றார்
எஜமானனிடம் வாடிக்கையாகப் பால்
வாங்கும் ஒருவர்.
பசு 'அம்மா' என்று கத்தியது. அதில்
ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன. ■

# தூரத்து பச்சை

விடிந்துவிட்டது. தன் படுக்கையை விட்டெழ மனமில்லாமல் ஜன்னலால் தன் பார்வையை வெளியே செலுத்துகிறான் தேஜோமயன். அவனது படுக்கையறைக்குச் சற்றுத் தள்ளி ஒரு அழகான பெரிய ஊசி போன்ற இலையுள்ள மரம். வசந்த காலமாதலால் இலைகளே தெரியாத அளவுக்குப் பூக்களாற் சோடிக்கப்பட்டது போலிருந்தது அந்த மரம்.

கட்டிலில் படுத்தபடி, தாய்ப்பறவையொன்று குஞ்சுப் பறவைக்கு உணவூட்டுவதை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் தேஜோமயன். தாயின் சிறகுக்குள் சுகங் கண்டுகொண்டிருந்தது அந்தக் குஞ்சுப் பறவை. அவனது பத்தாவது வயதிலேயே எட்டாக்கனியாகிவிட்ட அவனது தாயின் ஆதரவுக்காக ஏங்கித் தவிக்கிறான்.

அவன் சிறிய தாயான ஜமுனாவுடன் கனடாவில் இருக்கிறான். அவனது பெற்றோர் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள். தேஜோமயனுக்குக் கடுமையான காய்ச்சல். "இன்று ஏன் விடிகிறது?" என்று காய்ச்சலின் உக்கிரத்தில் அலுத்துக் கொள்கிறான்.

அவனுக்குத் தன் பெற்றோரின் ஆதரவு தேவைப்படுகிறது. பெற்றோரிடம் காணும் சுகத்துக்காக ஏங்குகிறது அவன் மனம். தாயின் சிறகுக்குள்ளே குளிர்காய விரும்புகிறது. அவன் கண்களிலிருந்து ஏக்கத்தின் பிரதிபலிப்பாய் இரண்டொரு கண்ணீர்த் துளிகள் வெளிப்பட்டு நிற்கின்றன. முடிவே இல்லாத வேதனையோடு அறைக்குள்ளே கட்டிலில் கிடக்கிறான்.

அவன் கனடாவில் இருக்கும்போது அவனது மனவிமானம் மட்டும் அவனையுமறியாமல் பறந்து சென்று அவனது பிறந்த மண்ணை முத்தமிட்டு மகிழ்கிறது. என்ன இருந்தாலும் அவன் பிறந்த மண்ணல்லவா? 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே!' என்றோ ஒரு நாள் சொக்கன் ஆசிரியர் சொல்லித் தந்தவர். அது எவ்வளவு உண்மையானது! அந்தப் பிஞ்சு மனம் அங்கலாய்க்கிறது.

அவன் பிஞ்சுக் கால்கள் பட்ட மண், அவனது பிஞ்சுக் கரங்களால் அளைந்து ஒழுகிய மண், அவன் ஆரம்பக் கல்வியைக் கற்றுக் கொண்ட அவனது ஊர்ப்பாடசாலை, அவன் சைக்கிள் ஓடிப் பழகிய அந்த மணல்தெரு, அவன் அடிக்கடி சாமான் வாங்கச் செல்லும் அந்தச் சிறிய கடை எல்லாமே திரைப்படம் ஓடியது மாதிரி அவனது கண்களில் விரிகின்றன.

அவனோடு சேர்ந்து விளையாடிய தோழர்களும், அவர்களோடு பந்தடித்து விளையாடிய இடமும் அவன் கண்களில் தெரிகின்றன. அவன் இரு தங்கைகளையும் நினைக்கிறான். அவர்களோடு அடிக்கடி சண்டைகள் பிடிப்பதும் பின்னர் கலகலப்பாக இருப்பதும் இனிமேல் எட்டு வருடங்களின் பின் 'ஸ்பொன்சர்' பண்ணினால்தான் உண்டு. அவன் மௌனமாக அழுகிறான்.

சிறு நோய் வந்தால் கூடப் பெரிதாக வருந்தும் தன் தந்தை இராஜதுரையை நினைத்து ஏங்குகிறான், தன்னை விட்டு அகலாது அருகிலிருந்து காப்பாற்றும் தந்தையை இனிமேல் காணக்கூட முடியாதபடி தாய் தனக்குப் போட்ட கால் விலங்கை நினைத்து கலங்குகிறான்.

"இப்பவே அவன் கனடாவுக்குப் போனால்தான் அவன் தன் தன்ரை பதினெட்டு வயதிலை எங்களை 'ஸ்பொன்சர்' பண்ணலாம். இங்கே இருந்து வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட என்னாலை முடியாது. இன்னும் மூன்று, நான்கு வருடங்களில் என்ரை மகனையும்- தலையாட்டி ஆட்டினால் அவனும் காணாமல் போய்விடுவான். இப்படியான துயரங்களை என்னாலை தாங்கவே முடியாது.

கண்காணாத இடத்திலை எண்டாலும் என்ரை பிள்ளை உயிரோடும், நிம்மதியோடும் இருக்கலாம். கிடைக்கிற வாய்ப்பை இழந்து விட நான் தயாரில்லை." அம்மாதான் ஒற்றைக் காலில் நின்றாள்.

இப்படியாக எண்ணம் ஓடிக் கொண்டிருக்கும் பொழுது, அவனது சிறியதாய் வருகிறாள். "தேஜோ என்ன பலமான யோசனை?" என்றவள் சாப்பாடு அப்படியே இருப்பதைக் கண்டு "இன்னமும் நீ சாப்பிடவில்லையா." என்று கேட்கிறாள்.

"எனக்குப் பசிக்கவில்லை அன்ரி." அவன் தன் மன ஏக்கத்தை அவளிடம் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை.

ஜன்னலால் எட்டிப் பார்க்கிறான். ஜமுனா அன்ரி தன் பிள்ளைகளுக்கு உணவூட்டிக் கொண்டுதான் இருக்கிறாள்.

பறவையும் குஞ்சும் அந்த மரக்கிளை தோறும் தத்தித் திரிந்து மகிழ்கின்றன. அவன் கண் இமைக்காமல் பார்க்கிறான். குஞ்சுப் பறவையை ஒரு முறை தன் அலகால் கொத்தி நிறுத்துகிறது. ஆபத்துச் சந்திக்கும் இடங்களில் அது அப்படிக் கொத்தி நிறுத்தி வழிகாட்டுகிறது.

'பொறுப்புணர்ச்சியுடன் தன் குஞ்சைக் காப்பாற்றுகிறது. என் தாயின் பொறுப்புணர்ச்சி, இந்த அளவுதான்!' வெறுப்பினால் அவனது முகம் கறுத்து இருண்டது.

ஏக்கம் அவனை நோயாளியாக்கியது. அவன் படுக்கையில் விழுந்தான். ஜமுனாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. 'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிந்துவிட்ட, கதையாக ஆனதையிட்டு ஜமுனா திகைத்துப் போனாள். பெற்றார் இல்லாத இடத்தில் இப்படியான நோய் வந்து வாட்டுவதையிட்டு அவள் கலங்கினாள்.

> "தலையாட்டி ஆட்டினால் என் மகனும் காணாமல் போய்விடுவான்..!"

அவன் யாருடனேயும் பேசுவதில்லை. கலகலப்பாக இருப்பதில்லை. எந்த நேரமும் கட்டிலில்தான் படுத்திருப்பான். ஜமுனா வைத்தியரிடம் காட்டியபோது, சகல விதமான வைத்திய பரிசோதனையும் செய்யப்பட்டது. முடிவில் "எதுவித நோயும் இல்லை!"



**திக்கம்.ஜெ. சிவயோகமலர்**

என்று அவர் கையை விரித்துவிட்டார்.

"ஒரு ஏக்கம்தான் அவன் இப்படி இருப்ப தற்குக் காரணம். அந்த ஏக்கம் எதுவென இனங்கண்டு தீர்க்காவிட்டால் அவனது எதிர்காலம் பாழாகிவிடும்." வேதனையுடன் கூறுகிறார்.

ஏக்கத்துக்குக் காரணம் தன் அப்பா அம்மாவைப் பிரிந்ததுதான் என்று ஜமுனா இனங்கண்டு கொள்கிறாள், அவர்கள் அவனிடம் வர முடியாது. அவனது பதினெட்டு வயதில்தான் அவன் அவர்களை 'ஸ்பொன்சர்' பண்ணலாம். அதற்கு இன்னும் எட்டு வருடங்கள் இருக்கின்றன. அவனைத் திருப்பி அனுப்ப முடியாது. அவனது தாய் "தழைத்துவரும் இளஞ் செடியின் நுனியைக் கத்தரிக்க வேண்டாம்!" என்று கடிதத்தின்மேல் கடிதம் போட்ட வண்ணம் இருக்கிறாள்.

எதுவுமே புரியாமல் தடுமாறிய ஜமுனா, வயதுக்கு வராத சின்னஞ் சிறிசுகளை பெற்றோர் இல்லாமல் வெளிநாடுகளுக்கு அனுப்புவது எத்தனை தவறானது.' என்று எண்ணுகிறாள். ஏங்கும் அந்தப் பிஞ்சு உள்ளம் போல் அவளும் குழம்பிப் போய்விட்டாள். ■

# "ஓ... ஸ்நேகா...."

ஜனவரியில் ஒரு நடு இரவில் தாங்க முடியாத அதிர்ச்சி....

ஸ்நேகா– ஸ்நேகமாய்ப் புன்னகைத்தாள்.

'ஜிவ்'வென்ற பரவச உணர்வு உடலை முழுவதுமாய் ஆக்கிரமிக்க- பதில் புன்னகைக்காய் அவன் இதழ் விரிக்க ஆரம்பித்த கணத்தில்–

"ஸ்நேகா போகலாமா?"– பதிலை எதிர்பாராது அவள் கரம் பற்றி அழைத்துச் சென்ற அவள் தந்தையின் பின் மண்டையில் 'ணங்' என்று ஒன்று போடலாமா என்றிருந்தது தீபனுக்கு.

"என்னடா மச்சான்! உன்ர தேவதை உன்னப் பார்த்து எத்தன தடவ சிரிச்சா. நீ பேசியிருக்கலாம்ல?"

"ஓமடா, இப்பதான் அப்படித் தோணுது, பட் அவள கண்டவுடன் பேச.. சிரிக்க... ஏனோ முடியேல்லடா!"

"இதுதான் காதல் என்பதா..." - பாட ஆரம்பித்த பாபுவிடம் "டேய் பாபு.. ஒரு உதவி செய்வியே?"

"ம்ம்"

"எனக்கு ஸ்நேகாவோட முகவரி வேணும்!"

★★★

அவள் வீட்டை அதிக சிரமமின்றிக் கண்டு பிடித்து விட்டான் தீபன்.

முகவரி தேடித்தந்த பாபுவுக்கு மானசீகமாய் நன்றி சொல்லி அழைப்பு மணியை ஒலிக்க விட்டுக் காத்திருந்தான்.

"யாரது?"- கரகரப்பான ஆண்குரலோடு கதவு திறந்தவர் அவள் தந்தைதான்.

"என்ன தம்பி யாரு வேணும்?"

"ஸ்...ஸ்நேகா இருக்கிறாவே?"- இதென்னது இப்படிப் பார்க்கிறார்.

"ம்... இருக்கிறா உள்ள வாரும் தம்பி!"

வந்தான். உட்கார்ந்தான். அவர் முகம் பார்த்தான்.

"ஸ்நேகா இப்ப உன்னப் பாத்து பேசக்கூடிய நிலைமைல. இல்ல...."

"ஏன்.. என் ஸ்நேகாவுக்கு என்ன?" - வினாடிக்குள் உணர்ச்சி வசப்பட்டு- "என் ஸ்நேகா" என்று அவள் தந்தைக்கு முன் சொல்லி- மிகவும் வெட்கிப் போன தீபனை புரிந்து கொண்ட மெலிதான முறுவலோடு பரிவாய் நோக்கினார் சுந்தரம்.

"ஓம் தம்பி. நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்?"

"பேராதனை யூனிவசிற்றியில ஈ பக்கல்ற்றி ஃபைனல் இயர்"

"ஓ.... வருங்கால இஞ்ஜினியர். நீர் என் பொண்ண- ஸ்நேகாவ காதலிக்கிறீர்... அப்படித்தானே?"

"ஓ... ஓம்"

"ஆனா... உன்ர காதல் கலியாணத்தில முடியாது, ஏனெண்டால் ஸ்நேகாவுக்கு நிச்சயதார்த்தம் முடிஞ்சு திருமண தேதியும் குறிச்சிட்டன். முடிஞ்சா வந்து வாழ்த்திட்டுப் போ... இப்பிடி சொல்ல எனக்கு ஆசையாயிருக்கு தம்பி ஆனா..."

"நீங்க என்ன சொல்ல வாறீங்க, எண்டு புரியேல்ல...!"

"புரியும் படியா சொல்றன் கேட்டுக்க. ஸ்நேகாவுக்கு இப்ப இருபது வயசு.



ஆனா... அவளின்ர அறிவு, விவேகம்... இதெல்லாம் சாதாரண பத்து வயசுக் குழந்தையோடது போலத்தான். எதப்பார்த்தாலும் சிரிப்பு, யாரப் பார்த்தாலும் சிரிப்பு... அவள் உலகமே சிரிப்புதான்"

"ஏன்.. ஏன் அப்படி!"

"ஜனவரியில ஒரு நடு இரவு. ஸ்நேகாவுக்கு அப்ப பத்து வயசு. நானும் ஸ்நேகாவும் ஒரு ரூம்ல, வெளியில கொஞ்ச தொலைவில தோட்டாக்களின் சீறிப்பாயும் ஓசை, சனங்களின்ர கூக்குரல்... இதெல்லாம் சேர்ந்து ஒரு பயங்கர சூழ்நிலை, பயத்தால ஸ்நேகா என்ர கழுத்தக் கட்டிக் கொண்ட அதே வினாடியில, காதைக் கிழிக்கிறாப்போல பயங்கர சத்தத்தோட வந்து விழுந்த ஷெல் ரெண்டு ரூம் தள்ளி படுத்திருந்த என்ர மனைவி, பிள்ளைகள் மேலதான், எண்டு சர்வ நிச்சயமாத் தெரிஞ்சு போக பயங்கரமான அலறலோட நான் ஓட, பின்னாடியே வந்த ஸ்நேகா இரத்த வெள்ளத்தில- அங்கொண்டும் இங்கொண்டுமா கிடந்த தாயையும், சகோதரங்களையும் பாத்திட்டு மயங்கி விழுந்தவதான். அண்டையில இருந்து அவளின்ர உடல்லதான் மாற்றம் தோணுதே தவிர.. உள்ளத்தால அவள் ஒரு குழந்தை... பத்தே வயது நிரம்பிய சின்னப் பாப்பா...,"

கடைசி வரிகளை மிகச் சிரமப்பட்டு முடித்தவரின் விழிகளில் ஈரம்.

"இத... இந்த நிலைய மாத்தவே முடியாதா? மருத்துவத்துறையில உலக நாடெல்லாம் எவ்வளவோ முன்னேறியிருக்கு. இதுக்கு மருந்தே இல்லையா?"- கம்மிய குரலில் கேட்டான் தீபன்.

"அதுக்காகத்தான்- அவளின்ர வைத்தியத்துக்காகத்தான் எவ்வளவோ கஷ்டப்பட்டு கண்டிக்கு வந்தன். எண்டாலும் 'அதிர்ச்சி... தாங்க முடியாத அதிர்ச்சி.. அதனால நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டிருக்கு... மருந்து, மாத்திரையால குணப்படுத்தக்கூடிய வியாதியில்ல இது. அவவின்ர வயசுக்குரிய விஷயங்கள மெல்ல மெல்ல புரிய வைக்க முயற்சி செய்யுங்க... அதுக்கு மேல... அந்தக் கடவுள்தான் மனசு வைக்க வேணும் இப்படித்தான் எல்லா டாக்டர்மாரும் சொல்றாங்க... என்னால முடிஞ்ச மட்டும் முயற்சி பண்ணிபாத்திட்டன், ஆனா... ஸ்நேகா மாறவேயில்ல!"

"அங்கிள்... ஸ்நேகாவ இந்த இக்கட்டான நிலமைல இருந்து மீட்டெடுக்க நான் ஒரு வழி சொல்லட்டே?" இவன் வினாவில் வியப்புற்று விழி உயர்த்தியவரிடம்–

"ஓம் அங்கிள். மனிசன் முயற்சி

**கமலினி நடராஜா**

பண்ணினா முடியாதது எதுவுமேயில்ல எண்டது உங்களுக்கும் தெரியும். அதனால... நீங்க விரும்பினா... நான் ஸ்நேகாவோட பழகி... அவள சாதாரண பெண்ணா மாத்த முடியும் எண்ட நம்பிக்கை எனக்கிருக்கு. நம்பிக்கை தானே வாழ்க்கை.

கடவுள் மேல பாரத்தப் போட்டிட்டு ஸ்நேகா 'குணமாகுவா' எண்டு நம்புவம்... அங்கிள்... என்ன சொல்றீங்கள்?"–

எதிர்பார்ப்போடு வினவிய தீபனின் கரம்பற்றியவர் சந்தோஷத்தில் நா தழுதழுக்க- பேசமுடியாது தத்தளிக்க–

"ஏன் அப்பா அழுறீங்க?"– மழலை மாறா மொழியில் கேட்டபடி வந்த ஸ்நேகா இவனைக் கண்டதும்–

"ஹாய் அங்கிள்... என்ன வெறுங்கையோட வந்திருக்கிறீங்க? எனக்கு சொக்கா வாங்கி வரேல்லயே?"– இவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு புன்னகையோடு செல்லமாய் சிணுங்கிய ஸ்நேகாவைக் கண்டு புன்னகைக்க முயன்று அந்தக் கணத்தில் தோற்றுப் போனாலும்–

அவளை 'சாதாரண பெண்ணாய்' மாற்ற முடியும் என்ற அசையாத நம்பிக்கை அவன் இதயத்தில் முழுவதுமாய் பரவி வியாபித்தது. ■

# இழப்பு

சௌமியா விதிர்விதித்துப் போனாள்.

மாடி மேல் மாடியாய்க் கட்டி வைத்திருந்த அத்தனை கோட்டைகளும் ஒரு கணப்பொழுதில் தரைமட்டமாய்ச் சரிந்தது போன்ற வேதனை. ஆறுமாதங்களுக்குள் இத்தனை அழிவுகளா? எதையும் நினைத்துப்பார்க்க முடியாதபடி சற்று நேரம் மூளை மரத்துப் போனது. இலக்கின்றிய சூனியப்பார்வையில் மெல்ல மெல்ல பசுமையான அந்தப்பிரதேசம் மீண்டும் பதிவானது.

'வலிகாமமா இது?' வியந்தாள்.

எத்தனை எதிர்பார்ப்புகளோடு தன் பூர்வீகத்தில் கால் பதித்தாள். 'பழமுதிர் சோலை' வீடு பற்றிய, பனங்காணி பற்றிய, நல்லூர்க் கடைகள் பற்றிய, தோட்டம் பற்றிய எல்லாவற்றையும் மீறி ஆரூரன் பற்றிய எத்தனை எதிர்பார்ப்புகள்! சௌமியாவின் இதய அலறல் விழிவழியாக வடிகாலானது.

பால்யமிருந்தே சேகரித்துப் பத்திரப் படுத்திய தன் தாயகத்தின் மரபுச் சுவடுகள் இருந்த இடமே தெரியாமல் அழிந்து போனதைப் பார்க்க- விழுங்க விழுங்க பந்தாய்த் திரண்டு குரல் வளையை நெருக்கியது துக்கம். இனி எதிர்காலம் என்னாவது? நொறுங்கிப் போனாள். வீடுவாசல், கடைகள், எல்லாமே அழிந்துவிட்டன. பனங்காணி புதர் மண்டிக்கிடக்கிறது. உடமைகளின் அழிவோடு உள்ளமும் உடலும் சோர்ந்து போன தந்தை, விடலைப் பருவத்தில் இரண்டு தம்பிமார், உலகமே இருண்டு போன உணர்வில் தாய்- இத்தனைக்கும் தீர்வு காண்பதெங்ஙனம்?

உதறியெறிந்து விட்டு வந்த வேலைக்கு மீண்டும் போக வேண்டி வருமோ? துணுக்குற்றாள். நேர்பார்வையுடன் நிமிர்ந்து "ரிசைன் லெற்றர்" என்றாளே. "இனியும் உன் கீழாக வேலை செய்வதில் எனக்கு உடன்பாடில்லை மிஸ்டர்" என்றாளே. எந்த முகத்தோடு மீண்டும் போவது- சௌமியா திரிசங்கு சொர்க்கத்தளம்பலில் தவியாய்த் தவித்தாள்.

துக்கமும் கொதிப்பும் அவமான உணர்வும் கலவையாய்த் தொண்டையை அடைத்தது. நைவேத்தியக் கடமைகளை முடித்துவிட்டு வரும் வரை கோபுர அடிவாரத்திலே காத்து நின்றாள்.

"எல்லா உடமைகளும் போய்விட்டதே சௌமி!"

"நீயிருக்கிறாயே ஆரூர்!"

"இன்னமும் அரைக்கிறுக்குத்தனமாகப் பேசிப் பேசியே என் பிராணனை வாங்கப் போறியா சௌமி, யதார்த்தம் புரியாமப் பேசுற படிச்ச பெண் உன்னைத் தவிர உலகத்திலே யாரும் இருக்க மாட்டாங்க!"

"என்ன ஸ்டேட்டஸ்- மண்ணாங்கட்டி"

'ஒரு புரோகிதனை, வேதம் தவிர எந்த- அறிவுமில்லாத ஒரு பிராமணனைக் கட்டி நியென்ன அந்நிய கிரகத்துக்கா இறக்கை விரித்துப் பறக்கப் போறாய்?"

"கல்வி என்கிற மீடியாவை வைச்சு, மனுஷனை எடை போடுறது என் சுபாவமில்லண்ணு உனக்கெப்பவோ தெரியுமே ஆரூர்!"

"போதிக்கிறது சுலபம்– சாதிக்கிறது



**ஆத்மராஜா றூத் சந்திரிக்கா**

கடினம். வேணாம் இந்த விஷப்பரீட்சை!"

இருவரும் சமாந்தரமாக நடந்தார்கள். குன்றும் குழியுமான பாதைகள், புதர்கள் வளர்ந்த தெருக்கரையோரங்கள் தாண்டி இழப்புகள் பற்றியே பேசிக்கொண்டு நடந்தார்கள்.

"ஒருக்கால் காணிக்குள் போவமா ஆரூர்?"

"சே வேணாம்- காடு பிடிச்சுக் கிடக்குதே சௌமி"

"உள்ள போகாமல் வெளித்திடலுக்குப் போவமே"

அவனையும் இழுத்துக் கொண்டு போனாள். அடிக்கட்டைகள் தாண்டி திடல் பரப்பில் ஆரூர் ஏறி, அவளுக்கு கை கொடுத்து இழுக்க- சம நிலை தளம்பினான்.

திடலிலிருந்து தடுமாறிச் சாய 'டொம்ப்' சூழல் அதிர்ந்தது.

காணிக்குள் ஒரு குருஷேத்திரம்.

ஆரூர் கண்ணியில் சிதைந்து, சிவப்பு ஜடமாகக் கிடந்தான்!

சௌமியா சுயமிழந்தாள்.

அவள் கரம்பிணைந்து இழுத்த அவன் கரம் உயிர்ப்பிழந்து கிடந்தது.

அக்கணப்பொழுதின் கோரத்தை ஏற்க மறுத்து அவள் இதயம் வெடித்துச் சிதறிய தாய் விழி நீராய்க் குருதி குபீரிட்டது.

எதிர்காலம் இருளாக, நிகழ்காலம் இழப்புக்குள் சம்மணமிட்டமர்ந்தது. ■


படிப்பகம்

www.padippakam.com

# ஒட்டாத மனம்

தருவது ரதீகன்



முதலிரவே
முள் இரவாகியது!

"பகல் இரவாகும்
இரவு பகலாகும்
உறவே தொடர் வரவாகும்"
என்றனர் தோழிகள்.

அவளுக்கோ
எப்போதும் பகலாகிவிட்டது!

தூங்காத கண்கள்
ஏமாற்றம் தாங்காத இதயம்!

அவளைக் கேட்டு
நடந்த திருமணமல்ல!

அவள் விரும்பி
நடந்த திருமணமுமல்ல!

வற்றாத செல்வம் கொண்ட
வணிகன் என்பதால்
பெற்றவர்களுக்கு அவனை
பிடித்துப் போய்விட்டது!

நாள் பார்த்தனர்,
கோள் பார்த்தனர்,
அவள் மனம் பார்த்தனரா?

அவனுக்கும்
இஷ்டமில்லாத திருமணம்
என்பது
முதலிரவில்தான் தெரிந்தது!

பஞ்சணையில் அவன் படுக்க
பாய் விரித்து
அவள் படுத்தாள்!

தாமரை இலைத் தண்ணீர்
அவர்கள் தாம்பத்திய வாழ்க்கை!

சுட்ட மண்ணும், பச்சை மண்ணும்
போல ஒட்டாதிருந்தார்கள்!

அவன்
மனம் மாறும் என
அவள் நினைத்தாள்!

துணையிருந்தும்
தனிமை!

இரவுகள்
அவள் விட்ட பெருமூச்சுக்களால்
வெப்பமானதுதான் மிச்சம்!

'தனபாரம் தாங்காமல்
தளிர் இடை வருந்த,
தாங்கவோ என்று
துணைவன் நெருங்க,
அதன்பின் இரவில்
தூங்கவோ முடியும்?
விடியும் வரை
முடிவே இல்லையே!'

'அன்போடு அணைத்து
உச்சிமோர்ந்து
கண்போல நினைக்கும்
கணவன் வாய்த்தால்

என்போன்ற பெண்கள்
ஏன் கலங்க வேண்டும்?!'

பின்புறமாய் வந்தணைத்து
கண் இரண்டை மூடி
"நான் யார்?"
என மிரட்டுவான்!

தெரியாததுபோல
இவளும் நடிப்பாள்!

கண்ணை கை மூடியிருக்க
உதட்டால்
காதோரம் கடிப்பான்!

உடலெங்கும்
சிலிர்த்தாட
ஊடல் போல மறுப்பாள்!

தடுப்பது போல
தடுக்காமலிருக்கையில்,
எடுப்பதையெல்லாம்
அவன் கை எடுக்கும்!

கண்மூடிய கை நழுவி
பொன்மேனியெங்கும்
உலாப் போகும்!

பாலுக்குள் விழுந்த
பலாச் சுளையாய்
தேனுக்குள் விழுந்த
தீங் கனியாய்
தேகமெல்லாம் மாறும்!

சாந்தி, சாந்தி
தேகத்திற்கு சாந்தி!

ஆரம்பித்த வேளையில்
புயலடிக்கும்.
ஆடி முடிக்கையில்
அமைதி கிடைக்கும்!

சாந்தி, சாந்தி
தேகமெங்கும் சாந்தி!

தொடாத போதெல்லாம்
தீ யெரியும்
தொட்டணைத்தபோது
தென்றலடிக்கும்!

கைபடாதபோது
கனி தவித்தது,
பட்டுக்கொண்ட பின்னர்
கனி பணிந்தது!

தொட்டுக்கொண்டபோது
பட படத்தது,
தொடர்ந்து தொட்டபோது
பழகிப் போனது!

கட்டிக் கொண்டபோது
பயம் சிறகடித்தது,
இறுக்கிக் கொண்டபோது
பயம் பறந்துவிட்டது!

சாந்தி சாந்தி
தேகமெங்கும் சாந்தி!

நீண்டதோர் கூந்தல் புரள
மூண்டதோர் போகக் களத்தில்
தீண்டித்தான் தேகம் தேயும்.

பொங்கித்தான் போனாள்
படைக்க
துணைவன்தான்
அருகில் இல்லை!

தேன் இதழ் சொரியும்
தேவ அமிர்தத்தை பருகத்
தேவன் இல்லை!

மார்பினால் முட்டி
'மாயவா' என்றணைக்க
உரியவன் அங்கே இல்லை'.

கூந்தலால்
அவனை மூடி
நெற்றியால் நெற்றி முட்டி

நெஞ்சோடு கட்டிக் கொண்டு
கொஞ்சத்தான் ஆசை ஆசை!

எல்லாமே
நினைவு மட்டும்!
நெருங்கத்தான்
துணைவன் இல்லை!

மனம் ஒத்த
மணம் இன்றில்
நறுமணம்
வாழ்வில் வருமோ?

கட்டாய ஒப்பந்தங்கள்
கடைசிவரை
பந்தம் தருமோ?

மனம் இரண்டும்
ஒட்டிக் கொண்டால்
பிணமான பின்னும்
காதல் மணக்கும்!

உடல் எரிந்து
சாம்பல் நீறான பின்னரும்
காதல் நிலைக்கும்!

ஓடையிலே
சாம்பல் ஓடும்போதும்
காதல் என்றே
சப்தித்து செல்ல வேண்டும்!

உடல் அழிந்து போனாலும்
உயிர் கலந்து வாழ்ந்திருக்கும்
உண்மைக் காதல்
ஊரெங்கும் மலர்ந்தால்தான்
உலகம் இனிக்கும்!

ஏன் பிறந்தோம்?

## இலக்கிய நயம்

ஏன் வளர்ந்தோம்?
ஜடமாக இருந்துவிட்டு
வெறும் மரமாய் வீழ்வதற்கா?

ஒரு கோப்பை அமுதம்
இந்த வாழ்க்கை ஐயா!
ஏன் தள்ளிப் போனீர்
எடுத்தருந்த வாரும் ஐயா!

கண்களில் இருந்து
நீர் சொரிந்தது,
இதயத்தில் இருந்து
இரத்தம் சொரிந்தது!

சலித்துப்போய் சொன்னாள்;
"நெஞ்சே! நீ வாழ்க!
பானையில் இல்லாமல்
அகப்பையில் வருமோ?
நெஞ்சில் பாசமே இல்லாதவரிடம்
துன்பத்தை உரைத்தால்
தேறுதல் வருமோ?
கல்நெஞ்சக்காரரிடம்
கருணை தேடுவதைவிட
கடலை தூர்ப்பது
மெத்தச் சுலபம்!"

"உறா அர்க்கு உறுநோய் உரைப்பாய்
கடலைச்
செறா அஅய் வாழிய நெஞ்சு"
அதிகாரம்-120. குறள்-1200

## ஸ்போர்ட்ஸ்

### வீசியது தப்பு



ராகுல் சங்வி

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையே நடைபெற்ற ஒரு நாள் போட்டித் தொடரில் நடுவராக நியமிக்கப்பட்டிருந்தவர் முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் பொப் சிம்ஸன். இவர், இந்திய சுழற்பந்து வீச்சாளர் ராஜேஷ் சௌகான், பந்தை முறைப்படி வீசாமல், எறிவதாகக் குற்றஞ் சாட்டியுள்ளார். இதனால் ராஜேஷ் சௌகான் இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தற்போது சௌகானுக்குப் பதிலாக டில்லியைச் சேர்ந்த 23 வயது சுழற்பந்து வீச்சாளரான ராகுல் சங்வி சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த வருடம் இந்தியாவில் மாநில அணிகளுக்கு இடையே நடைபெற்ற ரஞ்சி கோப்பைப் போட்டிகளில் 35 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

அத்துடன் ஹிமாச்சல் பிரதேசத்திற்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் போட்டியில் 15 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்பு முதல்தர ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய வேகப்பந்து வீச்சாளர் மைக்கல் ஹோல்டிங் 21 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்கள் வீழ்த்தியதுதான் உலக சாதனை.

### அரவிந்த 7 சதம்

* சர்வதேச அளவில் டெஸ்ட் கிரிக்கெட்டில் முதலிடத்தில் அவுஸ்திரேலியாவும், ஒரு நாள் போட்டிகளில் முதலிடத்தில் இலங்கையும் இருக்கின்றன.

* சர்வதேச அளவில் இலங்கை வீரர்கள் ஜெயசூரியாவும், அரவிந்த டி சில்வாவும் பிரமிக்கத்தக்க வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

* இந்திய கிரிக்கெட் வீரர்களில் கடந்த வருடத்தில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் கங்குலி நன்கு பிரகாசித்துள்ளார்.

* கடந்த வருடம் அரவிந்த டி சில்வா 7 டெஸ்ட் செஞ்சரிகளை அடித்துள்ளார்.

### 300 சாய்த்தவர்கள்

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 300 விக்கெட்டுக்களுக்கு அதிகமாக வீழ்த்தியவர்கள் 12 பேர். கபில் தேவ் (இந்தியா), றிச்சர்ட் ஹாட்லி (நியூஸிலாந்து), இயன் பொத்தம் (இங்கிலாந்து), பொப் வில்லிஸ் (இங்கிலாந்து), ட்ருமன் (இங்கிலாந்து), டென்னிஸ் லில்லி (அவுஸ்திரேலியா), இம்ரான் கான் (பாகிஸ்தான்), மல்கம் மார்ஷல் (மேற்கிந்தியத் தீவு), லான்ஸ் கிப்ஸ் (மேற்கிந்தியத் தீவு) வாசிம் அக்ரம் (பாகிஸ்தான்), கொட்னி வோல்ஷ் (மேற்கிந்தியத் தீவு), கேர்ட்லி அம்புரோஸ் (மேற்கிந்தியத் தீவு) ஆகியோர்தான் அந்தப் 12 பேருமாவர்.

இப்போது 300 விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர்கள் பட்டியலில் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னும் சேர்ந்துள்ளார். தென்னாபிரிக்க அணியுடன் சிட்னியில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட்டில் 11 விக்கெட்டுக்களை வீழ்த்தி 300 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் 13வது இடத்தில் இருக்கிறார் ஷேன் வோர்ன்.

அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களில் டென்னிஸ் லில்லிதான் 355 விக்கெட்டுக்கள் எடுத்து முதல் இடத்தில் இருக்கிறார். வோர்ன் இரண்டாவது இடத்தில் இருக்கிறார். சுழற்பந்து வீச்சாளர்களில் உலகில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் மேற்கிந்திய வீரர் லான்ஸ் கிப்ஸ். இவர் வீழ்த்தியது 309 விக்கெட்டுக்கள்.

1974 முதல் உள்ள இந்தச் சாதனையை முறியடிக்க வோர்னுக்கு இன்னமும் 10 விக்கெட்டுக்கள் தேவை. இம்மாத இறுதியில் தென்னாபிரிக்க அணியுடன் அவுஸ்திரேலிய அணி 3வது டெஸ்ட்டில் விளையாடவுள்ளது. இதில் வோர்ன் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தினால், உலகில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனைக்குரியவராவார்.

### இவர்கள்தான் அவர்கள்

(1)



பாப்பரசர் 2ம் அருளப்பர் சின்னப்பர்

(2)



தலாய் லாமா

(3)



எலிஸபெத் மகாராணி

(4)



சதாம் ஹுஸைன்

## சிந்தியா பதில்கள்

* "இலங்கைப் பிரச்சனையில் தலையிட மாட்டோம்," என்று பாரதிய ஜனதா கட்சி கதிர்காமரிடம் உறுதியளித்துள்ளதாமே?

வி. லோகநாதன், கொழும்பு-05.

"நியாயமான தீர்வுக்கு உதவுவோம்"! என்று அதே பாரதிய ஜனதா தமிழக மக்களிடம் கூறியிருக்கிறதே! வாஜ்பேயை சந்திக்க கதிர்காமர் சென்ற செய்தியை அறிந்தபோது, மகாபாரதத்தில் கண்ணனின் உதவிகேட்டு துரியோதனனும், தருமனும் போய்க் காத்திருந்த காட்சிதான் நினைவுக்கு வந்தது! கண்ணன் கடைசிவரை தர்மத்தின் பக்கம் நின்றதாக மகாபாரதம் சொல்கிறது. நவ பாரதம் என்ன செய்யும்? பார்க்கலாம்!

○□

* சத்யசாயிபாபாவின் ஆசிர்வாதம் தனக்குத்தான் என்றார் அர்ஜுன ரணதுங்கா. அப்படியிருந்தும் அவர் தலைமை தாங்கிய உலக அணியை வீழ்த்தி, சாயிபாபா தங்கக் கோப்பையை இந்திய அணி வென்றுவிட்டதே?

பி. சிகாமணி, கொழும்பு-11.

அர்ஜுன ரணதுங்காவுக்கு சாயிபாபாமீது பக்தி. சாயிபாபாவுக்கு தேச பக்தி. தேசம்தான் முக்கியம் என்று சாயிபாபா நினைத்து விட்டாரோ?!

○□

* மறைந்த உறுப்பினர்களின் பெயர்களைச் சொல்லி தமிழ்க் கட்சிகள் வாக்குக் கேட்பது சரியா?

இ. சிவரஞ்சன், யாழ்ப்பாணம்.

ஆயுதக் கலாசாரம் ஒழிக என்கிறார்கள். ஆயுதம் ஏந்திப் போராடி மரித்தவர்கள் பெயரால் வாக்கும் கேட்கிறார்கள்! ஐயா, சிவரஞ்சன்! முரண்பாடுகளின் மொத்த வடிவமாக தமிழ்க் கட்சிகள் மாறிவிட்டன ஐயா!

○□

* துன்பம் வந்தபோது சிரி என்றால், முடியுமா?

க. கார்த்திகேயன், நுவரெலியா.

சிலரால் முடியும்!

அரேபிய நாடு ஒன்றில் அரச சபையில் நகைச்சுவைப் புலவர் ஒருத்தர் இருந்தார். அவர் பெயர் அபூ நவாஸ்.

அவர் மரணப்படுக்கையில் இருந்தபோது உறவினர்கள் சோகமாகச் சுற்றி நின்றனர்.

அப்போது அபூ நவாஸின் நண்பர்:

"எப்படியும் போய்விடுவீர்கள் போல் இருக்கிறது. மறு உலகில் என் அப்பாவைப் பார்த்து என் சலாமை கூறுங்கள்," என்றார்.

அதற்கு அபூ நவாஸ் சிரித்தபடியே சொன்ன பதில்:

"நான் சொர்க்கத்துக்கு அல்லவா போகப்போகிறேன். உங்கள் அப்பாவை அங்கே பார்க்க முடியாதே!" என்றார் எல்லோரும் சிரித்தனர்.

○□

* தமிழ் நாட்டில் ஜெயலலிதா வுக்கு மறுபடி செல்வாக்கு ஏற்பட என்ன காரணம்?

என். காந்தன், ஹட்டன்.

முன்னைய ஆட்சிமீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களை மட்டும் தனது சாதனைப் பட்டியலாக நிரப்பி வைத்திருக்கும் தி.மு.க. ஆட்சிதான் காரணம்.

○□

* பெப்ரவரி 4ல் சுதந்திர தினம். உங்கள் சுதந்திரமான அபிப்பிராயம்?

செல்வன் க. மகேந்திரன், கண்டி.

கவிஞர் வைரமுத்து இந்திய சுதந்திரம் பற்றி எழுதிய கவிதை. (இரவல் அபிப்பிராயம்)

"பட்டு வேட்டி பற்றிய
கனவில் இருந்தபோது
கட்டியிருந்த கோவணமும்
களவாடப்பட்டது!"

○□

* வடக்கு-கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுமா?

எம். மர்லின், கல்லாறு.

தற்போதைக்கு இல்லை!

○□

* ஜனாதிபதியின் பேச்சில் நியாயமான கருத்துக்கள் தொனிக்கிறதல்லவா?

ஆர். ஜெயரத்னம், கொழும்பு-09.

ஆம்! பேச்சில்!!

○□





* டியர் சிந்தியா! ஐக்கிய தேசியக் கட்சி நியாயமான தீர்வுக்கு ஒத்துழைக்குமா?

வி.என். பாஸ்கரன், மட்டக்களப்பு.

கட்சிகளின் பெயர்களை மறவுங்கள். இலங்கைத் தீர்வில், எந்தவொரு எதிர்க்கட்சியும் ஆளும் கட்சியுடன் தானாக முன்வந்து ஒத்துழைத்ததும் இல்லை. ஒத்துழைக்கப் போவதும் இல்லை!

○□

* தை பிறந்தால் வழி திறக்குமா?

எஸ். சியாமளா, அப்புத்தளை.

தை பிறக்க மட்டும் வழி திறக்கும்!

○□

* சிந்தியா! செல்வி ஜெயலலிதா திருந்தி விட்டாரா?

ஆர். விக்னேஸ்வரி, பதுளை.

திருந்தவே வாய்ப்புக் கிடைக்காமல், மறுபடி திரும்ப ஒரு வாய்ப்பு வரும்போது எப்படித் திருந்துவார்?! முன்னாள் அமைச்சர் சிதம்பரம் கூறியிருப்பது போல, "திரும்ப வரவேண்டும் என்று ஆசை இருக்கிறதே தவிர, திருந்திவரவேண்டும் என்று நினைக்கவில்லை!"

○□

* முற்றும் துறந்த சாமியார்களே கிடையாதா?

சி. கனேஸ், மஸ்கெலியா.

நான் அறிந்தவரை தற்காலத்தில்... ம்ஹூம்!

ஒரு குட்டிக்கதையை உதறிப்போட இதுதான் தருணம்.

ஒரு குருகுலம்.

அங்கே தலைமைக் குருவிடம் இருபது ஆண் சந்நியாசிகளும், ஒரு பெண் சந்நியாசினியும் இருந்தனர்.

பெண் சந்நியாசினி கொள்ளை அழகு. இருபது சந்நியாசிகளும் பெண் சந்நியாசினி மீது பயங்கர சபலம்.

ஒரு சந்நியாசி பொறுக்க முடியாமல் காதல் கடிதம் எழுதிவிட்டார்.

ஆனால் கடிதம் கிடைத்ததாக அவள் காட்டிக்கொள்ளவில்லை.

ஆண் சந்நியாசிக்கு ஒரே பதற்றம். காலையில் சகல சீடர்களும் கூடினர். குரு உபதேசம் செய்து முடித்தார்.

எல்லோரும் கலையப்போகும் நேரம்: பெண் சந்நியாசினி எழுந்தார். தனக்கு காதல் கடிதம் எழுதிய ஆண் சந்நியாசியைப் பார்த்தார்.

"நீங்கள் என்னை உண்மையாகக் காதலிப்பதாக இருந்தால், வாருங்கள், வந்து என்னைக் கட்டி அணைத்துக் கொள்ளுங்கள்," என்றார்.

கடிதம் எழுதிய சந்நியாசி நெளிந்தார். குரு அந்தப் பெண் சந்நியாசினியைப் பார்த்து: "பெண்ணே! நீதான் இங்கிருக்கும் சகல ஆண் 'சந்நியாசிகளையும் விட உண்மையானவள்! துறவி என்பவர் மனதில் உள்ள இரகசியத்தையும் துறந்துவிட வேண்டும். உன்னிடம் இரகசியமே இல்லை. இதுதான் உயர்ந்த நிலை" என்றார்.

○□

* கதாநாயகி நடிகைகள் நீண்டகாலம் நிலைப்பதில்லையே ஏன்?

பி. பாலேந்திரன், கந்தப்பளை.

கனவுக் கன்னிகளாக மட்டும் இருப்பதால்தான்! கனவுக்கு ஆயுள் அதிகமில்லை!



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 116

இராமபிரான் அரக்கர்க்கரசனான விபீடணரிடம் கோரியபடி கண நேரத்தில் புட்பகவிமானம் என்ற வானூர்தியை இராமபிரான் முன்நிலையில் கொண்டுவந்து நிறுத்தினார் விபீடணர். வாயுவேகம்- மனோவேகத்தில் செல்லக்கூடியது அவ்விமானம்.

இயக்கர் குலத்தலைவனான குபேரன் நான்முகனான பிரம்மதேவனை நோக்கித்தவமியற்றினான். அவனுடைய தவத்தை மெச்சிய பிரம்மதேவன் புட்பகவிமானத்தை குபேரனுக்கு அளித்தார். குபேரனிடத்திலிருந்து இராவணன் அவ்விமானத்தை அபகரித்துக் கொண்டான். தேவர்களும் பார்த்து வியக்கத்

## பரதனின் பரிதாப நிலை

தக்க புட்பகவிமானம் மிகப் பிரமாண்டமானது. இந்த விமானத்தைக் கண்டதும் உடனடியாக அயோத்திமாநகரை நோக்கிப் புறப்பட இராமபிரான் ஆயத்தமானார். அப்பொழுது அவரைச் சுற்றி நின்ற அரக்கர் கோன் விபீடணர், வானரர் தலைவனான சுக்கிரீவன், அவருடைய அமைச்சர் ஆஞ்சநேயர், வாலிமகன் அங்கதன், கழுகுவேந்தன் ஜாம்பவன் ஆகியோரை நோக்கி பல அறிவுரைகளைக் கூறினார். அவரவர் தங்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்பி, தத்தமது கடமைகளை செவ்வனே செய்யுமாறு பணித்தார். அரக்கர்களில் அநீதியைக் கடைப்பிடித்து, தர்மநெறி பிறழ்ந்தவர்களை வதம் செய்யத் தனக்கு ஒத்துழைப்புத் தந்தமைக்காக தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார் இராமபிரான்.

சுற்றி நின்றவர்கள் அனைவரினது கண்களிலிருந்தும் தாரைதாரையாகக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. இராமபிரானை விட்டுப் பிரிவது அவர்கள் அனைவருக்கும் பெரும் வேதனையை அளித்தது.

விபீடணர் இராமபிரானுடைய தாளினைப் பற்றினார். அவருடைய கண்களும் பனித்திருந்தன.

"ஐயனே! தங்களை விட்டுப்பிரிதல் எங்களுடைய உயிரையே பிரித்தெடுப்பதற்கு ஒப்பாகும். கூடியவர்கள் ஒருநாள் எப்படியும் பிரியத்தான் வேண்டுவது நியதிதான்! இருப்பினும் தங்களுடன் நாங்களும் அயோத்தி மாநகர் வந்து, தங்களுடைய பட்டாபிஷேகப் பெரு விழாவினைக் கண்டு மகிழ ஆசைப்படுகிறோம். ஆகவே கருணை கூர்ந்து எங்களையும், தங்களுடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்று இங்குள்ள அனைவரின் சார்பிலும் கேட்டுக் கொள்ளுகிறேன்!"

விபீடணரின் கோரிக்கையைப் புன்னகையாலேயே இராமபிரான் ஏற்றுக்கொண்டதும் ஆஞ்சநேயர் "ஸ்ரீ ராமஜெயம்" என்று ஜெபிக்கலானார். திரண்டு நின்ற அனைவரும் இதே மந்திரத்தை உரத்து உச்சரிக்க, அவ்வொலி இலங்கை மாநகரெங்கும் எதிரொலித்தது.

### புட்பக விமானம் புறப்பட்டது

புட்பகவிமானம் அளவில் மிகப்பிரமாண்டமானது. அதன் முன்பகுதியில் இராமச்சந்திரமூர்த்தி, சீதாப்பிராட்டியார் மற்றும் இலக்குமணர் ஆகியோர் ஏறிக் கொண்டனர். ஏனையோர் அந்த விமானத்தின் பின்பகுதியில் அமர்ந்து கொண்டனர். அவ்விமானத்தைச் செலுத்தும் ஆற்றலுள்ள ஒருவரும் அந்த இரதத்துடன் வந்திருந்தார். அவரே விமானத்தை இயக்க ஆரம்பித்ததும் கன வேகத்தில் அது விண்ணில் தவழ்ந்தது.

இலங்கை மாநகரின் எழிலைக் கண்டு இரசிப்பதற்கு பிராட்டியார் விரும்பியமையினால் அவ்வண்ணம் நகரைச் சுற்றி விமானம் வலம் வந்தது. கோட்டையின் நான்கு வாயில்களிலும் நடைபெற்ற போரின் தன்மையையும் இராமபிரான் எடுத்துக் கூறினார். இலங்கையை விட்டு நீங்கி சேதுக்கடல் மீது விமானம் சென்றபோது, வானரவீரர்களின் உதவியுடன் அக்கடலைக் கடப்பதற்காகக் கட்டப்பட்ட அணையினையும் இராமபிரான் காட்டினார். அமரபட்ச அட்டமிதிதியன்று சுவேல மலையில் வானர சேனையுடன் வந்திறங்கி இலங்கை மாநகர்க் கோட்டையை வளைத்துப் போர் தொடங்கி, ஏழாவது நாளான அமாவாசை திதியன்று, இராமபிரான் இராவணனை வீழ்த்தினார். அரக்கர் படையுடன் நடைபெற்ற போர் பற்றிய விளக்கங்களையும் பிராட்டியாருக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

### தமிழ் முனிவர் அகத்தியர்

தமிழ் முனிவரான அகத்திய மாமுனிவர் வாழும் மலையினை அண்மித்து விமானம் சென்றபோது, இராமபிரான் எழுந்து நின்று அம்மலையை வணங்கினார். அவர் எழுந்து நின்றதும் இலக்குவனும் பிராட்டியாருமே எழுந்து நின்றனர். அருகிலேயே ஸ்ரீ வெங்கடாஜலபதியின் உறைவிடமான திருவேங்கட மலையினையும் கண்டு தொழுதனர். தானும் இலக்குமணனும், பிராட்டியாரைத் தேடி வரும்போது அகத்தியமா முனிவர் அளித்த உபசாரத்தைப் பற்றியெல்லாம் இராமபிரான் கூறினார்.

அனுமனைக் கண்ட இடத்தைக் காட்டினார். வாலியை வதைத்து சுக்கிரீவனை கிட்கிந்தைக்கு மன்னவனாக்கிய கதையினையும் இராமபிரான் கூறினார். கிட்கிந்தையை பிராட்டியார் காணவிரும்பியமையினால்



புட்பகவிமானத்தை அங்கு இறக்கினார்கள். அங்கிருந்த பல வானர வனிதையரையும் தன்னுடன் அயோத்திக்கு வருமாறு பிராட்டியார் அழைத்தார். அவ்வண்ணமே பல வானரப் பெண்கள் விமானத்தில் ஏறிக்கொண்டனர்.

கடுந்தவமியற்றி பெருநிலை அடைந்தவ்ரான பரத்துவாச மன்னர் வாழ்ந்த தபோ

**இராஜகுமாரன்**

வனத்தை விமானம் அணுகியதும், விமானத்தைத் தரையில் இறக்குமாறு இராமபிரான் கேட்டுக் கொண்டார். ஏற்கனவே, வனவாசம் புகுந்து தெற்கு நோக்கிச் செல்லும்போது, இலங்கையிலிருந்து திரும்புகையில் பரத்துவாச மாமுனிவரின் தபோவனத்துக்கு மீண்டும் வருவதாக இராமபிரான் வாக்களித்திருந்தார். கொடுத்த வாக்கினைக் காப்பாற்றும் நோக்குடன் இராமபிரான் அவ்விடத்தில் வந்து சேர்ந்தார்.

பரத்துவாசர், இராமபிரானும் குழுவினரும் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை தன் ஞான திருஷ்டியினால் அறிந்து கொண்ட அம்முனிவர் விமானத்தில் வரும் அனைவருக்கும் அறுசுவை விருந்து படைக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார். விமானம் தரையிறங்கியதும், அதிலிருந்து இறங்கிய இராமபிரான், காத்திருந்த முனிவரை அணுகி அவருடைய தாளில் விழுந்து வணங்கினார். அவ்வண்ணமே பிராட்டியாரும் இளையபெருமாளும் மற்றுமுள்ளோரும் வணங்கினர். எல்லோரையும் ஆசீர்வதித்து உணவளித்து உபசரித்தார் முனிவர்.

தபோவனத்தில் தீஞ்சுவைக் கனிகள் நிறைந்த எண்ணற்ற மரங்கள் பெருஞ்சோலையாகக் காட்சி அளித்தன. விமானத்தில் வந்து சேர்ந்த வானர வீரர்கள் அனைவரையும், வேண்டிய பழங்களை விருப்புடன் உண்டு களிக்குமாறு முனிவர் கேட்டுக்கொண்டார். தனது படையில் சேர்ந்து, அறம் பிறழ்ந்த அரக்கர்களை வதம் செய்ய உதவிய வானரர்களுக்கு, அவர்கள் வாழும் இடங்களிலெல்லாம் குறைவிலாது பழங்களைக் கொடுக்கும் மரங்கள் பல்கிப் பெருக வரமளிக்க வேண்டும் என்று முனிவரை இராமபிரான் வேண்டிக்கொண்டார். அவ்வாறே "பழவளங்கள் என்றும் குறையாத சோலைகள் எங்கும் பரந்து செழித்து வளரக் கடவது," என்று முனிவர் வரமளித்தார்.

இராமபிரான் ஆஞ்சநேயரைத் தன் அருகே அழைத்து உடனடியாக அயோத்தி மாநகர் சென்று, தம்பி பரதனைக் கண்டு, தாங்கள் வந்து கொண்டிருப்பது பற்றிய தகவலைக் கூறிவிடுமாறு பணித்தார். பரதனிடம் அடையாளமாகக் காட்டுவதற்கு தனது கணையாழியையும் கொடுத்தார். இராமபிரானின் ஆணை எப்போது பிறக்கும்; எப்போது பறக்கலாம் என்ற கருத்துடனே காத்துக்கிடக்கும் இராமதூதனான அனுமன், ஐயனின் தாள் பணிந்து உடன் புறப்பட்டார். கண் இமைப்பதற்குள்ளாகவே அவர் உருவம் விண்ணில் தாவியது.

### பரதன் நிலை

பரத்துவாச முனிவரின் ஆசிரமத்தில் சிறிது நேரம் தங்கியிருந்த போதிலும் இராமபிரானுடைய எண்ணங்களெல்லாம் அயோத்தியிலேயே நிலை கொண்டிருந்தது. அங்கு தன் வருகைக்காக ஏங்கிக் காத்துக்கிடக்கும் அன்புத் தம்பி பரதன்தான் அவருடைய உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான். பரதனிடம் கங்கைக் கரையில் வைத்து, "பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடிந்ததும் ஒரு நாளிகைதானும் தாமதியாமல் அயோத்தி மாநகர எல்லையில் காலடி வைத்து விடுவேன்!" என்று அளித்த வாக்குறுதிப்படி அங்கு போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்று அவருள்ளம் துடித்தது.

இராமபிரானின் மனவேதனையை நன்கு புரிந்துகொண்ட பரத்துவாச முனிவர் பரதனின் நிலையினை இராமபிரானிடம் கூறினார்.

**வெயர்த்த மேனியன் விழிபொழி**
**மழையன் மூவினையைச்**
**செமிர்த்த சிந்தையன் தெரு மரல் உழந்து**
**உழந்து அழிவான்**
**அமிர்த்து நோக்கினும் தென் திசை அன்றி**
**வேறு அறியான்**
**பயத்த துன்பமே உருவு கொண்டென்னலாம்**
**படியான்.**

(யுத்த காண்டம்-614)

**பொருள்:**

*பரதனுடைய மேனி வியர்த்தபடியே உள்ளது. அவனுடைய கண்களில் கண்ணீரே பொழிகிறது. முன்செய்த வினைகளையெல்லாம் போக்கிய புனிதனாகிய பரதன், மனம் குழம்பியவனாக வருந்தி அழுதவண்ணம் இருக்கிறான். அவனுடைய பார்வை, நீ சென்ற தென்திசையினையே பார்க்கின்றதே அன்றி வேறு எங்குமே செல்லவில்லை. அச்சத்துடன் துயரமே உருவாகக் கொண்டவன் போல் காணப்படுகிறான்.*

***

கங்கை நதிக்கரையில் இராமபிரானுடைய பாதணிகளைப் பெற்று அயோத்தி திரும்பிய பரதன், நகரின் உள்ளே புகாமல், புறநகரான நந்திக்கிராமத்தில் குடிசை அமைத்து அதில் தங்கியிருந்தான். அயோத்தி மாநகரின் அரியணை அங்கு வைக்கப்பட்டிருந்தது. அதன்மீது இராமபிரானின் பாதுகைகள், மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பரதனின் கணக்குப்படி அடுத்த நாள் மாலையுடன்- இராமபிரானின் பதினான்கு ஆண்டு கால வனவாசம் முடிவடைகிறது. தனது உயிரினும் மேலான- தெய்வமான அண்ணன் இராமபிரான் தனக்குக் கொடுத்த வாக்குப்படி அயோத்தியை வந்தடைய மாட்டார் என்றே பரதனுக்குப் பட்டது. கொடுத்த வாக்கு நிறைவேறாவிட்டால் தனது அண்ணனுக்கு ஏதோ விபரீதம் நேர்ந்து விட்டிருக்கும் என்றே பரதன் கருதினான்.

கானகத்தில் பழ மரங்களில் தானாகவே கனிந்து நிலத்தில் விழும் பழங்களையும், காய்ந்து உதிரும் இலைகளையுமே- ஒரு நாளைக்கு ஒரு தடவை மட்டுமே உண்டு- மிகவும் களைப்படைந்த நிலையில் இருந்த போதிலும் அண்ணன் மீது கொண்ட பக்தியும், வைராக்கியமும், மனோதிடமும் பரதனை அன்றுவரை திடகாத்திரமாக வைத்திருந்தன. கடந்த சில நாட்களாக பரதன் மிக வேதனையுடன் காணப்பட்டான். இதனால் முனிவர்களும் அயோத்திமா நகரத்தின் அறிஞர்களும் பரதனைச் சூழ்ந்திருந்து அறிவுரை கூறி வந்தனர். இராமபிரான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவார் என்று எல்லோரும் ஏகோபித்துக் கூறியும் பரதன் மனம் ஏனோ ஒப்பவில்லை. ஏவலர்களை அழைத்து தம்பி சுக்கிரீவனை உடன் அழைத்து வருமாறு கூறினான்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 114**

**சரியானவிடை:- திலோத்தமை, அரம்பை, ஊர்வசி, மேனகை.**

1. செல்வி ஸஃபியா ஹஸன், 40 சாந்த யெஹியா மாவத்தை, மாத்தறை.
2. சுப்பிரமணியம் விஜயராஜா, பீரட் தோட்டம், டிக்கோயா.
3. என். ஃபிராங்கிலின், 83, மத்தியாஸ் வீதி, மட்டக்களப்பு.
4. ஏ.எஸ். சித்தி ஸாஹிரா, 32, கொட்டகொட, வெலிகம.
5. சி. பாலாம்பிகை,118/50, 4வது ஒழுங்கை, மெல்புர, சிலாபம்.

**போட்டி இல. 116** கேள்வி:- புட்பக விமானம் யாருக்குச் சொந்தமானது?

ஜனவரி 17 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.116, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

## நவீன சுயம்வரம்

தேர்தல் சுயம்வரத்தில் வெற்றி பெறுவதற்கான போட்டிகள் வெகு கோலாகலமாக நடைபெற்று வருகின்றன.




போட்டிகள் பின்வருமாறு:

1) வாள் சண்டை
2 கத்தி எறிதல்
3) உடைந்தபோத்தல் வீச்சு.
4) கண்ணாடிகள் உடைத்தல்
5) கல் வீச்சு
6) சாணம் எறிதல்
7) வாய்த்தர்க்கப் போட்டி
8) காகித அம்பு எய்தல் (அறிக்கைகள்)

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்வதற்கு, முன் அனுபவம் எதுவும் தேவையில்லை. கலந்து கொள்வதன்மூலம் அனுபவம் பெறலாம்.

துப்பாக்கிக் கலாசாரத்தை ஒழித்துக் கட்டுவதில் தமிழ்க் கட்சிகள் கண்ணும், கருத்தும், காதும் கருத்துமாக இருப்பதால் துப்பாக்கி சுடும் போட்டி இடம்பெறவில்லை.

## 'ஒட்டு அல்லது கொட்டிவிடு'
## யாழ் ஜயசிக்குறுயில் திருப்பம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான ஒப்பரேஷன் 'ஜயசிக்குறுய்'யில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

'ஒட்டு அல்லது கொட்டிவிடு' என்று பெயரிடப்பட்ட நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

"சுவரொட்டிகளை ஒட்டு, போதிய சுவர்கள் இல்லாவிட்டால் துண்டுப் பிரசுரங்களை மக்களிடம் கொட்டு" என்பதே இதன் முழுமையான அர்த்தம் என்று விஷயமறிந்த விட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

'ஒட்டு அல்லது கொட்டிவிடு' நடவடிக்கைக்காக நவீன பசைவாளிகள், நவீன ரக பிரஷ்கள், மற்றும் உபகரணங்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டுள்ளன.

நேற்று இரண்டு தமிழ்க் கட்சிகள் இடையே நடைபெற்ற சுவரொட்டிப் போட்டியில், அதிகாலையிலே எழுந்து வீட்டுச் சுவர்களை குறிவைத்து அதிரடி ஒட்டல் நடத்திய கட்சியே வெற்றி பெற்றது. இதனால் மறுதரப்பு சில சுவரொட்டி இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றது.

**'கேட்டது தமிழீழம் கிடைத்தது தெருச்சுவர்!'**

"இதனையும் விட்டுக் கொடுக்க நாம் என்ன றெயினிங் எடுக்காதவர்களா? பசைவாளியும், தும்பு பிரஷும் ஏந்திச் செல்ல இயலாதவர்களா?" என்று தமிழ்க் கட்சிப் பிரமுகர்கள் சிலர் ஆவேசப்பட்டனர். அச் சமயத்தில் தேர்தல் கள வெப்பநிலை சில டிகிரிகள் உயர்ந்து காணப்பட்டது.

## நாடகம் ஒன்று நடக்குது

தேர்தல் நாடக மேடையில் காதிலை பூ கந்தசாமியார் 'கிளிக்' செய்த பிரத்தியேகப் புகையில்லாத படம். முதலாவதாக அமர்ந்திருப்பது போன்று காட்சி தருவது டம்மி வேட்பாளர். (பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்டது) இறுதியாக அமர்ந்திருப்பவர் சீட்டணி வேட்பாளர். இப் புகைப்படம் எடுப்பதற்கு சற்றுமுன்னர்தான் புட்டியில் பால் குடித்திருந்தார். அவரது மின்னலடிக்கும் புன்னகைக்கு காரணம்- அடிக்கடி புட்டிப் பால் வழங்கப்படுவதே!

பாலுக்கு பாலகன் வேண்டி அழுகையில், புட்டிப்பால் கொடுத்து அவனை வேட்பாளராக்கிய பிரான்கள் சீட்டணியினர்.



## இன்று மட்டுமல்ல

"எங்கள் வேட்பாளர்களின் தரம் என்ன, தகுதி என்னவென்று சிலர் கேட்கிறார்கள். நாம் என்ன தெரிந்து கொண்டா மறைக்கிறோம். தெரிந்தால் சொல்லியிருக்க மாட்டோமா?

வேட்பாளர்கள் யார் என்று அறியும் ஆவல் மக்களுக்கு இருக்கும் என்பதை நாம் மறுக்கவில்லை. நாம் குறிப்பிட்டுள்ள பெயர்களுக்கு உரிய வேட்பாளர்கள் எங்காவது தென்படமாட்டார்களா என்றுதானே நாமும் தேடிக்கொண்டிருக்கிறோம். எங்களுக்கும் அவர்களை அறியும் ஆவல் உண்டு என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாங்கள் ஏன் இந்த நேரத்தில் ஐக்கியப் படவில்லை? என்று சிலர் கேட்கிறார்கள். இதைவிட மோசமான நேரங்களில்கூட நாங்கள் ஐக்கியப்பட்டதில்லை என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். இந்த நேரத்தில் மட்டும்தான் பிரிந்து நிற்கிறோம் என நினைத்து நமது வரலாற்றை திரிபுபடுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்." இவ்வாறு தமிழ்க் கட்சித் தலைவர்கள் ஒருமித்து கருத்து வெளியிட்டுள்ளனர். பிரிவுக்கான காரணத்தை வெளியிடுவதில் ஒற்றுமை ஏற்பட்டுள்ளமை நன்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## தேடுதல் வேட்டை தொடரும்

"காணாமல் போனோரை தேடிக் கண்டு பிடிக்க விண்வெளிக்கு செல்லவும் தயங்கோம்.

காணாமல் போனோர் உயிருடன் இல்லை என்று அரசு சொன்னால் என்ன, அகில உலகம் சொன்னால் என்ன, நாம் சளைக்கப்போவதில்லை. தேடிக் கொண்டே இருப்போம். தேர்தல்கள் நெருங்கும்போது சற்றுத் தீவிரமாகவே தேடுவோம், என்பதை அழுத்தம் திருத்தமாக கூறிவைக்க ஆசைப்படுகிறேன்.

காணாமல்போனோர் ஏன் காணாமல் போயினர்? என்பதைக் கண்டறிய சர்வதேச விசாரணைக் கமிஷன் வைக்குமாறு பில் கிளின்ரனிடமும், பிரிட்டிஷ் பிரதமர் பிளேயரிடமும் கோரிக்கை விட நினைத்த, நினைக்கின்ற, நினைக்கப்போகின்ற ஒரே கட்சி நாங்கள்தான் என்பதையும் சொல்லிவைக்க ஆசைப்படுகிறேன்.

எனவே-இத் தேர்தலிலும் எமக்கு வாக்களிப்பதுடன், தொடர்ந்து தேடிக்கொண்டிருக்க வசதியாக எதிர்வரும் தேர்தல்களிலும் எங்கள் கட்சிக்கே வாக்களிக்குமாறு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்." மேற்கண்ட வீரமிகு அறிக்கை வேட்பாளர் வீரசிங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அன்னார் இத்தோடு நாலாவது கட்சியில் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

**காதிலை பூ கந்தசாமி**



படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன

கிளை: 105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

3 செட்டியார் தெரு. கொழும்பு 11

436331


↓ அவுஸ்திரேலியாவிலுள்ள போர்த் நகரத்தைச் சேர்ந்த டக்ளஸ் மற்றும் ரோகர்பெல் ஆகிய இருவரும் சேர்ந்து 7.6 மீட்டர் (24 அடி 11 அங்குலம்) நீளமான மோட்டார் சைக்கிளைத் தயாரித்தனர். இதற்கு 'பிக்பென்' (BIG BEN) என்று பெயரிட்டனர்.

'பிக்பென்' என்பது இலண்டன் மாநகரிலுள்ள பாராளு மன்றக் கட்டடத்தில் உள்ள பிரசித்தமான மணிக் கூடாகும். அந்தப் பெயரையே இவர்கள் இருவரும் தங்கள் தயாரிப்புக்கு சூட்டினர். இருப்பினும் அதன் வலு ஆக 250 சி.சி வலு கொண்டதுதான்.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


# நீள வாகனம்



தற்பொழுது இங்கிலாந்திலுள்ள மேற்கு மிட்லண்ட்-கொவென்றியைச் சேர்ந்த நாஷ் என்பவர் முரட்டுத்தனமான-மிக நீளமான இந்த மோட்டார் சைக்கிளை உருவாக்கியுள்ளார். இதன் நீளம்- 3.81 மீட்டர் (12 அடி 6 அங்குலம்), அகலம்- 1.22 மீட்டர் (4 அடி) இதன் எடை 225 கிலோகிராம் (500 இறாத்தல்) இதன் வலு- 3,500 டி.டி. இதில் பொருத்தப்பட்டுள்ளது உல்லாசக்கார்களுக்குப் பொருத்தப்படும் 'ரோவர்- V.8 இயந்திரமாகும். நீளம்+வேகம்=தூளான சவாரி. தற்போது உலக சாதனை இது தான்.

# இரண்டே போதும்




**வேகம்**
**வேகம்**
**படுவேகம்**
**சற்றுப்**
**பிசகினால்**
**கார்**
**கரணமடிக்கும்**

→ கார் கவிழும் தருணத்தில் 'கிளிக்' செய்யப்பட்ட படம் அல்ல. நான்கு சக்கரங்கள் உள்ள காரை, இரண்டு சக்கரங்களால் மட்டும் ஓடிக் கலக்கும் போட்டியில் ஒரு கட்டம் இது.

இரண்டு சக்கரங்களில் மட்டும் ஓடி 100 மீட்டரை கடக்கும் போட்டி இது. இப் போட்டிகளில் பலரும் சாதனை படைத்துள்ளனர். எனினும் சுவீடன் நாட்டைச் சேர்ந்த கோரன் எலிபேசன் என்பவர் சகல சாதனைகளையும் மோதி உடைத்துவிட்டார்.


மணிக்கு 179.29 (111.4மைல்) வேகத்தில் இரண்டு சக்கரங்களில் சீறிக் கிழித்துச் சென்ற உலக சாதனை படைத்தார். 1996 ஏப்ரல் 20ம் திகதி இச் சாதனை நிலை நாட்டப்பட்டது.

இச் சாதனைக்கு பயன்படுத்தப்பட்டது வோல்வோ 850 ரேப்போ! காராகும்.

சுவீடனின் விமானப் படைக்கான ஓடுபாதையில் இப் போட்டி நடத்தப்பட்டது. சிறிது பிசகினாலும் கார் சுழன்று கரணமடிக்கும். தீவிர பயிற்சி, துணிச்சல் ஆகியவைதான் கைகொடுக்கும்.

நான்கு சக்கரத்தில் ஓடும் கார்களைக்கூட கட்டுப்படுத்த முடியாமல் விபத்துக்கள் நேர்வதுண்டு. இரண்டு சக்கரத்தில் சரிந்தபடி படுவேகத்தில் செல்வது லேசுப்பட்ட .காரியமா என்ன?!

# உயர விளையாட்டு



→ பார்த்தால் 'பிரமிட்', ஆனால் பிரமிட் அல்ல. ஆயினும் இது ஒரு பிரமிப்பான சாதனை. புதிர்போட்டுக் குழப்பாமல் புரியும்படி சொல்லி விடுகிறோம்.

எகிப்தில் உள்ள பிரமிட் போன்று தைவான் நாட்டில் உருவாக்கப்பட்ட டம்மிப் பிரமிட்தான் இது.

இதில் என்ன விசேஷம் தெரியுமா? உலகிலேயே மிக உயரமாக, அமைக்கப்பட்ட டம்மிப் பிரமிட் இதுதான். கல்லால் இதைச் செய்தனர். இதன் உயரம் 82 அடி 2 அங்குலம். சாதாரண காரியமல்ல!

தைவான் அதிபர் லிரெங்ஹிய்யின் பதவி ஏற்பு வைபவத்தின்போது பிரமிப்பூட்ட இதனை அமைத்தனர். உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுவிட்டது. நம்நாட்டில் தற்போதுதான் டம்மி வேட்பாளர் செய்யத் தொடங்கியுள்ளனர். இதுகூட உலக சாதனைதான். ஆனால், என்ன அடக்கம் காரணமாக வெளியே சொல்ல மாட்டார்கள்.

# 3வது பிறந்த நாள் வாழ்த்து



பாத்திமா ஷப்னா

கம்மல்பிடிய, பஸ்யாலையைச் சேர்ந்த கஹைல்-ஹிஸ்மியா தம்பதியினரின் செல்வப் புதல்வி **பாத்திமா ஷப்னா** 18.01.1998 அன்று தனது 3வது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். பாத்திமா ஷப்னாவை உம்மா, வாப்பா, பலப்பிட்டியைச் சேர்ந்த பாட்டி, பாணந்துறையைச் சேர்ந்த உம்நும்மா.அப்பா, ஆன்டிமார்களான பர்ஸானா, றம்ஸியா, மில்ஹானா, அர்ஹாம் அங்கிள், அரபாத் அங்கிள், லைலாப் பாட்டி-பாத்தும்மா பாட்டி குடும்பத்தினர்கள், ஸருக் மாமா-நவவி சாச்சா குடும்பத்தினர்கள், அப்பா, வாப்பும்மா, பாஹிர் பெரியப்பா-அமான் பெரியப்பா- சவூதி-ஹிதாயத் பெரியப்பா-நிலூபா மாமி-தீனத் மாமி-கமைமா மாமி-உனைஸ் சாச்சா குடும்பத்தினர்கள், வத்தல்பொலவைச் சேர்ந்த மிஸ்ரியா வாப்பும்மா-தருவேஸ் அப்பா-ஜனா வாப்பும்மா குடும்பத்தினர்கள், திக்கவையைச் சேர்ந்த நவ்பல் அப்பா குடும்பத்தினர்கள், சியாமினா ஆன்டி, றினோனா ஆன்டி, றினோஸியா ஆன்டி, ஜெகன்யா ஆன்டி, நர்கீனா ஆன்டி, றியாமா ஆன்டி, ஸில்மியா ஆன்டி, முபஷிரா ஆன்டி, ஹிஸ்மி அங்கிள், ஸஹதுல்லா அங்கிள், ஜெஸ்மின் அங்கிள், ஹில்மி அங்கிள், ஹஸ்மத் அலி அங்கிள், ஆஸிம் அங்கிள், ஹகீம் அங்கிள், அன்வர் அங்கிள், சுரேஷ் அங்கிள், பாரிஸ் அங்கிள், றியாஸ்டீன் அங்கிள், றிபாத் அங்கிள், சவூதி இல்யாஸ் அங்கிள், இர்ஷான் அங்கிள் ஆகிய அனைவரும் பாத்திமா ஷப்னாவை பல்கலையும் கற்று பணிவன்புடன் இன்பமுற்று வாழ இனிதே வாழ்த்துகிறார்கள்.

அர்ஹாம் அங்கிள்

# விலை உயர்ந்த விரிப்பு



உங்க வீட்டுக் கம்பளம், எங்க வீட்டுக் கம்பளம் அல்ல, உலக சாதனைக் கம்பளம் பாருங்கள்.இது ஃபிரான்ஸ் நாட்டு அரசனாக இருந்த 15வது லூயிஸ் மன்னனுக்காகத் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான கம்பளம் இதுவாகும்

1740ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட இந்தக் கம்பளம். 1994 ஜூன் 9ம் திகதியன்று இலண்டன் மாநகரிலுள்ள கிறிஸ்டி ஏல நிலையத்தில் ஏலத்துக்கு விடப்பட்டது. 13,21,000 ஸ்டேர்லிங் பவுணுக்கு விலை போனது நம்மூர் பெறுமதிப்படி12 கோடியே 54 இலட்சத்து 95 ஆயிரம் ரூபா. (தலைசுற்றுகிறதா)

18ம் நூற்றாண்டு கலைப் பொருட்களை வாங்கிச் சேகரிக்கும் இரானியரான எம்.ஜான்ஹாங்குயிர் ரியாஹி என்பவரே இக்கம்பளத்தை வாங்கி பாரிஸ் நகரிலுள்ள தனது காட்சிச்சாலைக்குக் கொண்டு சென்றுள்ளார். பணம் இருந்தால் இதுவும் வாங்கலாம். அதற்கு மேலும் வாங்கலாம்.

இதன் அகலம் 18 அடி. நீளம் 19 அடி. உலகில் இதுவரை காலத்தில் அதிக விலைக்கு விற்கப்பட்ட ஒரே கம்பளம் இதுதான்.



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த பிலேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 23, வெல்டா, நாவலையில் உள்ள சமலை அச்சகத்தில் ஜனவரி 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்